# 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்

*(2023, ஒற்றோபர் 17 வரையிலான திருத்தங்களை உள்ளடக்கியது)*

---

தேர்தல் ஆணைக்குழுவினால் இது மறுபதிப்புச் செய்யப்பட்டது.

(இது நியதிச்சட்ட மீள்பதிப்பொன்றல்ல)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இல. 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

GCE240030 - 3,000 (2024/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.

# *1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க,*
# *பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்*

*(2023, ஒற்றோபர் 17 வரையிலான திருத்தங்களை உள்ளடக்கியது)*

**முன்னுரை**

*பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் இந்த மறுபதிப்பு 2023, ஒற்றோபர் 17 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட எல்லாத் திருத்தங்களையும் உள்ளடக்குகின்றது. ஆயினும் இது நியதிச் சட்ட மறுபதிப்பொன்றல்ல, வசதியின் நோக்கத்திற்காகவே இது வழங்கப்பட்டுள்ளது.*

தேர்தல் ஆணைக்குழு.

*17.10.2023*

*(2023, ஒற்றோபர் 17 ஆந் திகதியின் பின்னர் இந்தச் சட்டம் திருத்தம் செய்யப்படவில்லை)*

உள்ளடக்கம்

பிரிவு விபரம்


01. சுருக்கப் பெயர்

**பாகம் I**

**முதல் நிலையானவைகள்**

02. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்கும் எனத் தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை
03. வாக்கெடுப்புப் பிரிவுகளும் வாக்கெடுப்பு மாவட்டங்களும்
04. தேருநர் இடாப்புகள்
05. வாக்களிக்கும் உரிமைக்குத் தேருநர் இடாப்பு முடிவான சான்றிதழ்
06. தெரிவத்தாட்சி அலுவலர்கள்
07. தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்
08. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் குறித்த சில தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுதல்
(அ) அரசியற் கட்சிகளின் ஏதேனும் கூட்டணி பற்றி ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படுதல்.
09. அரசியற் கட்சியொன்றின் அங்கீகரிக்கப்பட்ட நிலை இல்லாதொழித்தல்.

**பாகம் II**

**நியமனங்கள்**

10. நியமன காலப்பகுதியும் வாக்கெடுப்புத் திகதியும்
11. தேர்தல்களில் போட்டியிடும் முன்னம் பற்றிய அறிவித்தல்
12. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னங்களை மாற்றுதல்.
13. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் விரோதப் பிரிவினர்களுள் எது அக்கட்சியெனப் பணிப்பதற்கான ஆணையாளரின் தத்துவம்
14. யார் தேர்தலில் போட்டியிடலாம் என்பது பற்றி
15. நியமனப் பத்திரங்கள்
16. வைப்புப் பணங்கள்
17. வைப்புப் பணத்தொகைகளைக் கையுதிர்த்தல்
18. குறித்த சில சந்தர்ப்பங்களில் நியமனத்துக்குச் சம்மதமளித்தல் தவறொன்றாதல்.
19. நியமனப் பத்திரங்களை நிராகரித்தல்
20. போட்டியில்லாத தேர்தல்கள்
21. நியமனப் பத்திரங்களெவையும் பெறப்படாதவிடத்து நடவடிக்கை முறை
22. போட்டியுள்ள தேர்தல்கள்
23. நியமனத்தின் போது சமுகமாயிருப்பதற்கு உரித்துடைய ஆட்கள்

**பாகம் III**

**வாக்கெடுப்பு**

24. வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தல்
25. பெயர் நியமனத்தின் பின்னர் வேட்பாளர் இறத்தல்
26. அஞ்சல் மூலம் வாக்களித்தல்
27. உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டை
28. தலைமை தாங்கும் அலுவலர்கள்

பிரிவு விபரம்

29. வாக்கெடுப்பு நிலையங்களில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட வேண்டிய வசதிகள்
30. வாக்கெடுப்பு நிலையங்களில் வெளிக்காட்டி வைக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள்
31. வாக்குச் சீட்டுப் பெட்டிகள்
32. வாக்குச் சீட்டுக்கள்
33. வாக்கெடுப்பு நேரங்கள்
34. வாக்கெடுப்பு முகவர்களை நியமித்தல்
35. வாக்கெடுப்பை நடாத்தும் பொதுவான முறைகள்
36. வாக்குச் சீட்டுப் பெட்டிகளில் இலச்சினையிடுதலும் வாக்கெடுப்பைத் தொடங்குதலும்
37. வாக்குச் சீட்டுக்கள் வழங்குதல்
38. வாக்காளரைப் பரிசோதித்தலும் தோதான குறியீட்டை இடுதலும்
39. வாக்களிக்கும் முறை
40. வாக்காளர்கள் வாக்களிப்பதை இயலச் செய்வதற்கு உதவிபுரிதல்
41. பதிலி மூலம் வாக்களித்தல் தடை செய்யப்பட்டுள்ளது
42. பன்முறை வாக்களித்தல் சட்டமுரணான பழக்கமாதல்
43. வெளிப்படுத்துதல்களைச் செய்யுமாறு வாக்காளரைத் தேவைப்படுத்துவதற்கான தத்துவம்
44. பழுதுபட்ட வாக்குச் சீட்டுக்கள்
45. கேட்டுப் பெறும் வாக்குகள்
46. வாக்கெடுப்பை முடித்தல்
47. வாக்கெடுப்பை முடித்த பின்னரான நடவடிக்கை முறை
48. தலைமை தாங்கும் அலுவலர் தமக்கு உதவி புரிவதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம் செயலாற்றலாம்.
48. (அ) வாக்கெடுப்பு நிலையங்களில் குழப்பங்கள்

## பாகம் IV

## வாக்குகள் எண்ணுதலும் முடிவு வெளியிடுதலும்

49. வாக்கெண்ணும் அலுவலர்கள்
50. வாக்குகளை எண்ணுதல் பற்றிய அறிவித்தல்
51. வாக்கெண்ணும் முகவர்களை நியமித்தல்
52. வாக்கெண்ணுதல்
53. நிராகரிக்கப்பட வேண்டிய வாக்குச் சீட்டுக்கள்
54. 52 ஆம், 53 ஆம் பிரிவின் கீழான தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் தொடர்பான சிறப்பேற்பாடுகள்
55. வாக்கெண்ணுதலை முடிவுறுத்தல்
56. அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை எண்ணுதல்
57. முடிவை வெளிப்படுத்துதல் பற்றிய அறிவித்தல்
58. முடிவை வெளிப்படுத்தும் போது சமுகமாயிருப்பதற்கென முகவர்களை நியமித்தல்
59. முடிவு வெளிப்படுத்தப்படும் போது சமுகமாயிருப்பதற்கு உரித்துடைய ஆட்கள்
60. முடிவு வெளிப்படுத்தப்படுதல்
61. 60 ஆம் பிரிவின் கீழான தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள்
62. முடிவை கசெற்றில் வெளியிடுதல்
63. வாக்குச் சீட்டுக்கள் முதலியவற்றைக் கையாண்டழித்தல்

பிரிவு விபரம்

## பாகம் V

### வெற்றிடங்களை நிரப்புதல்

64. வெற்றிடங்களை நிரப்புதல்
65. நீக்கப்பட்டுள்ளது (1988 இன் 15 ஆம் இலக்கச் சட்டம்)

## பாகம் VI

### தவறுகள்

66. நியமனப் பத்திரங்கள், வாக்குச் சீட்டுக்கள், உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகள் இன்னோரன்னவை தொடர்பான தவறுகள்
67. குறித்த சில ஆட்கள் இரந்து கேட்காதிருத்தல் அல்லது முகவர்களாகச் செயலாற்றாதிருத்தல்
68. வாக்கெடுப்பு நாளில் குறித்த சில செயல்கள் தடைசெய்யப்பட்டுள்ளமை
69. ஊர்வலங்கள் மீது மட்டுப்பாடு
70. பொதுக் கூட்டங்கள் மீதான மட்டுப்பாடு
71. 66,67,68,69 அல்லது 70 ஆம் பிரிவுகளின் கீழான தவறுகள் தொடர்பான பொது ஏற்பாடுகள்
72. வேட்பாளர்கள் தவிர்ந்த வேறு ஆட்களால் தேர்தல் வெளியீடுகள் அச்சிடப்படுதலும், பிறவும்
73. தேர்தல் அலுவலகங்களின் எண்ணிக்கை மீதான மட்டுப்பாடு
74. துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியனவற்றை வெளிக்காட்டி வைத்தல் தொடர்பான ஏற்பாடுகள்
75. வேட்பாளர்கள் வாக்களிக்கும்படி இரந்து கேட்பதற்கென வதிவிடங்களுக்குச் செல்லாதிருத்தல் முதலியன
76. தேர்தல்களில் இரகசியம் பேணுதல்

### ஊழல் பழக்கங்கள்

77. ஆள் மாறாட்டம்
78. உபசாரம் செய்தல்
79. தகாத செல்வாக்கு
80. இலஞ்சம்
81. ஊழல் பழக்கத்துக்கான தண்டனையும் தகுதியீனங்களும்
82. தேர்தலொன்றில் வெற்றியீட்டாத ஒரு வேட்பாளரின் ஊழல் பழக்கமொன்றிற்கான தண்டனையும் தகுதியீனமும் தொடர்பான சிறப்பான ஏற்பாடுகள்

### சட்டமுரணான பழக்கங்கள்

83. குறித்த சில செலவினங்கள் சட்ட முரணான பழக்கமாதல்
84. செய்தித் தாள்களிலுள்ள பொய்யான அறிக்கைகள்
85. குறித்த சில தொழிலுக்கமர்த்துகை சட்ட முரணாதல்
86. தேர்தல் வெளியீடுகளை அச்சிடுதல் ஆகியன
87. சட்டமுரணான பழக்கங்களுக்கான குற்றத் தீர்ப்பின் மீதான தண்டனை

பிரிவு விபரம்

88. ஏதேனும்தேர்தலில்வெற்றியீட்டாதஒருவேட்பாளரின்சட்டமுரணான பழக்கமொன்றிற்கான தண்டனையும் தகுதியீனமும் தொடர்பான சிறப்பான ஏற்பாடுகள்
89. குறித்த சில ஊழல் அல்லது சட்டமுரணான பழக்கங்களின் விடயத்தில் வேட்பாளர் தொடர்பில் பழிவிலக்கும் அறிக்கை
90. மாசற்ற செயலுக்கு சட்ட முரணினின்றும் விதிவிலக்களிக்க நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்

**பாகம்** VII

**தேர்தல் மனுக்கள்**

91. வேட்பாளரின் குற்றத் தீர்ப்பினால் வறிதாக்கப்படுதல்
92. தேர்தல் மனு மீது தேர்தல் வறிதாக்கப்படுதல்
93. தேர்தல் மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றம் விளங்குதல்
94. தேர்தல் மனுவொன்று விளங்கப்படும் இடம்
95. எவர் மனுவைச் சமர்ப்பிக்கலாம் என்பது
96. கோரப்படக்கூடிய நிவாரணம்
97. மனுவொன்றிற்கான கட்சிக்காரர்கள்
98. மனுவின் பொருளடக்கம்
99. தேர்தல் நீதிபதியொருவர் முன்னரான நடவடிக்கைமுறை பற்றிய சிறப்பான ஏற்பாடுகள்
100. தேர்தல் நீதிபதியின் தீர்மானம்
101. ஊழல் அல்லது சட்ட முரணான பழக்கம் பற்றி நீதிபதியின் அறிக்கை
102. 100 ஆம் பிரிவின் கீழான தீர்மானத்துக்கும் தேர்தல் நீதிபதியின் வேறேதேனும் முடிபுக்கும் அல்லது கட்டளைக்கும் எதிரான சட்டப் பிரச்சினை மீதான மேன்முறையீடு
103. மேன்முறையீட்டின் செலவுத் தொகைக்கும் பிறவற்றிற்குமாக மேன் முறையீட்டாளர் பிணைப்பொறுப்புக் கொடுத்தல்
104. மேன்முறையீட்டில் உயர்நீதிமன்றத்தின் தத்துவம்
105. சான்றுப்பத்திரமும் அறிக்கையும் சனாதிபதிக்கு அனுப்பப்படுதல்
106. சான்றிதழின் பயன்பாடு
107. அறிக்கையின் பயன்பாடு
108. சமர்ப்பித்தற்கான காலம்
109. வாக்கு வெளிப்படுத்துகை தடைசெய்யப்படுதல்
110. பரிசீலனையொன்றின் போது வாக்குகளை அடித்து நீக்குதல்
111. தேர்தல் மனுக்கள் மீதான நடவடிக்கை முறையும் நடைமுறையும்
112. வாக்குச் சீட்டு வாக்கெண்ணும் அலுவலரால் நிராகரிக்கப்படுதல் இறுதியானதாதல்

**பாகம்** VIII

**பொது**

113. தேர்தல்கள் நடாத்தப்படுவதற்காக கட்டளை இடுவதற்கான தத்துவம்
114. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல்
115. வேட்பாளரின் இறப்பு, ஒதுங்குகை அல்லது தகைமையீனம், கட்சியின் அல்லது குழுவின் நியமனப்பத்திரத்தை செல்லுபடியற்றதாக்காது
116. வாக்கெடுப்பு நிலையங்களாகப் பாடசாலைகளைப் பயன்படுத்துதல்
117. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளர் அல்லது குழுத் தலைவர் அவரே தமது முகவராகச் செயற்படலாம் அல்லது தமது முகவருக்கு உதவலாம்.

பிரிவு விபரம்

118. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் முகவர்கள் சமுகந்தராமை
119. யாருக்கு வாக்களித்தார் என்பதை வெளிவிடுவதைத் தடைசெய்தல்
120. இடங்கள், ஆட்கள் பற்றிய செவ்வையற்ற விவரணம்
121. அறிவித்தல்கள் ஆகியவற்றை வெளியிடுதல்
122. வாக்களிப்பதற்கென ஊழியர்களுக்கு லீவு வழங்குதல் தொழில் தருநரின் கடமை
123. வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்துவதற்கென வளவுகளைத் தேவைக்கெடுத்தல்
124. வளவுகளைத் தேவைக்கெடுப்பதற்கான நட்டஈடு
125. தேர்தல் சம்பந்தமான விடயங்களை அஞ்சல் கட்டணமின்றி அஞ்சலில் அனுப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது குழுத் தலைவருக்கு உள்ள உரிமை
126. அரசியல் ஒலிபரப்புக்கள்
127. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கு அரசு உதவியளித்தல்
127. (அ) பொலிசார் ஆணையாளருக்கு உதவுதல்
127. (ஆ) ஒதுக்கப்பட்ட ஒரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாதிருக்கும் என்ற நியாயமான பயம் இருக்குமிடத்து வாக்களிப்பதற்கான நடவடிக்கை முறை
128. ஆணையாளரின் தத்துவங்கள்
129. இடர்பாடுகளை அகற்றுதல்
(அ) நீக்கம் செய்யப்பட்டுள்ளது
130. நீக்கம்
131. பொருள்கோடல்

**முதலாம் அட்டவணை**

"அ" படிவம் ( 15 (1) ஆம் பிரிவு)
நியமனப் பத்திரப் படிவம்

"ஆ" படிவம் (20 ஆம் பிரிவு)
உறுப்பினர் போட்டியில்லாது தேர்ந்தெடுக்கப்படுமிடத்து விபரத்திரட்டு

"இ" படிவம் (32 ஆம் பிரிவு)
வாக்குச் சீட்டின் முன்பக்கம்

"ஈ" படிவம் (38 ஆம் பிரிவு)
38 ஆம் பிரிவின் கீழ் வாக்குச் சீட்டுக்கள் ஒப்படைக்கப்படாத வாக்காளர் நிரல்

"உ" படிவம் (43 ஆம் பிரிவு)
வெளிப்படுத்துகை

"ஊ" படிவம் (43 ஆம் பிரிவு)
வெளிப்படுத்துகை

"எ" படிவம் (43 ஆம் பிரிவு)
வெளிப்படுத்துகை

"ஏ" படிவம் (43 ஆம் பிரிவு)
வெளிப்படுத்துகை

"ஐ" படிவம் (45 ஆம் பிரிவு)
வெளிப்படுத்துகை

"ஒ" படிவம் (45 ஆம் பிரிவு)
கேட்டுப் பெறும் வாக்குகள் நிரல்

பிரிவு விபரம்

"ஓ" படிவம் (47 ஆம் பிரிவு)
வாக்குச் சீட்டுக் கணக்கு

"ஔ" படிவம் (62 ஆம் பிரிவு)
வாக்கெடுப்பொன்று நடைபெற்ற பின்னரான விபரத்திரட்டு

"க" படிவம் (64 ஆம் பிரிவு)
வெற்றிடமொன்றை நிரப்பிய பின்னரான விபரத்திரட்டு

"ங" படிவம் (76 ஆம் பிரிவு)
இரகசியம் பேணலுக்கான வெளிப்படுத்துகைப் படிவம்

**இரண்டாம் அட்டவணை**

*அஞ்சல் வாக்காளர் ஒழுங்குவிதிகள், 1981 (பிரிவு 26)*

01. சுருக்கப் பெயர்
02. பொருள்கோடல்
03. ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பத்தின் படிவம்
04. அஞ்சல் வாக்காளர்களின் பதிவேடும் நிரலும்
05. அஞ்சல் வாக்குச் சீட்டின் படிவம்
06. ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவம்
07. எழுதுவினைஞர்களை நியமித்தல்
08. அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் வழங்குகையிலும் பெறுகையிலும் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையவரான ஆட்கள்
09. இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகை
10. அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் வழங்குகைக்கான அறிவித்தல்
11. அஞ்சல் வாக்குச் சீட்டுகளில் அலுவலக முறையான குறியீடு பொறிக்கப்படுதல்
12. அஞ்சல் வாக்குச் சீட்டை வழங்க மறுத்தல்
13. "வாக்குச் சீட்டு உறையின் மீது குறிக்கப்பட்டுள்ள இலக்கம்" என்ற சொல்லமைப்பினதும் "மேலுறை" என்ற சொல்லமைப்பினதும் பொருள்கோடல்
14. அஞ்சல்வாக்காளருக்குமுகவரியிடப்பட்ட உறைகளை அஞ்சல் அலுவலகத்தில் ஒப்படைத்தல்
15. அஞ்சல் வாக்காளர் நிரலையும் அடியிதழ்களையும் இலச்சினையிடுதல்
16. அஞ்சல் வாக்காளரின் வாக்குச் சீட்டுப் பெட்டிக்கான ஏற்பாடு
16. (அ) வாக்கெடுப்பு முகவர்கள்
17. அஞ்சல் வாக்காளரிடமிருந்து மேலுறைகள் கிடைக்கப் பெறுதல்
18. வாக்கெண்ணும் அலுவலர்கள்
19. வாக்கெண்ணுதல் பற்றிய அறிவித்தல்
20. வாக்கெண்ணும் முகவர்களை நியமித்தல்
21. வாக்கெண்ணுகையில் சமுகமாயிருப்பதற்கு உரித்துடைய ஆட்கள்
22. வாக்கெண்ணுகையில் இரகசியத்தைப் பேணல்
23. அஞ்சல் வாக்காளர் வாக்குச் சீட்டுப் பெட்டிகளைத் திறத்தல்
24. மேலுறைகளைத் திறத்தல்
25. வாக்குச் சீட்டு உறைகளைத் திறத்தல்
26. நிராகரிக்கப்பட்ட வாக்குகளையும் ஆளடையாள வெளிப்படுத்துகைகளையும் இலச்சினையிடுதல்
27. வாக்கெண்ணுதல்
28. வாக்கெண்ணுதலை முடிவுறுத்தல்

**இவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணை**

*"அ" படிவம் (3 ஆம் ஒழுங்குவிதி)*
*ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பம்*

*"ஆ" படிவம் (6 ஆம் ஒழுங்குவிதி)*
*ஆளடையாளத்தை வெளிப்படுத்தும் படிவம்*
*படிவத்தின் முன்பக்கம்*
*படிவத்தின் பின்பக்கம்*

*(அ) வாக்குச் சீட்டும் ஆவணங்களும் எவ்வாக்காளர் தொடர்பில் அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து அனுப்பப்பட்டுள்ளனவோ அவ்வாக்காளருக்கான அறிவுறுத்துரைகள்*

*(ஆ) வாக்குச் சீட்டும் மற்றைய ஆவணங்களும் எவ்வாக்காளர் தொடர்பில் அவரின் அலுவலக முறையான பதவிப் பெயரினதும் முகவரியினதும் கீழ் நேரடியாக அனுப்பப்பட்டனவோ அவ்வாக்காளருக்கான அறிவுறுத்துரைகள்*

*"இ" படிவம் (9 (1) ஆம் ஒழுங்குவிதி)*
*இரகசியம் பேணுவதற்கான வெளிப்படுத்துகைப் படிவம்*

**மூன்றாம் அட்டவணை**

*ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்துக்கு வெளியேயும் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும் ஒவ்வொரு வாக்களிக்கும் அறையிலும் வெளிக்காட்டி வைக்கப்பட வேண்டியதான வாக்காளர் ஒருவர் வாக்களிப்பதில் வழிகாட்டுவதற்கான பணிப்புகளைக் கொண்ட படிவம்.*

**நாலாம் அட்டவணை**

*பாராளுமன்றத் தேர்தல் மனு விதிகள் 1981*

*01. சுருக்கப் பெயர்*
*02. பொருள் கோடல்*
*03. மனுவைச் சமர்ப்பிக்கும் முறை*
*04. தேர்தல் மனுவின் படிவம்*
*05. ஒரே தேர்தல் தொடர்பாக ஒன்றிற்கு மேற்பட்ட மனு சமர்ப்பிக்கப்படுமிடத்து*
*06. வெற்றி பெறாத வேட்பாளரினால் ஆசனம் கோரப்படுமிடத்து ஆட்சேபிக்கப்பட்ட வாக்குகளின் நிரல்*
*07. எதிர்க் குற்றச்சாட்டு வழக்கில் ஆட்சேபனைகளின் நிரல்*
*08. மனுதாரரினால் முகவர் நியமிக்கப்படுதல்*
*09. எதிர்வாதியினால் முகவர் நியமிக்கப்படுதல்*
*10. முகவர்களின் பெயர்களையும் முகவரிகளையும் கொண்ட புத்தகத்தைப் பதிவாளர் வைத்திருத்தல்*
*11. தேர்தல் மனுவின் செலவுத் தொகை ஆகியவற்றுக்கான மனுதாரரின் பிணைப் பொறுப்பு*
*12. பணத்தை வைப்பிலிடுவதன் மூலமான பிணைப்பொறுப்பு*

| பிரிவு | விபரம் |
|---|---|
| 13. | அவ்வாறு வைப்பிலிடப்பட்ட பணத்தை மீள அளித்தல் |
| 14. | மனு பற்றிய அறிவித்தலும் மனுவின் பிரதியும் எதிர்வாதியிடம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் |
| 15. | எப்போது மனு விளக்கத்துக்குரியதெனக் கருதப்படலாம் என்பது பற்றி |
| 16. | மனுக்களின் நிரல் |
| 17. | தேர்தல் மனுவின் விளக்கத்திற்கான நேரமும் தேதியும் |
| 18. | விளக்கத்தைப் பின்போடுதல் |
| 19. | விளக்கத்தை ஒத்தி வைத்தலும் தொடர்ந்து நடாத்துதலும் |
| 20. | தேர்தல் மனுவை மீளப்பெறுதல் |
| 21. | மனுவை மீளப் பெறுவதற்கான விண்ணப்பத்தின் படிவம் |
| 22. | விண்ணப்பத்தின் பிரதி எதிர்வாதிக்குக் கொடுக்கப்படுதல் பற்றி |
| 23. | மீளப்பெறுகையின் மீது மனுதாரராகப் பதிலீடு செய்யப்படுவதற்கான விண்ணப்பம் |
| 24. | விண்ணப்பத்தைக் கேட்பதற்கான நேரமும் இடமும் |
| 25. | இன்னுமொரு மனுதாரரைப் பதிலீடு செய்தல் |
| 26. | பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் காரணமாக மட்டும் தேர்தல் மனு அற்றுப் போகாதிருத்தல் |
| 27. | இறப்பினால் மனு அற்றுப்போதல் |
| 28. | அற்றுப் போவதன் மீது மனுதாரராகப் பதிலீடு செய்யப்படுவதற்கான விண்ணப்பம் |
| 29. | எதிர்வாதியின் இறப்பின் மீது, பதவி துறப்பின் மீது அல்லது எதிர்க்காமை பற்றிய அறிவித்தலின் மீது மனு தொடர்ந்திருத்தல் |
| 30. | மனுவை எதிர்க்காத எதிர்வாதிக் கட்சிக்காரராகத் தோன்றுதலாகாது |
| 31. | மனு அற்றுப் போனவிடத்து, இன்னோரன்ன நிலையில் விளக்கத்திற்கான அறிவித்தலுக்கு எதிர் மாற்றுக் கட்டளையிடல் |
| 32. | செலவுத் தொகைகள் |
| 33. | செலவுத் தொகைகளை விதித்தலும் அறவிடுதலும் |
| 34. | இவ்விதிகளின் கீழ் சட்டத்தரணி முகவராகச் செயலாற்றலாம் |
| 35. | முகவரின் நியமனம் பற்றிய அறிவித்தல் |
| 36. | முகவர்களிடம் அறிவித்தல்களைச் சேர்ப்பித்தல் |

## ஐந்தாம் அட்டவணை

*1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 40 (2) (இ) பிரிவின் கீழ் ஏதேனும் வலிமையிழப்பொன்றிற்குட்பட்ட நபரொருவருக்கு வழங்கப்பட்ட வாக்களிப்பதற்கான உடற்றகைமைச் சான்றிதழ்.*

### பகுதி I

*விண்ணப்பதாரியின் /தேருநரின் வெளிப்படுத்துகை*
*கிராம அலுவலரின் சான்றிதழ்*

### பகுதி II

*அரச வைத்திய அலுவலரின் சான்றிதழ்*

**பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கை முறைக்கும், அத்தகைய தேர்தல்கள் தொடர்பான தவறுகளைத் தோற்று விப்பதற்கும், அத்தகைய தேர்தல்களை வெற்றும் வறிதுமாக்குவதற்கான ஏதுக்களும், அத்துடன், தேர்தலொன்று வறிதானதெனக் கொள்ளப் பட்டிருக்கின்ற விடத்து புதிய தேர்தல்களை நடாத்தும் முறை பற்றியும், பிணக்கிலுள்ள தேர்தல்களைத் தீர்மானிக்கும் முறை பற்றியும், அத்துடன், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்கள் பற்றியும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

*சட்டம், 1981 இன் 1 திருத்தங்கள் 1988 இன் 15. 1988 இன் 29. 1988 இன் 35. 1988 இன் 54. 2004 இன் 14. 2009 இன் 58. 2011 இன் 28.*

*[1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டம் 1981, சனவரி 22]*
*[1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டம் 1988, மே 24]*
*[1988 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்கச் சட்டம் 1988, ஓகத்து 16]*
*[1988 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்கச் சட்டம் 1988, ஒற்றோபர் 21]*
*[1988 ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டம் 1988, திசெம்பர் 17]*
*[2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டம் 2004 நவம்பர் 18]*
*[2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்கச் சட்டம் 2009 ஒற்றோபர் 16]*
*[2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் - 2011 மே 25]*

* **1.** இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

## பாகம் I

### முதல் நிலையானவை

*2.* அரசியலமைப்பின் 98 (8) ஆம் உறுப்புரையின் கீழ், அப்போதைக்கு வலுவிலிருக்கும் கட்டளையில் இதனகத்துப் பின்னர் "ஆணையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவரான தேர்தல்கள் ஆணையாளர் அத்தாட்சிப்படுத்தியுள்ளவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களை ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் தெரிந்தனுப்புதல் வேண்டும்.

*ஒவ்வொரு தேர்தல் மாவட்டத் துக்கும் எனத் தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை*

*3.* 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின்கீழ் அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவும் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டமும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென முறையே ஒரு வாக்கெடுப்புப் பிரிவாகவும் ஒரு வாக்கெடுப்பு மாவட்டமாகவும் கருதப்படுதல் வேண்டும்.

*வாக்கெடுப்புப் பிரிவுகளும் வாக்கெடுப்பு மாவட்டங்களும்.*

*4.* இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ள தேருநர் இடாப்பானது, தேர்தலொன்று நடாத்தப்படுதலைத் தேவைப்படுத்தும் பிரகடனம் அல்லது கட்டளையானது வெளியிடப்பட்ட பின்னர் புதிய இடாப்பொன்று நடைமுறைக்கு வந்துள்ளமை எவ்வாறிருப்பினும், அத்தகைய பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்படும்

*தேருநர் இடாப்புகள்.*

* நடைமுறைக்கு வந்த தேதி : 1981 பெப்புருவரி 16, 1981 பெப்புருவரி 16 ஆந் தேதிய 128/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் காண்க.

தேதியன்று அத்தேர்தல் மாவட்டத்துக்கென நடைமுறையிலிருக்கும் தேருநர் இடாப்பாக இருத்தல் வேண்டும்.

*வாக்களிக்கும் உரிமைக்குத் தேருநர் இடாப்பு முடிவான சான்றாதல்.*

5. நான்காம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தேருநர் இடாப்பொன்று ஆளொருவர் இச்சட்டத்தின் கீழ் ஒரு தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடையவரா அல்லராவெனத் தீர்மானிப்பதன் நோக்கத்திற்காக, முடிவான சான்றாதல் வேண்டும் ; அத்துடன், அப்போதைக்கு அத்தகைய இடாப்பில் எந்த எவரேனும் ஆளின் பெயர் கொண்டிருக்கப்படுகின்றதோ, அந்த எவரேனும் ஆளின் வாக்களிப்பதற்கான உரிமையானது, இடாப்பில் அத்தகைய ஆளுடைய பெயரின் பதிவீடு தொடர்பாக அப்போதைக்கு வலுவிலிருக்கும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் முடிவுறாதுள்ள ஏதேனும் மேன்முறையீட்டினால் பங்கமுறுதலாகாதென்பதுடன், அத்தகைய மேன்முறையீடு முடிவுறாதிருக்கையில் அத்தகைய எவரேனும் ஆளால் கொடுக்கப்பட்ட ஏதேனும் வாக்கானது, அத்தகைய மேன்முறையீடெதுவும் முடிவுறாதிருக்கவில்லையென்னுமாப்போல் வலுவுள்ளதாய் இருத்தலும் வேண்டும் ; அத்துடன், மேன்முறையீடு பற்றிய பின்னைய முடிபு அவ்வாக்கைப் பாதித்தலுமாகாது ;

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21*

ஆயின், ஊழற்பழக்கமொன்றிற்காக அல்லது சட்டமுரணான பழக்கமொன்றிற்காக அவர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் காரணமாக அல்லது அரசியலமைப்பின் எவையேனும் ஏற்பாடுகளின் காரணமாக, இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் வாக்களிக்கவியலாதிருக்கும் எவரேனும் ஆள், அத்தகைய தேர்தலில் வாக்களிப்பின், அவர், நீதிவானொருவர் முன்னராகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்திற்கு மேற்படாத காலத்துக்கான இருவகையிலொருவகை மறியல் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும் ;

ஆயின், மேலும் 26 ஆம் பிரிவின் கீழ் நேரடியாக வாக்களித்தல் தொடர்பான அல்லது 42 ஆம் பிரிவின் கீழ் பன்முறை வாக்களித்தல் தொடர்பான ஏற்பாடுகளை மீறியதற்காக எவரேனும் ஆள் ஏதேனும் தண்டத்துக்கு ஆளாவதை இப்பிரிவிலுள்ள எதுவும் பாதித்தலாகாது.

*தெரிவத்தாட்சி அலுவலர்கள்*

**6.** (1) ஆணையாளரானவர், காலத்துக்குக்காலம் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராகவிருப்பதற்காக ஆளொருவரைப் பெயர்குறித்தோ அல்லது பதவி குறித்தோ நியமித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலர் அவரது கடமைகளைப் புரிவதில் அவருக்கு உதவுவதற்காக, ஒருவரை அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைப் பெயர்குறித்தோ அல்லது பதவி குறித்தோ நியமிக்கலாம். எவரேனும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உதவி புரிவதற்கென அவ்வாறு நியமிக்கப்படும் ஆளொருவர் அவர் எந்த அலுவலருக்கு உதவி புரியவென நியமிக்கப்படுகின்றாரோ, அந்த அலுவலருக்குள்ள எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவரின் எல்லாக் கடமைகளையும் புரியலாம் ; அத்துடன் இச்சட்டத்தில் ஒரு தெரிவத்தாட்சி அலுவலரைப் பற்றிய குறிப்பீடெதுவும் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, ஓர் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் பற்றிய குறிப்பீடொன்றையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும். இவ்வுட்பிரிவின் கீழ்

ஆணையாளரால் செய்யப்படும் நியமனமொன்று எந்நேரத்திலும் அவரால் இல்லாதொழிக்கப்படலாம்.

(2) எவரேனும் தெரிவத்தாட்சி அலுவலர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு காரணத்தினால் இச்சட்டத்தின் கீழ், அவரது கடமைகளுள் எவற்றையும் புரிவதிலிருந்து தடுக்கப்பட்டு அல்லது புரிய இயலாதவராக்கப்பட்டு, அத்துடன் ஆணையாளரால் வேறோர் ஆள் நியமிக்கப்படுவதற்கு நேரமில்லாதிருப்பின், தெரிவத்தாட்சி அலுவலர், தமக்காகப் பதிற் கடமை புரிவதற்கென, பிரதியாளர் ஒருவரைப் பெயர் குறித்தோ அல்லது பதவி குறித்தோ நியமிக்கலாம். அத்தகைய நியமனம் ஒவ்வொன்றும் இயன்றளவு விரைவில் ஆணையாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும், அத்துடன், ஆயின், அத்தகைய பிரதியாளரால் ஏலவே புரியப்பட்ட எவற்றினதும் செல்லுபடியாம் தன்மைக்குப் பங்கமின்றி ஆணையாளரால் அந்நியமனம் இல்லாதொழிக்கப்படலாம்.

தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்.

**7**. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழும் அவற்றிற்கிணங்கவும், அரசியற் கட்சியொன்று, தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் மற்றைய ஏற்பாடுகளுக்கமைவாக, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதிக்கு நேர்முந்திய நாளன்று 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச பேரவைக் கட்டளையின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையதாகவிருக்கும் ஓர் அரசியற் கட்சியானது இச்சட்டத்தின்கீழான தேர்தல்களின் நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(3) தேர்தல்களின் நோக்கங்களுக்காக, (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் நடைமுறையிலிருப்பதன் பயனாக, ஓர் அரசியற் கட்சி அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற்கட்சியாகக்கணிக்கப்பட உரித்துடையதாகவுள்ளவிடத்து, சொல்லப்பட்ட அரச பேரவைக் கட்டளையின்கீழ் அத்தகைய கட்சிக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமானது, இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய கட்சி அவ்வாறு தன் உரித்தைக் கொண்டிருக்காதொழியும் தேதி அல்லது இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஆணையாளரின் கட்டளையினால் அத்தகைய கட்சிக்குப் புதியவோர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னம் குறித்தொதுக்கப்படும் தேதி ஆகிய இவற்றுள் எந்தத் தேதி முந்தியதோ, அந்தத் தேதிவரை அத்தகைய நோக்கங்களுக்காக அந்தக் கட்சிக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) (அ) ஆணையாளரானவர், தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதற்கு ஏலவே உரித்துடையதான கட்சி தவிர்ந்தவொரு அரசியற்கட்சியின் செயலாளரை அக்கட்சியின் சார்பில் தேர்தல்களின் நோக்கத்துக்காக (ஈ), (உ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய கட்சியானது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றெனக் கணிக்கப்பட வேண்டுமெனக்கோரி, அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்துள் ஆணையாளருக்கு [பி2. 2009 இன் 58]

எழுத்திலான விண்ணப்பமொன்றைச் செய்யும்படி அழைப்பதான அத்தகைய அறிவித்தலொன்றை ஒவ்வோர் ஆண்டும் சனவரி மாதம் முப்பத்தோராம் தேதிக்கு முன்னராக வெளியிடுதல் வேண்டும். அத்தகைய கட்சி அங்ஙனம் கணிக்கப்பட வேண்டுமாயின் அத்தகைய கட்சிக்குக் கிடைக்கக் கூடியதான ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னங்களுள் எந்த ஏற்றங்கீகரிக் கப்பட்ட சின்னம் குறித்தொதுக்கப்படுவதை அத்தகைய கட்சி விரும்புகின்றது என்பதனையும் விண்ணப்பம் குறித்துரைத்தல் வேண்டும்.

(ஆ)ஆணைக்குழுவானது,ஒவ்வொருபஞ்சாங்கஆண்டினதும்தொடக்கத்தில், தேர்தல்களின் நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிகளாகக் கணிப்பிடப்படுவதற்கு உரித்துடைய எல்லா அரசியற்கட்சிகளினதும் பெயர்களைக் கொண்டுள்ள நிரலொன்று பற்றிய அறிவிப்பொன்றை வர்த்தமானியில் வெளியிடுவித்தல் வேண்டும்.

(இ) அரசியற் கட்சியொன்றின் செயலாளர் (அ) என்னும் பந்தியின்கீழ் விண்ணப்பமொன்றைச் செய்யும்நேரத்தில் அத்தகைய கட்சியினுடைய யாப்பின் பிரதியொன்றையும் பதவிதாங்குநர்களின் நிரலொன்றையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றொன்றையும் அத்தகைய கட்சியின் சமகாலத்தைய கொள்கைக்கூற்றையும் ஆணையாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(ஈ) அரசியற் கட்சிகளிலும் அரசியலிலும் பெண்களின் சிறந்த பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி ஒவ்வொன்றும் அத்தகைய கட்சியின் பதவி தாங்குநர்களின் நிரலில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பெண் பதவிதாங்குநர்கள் உட்புகுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(உ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியிலுள்ள எதுவும் பின்வரும் எவையேனும் காலப்பகுதிகளுள், அதாவது-

(i) பாராளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனமொன்றின் அல்லது இச்சட்டத்தின்கீழ் தேர்தலொன்றை நடத்துமாறு தேவைப்படுத்தும் கட்டளையொன்றின் தேதியன்று தொடங்கி அத்தகைய பிரகடனத்தில் அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடைகின்ற; அல்லது

(ii) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் தேதியன்று தொடங்கி அக்கட்டளையால் நிர்ணயிக்கப்பட்ட வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடைகின்ற; அல்லது

(iii) 1988 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க, மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் அச் சட்டத்தின் கீழான தேர்தலொன்று தொடர்பிலான அறிவித்தலொன்றின் தேதியன்று தொடங்கி அச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றில் அத்தேர்தலுக்கென குறித்துரைக்கப்பட்ட வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடைகின்ற; அல்லது

(iv) *262 ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்று தொடர்பான அறிவித்தலொன்றின் தேதியன்று தொடங்கி அக்கட்டளைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப்பட்ட வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடைகின்ற; அல்லது*

(v) *1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பிரகடனமொன்றின் தேதியன்று தொடங்கி அப்பிரகடனத்தால் நியமிக்கப்பட்ட வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடை கின்ற,*

*காலப்பகுதியில் ஏதேனும் நேரத்தில் அங்கீகாரத்திற்கென அரசியற் கட்சிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதனை அல்லது அப்பந்தியின் கீழ் விண்ணப்பமொன்றைச் செய்யுமாறு அரசியற் கட்சியொன்றின் செயலாளரைக்கோருவதனை ஆணைக்குழுவுக்கு இயலச்செய்வதாகவாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.*

*(ஊ) ஏதேனும் ஆண்டில் சனவரி மாதத்தின்போது பந்தி (ஈ) நடைமுறையிலிருப்பின் ஆணைக்குழு வாக்கெடுப்புத் தேதியிலிருந்து முப்பது நாட்களைக்கொண்டவொரு காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் தகைமைபெற்ற அரசியற் கட்சிகளின் அங்கீகாரத்திற்கென விண்ணப்பங்களைக் கோரி பந்தி (அ) என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறு அறிவித்தலை வெளியிடுதல் வேண்டும்.*

*(எ) அரசியற் கட்சியொன்று தொடர்பில் பந்தி (அ) என்பதன் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றிற்கு ஆணையாளரால் அனுமதி மறுக்கப்படுமிடத்து, அத்தகைய விண்ணப்பத்திற்கு அங்கீகாரத்தை மறுக்கும் கட்டளையின் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியொன்று முடிவடைவதன் பின்னர் வரை அந்த அரசியல் கட்சி தொடர்பில் அவ்வுட்பிரிவின்கீழ் விண்ணப்பமெதுவும் செய்யப்படுதலாகாது.*

*(5) ஏதேனும் அரசியல் கட்சியின் சார்பில் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முறையாக செய்யப்பட்ட விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மீது அது பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய விசாரணையின் பின்னர் -*

*(அ) ஆணைக்குழுவின் அபிப்பிராயப்படி அத்தகைய கட்சி ஓர் அரசியல் கட்சியாக இருப்பதுடன் இச்சட்டத்தின் கீழ் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு இயன்றதாகவுமிருப்பின்; அத்துடன்*

*(ஆ)* (i) *அத்தகையவிண்ணப்பம்செய்யப்பட்டதேதிக்குமுன்னர் ஆகக்குறைந்தது தொடர்ச்சியான நான்காண்டுக் காலப் பகுதிக்காவது அத்தகைய கட்சி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததென; அல்லது*

(ii) *(அ) அத்தகைய கட்சியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆகக்குறைந்தது இரு வேட்பாளர்களிலிருந்து, அத்தகைய*

கட்சியின் விண்ணப்பத் தேதிக்கு நேர்முன்னர் நடாத்தப்பட்ட கடைசிப் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் ஆகக் குறைந்தது ஒருவராவது வெற்றிபெற்றாரென; அல்லது

(ஆ) ஐந்து வெவ்வேறு மாகாண சபைகளுக்காக அத்தகைய கட்சியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆகக்குறைந்தது ஐந்து வேட்பாளர்களிலிருந்து அத்தகைய கட்சியின் விண்ணப்பத் தேதிக்கு நேர்முன்னர் நடாத்தப்பட்ட கடைசி மாகாணசபைத் தேர்தல்களில் ஆகக்குறைந்தது மூவராவது வெற்றிபெற்றனரென,

ஆணைக்குழு திருப்தியுறின், ஆணைக்குழு -

(i) அத்தகைய கட்சி தேர்தல்களின் நோக்கத்திற்கென, எவ்வாறாயினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி யொன்றாகக் கணிக்கப்படுதல் வேண்டுமெனவும்;

(ii) அத்தகைய கட்சிக்கு, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னங்களுள் ஏற்றங்கீகரிக்கப்பட்ட எந்தச் சின்னம் அதற்குக் குறித்தொதுக்கப்பட வேண்டுமென அரசியற்கட்சி விரும்புகின்றதோ அந்த ஏற்றங்கீகரிக்கப் பட்ட சின்னமாக உள்ளதும் ஆணைக்குழுவால் அதன் முழுமையான தற்றுணிபின்படி தீர்மானிக்கப்பட்டதுமான ஆனால், வேறு எந்த அரசியற்கட்சி அவ்வாறு கணிக்கப்படுவதற்கு உரித்துடையதாக இருக்கின்றதோ அந்த வேறு ஏதேனும் அரசியற்கட்சியின் சின்னமாக அல்லாத ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமொன்றைக் குறித்தொதுக்கியும்,

கட்டளையாக்கலாம்.

(6) அரசியற் கட்சியொன்றின் பெயர், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதற்கு ஏலவே உரித்துடையதாயிருக்கும் ஏதேனும் கட்சியின் பெயரையொத்த பெயராக இருப்பின் அல்லது ஆணைக்குழுவின் அபிப்பிராயப் படி, பிறழ்வழி இட்டுச் செல்வதற்கென, குழப்பமடையச் செய்வதற்கென அல்லது ஏமாற்றுவதற்கெனத் திட்டமிடப்பட்ட வாறு அத்தகைய பெயரை நெருங்கியதாகவிருப்பின் அத்தகைய அரசியற்கட்சி (5) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையதாதலாகாது.

(7) நான்காம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தின்மீது, (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஆணைக்குழுவின் கட்டளை இறுதியானதாதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(8) இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, “அத்தகைய கட்சி” என்ற சொற்கள், ஓர் அரசியற் கூட்டணியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஒரு கட்சியின் கூட்டுக்கட்சியையும் உள்ளடக்குதல் வேண்டும்.

*அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் குறித்த சில தேவைப்பாடு களுக்கு இணங்கி யொழுகுதல்.* [பி3, 2009 இன் 58]

8. (1) ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினதும் யாப்பின் பிரதியை, அத்தகைய கட்சியின் பதவிதாங்குநர்களினது நிரலுடனும் அத்தகைய கட்சியின் அரசியல் திட்டத்தின் பிரதியுடனும் சேர்த்து ஆணைக்குழுவிடம் -

(அ) ஏழாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் விடயத்தில், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளும்; அத்துடன்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் அரசியற் கட்சியின் விடயத்தில், 7 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அத்தகைய கட்சி எந்தத் தேதியன்று அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியாக அங்கீகரிக்கப்படுவதற்கு உரித்துடையதாகின்றதோ அந்தத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளும்,

சமர்ப்பித்தல் அத்தகைய கட்சிச் செயலாளரின் கடமையாதல் வேண்டும்.

(2) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி ஒவ்வொன்றும் ஓராண்டிற்கொருமுறை அல்லது கட்சியின் யாப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு பொதுக்கூட்டமொன்றை நடத்துதல் வேண்டும். அத்தகைய கூட்டத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறை அத்தகைய யாப்பில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று அதன் யாப்பை அல்லது பதவிதாங்குநர்களை மாற்றுமிடத்து, அத்தகைய கட்சியின் செயலாளர் அத்தகைய திருத்தத்தின் அல்லது மாற்றத்தின் தேதியிலிருந்து முப்பது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் அத்தகைய திருத்தம் அல்லது மாற்றம் பற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) பதிவு செய்யப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒவ்வொன்றினதும் ஆண்டுக்கணக்குக் கூற்றின் பிரதியொன்று ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி ஒவ்வொன்றும் தேர்தல்கள் நடாத்துதலுக்கு ஏற்புடைத்தான இயைபான எழுத்திலான சட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அரச உதவிக்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(6)(அ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்கு, ஆணைக்குழு எழுத்திலான அறிவித்தல் மூலம், வழங்கப்படும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய அரசியற் கட்சி தொடர்பான அத்தகைய தகவலை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய காலப் பகுதிக்குள் கொடுத்துதவுமாறு அல்லது அதன் கண் குறித்துரைக்கப்பட வேண்டிய ஏதேனும் ஆவணத்தை முன்வைக்குமாறு ஏதேனும் அரசியற் கட்சியின் செயலாளரைத் தேவைப்படுத்தலாம்.

(ஆ) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு அறிவித்தலால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அரசியற் கட்சியின் செயலாளர் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய தகவலை வெளியிடுவதினின்று தடைசெய்யப்பட்டாலன்றி, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அத்தகைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல், அவரது கடமையாதல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவுக்கு, விதித்துரைக்கப்பட்ட கட்டணமொன்றின் கொடுப்பனவின்மீது ஆளெவரும், அரசியற் கட்சியொன்றின் யாப்பைக் கோருவதற்கும் பார்வையிடுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டு மென்பதுடன், விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது அத்தகைய யாப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றைப் பெறுவதற்கும் உரிமையுடையவராதலும் வேண்டும்.

(8) ஆணைக்குழு தேர்தல்களின்போது அரசியற் கட்சிகளும் வேட்பாளர் களும் கடைப்பிடிப்பதற்கு எனக் காலத்துக்குக் காலம் ஒழுக்கநெறிக்கோவை யொன்றை வழங்கலாம்.

(9) ஆணைக்குழு, இப்பிரிவினதும் 7 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளைப் பயனுறுதியுடனும் வினைத்திறனுடனும் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பொதுவான அல்லது விசேட பணிப்புகளை அரசியற் கட்சிகளுக்கு, ஆளொருவருக்கு அல்லது குழுவிற்குக் காலத்துக்குக் காலம் வழங்கலாம்.

*அரசியற்கட்சிகளின் ஏதேனும் கூட்டணி பற்றி ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்படுதல். [பி4. 2009 இன் 58]*

8 அ. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கிடையே அமைக்கப்பட்ட ஏதேனும் கூட்டணியின் செயலாளர், அத்தகைய கூட்டணியின் கூட்டுக்கட்சிகளின் பெயர்களையும் அதன் பதவிதாங்குநர்களையும் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

*அரசியற்கட்சி ஒன்றின் அங்கீகரிக்கப் பட்டநிலை ஒழிவு. [பி5. 2009 இன் 58]*

**9.** (1) இரண்டாம் உட்பிரிவிற்கமைய ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அத்தகைய கட்சி அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாக இல்லாதொழிதல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளரால் அதன் சார்பில் எழுத்தில் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது அதன் தற்றுணிபின்மீது 8 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியை அறுபது நாட்களை விஞ்சாத மேலும் ஒரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம்.

(3) தேர்தல்களின் நோக்கத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஓர் அரசியற் கட்சி–

(i) அடுத்தடுத்து இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களுக்கு அத்தகைய கட்சியின் ஒரு வேட்பாளரையாவது பெயர் குறித்து நியமிக்காதுவிடில்;

(ii) அது 8 ஆம் பிரிவின் (1) ஆம், (3) ஆம், (4) ஆம் அத்துடன் (7) ஆம் உட்பிரிவுகளின் தேவைப்பாடுகளுக்கு ஒத்திணங்காவிடில்,

அவ்வாறு உரித்துடையதாவதினின்று இல்லாதொழிதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "அத்தகைய கட்சி" என்ற சொற்கள், ஓர் அரசியற் கூட்டணியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட கட்சியொன்றின் கூட்டுக் கட்சியை உள்ளடக்குதல் வேண்டும்.

## பாகம் II

### நியமனங்கள்

**10.** (1) சனாதிபதியானவர்-

நியமன காலப் பகுதியும் வாக்கெடுப்புத் தேதியும்.

(அ) எக்காலப்பகுதியின்போது தெரிவத்தாட்சி அலுவலரால் தமது அலுவலகத்தில், வழமையான அலுவலக நேரத்தில் நியமனப் பத்திரங்கள் பெறப்பட வேண்டுமோ அக்காலப்பகுதியையும் (அது இதனகத்துப்பின்னர் "நியமனக் காலப்பகுதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ; அத்துடன்

(ஆ) வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டிய தேதியையும், பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஒவ்வொரு பிரகடனத்திலும் அல்லது தேர்தலொன்றை நடாத்தும் படி தேவைப்படுத்தும் ஏதேனும் கட்டளையில் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) (அ) நியமனக் காலப்பகுதியானது, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பிரகடனம் அல்லது கட்டளை கசெற்றில் வெளியிடப் பட்ட தேதிக்குப் பின்னர் பத்தாவது நாளன்று தொடங்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் பதினேழாவது நாளன்று நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு முடிவடைதலும் வேண்டும். [பி2. 1988 இன் 15]

(ஆ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நிர்ணயிக்கப்படும் தேதியானது -

(i) நியமன காலப்பகுதி முடிவடைகின்ற நாளிலிருந்து ஐந்து கிழமைகளுக்குக் குறையாததும் ஏழு கிழமைகளுக்கு மேற்படாததுமான நாளொன்றாக இருத்தல் வேண்டும். [பி2. 1988 இன் 15]

(ii) பூரண நோன்மதி நாளொன்று அல்லது 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விடுமுறை நாட்கள் சட்டத்துக்கான முதலாம்

அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும்பகிரங்கவிடுமுறை நாள் தவிர்ந்த ஏதேனும் நாளாகவிருத்தல் வேண்டும்; அத்துடன், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட பின்னர் அத்தகைய பிரகடனத்தில் அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட நாள் பகிரங்கவிடுமுறை நாளாக வெளிப்படுத்தப்பட்டால், அத்தகைய வெளிப்படுத்துகை, வாக்கெடுப்பு நடாத்தும் நோக்கத்துக்கென அத்தகைய நாளில் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாந் தன்மையை எவ்வழியிலும் பாதிப்பதாதலாகாது.

தேர்தல்களில் போட்டியிடும் முன்னம் பற்றிய அறிவித்தல்

**11.** தேர்தலொன்று நடாத்தப்படுதலைத்தேவைப்படுத்தும்பிரகடனமொன்று அல்லது கட்டளையொன்று கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியின் பின்னர், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளர், அத்தகைய கட்சியானது அத்தகைய தேர்தலில் போட்டியிட முன்னுகின்றதெனின், அத்தகைய முன்னம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை ஆணையாளருக்குக் கொடுத்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தலானது, அத்தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஆணையாளரைச் சென்றடையக் கூடியவாறு கொடுக்கப்படுதல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் ஏற்றங் கீகரிக்கப்பட்ட சின்னங்களை மாற்றுதல்.

**12.** (1) தேர்தலொன்று நடாத்தப்படுதலைத் தேவைப்படுத்தும் பிரகடனமொன்று அல்லது கட்டளையொன்று கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட வேண்டியதான, வேறேதேனும் அத்தகைய கட்சியின் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமாயிருக்காத அத்தகைய ஏதேனும் புதிய ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னம் அத்தகைய கட்சியின் இருந்துவரும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னத்துக்குப் பதிலாக அத்தகைய கட்சிக்குக் குறித்தொதுக்கப்படுதல் வேண்டுமெனக் கோரும் அதற்கெனவான எழுத்திலான விண்ணப்பமொன்றை ஆணையாளருக்குச் செய்யலாம்.

(2) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரினால் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தகுந்தமுறையில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், ஆணையாளரானவர், அக்கட்சிக்கு, அதனது இருந்துவரும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னத்துக்குப் பதிலாக, வேறேதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமாக விருக்காத, அத்தகைய விண்ணப்பத்திற் குறித்துரைக்கப்பட்ட புதிய ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னத்தை அல்லது ஆணையாளர் தமது பூரண தற்றுணிபில் தீர்மானித்த வேறேதேனும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னத்தை, அத்தகைய கட்சிக்குக் குறித்தொதுக்கிக் கட்டளை ஒன்றை ஆக்குதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் ஆணையாளராலாக்கப்பட்ட கட்டளையொன்று இறுதியானதாதல் வேண்டுமென்பதுடன், நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலும் ஆகாது.

*அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி யொன்றின் விரோதப் பிரிவினர்களுள் எது அக்கட்சி யெனப் பணிப் பதற்கான ஆணை யாளரின் தத்துவம்.*

**13.**(1) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் விரோதப் பிரிவினர்கள் இருப்பதோடு அவர்கள் எல்லோரும் தாம், தாம் அக்கட்சி எனக் கோருகின்ற நிகழ்வு காரணமாக, ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் நடாத்தப்படவிருக்கும் ஒரு தேர்தலில் இடர்பாடுகள் எழக்கூடுமென நம்புவதற்கு ஆணையாளருக்கு நியாயமான காரணமுள்ளவிடத்து, ஆணையாளரானவர், அத்தகைய இடர்பாடுகளை அகற்றுவதற்காக, அத்தகைய தேர்தலின் விடயத்தில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியானது ஒன்றில், அத்தகைய பிரிவுகளுள் ஏதேனும் ஒன்றென அல்லது அத்தகைய பிரிவுகள் எவையுமல்லவென, அத்தேர்தல் மாவட்டத்துக்கான தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தமது பூரண தற்றுணிபில் பணிப்பொன்றினை வழங்கலாம். அத்தகைய தேர்தலில், அப்பணிப்பிற்கிணங்கச் செயலாற்றுதல், அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலரின் அல்லது வெறெவரேனும் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(2) துடர்ச்சி அல்லது வேறு வழக்கு நடவடிக்கை எதுவும்:-

(அ) ஓராம் உட்பிரிவின் கீழ் பணிப்பொன்றை ஆணையாளர் வழங்கியமை காரணமாக அவருக்கெதிராக ; அல்லது

(ஆ) அப்பணிப்புக்கிணங்கச் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியத்துக்காகத் தெரிவத்தாட்சி அலுவலரொருவருக்கெதிராக அல்லது வேறெவரேனும் அலுவலருக்கெதிராக,

அமைதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் தெரிவத்தாட்சி அலுவலரொருவருக்கு வழங்கப்பட்ட பணிப்பொன்று இறுதியானதாதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றம் எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(4) இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்விதமிருப்பினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளும் அவற்றின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பும் பயனுறுதல் வேண்டும்.

*யார் தேர்தலில் போட்டியிடலாம் என்பது பற்றி.*

**14.** அரசியலமைப்பின் 90 ஆம் உறுப்புரையின் நியதிகளின் படி பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமை கொண்டுள்ள ஆளெவரும் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தேர்தலுக்கென வேட்பாளரொருவராகப் பெயர்குறித்து நியமிக்கப்படலாம்.

*நியமனப் பத்திரங்கள்* [*பி3. 1988 இன் 15*]

**15.** (1) அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அரசியற்கட்சி அல்லது (இதனகத்துப்பின்னர் "சுயேச்சைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடும் ஏதேனும் ஆட்கள் குழு ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்காகப் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்காக, அத்தேர்தல் மாவட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையோடு மூன்றைக் கூட்டி வரும் எண்ணிக்கை கொண்ட வேட்பாளர்களின் பெயர்களை

எடுத்துக்காட்டும் ஒரு நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கலாம். அத்தகைய நியமனப்பத்திரம், பொருளளவில், இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான 'அ' என்னும் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

[*பிர. 1988 இன் 15*] (2) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியொன்றில் அல்லது சுயேச்சைக் குழுவொன்றில் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டிய ஒவ்வொரு வேட்பாளரினதும் எழுத்திலான சம்மதமும், அத்துடன் அரசியலமைப்புக்கான ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான படிவத்தில் அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவரினாலும் விடயத்திற்கேற்ப செய்து கீழொப்பமிடப்பட்ட அல்லது மொழிந்து கீழொப்பமிடப்பட்ட விடயத்துக்கேற்ப சத்தியம் அல்லது உறுதியுரை ஒன்றும், நியமனப்பத்திரத்தில் புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(3) நியமனப்பத்திரம் ஒவ்வொன்றும், அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியொன்றின் செயலாளரினால் ஒப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில், நியமனப்பத்திரத்தில் எவ்வேட்பாளரின் பெயர், முதலாவதாகக் காணப்படுகின்றதோ அவ்வேட்பாளரினால் (அவர் இதனகத்துப் பின்னர் "குழுத்தலைவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) ஒப்பமிடப்படுதலும் வேண்டும்; அத்துடன், அது சமாதான நீதிவானொருவரால் அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய நியமனப்பத்திரமானது, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் விடயத்தில், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளரினால் அல்லது அத்தகைய நியமனப் பத்திரத்தில் எவ்வேட்பாளரின் பெயர் முதலாவதாகக் காணப்படுகின்றதோ அவ்வேட்பாளரினால் (அவர் இதனகத்துப் பின்னர் "அதிகாரமளிக்கப்பட்ட முகவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் குழுத் தலைவரினால் நியமன காலப்பகுதியினுள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வழமையான அலுவலகநேரத்தில், அவரது அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(5) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத் தலைவர், நியமனப் பத்திரமொன்றை, எத்தகையதுமான ஏதேனும் காரணத்துக்காக, ஒப்படைக்க முடியாதுள்ளவிடத்து, அத்தகைய நியமனப் பத்திரத்தில் எவ்வேட்பாளரின் பெயர் இரண்டாவதாகக் காணப்படுகின்றதோ அவ்வேட்பாளர் (4) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறாக, அத்தகைய நியமனப் பத்திரத்தை தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(6) தெரிவத்தாட்சி அலுவலரானவர், சாத்தியமாகக் கூடியவரை விரைவாக அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நியமனப் பத்திரத்தினதும் ஒரு பிரதியை எடுத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிரதியைத் தம்முடைய அறிவித்தற் பலகையில் வெளிக்காட்டி வைத்தலும் வேண்டும்.

(7) தெரிவத்தாட்சி அலுவலரானவர், தேர்தலொன்று நடாத்துதலைத் தேவைப்படுத்தும் பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட பின்னரும்

நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னரும் ஆன எத்தேதியிலேனும், விண்ணப்பம்செய்யப்பட்டதன்மேல் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியெதற்கும் அல்லது சுயேச்சைக் குழுவெதற்கும், நியமனப் பத்திரமொன்றைக் கட்டணமின்றி வழங்குதல் வேண்டும்; ஆனால், இச்சட்டத்திலுள்ளதெதுவும், தெரிவத்தாட்சி அலுவலரால் வழங்கப்படாத ஏதேனும் நியமனப்பத்திரப் படிவம் பயன்படுத்தப்படுவதை, அப்படிவம் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள 'அ' என்னும் படிவத்திலிருந்து பொருளளவில் வேறுபடாதிருக்கின்ற வரைக்கும், விலக்குவதாகக் கருதப்படுதலாகாது.

(8) (அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நியமனப் பத்திரத்தில் ஏதேனும் தவிர்வு அல்லது எழுத்துப் பிழை உள்ளதென அத்தகைய கட்சியின் செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவருக்கு அல்லது குழுத் தலைவரொருவருக்குத் தோன்றுகின்றவிடத்து, அவர் அத்தகைய பத்திரத்தில் உள்ள அத்தகைய தவிர்வை அல்லது பிழையைத் திருத்துவதற்கென தெரிவத்தாட்சி அலுவலருக்கு நியமனக் காலப்பகுதி முடிவுறுமுன்னர் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(ஆ) அத்தகைய தவிர்வு அல்லது பிழை தற்செயலாக ஏற்பட்டது என்று தெரிவத்தாட்சி அலுவலர் திருப்திப்படுமிடத்து, அத்தகைய செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத்தலைவர் அத்தகைய தவிர்வை அல்லது பிழையைத் தமது முன்னிலையில் திருத்துவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர் அனுமதிக்கலாம்.

(இ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக வேட்பாளரொருவரின் பெயர்த்தவிர்வு, அல்லது நியமனப் பத்திரமொன்றில் வேட்பாளரொருவர் தமது சம்மதத்தைப் புறக்குறிப்பிடத் தவறுகை அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளர் அல்லது ஒரு குழுத் தலைவர் நியமனப்பத்திரமொன்றில் ஒப்பமிடத் தவறுகை அல்லது அத்தகைய ஓர் ஒப்பத்தை சமாதான நீதிவான் அல்லது பிரசித்த நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தத் தவறுகை, தற்செயலாக ஏற்பட்ட ஒரு தவிர்வாக அல்லது எழுத்துப் பிழையாகக் கருதப்படுதல் ஆகாது.

வைப்புப் பணங்கள்.

**16.** (1) குழுத் தலைவரொருவர் அல்லது அத்தகைய குழுத்தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், தேர்தலொன்று நடாத்தப்படுதலைத் தேவைப்படுத்தும் பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட தேதிக்கும் அக்குழுவின் நியமனப்பத்திரம் சமர்ப்பிக்கப்படுவதற்குமிடையில், அத்தகைய குழுவினால்பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொருவேட்பாளர்தொடர்பாகவும், இரண்டாயிரம் ரூபாவாகக் கணக்கிடப்பட்ட ஒரு பணத்தொகையைச் சட்டமுறை நாணயமாகத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்பிலிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ், குழுத் தலைவரொருவரால் அல்லது அத்தகைய குழுத் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரால் வைப்பிலிடப்பட்ட வைப்புப் பணமெதுவும், அது அவ்வுட்பிரிவினால் விதித்துரைக்கப்பட்ட

காலத்திற்குள்ளாகச் செலுத்தப்பட்டாலொழிய, தெரிவத்தாட்சி அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்படுதலாகாது.

(3) இப்பிரிவின்கீழ் வைப்புப்பணம் தெரிவத்தாட்சி அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து, அத்தகைய அலுவலர், எந்த ஆளினால் அந்த வைப்புப்பணம் செலுத்தப்பட்டதோ அந்த ஆளுக்கு அத்தகைய வைப்புப் பணத்தைத் தாம் ஏற்றுக் கொண்டமையை ஒப்புக்கொள்ளும். அத்தகைய அலுவலரால் ஒப்பமிடப்பட்ட எழுத்திலான பற்றுச் சீட்டொன்றை உடனடியாக வழங்குதல் வேண்டும் ; அத்துடன் அப்பற்றுச் சீட்டானது–

(அ) எக்குழுத் தலைவரால் பணம் வைப்பிலிடப்பட்டதோ அக்குழுத் தலைவரின் பெயர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவ்வாளினால் பணம் வைப்பிலிடப்பட்டதோ அந்த ஆளினதும் எவர் சார்பாக வைப்பிலிடப்பட்டதோ அவரதும் பெயர் ;

(ஆ) வேட்பாளர்களின் எண்ணிக்கை ;

(இ) வைப்புப்பணத் தொகை; அத்துடன்

(ஈ) வைப்பிலிடப்பட்ட நேரமும் தேதியும்

என்பவற்றைக் கூறுதல் வேண்டும்.

*வைப்புப் பணத்தொகை களைக் கையுதிர்த்தல்.*

17. (1) பதினாறாம் பிரிவின்கீழ் தெரிவத்தாட்சி அலுவலரொருவரிடம் செலுத்தப்பட்ட வைப்புப்பணத் தொகை ஒவ்வொன்றும், உடனடியான அத்தகைய அலுவலரினால் வைப்புப்பணக் கணக்கொன்றில் வரவுவைக்கப் பட்டு, (2) ஆம், (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கையுதிர்க்கப்படுதல் வேண்டும்.

(2) சுயேச்சைக் குழுவொன்றின் ஒரு நியமனப் பத்திரம் 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நிராகரிக்கப்படுமிடத்து, வைப்புப் பணமானது, அவ்வைப்புப் பணத்தைச் செலுத்திய ஆளுக்கு மீளக்கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் சுயேச்சைக் குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை ஏதேனும் தேர்தல் மாவட்டத்தின் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கையின் எட்டிலொரு பங்கை விஞ்சாததாயுள்ளவிடத்து, அத்தகைய குழுவின் வேட்பாளர்கள் தொடர்பாகச் செலுத்தப்பட்ட வைப்புப் பணம் இழக்கப்பட்டதாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலரால் வைப்புக் கணக்கிலிருந்து திரட்டு நிதியத்திற்கு மாற்றப்படுதலும் வேண்டும்; அத்துடன், ஏனைய ஒவ்வொரு விடயத்திலும் தேர்தலின் முடிவு வெளிப்படுத்தப்பட்ட பின்னர் இயன்றளவு விரைவாக, அவ்வைப்புப் பணம், அதனைச் செலுத்திய ஆளிடம் மீளக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்கென, ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை, உண்மையாக எண்ணப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையெனக் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன், வறிதானவையென நிராகரிக்கப்பட்ட வாக்குகள் எவற்றையும் உட்படுத்தாதிருத்தலும் வேண்டும்.

*குறித்த சில சந்தர்ப்பங்களில் நியமனத்துக்குச் சம்மதமளித்தல் தவறொன்றாதல்.*

**18**. பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, ஆளெவரும் -

(அ) ஊழல் அல்லது சட்டமுரணான பழக்கமொன்றுக்காக அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் காரணமாக, அல்லது 1946 ஆம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசுப் பேரவைக் கட்டளையின் கீழ் அல்லது இச்சட்டத்தின் கீழ் தேர்தல் நீதிபதியொருவரின் அறிக்கை காரணமாக அல்லது 1981 ஆம் ஆண்டின் சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின்கீழ் உயர்நீதிமன்றத்தின் அறிக்கை காரணமாக; அல்லது

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21*

(ஆ) அரசியலமைப்பின் 81(1) ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அவர்மீது குடியியற்றகுதியீனம் விதிக்கப்பட்டிருத்தல் காரணமாக, தகைமையற்றவராகவுள்ளவிடத்து, இச்சட்டத்தின் கீழான தேர்த லொன்றில் வேட்பாளரொருவராகப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தமது சம்மதத்தைத் தெரிவிப்பாராயின், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னராகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் நான்கு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று மாதகாலத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*நியமனப் பத்திரங்களை நிராகரித்தல்*

**19**. (1) தெரிவத்தாட்சி அலுவலர், நியமனக் காலப்பகுதி முடிவடைந்ததன் உடன்பின்னராக, அவரால் பெற்றுக் கொள்ளப் பட்ட நியமனப்பத்திரங்களைப் பரிசீலனை செய்து -

(அ) பதினைந்தாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் அல்லது (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒப்படைக்கப்பட்டிராத ; அல்லது

(ஆ) அரசியலமைப்பின் 99 (3) ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட மொத்த எண்ணிக்கையினரான வேட்பாளர்களைக் கொண்டிராத ; அல்லது [*பி4. 1988 இன் 15*]

(இ) அவை தொடர்பாக 16 பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டுள்ள வைப்புப்பணம் செலுத்தப்பட்டிராத; அல்லது

(ஈ) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒரு வேட்பாளரின் அல்லது ஒருவருக்கு மேற்பட்ட வேட்பாளர்களின் சம்மதம் அல்லது அரசியலமைப்புக்கான ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் வேட்பாளர்களுள் ஒருவரின் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோரின் சத்தியம் அல்லது உறுதியுரை, நியமனப்பத்திரத்தில் புறக்குறிப்பிடப்பட்டிராத; அல்லது [*பி4. 1988 இன் 15*]

(உ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் விடயத்தில் செயலாளரின் ஒப்பம் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் குழுத் தலைவரின் ஒப்பம் நியமனப்பத்திரத்திற் காணப்படாதுள்ளவிடத்து அல்லது அத்தகைய ஒப்பம், 15 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தாட்சிப்படுத்தப்படாதுள்ள

நியமனப்பத்திரமெதனையும் நிராகரித்தல் வேண்டும்.

[பி4. 1988 இன் 15]

(1அ) நியமனப்பத்திரத்துக்கான ஆட்சேபனைகள் எவையும் நியமனக் காலப்பகுதியின் கடைசிநாளன்று நண்பகல் பன்னிரெண்டு மணிக்கும் பிற்பகல் ஒன்றரை மணிக்கும் இடையே தெரிவத்தாட்சி அலுவலருக்குச் செய்யப்படலாமென்பதுடன், அத்தகைய ஆட்சேபனையெதுவும் அந்நாளன்று பிற்பகல் ஒன்றரை மணிக்குப் பின்னர் தெரிவத்தாட்சி அலுவலரினால் ஏற்றுக் கவனிக்கப்படுதலுமாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தெரிவத்தாட்சி அலுவலரால் நியமனப்பத்திர மெதுவும் நிராகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தெரிவத்தாட்சி அலுவலர், விடயத்திற்கேற்றாற்போல,அத்தகைய நியமனப்பத்திரத்தினைச்சமர்ப்பித்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளருக்கு அல்லது குழுத் தலைவருக்கு, அத்தகைய நிராகரிப்புப்பற்றி அறிவித்தல் வேண்டும். அத்தகைய நியமனப்பத்திரத்தை நிராகரிப்பதற்கான தெரிவத்தாட்சி அலுவலரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

போட்டியில்லாத தேர்தல்கள்.
[பி5. 1988 இன் 15]

**20.** (1) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியொன்றினது அல்லது ஒரு சுயேச்சைக்குழுவினது வேட்பாளர்கள் மாத்திரம்தேர்தலுக்காகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டோராக இருக்குமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலரானவர், அவரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குள்ளாக, எந்த வேட்பாளர்களுடைய பெயர்கள் அத்தகைய நியமனப் பத்திரத்தில் காணப்படுகின்றனவோ அந்த வேட்பாளர்களுள் எவர்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை முடிவுசெய்வதற்காக, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரை அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவரைக் கோருதல் வேண்டும். அத்தகைய செயலாளர் அல்லது குழுத்தலைவர், தெரிவத்தாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தமது முடிவைத் தெரிவித்தால், தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய முடிவில் முறையே குறித்துரைக்கப்பட்டவர்களான வேட்பாளர்களை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென வெளிப் படுத்துதல்வேண்டும். ஆனால், அத்தகைய செயலாளர் அல்லது குழுத்தலைவர், தெரிவத்தாட்சி அலுவலரால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அவரது முடிவை அறிவிக்கத் தவறினால், அப்போது, அத்தகைய நியமனப்பத்திரத்தில் அவர்களின் பெயர்கள் தோன்றுகின்றவர்களாய்த் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமான அத்தகைய எண்ணிக்கையினரான வேட்பாளர்கள் அத்தகைய நியமனப் பத்திரத்தில் தோன்றும் ஒழுங்கு வரிசைப்படி உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனரென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) பொருளளவில், இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள 'ஆ' என்னும் படிவத்திலான விபரத்திரட்டொன்றைத் தெரிவத்தாட்சி அலுவலர் உடனடியாகத் தயாரித்து ஆணையாளரிடம் சேர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டதாக வெளிப்படுத்தப் பட்ட உறுப்பினர்களின் பெயர்களை, ஆணையாளர் கசெற்றில் வெளியிடப்படச் செய்வித்தல் வேண்டும்.

*நியமனப்பத்திரங்களெவையும் பெறப்படாதவிடத்து நடவடிக்கைமுறை*

**21**. ஏதேனும் தேர்தல் மாவட்டத்தின் விடயத்தில், நியமனக் காலப்பகுதி முடிவில், தெரிவத்தாட்சி அலுவலரானவர் -

(அ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது ஏதேனும் சுயேச்சைக் குழு சார்பாக நியமனப்பத்திரம் எதுவும் தகுந்த முறையில் பெற்றுக்கொள்ளப்பட வில்லையென; அல்லது

(ஆ) அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா நியமனப் பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளனவென,

காணுமிடத்து, நியமனப்பத்திரங்களெவையும்பெற்றுக்கொள்ளப்படவில்லை என்னும் அல்லது அவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட நியமனப்பத்திரங்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டுள்ளன என்னும் நிகழ்வை தெரிவத்தாட்சி அலுவலர் ஆணையாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். ஆணையாளரானவர், அத்தகைய அறிக்கையைப் பெற்றபின்னர் ஏழு நாட்களுக்குப் பிந்தாது, இரண்டாவது நியமனக் காலப்பகுதியொன்றை விதித்துரைத்து அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதி, அறிவித்தல் வெளியீட்டுத் தேதிக்குப் பின்னரான ஏழாம் நாள் தொடங்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னரான பத்தாம் நாள் நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முடிவடைதலும் வேண்டும். இச்சட்டத்தின் ஏற்பாடுகளானவை எவ்வாறாயினும் 10 ஆம்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நியமனக் காலப்பகுதியின் கால அளவு இரண்டாம் நியமனக் காலப்பகுதிக்கு ஏற்புடைத்தாதலாகாதென்பதற்கமைவாக இரண்டாம் நியமனக் காலப்பகுதி தொடர்பாக ஏற்புடைத்தாதல் வேண்டும்.

*போட்டியுள்ள தேர்தல்கள்.*

**22**. (1) நியமனக் காலப்பகுதி முடிவடையும்பொழுதும் நியமனப்பத்திரம் எதுவும் நிராகரிக்கப்பட்ட பின்னரும், ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் அல்லது சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் தகுந்த முறையில் தேர்தலுக்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களாயிருப்பரெனின் தெரிவத்தாட்சி அலுவலரானவர் உடனடியாகப் பின்வருமாறு செய்தல் வேண்டும்; அதாவது -

(அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி ஒவ்வொன்றிற்கும் அத்தேர்தலின் நோக்கத்திற்கென அக்கட்சியின் ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னத்தினைக் குறித்தொதுக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு சுயேச்சைக்குழு தொடர்பிலும், ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமொன்றையும் குறித்தொதுக்குதல் வேண்டும். அத்துடன், ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் இருக்குமிடத்து -

(i) முதற்கண், சுயேச்சைக் குழுத்தலைவர்களுக்கிடையிலான உடன்படிக்கையால்; அல்லது

(ii) அத்தகைய உடன்படிக்கை இல்லாதபோது, தெரிவத்தாட்சி அலுவலர் தமது பூரண தற்றுணிபில் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் நடாத்தப்பட்ட அல்லது இழுக்கப்பட்ட திருவுளச் சீட்டிழுப்பின் மூலம்.

தீர்மானிக்கப்பட்ட, ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமொன்றையும் வேறுபடுத்திக் காட்டும் இலக்கமொன்றையும் குறித்தொதுக்குதல் வேண்டுமென்பதுடன்-

(i) அத்தகைய கட்சியின் பெயருக்கு எதிராகவும்; அத்துடன்

(ii) சுயேச்சைக்குழு ஒன்றின் விடயத்தில், ''சுயேச்சைக் குழு'' என்ற சொற்களுக்கும், அக்குழுவுக்குக் குறித்தொதுக்கப்பட்ட வேறுபடுத்திக் காட்டும் இலக்கத்துக்கும் எதிராகவும்.

அத்தகைய சின்னமானது, வாக்குச்சீட்டில் அச்சிடப்படுதலும் வேண்டும்.

(2) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியொன்றினது ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னமானது, அத்தகைய கட்சியானது தேர்தல் ஒன்றில் போட்டியிடினும்சரி அல்லாவிடினும்சரி, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஏதேனும் சுயேச்சைக் குழுவிற்குக் குறித்தொதுக்கப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ், சின்னங்களைக் குறித் தொதுக்கியதன் பின்னர், தெரிவத்தாட்சி அலுவலரானவர், உடனடியாக-

(அ) இதனகத்துப்பின்னர் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க, வாக்கெடுப்பொன்று நடாத்தப்படுவதனை இயலச்செய்வதற்காக அத்தகைய தேர்தலை ஒத்தி வைத்தல் வேண்டும்;

(ஆ) தேர்தல் போட்டியிடப்படுகின்றது என ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) ஆணையாளருக்கு, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் நியமனப்பத்திரப் பிரதிகளையும், ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவிற்கும் எனக் குறித்தொதுக் கப்பட்ட சின்னங்கள் பற்றிய கூற்றொன்றையும், அத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் உள்ளவிடத்து, அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் குறித்தொதுக்கப்பட்ட வேறுபடுத்திக் காட்டும் இலக்கங்களையும், அத்தேர்தல் மாவட்டத்திலுள்ள வாக்கெடுப்பு மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்குமான வாக்கெடுப்பு நிலையத்தினது அல்லது வாக்கெடுப்பு நிலையங்களினது அமைவிடம் பற்றியதும் அத்துடன், பெண் வாக்காளர்களுக்கென எவையேனும் குறிப்பான வாக்கெடுப்பு நிலையங்கள் ஒதுக்கப்பட்டிருந்தால் அவை பற்றியதுமான கூற்றொன்றையும், அனுப்பி வைத்தல் வேண்டும்.

(4) ஏதேனும் விடயத்தில் சிறப்பான சந்தர்ப்பங்களில், ஏதேனும் வாக்கெடுப்பு மாவட்டத்தின் பெண் வாக்காளர்களுக்கென தனி வேறானதொரு வாக்கெடுப்பு நிலையமொன்றை ஏற்படுத்துதல் அவசியமானது அல்லது உசிதமானது என தெரிவத்தாட்சி அலுவலர் கருதினாலொழிய, ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்துக்கும் ஒரு வாக்கெடுப்பு நிலையம் இருத்தல் வேண்டுமென்பதுடன் அதற்கதிகமாக இருத்தலுமாகாது.

(5) ஏதேனும் வாக்கெடுப்பு மாவட்டத்திலுள்ள சிறப்பான சந்தர்ப்பங்களைக் கருத்திற்கொண்டு தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய வாக்கெடுப்பு மாவட்டத்துக்கு வெளியே வாக்கெடுப்பு நிலையமொன்றை அமைக்க முடிவுசெய்யுமிடத்து தவிர, ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்துக்குமான வாக்கெடுப்பு நிலையம் அல்லது நிலையங்கள் அத்தகைய வாக்கெடுப்பு மாவட்டத்துள் அமைந்திருத்தல் வேண்டும். வாக்கெடுப்பு நிலையத்தின் அமைவிடமானது, வாக்கெடுப்பு மாவட்டத்தின் தேருநர்களுக்கு ஆகக்குறைந்த வசதியீனத்தை மட்டும் ஏற்படுத்தும் அவ்வகையில் அமைதல் வேண்டும்.

*நியமனத்தின் போது சமுகமாயிருப் பதற்கு உரித் துடைய ஆட்கள்.*

**23.** தெரிவத்தாட்சி அலுவலரின் சம்மதத்துடனன்றி அத்துடன், அவருக்கு உதவிபுரியும் நோக்கத்துக்காகவன்றி, தெரிவத்தாட்சி அலுவலரையும், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளரையும், அதிகாரமளிக்கப்பட்ட முகவரையும், குழுத் தலைவரையும், நியமனப்பத்திரமொன்றில் எவ்வேட்பாளரின் பெயர் இரண்டாவதாகக் காணப்படுகின்றதோ அவ் வேட்பாளரையும், ஒவ்வோர் அதிகாரமளிக் கப்பட்ட முகவராலும் அல்லது குழுத் தலைவராலும் தெரிவுசெய்யப்பட்ட ஆள் எவரேனுமிருப்பின், அவ்வேறு ஓர் ஆளையும் தவிர, ஆளெவரும் 15 ஆம், 19 ஆம், 20ஆம், 22 ஆம் பிரிவுகளின் கீழான நடவடிக்கைகளில் சமுகமாயிருப்பதற்கு உரித்துடையராதலாகாது.

## பாகம் III

## வாக்கெடுப்பு

*வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தல்.*

**24.** (1) தேர்தல் மாவட்டமொன்று தொடர்பாக, 22 ஆம் பிரிவின்கீழ் அறிக்கையொன்றினைப் பெற்றதன்மேல், ஆணையாளர் பின்வருவனவற்றைக் குறித்துரைக்கும் அறிவித்தலொன்றைக் கசெற்றில் வெளியிடுதல் வேண்டும் -

(அ) தேர்தல் போட்டி எந்தத் தேர்தல் மாவட்டத்தில் நடைபெறுகிறதோ அந்தத் தேர்தல் மாவட்டம்;

(ஆ) அத்தேர்தல் மாவட்டத்தின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படு வதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிஒவ்வொன்றினதும்சுயேச்சைக்குழு ஒவ்வொன்றினதும் சிங்கள நெடுங்கணக்குக்கிணங்க, அகர வரிசைப்படியான, வேட்பாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டவாறான வேட்பாளர்களின் பெயர்களும், அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடர் எண்ணும், அத்தகைய கட்சிக்கு அல்லது குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சின்னமும், [பி6. 1988 இன் 15]

அத்துடன் சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில், சுயேச்சைக் குழு என்ற சொற்களும் வேறுபடுத்திக் காட்டும் இலக்கம் ஏதேனும் இருப்பின் அதுவும்;

(இ) பத்தாம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட தேதியான வாக்கெடுப்புத் தேதி; அத்துடன்

(ஈ) அந்தத் தேர்தல் மாவட்டத்திலுள்ள வாக்கெடுப்பு மாவட்டம் ஒவ்வொன்றுக்குமான வாக்கெடுப்பு நிலையம் அல்லது வாக்கெடுப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடமும், பெண் வாக்காளர்களுக்கென வாக்கெடுப்பு நிலையங்கள் ஒதுக்கப்பட்டிருந்தால், குறிப்பான அந்த வாக்கெடுப்பு நிலையங்களும்.

(2) ஏதேனும் எதிர்பாராத இக்கட்டுநிலை காரணமாக, (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப்பட்ட இடமல்லாத வேறு இடத்தில் வாக்கெடுப்பு நிலையம் எதுவும் அமைந்திருத்தல் அவசியமானதாக இருக்குமிடத்து, ஆணையாளர், அந்நிலையம் அமைந்திருக்க வேண்டிய இடத்தினைத் தமது பூரண தற்றுணிபில் தீர்மானிக்கக் கூடிய அத்தகைய முறையில் மாற்றுவிக்கலாம்.

(3) ஏதேனும் எதிர்பாராத இக்கட்டுநிலை அல்லது காத்திராப்பிரகாரமான சந்தர்ப்பம் காரணமாக தேர்தல் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட நாளன்று, தேர்தல் மாவட்டமெதிலும் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடாத்தப்பட முடியாமல் இருக்குமிடத்து, ஆணையாளர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய வாக்கெடுப்பை நடாத்துவதற்கு பிறிதொரு நாளை நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய வேறு நாளானது கசெற்றில் கட்டளை வெளியிடப்பட்ட பின்னரான பதினான்காம் நாளுக்கு முன்னதாக இருத்தலுமாகாது.

பெயர் நியமனத்தின் பின்னர் வேட்பாளர் இறத்தல்.
[பி7. 1988 இன் 15]

**25.** (1) வாக்கெடுப்பின் நோக்கங்களுக்காகத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதற்கும் வாக்கெடுப்புத் தொடங்குவதற்கும் இடையே வேட்பாளரொருவர் இறக்கும்போதிலெல்லாம், ஆணையாளர் அத்தகைய இறப்பின் நிகழ்வுபற்றி திருப்திப்படுவதன்மேல், விடயத்துக்கேற்ப எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் இறந்து போன வேட்பாளர் பெயர்குறித்து நியமிக்கப்பட்டாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரை அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவரை, இறந்துபோன வேட்பாளரின் இடத்தில் இன்னொரு வேட்பாளரைப் பெயர்குறித்து நியமிக்கும்படி எழுத்தில் பணித்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான பணிப்பைப் பெற்றதன் மேல் விடயத்துக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளர் அல்லது அந்தச் சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவர், அத்தகைய பணிப்பைப் பின்பற்றிப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளரின் பெயரையும் முகவரியையும் ஆணையாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தகவலைப் பெற்றதன்மேல் ஆணையாளர் நியமனப்பத்திரத்தில் இருந்து இறந்துபோன வேட்பாளரின் பெயரை நீக்கிவிடும்படியும், அத்தகைய நியமனப்பத்திரத்தில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளரின் பெயரைப் பதியும்படியும் தெரிவத்தாட்சி அலுவலரைப் பணித்தல் வேண்டும். ஆணையாளர், (1) ஆம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட வேட்பாளரின் இறப்புப் பற்றிய நிகழ்வையும், அத்தகைய இறப்பைப் பொருட்படுத்தாது இறந்துபோன வேட்பாளரின் பெயரை விட்டுவிட்டும், (2) ஆம் உட்பிரிவின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளரின் பெயரை உள்ளடக்கியும் உள்ள நியமனப்பத்திரம் செல்லுபடியான தென்றும், 24 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு வாக்கெடுப்பு எடுக்கப்படுதல் வேண்டுமென்றும் கூறுகின்ற அறிவித்தலொன்றைக் கசெற்றில் வெளியிடுதல் வேண்டும்.

*அஞ்சல் மூலம் வாக்களித்தல்.*

**26**. (1) ஏதேனும் தேர்தல் மாவட்டத்திலான தேர்தலொன்றின் நோக்கத்துக்காக, இப்பிரிவின்கீழ் அஞ்சல் வாக்காளரொருவராக கணிக்கப்படுவதற்கு உரித்துடையவரான ஆள் ஒருவர், அத்தகைய தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிக்கலாம் என்பதுடன், நேரடியாக வாக்களித்தலுமாகாது.

*இரண்டாம் அட்டவணை 21 இன் 2023*

இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு முரணாக தேர்தலொன்றில் நேரடியாக வாக்களிக்கும் ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டு காலத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில், அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்று–

[*பி8. 1988 இன் 15*]

(அ) இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் உறுப்பினரொருவர் அல்லது பொலிசுத் திணைக்களத்திலுள்ள, மறியற்சாலைகள் திணைக்களத்திலுள்ள, இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களத்திலுள்ள, அஞ்சல் திணைக்களத்திலுள்ள அத்துடன் தொலைத் தொடர்புகள் திணைக் களத்திலுள்ள அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையிலுள்ள அல்லது ஏதேனும் பிராந்தியப் போக்குவரத்துச் சபையிலுள்ள அலுவலர் ஒருவர் அல்லது சேவையாளர் ஒருவர் அத்தகைய உறுப்பினராக, அலுவலராக அல்லது சேவையாளராக ஊழியம் செய்கின்றமையான குறிப்பான சூழ்நிலைகள் காரணமாக தமக்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் தாம்

நேரடியாக வாக்களிக்க முடியாதவராயுள்ளார் அல்லது நேரடியாக வாக்களிக்க முடியாமற் போகும் சாத்தியம் உண்டு என்ற ஏதுவின் மேல் அந்த உறுப்பினரால், அலுவலரால் அல்லது சேவை யாளரால் செய்யப்படலாம்: அத்துடன்

(ஆ) பகிரங்க சேவையிலுள்ள அல்லது இலங்கை மத்திய வங்கியிலுள்ள அல்லது உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் தேர்தலோடு தொடர்புபட்ட நோக்கம் ஒன்றுக்காக வாக்கெடுப்புத் தேதியன்று தாம் ஊழியம் செய்கின்றமையான குறிப்பான சூழ்நிலைகள் என்ற ஏதுவின் மேல் அல்லது அந்நோக்கத்துக்காகத் தாம் ஊழியத்தில் அமர்த்தப்படும் சாத்தியம் உண்டு என்ற ஏதுவின்மேல் அந்த அலுவலரால் அல்லது சேவையாளரால் செய்யப்படலாம்; அத்துடன்

(இ) பொதுத்தேர்தல் ஒன்றில் வேட்பாளர் ஒருவர், தாம் வேறொரு தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளராக நிற்கும் காரணத்தினால், தமக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் தாம் நேரடியாக வாக்களிக்க முடியாதவராயுள்ளார் அல்லது முடியாமல் போகும் சாத்தியம் உண்டு என்ற ஏதுவின்மேல் அந்த வேட்பாளரினால் செய்யப்படலாம்.

(3) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்று, தேர்தல் ஒன்று நடாத்தப்படுதலைத் தேவைப்படுத்தும் பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட தேதியின் பின்னர் ஏழாம் நாளுக்கு முற்படாதும் பதினான்காம் நாளுக்குப் பிந்தாமலும் சென்றடையும் வண்ணம் தெரிவத்தாட்சி அலுவலருக்குச் செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய விண்ணப்பமானது, பொருளளவில் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையிலுள்ள ஒழுங்கு விதிகளால் அந்நோக்கத்திற்கென விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(4) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமெதுவும், அது இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்கவுள்ளது எனத் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் திருப்திப்பட்டாலொழிய, அவரால் அனுமதிக்கப்படுதலாகாது.

(5) தெரிவத்தாட்சி அலுவலர், அஞ்சல் வாக்காளர்களாகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பங்களைக் கையாண்டு முடிக்கும் நோக்கத்துக்காக, ஆளெவரையும், அந்நோக்கத்துக்கென அவசியமாகக் கூடியவாறான அத்தகையஎவையேனும்தகவல்களை அத்தகைய அலுவலருக்குக் கொடுக்குமாறு, அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம்.

(6) ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்றின் மீதான தெரிவத்தாட்சி அலுவலரொருவரின் முடிபு விண்ணப்பக்காரருக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(7) ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்ப மொன்றினை, அனுமதிப்பதான அல்லது அனுமதிக்க மறுப்பதான தெரிவத்தாட்சி அலுவலரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

(8) ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்ப மொன்று, தெரிவத்தாட்சி அலுவலரொருவரால் அனுமதிக்கப்பட்டுள்ள விடத்து, விண்ணப்பகாரரானவர், தேர்தலொன்றின் நோக்கத்துக்காக ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஒருவராதல் வேண்டும்.

(9) தெரிவத்தாட்சி அலுவலர், ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையவரான ஆள் ஒவ்வொருவருக்கும், அத்தகைய ஆளால் கொடுத்துதவப்பட்ட முகவரிக்கு–

(அ) வாக்குச்சீட்டொன்றையும்;

(ஆ) ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவ மொன்றையும்;

(இ) உரியமுறையில் குறிப்பீடுசெய்யப்பட்டுத் திருப்பி அனுப்பப் படுகையில் அஞ்சல் வாக்குச்சீட்டு எந்த உறைக்குள் வைத்து அனுப்பப்பட வேண்டுமோ அந்த உறையாகவும், இவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உறையிலும் பார்க்கச் சிறிய ஓர் உறையாகவும், அது "வாக்குச்சீட்டு உறை" எனக் குறியீடு செய்யப்பட்டும், அத்துடன், அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டின் மீது அச்சிடப்பட்ட இலக்கம் குறிப்பீடு செய்யப்பட்டும் இருக்கும் ஓர் உறை ஒன்றையும்; அத்துடன்

(ஈ) மேல்கூறப்பட்ட ஆவணங்கள் திருப்பி அனுப்பப்படுவதற்கான உறையொன்றையும்.

இயன்றளவு விரைவில் அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(10) அஞ்சல் வாக்காளர்களாகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஆட்களால் பயன்படுத்தப்படவுள்ள வாக்குச்சீட்டின் படிவமும், ஆளடையாளத்தை வெளிப்படுத்தும் படிவமும், அத்துடன் அவை வழங்கப்படுவதன் மீதான நடவடிக்கைகளிற் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையிலடங்கியுள்ள ஒழுங்கு விதிகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

(11) அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஆளொருவருக்கு வழங்கப்பட்ட வாக்குச்சீட்டு ஒன்று இச்சட்டத்தில் ஓர் "அஞ்சல் வாக்குச்சீட்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(12) தேர்தல் ஒன்றுள்ள ஏதேனும் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடைய ஆள் ஒவ்வொருவரினதும், தேருநர் இடாப்பிலுள்ள பெயர், முகவரி, இலக்கம்

ஆகியவற்றைக் குறித்துரைத்து இச்சட்டத்தில் " அஞ்சல் வாக்காளர் நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும், நிரலொன்றை இயன்றளவு விரைவில் தயாரித்தல் வேண்டும். அத்தகைய நிரலானது, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையிலுள்ள ஒழுங்குவிதிகளால் அதற்கென விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

*உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டை*

**27**. (1) தெரிவத்தாட்சி அலுவலர், இடாப்பில் பெயர் காணப்படுகின்ற ஒவ்வொரு தேருநருக்கும், ஆணையாளரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும், பின்வருவனவற்றைக் குறித்துரைத்தும் வாக்காளர் அட்டையொன்றினை (இது இச்சட்டத்தில் "உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அனுப்பி வைத்தல் வேண்டும் -

(அ) தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும்;

(ஆ) இடாப்பில் கூறப்பட்டிருக்கின்றவாறு, தேருநரின் பெயரும், தகைமையளிக்கும் முகவரியும் பதிவு இலக்கமும்;

(இ) வாக்கெடுப்புப் பிரிவு;

(ஈ) வாக்கெடுப்பு மாவட்டம் ;

(உ) தேருநருக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையம் ; அத்துடன்

(ஊ) வாக்கெடுப்புத் தேதியும் நேரங்களும்;

*[பி2. 1988 இன் 35]*

ஆயின், அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையவராயிருக்கும் தேருநர் ஒருவருக்கு அல்லது எத்தேருநர் தொடர்பில் 127 ஆ என்னும் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று அனுமதிக்கப்பட்டுள்ளதோ அத்தேருநர் ஒருவருக்கு அத்தகைய அட்டை எதுவும் அனுப்பி வைக்கப்படுதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையொன்று வாக்கெடுப்புத் தேதிக்கு ஆகக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரேனும் கிடைக்கக்கூடியதாக ஒரு தேருநருக்குச் சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அத்தகைய அட்டையொன்றை முகவரியிடப்பட்ட ஆளிடம் ஒப்படைக்க அஞ்சல் அலுவலகமொன்று தவறுமிடத்து, முகவரியாளர் அதைப் பெறுவதற்கென வந்தால் அவருக்கு அது ஒப்படைக்கப்படுவதற்கென அத்தகைய அஞ்சல் அலுவலகத்தில் வாக்கெடுப்புத் தேதி வரை வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) அதிகாரமின்றி உத்தியோக பூர்வமான வாக்காளர் அட்டை எதனையும் வேறெந்த ஆளுக்கும் வழங்குகின்ற ஆள் ஒவ்வொருவரும்; அல்லது

(ஆ) உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையெதனையும் வேறெந்த ஆளுக்கும் விற்பனை செய்கின்ற அல்லது விற்பனை செய்ய முன்வருகின்ற அல்லது வேறெந்த ஆளிடமிருந்தும் உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையெதனையும் கொள்வனவு செய்கின்ற அல்லது கொள்வனவு செய்ய முன்வருகின்ற ஆள் ஒவ்வொருவரும்.

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரின் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றிற்கு அல்லது ஆறு மாத காலத்திற்கு மேற்படாத காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். *இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

(4) பகிரங்க அலுவலரென்ற தன்மையில் தமது கடமை நெறியின்போது செயலாற்றுகின்ற அலுவலரல்லாதவரும், வேறேவரேனும் ஆளின் உத்தியோகபூர்வமான வாக்காளார் அட்டையைத் தம்முடைமையில் வைத்திருப்பவருமான ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறுமாத காலத்திற்கு மேற்படாத காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். *இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

**28.** (1) ஆணையாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கமைவாக, ஒவ்வொரு தெரிவத்தாட்சி அலுவலரும், அவரது தேர்தல் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் தலைமை தாங்கவென, இதனகத்துப்பின்னர் தலைமை தாங்கும் அலுவலர் என அழைக்கப்படும் ஆள் ஒருவரை அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்களை நியமித்தல் வேண்டும் என்பதுடன், அந்த ஒருவரின் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்களின் அந்நியமனத்தை இல்லாதொழிக்கலாம். ஏதேனுமொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கென ஒன்றுக்கு மேற்பட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருப்பின், அவர்களுள் ஒருவரைத் தெரிவத்தாட்சி அலுவலர் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலராக இருக்கவென நியமிக்கலாம். அவர் மற்றைய தலைமைதாங்கும் அலுவலர்கள் மீதும் அந்நிலையத்தில் வாக்கெடுப்பை நடாத்துவதற்கான எல்லா ஒழுங்குகள் மீதும் பொதுவான மேற்பார்வையினைப் பிரயோகித்தல் வேண்டும். *தலைமை தாங்கும் அலுவலர்கள்.*

(2) எவரேனும் தலைமை தாங்கும் அலுவலர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு காரணத்தினால் ஏதேனும் தேர்தலில் செயலாற்றுவதிலிருந்து தடுக்கப்பட்டிருந்து, அத்துடன் இன்னுமோர் ஆளை நியமிப்பதற்குத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு நேரம் இல்லாதுவிடின், தலைமை தாங்கும் அலுவலர் அவருக்காகப் பதிற்கடமையாற்றுவதற்கெனப் பிரதியாளர் ஒருவரை நியமிக்கலாம், அத்தகைய ஒவ்வொரு நியமனமும், இயன்றளவு விரைவாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நியமனம் தெரிவத்தாட்சி அலுவலரால்,

அத்தகைய பிரதியாளரினால் ஏற்கெனவே புரியப்பட்ட எந்தச் செயலினதும் செல்லுபடியாம் தன்மைக்குப்பங்கமின்றி இல்லாதொழிக்கவும் படலாம்.

(3) தெரிவத்தாட்சி அலுவலர், அவர் பொருத்தமானதெனக் கருதினால், வாக்கெடுப்பு நிலையம் எதிலும் தலைமை தாங்கலாமென்பதுடன், தலைமை தாங்கும் அலுவலர் பற்றிய இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலருக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*வாக்கெடுப்பு நிலையங்களில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட வேண்டிய வசதிகள்.*

**29.** (1) ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் தேர்தலொன்றின் நோக்கங்களுக்காக, அம்மாவட்டத்துக்கான தெரிவத்தாட்சி அலுவலர் –

(அ) வாக்கெடுப்பு நடாத்துவதற்குஅவசியமாகக்கூடிய அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் வேண்டும்;

(ஆ) அத்தேர்தல் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்துக்கும் ஏதேனும் ஒரே நேரத்தில் நியாயமானவொரு எண்ணிக்கையினரான வாக்காளர்களைக் கொள்ளுவதற்கெனவும், வாக்காளர்கள் தமது வாக்குச் சீட்டுகளில் குறியீடு செய்யும் போது மற்றவர்கள் அதனைப் பார்க்காதிருக்கும் வகையில் அவர்கள் மறைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கெனவும் அவசியமாகக் கூடிய அத்தகைய எண்ணிக்கை கொண்ட வாக்களிப்பு அறைகளைக் கொடுத்துதவுதல் வேண்டும்;

(இ) ஒவ்வொரு தலைமைதாங்கும் அலுவலருக்கும், அவரது வாக்கெடுப்பு நிலையத்துக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட தேருநர்களின் பெயர்களை அத்தகைய இடாப்பில் கொண்டுள்ள தேருநர் இடாப்பின் அந்தப் பாகத்தின் பிரதியொன்றையும், அந்தப் பிரதியில் அஞ்சல் வாக்காளர்களின் நிரலில் காணப்படுகின்றனவான அத்தகைய தேருநர்களின் பெயர்கள் கொண்ட நிரல் ஒன்றையும் கொடுத்துதவுதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு தலைமை தாங்கும் அலுவலருக்கும் வழங்கப்பட்ட அந்த இடாப்பின் அப்பாகத்தில், ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ள தேருநர் ஒவ்வொன்றினதும் அத்துடன் எத்தேருநர் தொடர்பில் 127 ஆ என்னும் பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று அனுமதிக்கப்பட் டுள்ளதோ அத்தேருநர் ஒவ்வொன்றினதும் பெயருக் கெதிரே, வேறுபடுத்திக்காட்டும் குறியீடொன்று இடப்படுதல் வேண்டும் ; *[பி3, 1988 இன் 35]*

(ஈ) தெரிவத்தாட்சி அலுவலரின் கருத்தின்படி, அவ்வாக்கெடுப்பு நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட எண்ணிக்கையினரான வாக்காளர்களுக்கென அவசியமாகக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினதான வாக்குச்சீட்டுப் பெட்டிகளையும் வாக்குச் சீட்டுக்களையும் ஒவ்வொரு தலைமைதாங்கும் அலுவலருக்கு கொடுத்துதவுதல் வேண்டும் ;

(உ) வாக்காளர்கள் வாக்குச் சீட்டுகளிற் குறியீடு செய்வதை இயலுவாக்குவதற்கான பொருட்களையும் வாக்குச் சீட்டுக்களின் மீது அலுவலக முறையான குறியீட்டைத் துளையிடுவதற்கு அல்லது

பொறிப்பதற்கு ஆன கருவிகளையும் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்துக்கும் கொடுத்துதவுதல் வேண்டும் ;

(ஊ) இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விதத்தில் தேர்தலைச் செவ்வையாக நடாத்துவதற்கென அவசியமாகக்கூடிய அத்தகைய வேறு செயல்களையும் காரியங்களையும் செய்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாமையின் காரணத்துக்காக அல்லது வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பான ஏதேனும் விதிமுறைக்கமையாமையின் காரணங்களுக்காக, தேர்தலொன்று கேள்விக்குட்படுத்தப்படுதல் ஆகாது.

வாக்கெடுப்பு நிலையங்களில் வெளிக்காட்டி வைக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள்.

**30.** (1) வாக்கெடுப்பு நடைபெறும்போது, வாக்கெடுப்பு நிலையம் ஒவ்வொன்றினதும் தலைமைதாங்கும் அலுவலர் -

(அ) வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியேயும், அந்நிலையத்தின் வாக்களிப்பு அறை ஒவ்வொன்றிலும் பொருளளவில் இச்சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்திலானதும், வாக்காளர்களுக்கு வாக்களிக்க வழிகாட்டு முகமாக பணிப்புகளைக் கூறுவதுமான அறிவித்தலொன்றையும் ; அத்துடன்

(ஆ) வாக்கெடுப்பு நிலையத்துக்கு வெளியே தேர்தலில் போட்டியிடும் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் பெயரையும் அல்லது தேர்தலில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் "சுயேச்சைக் குழு" என்ற சொற்களையும் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட வேறுபடுத்திக்காட்டும் இலக்கம் ஏதேனும் இருப்பின் அதனையும், (வேட்பாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறாக) சிங்கள நெடுங் கணக்குக்கிணங்க அகர வரிசையில் அமைந்த அத்தகைய ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் அல்லது சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர்களின் பெயர்களையும், அத்தகைய வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் குறித்தொதுக் கப்பட்ட தொடர் எண்ணையும் அத்துடன் அத்தகைய கட்சி அல்லது குழு ஒவ்வொன்றுக்கும் குறித்தொதுக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப் பட்ட சின்னத்தையும் குறித்துரைக்கும் அறிவித்தலொன்றையும் வெளிக்காட்டி வைப்பித்தல் வேண்டும். [பி9, 1988 இன் 15]

(2) இப்பிரிவின் கீழான அறிவித்தல் ஒவ்வொன்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இருத்தல் வேண்டும்.

வாக்குச் சீட்டுப் பெட்டிகள்

**31.** ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியும், வாக்குச்சீட்டுக்களை உள்ளேயிடத்தக்கதாயும், பெட்டியின் பூட்டைத் திறக்காமல் பெட்டியிலிருந்து அவற்றை வெளியே எடுக்க முடியாததாயும் அமைக்கப்படுதல் வேண்டும்.

வாக்குச் சீட்டுகள்

**32.** (1) ஏதேனும் தேர்தல் மாவட்டத்திலான ஒவ்வொரு தேர்தலிலும், வாக்குகள் வாக்குச்சீட்டு மூலம் அளிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு வாக்காளரினது வாக்குச்சீட்டும், இதனகத்துப்பின்னர் விதித்துரைக்கப்படும்

படிவத்திலும் விபரங்களைக் கொண்டதுமான வாக்குச்சீட்டொன்றாயமைதல் வேண்டும்.

[பி10, 1988 இன் 15]

(2) வாக்குச்சீட்டு ஒவ்வொன்றும் பொருளளவில் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ‘இ’ என்னும் படிவத்தில் இருத்தல் வேண்டும் ; அத்துடன் -

(அ) தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் பெயர்களை அத்தகைய கட்சிகளின் பெயர்களினது ஒழுங்கு வரிசைப்படியும் அத்தகைய ஒவ்வொரு கட்சியினதும் பெயருக்கெதிரே தரப்பட்ட அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும் குறித்தொதுக்கப்பட்ட சின்னத்துடனும் சிங்கள நெடுங்கணக் கிற்கிணங்க, அகரவரிசைப்படி அமைந்ததாயும், அதனை உடனடுத்துப்பின்னர், தேர்தலில் போட்டியிடும் எவையேனும் சுயேச்சைக் குழுக்கள் இருப்பின், ஒவ்வொரு குழுவுக்கும் “சுயேச்சைக்குழு” என்ற சொற்களைத் தனித்தனியாகவும், தொடர் ஒழுங்குவரிசைப்படி வேறுபடுத்திக்காட்டும் இலக்கம் ஏதேனும் இருப்பின் அதனையும் அத்தகைய ஒவ்வொரு குழுவுக்கும் குறித்தொதுக்கப்பட்டு, அத்தகைய குழுவின் வேறுபடுத்திக் காட்டும் இலக்கத்துக்கு எதிரே இதனையுடனடுத்து எதிரே தரப்பட்ட சின்னத்தையும் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் கொண்டதாயும் இருத்தல் வேண்டும் ; தேர்தல் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் மூன்றைக் கூட்டிவரும் எண்ணிக்கைக்குச் சமமாகவுள்ளதாய் தொடர் ஒழுங்குவரிசைப்படி அத்தகைய எண்ணிக்கை அல்லது எண்ணிக்கைகள் இருத்தல் வேண்டும் ; [பி4, 1988 இன் 35]

(ஆ) மடிக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும்;

(இ) பின்பக்கத்தில் ஓர் இலக்கம் அச்சிடப்பட்டதாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அதே இலக்கத்தை அதன் முகப்புப் புறத்தில் கொண்டிருக்கும் அடியிதழ் ஒன்றுடன் சேர்ந்ததாயிருத்தல் வேண்டும்.

வாக்கெடுப்பு நேரங்கள்

**33.** கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் ஆணையாளர், வேறேதேனும்நேரத்தை நியமித்தாலொழிய, ஏதேனும்தேர்தல் மாவட்டத்திலான வாக்கெடுப்பானது, **24** ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நாளில் முற்பகல் ஏழு மணிக்குத் தொடங்குதல் வேண்டுமென்பதுடன் அதே நாளில் பிற்பகல் நாலு மணிக்கு முடிவடைதலும் வேண்டும்.

வாக்கெடுப்பு முகவர்களை நியமித்தல்

**34.** (1) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒவ்வொன்றினதும் செயலாளரும் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவரும், அல்லது எவரேனும் குழுத் தலைவரும், வாக்கெடுப்பின்போது அந்த வாக்கெடுப்பு நிலையத்துக்கான எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் நியமனம் இல்லாதொழிக்கப்பட வேண்டிய தேவையைக்கவனத்திற்கொண்டு, ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்குமென நியாயமான எண்ணிக்கையினரான வாக்கெடுப்பு முகவர்களை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும், தேசிய அடையாள அட்டையின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது

பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கங்களையும், முகவரிகளையும் கூறுகின்ற அத்தகைய நியமனம் ஒவ்வொன்றும் பற்றிய எழுத்திலான அறிவித்தலானது, வாக்கெடுப்பு தொடங்கப்படுவதற்கு முன்னர் அல்லது நடைபெறும்பொழுது அந்நிலையத்திலுள்ள தலைமைதாங்கும் அலுவலருக்கு அத்தகைய செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத் தலைவரால் கொடுக்கப்படுதல் வேண்டும். [*பி11, 1988 இன் 15*]

(2) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளர் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத் தலைவரொருவர், அத்தகைய செயலாளருக்கு, அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு அல்லது குழுத் தலைவருக்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களை, அத்தகைய கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால், தேர்தலுக்கெனப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் வேட்பாளருக்குக் கையளிக்கலாம் ; ஆனால், எவ்வாறாயினும், அத்தகைய தத்துவங்கள் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவு தொடர்பாகவும், ஒன்றைவிட அதிகமான வேட்பாளருக்குக் கையளிக்கப்படு தலாகாது. இவ்வுட்பிரிவின் கீழான ஏதேனும் கையளிப்பு, தெரிவத்தாட்சி அலுவலருக்கு வாக்கெடுப்புத் தேதிக்கு ஏழு நாட்களுக்குக் குறையாது முன்னராக எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத் தலைவர் அல்லது வேட்பாளர், அத்தகைய நிலையத்தில் செயலாற்றுவதற்கென நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு முகவர் எவரினதும் பெயரை அத்தகைய தலைமைதாங்கும் அலுவலருக்கு அறிவித்த பின்னர், அவ்வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை இல்லாதொழித்து, அத்துடன், அத்தகைய நிலையத்திற்கு வேறொரு வாக்கெடுப்பு முகவரை நியமிக்கின்ற விடத்து, விடயத்துக்கேற்ப, அத்தகைய செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத் தலைவர் அல்லது வேட்பாளர் அத்தகைய நியமனம் இல்லாதொழிக்கப்பட்டதையும் அத்தகைய நிலையத்துக்கு நியமிக்கப்பட்ட புதிய வாக்கெடுப்பு முகவரின் பெயரையும், தேசிய அடையாள அட்டையின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கத்தையும்முகவரியையும் அத்தகைய அலுவலருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். [*பி11, 1988 இன் 15*]

(4) ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் அல்லது சுயேச்சைக் குழுவினதும் இரண்டுக்கு மேற்பட்ட வாக்கெடுப்பு முகவர்கள், ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்துக்குள் எந்த நேரத்திலும் அனுமதிக்கப் படுதலோ அல்லது ஏதேனும்வாக்கெடுப்பு நிலையத்தில் இருக்கவிடப்படுதலோ ஆகாது.

(5) ஒராம் உட்பிரிவின் கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு, வாக்கெடுப்பு முகவரின் பெயர் தலைமைதாங்கும் அலுவலருக்கு அறிவிக்கப்படாத எந்த வாக்கெடுப்பு முகவரும், வாக்கெடுப்பு நிலையமொன்றுக்குள் அனுமதிக்கப்படுதலாகாது.

*வாக்கெடுப்பை நடாத்தும் பொதுவான முறைகள்*

**35.** (1) ஆளொருவர், எந்த எவ்வாக்காளர் கூட்டத்தைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த வாக்காளர் கூட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையம் தவிர்ந்த வேறு எந்த வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்களிக்க அனுமதிக்கப்படுதலாகாது.

(2) தலைமைதாங்கும் அலுவலர் அவரது நிலையத்தில் ஒழுங்கைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், ஒரு தடவையில் உட்செல்ல அனுமதிக்கப்பட வேண்டிய வாக்காளர்களின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்துதலும், வேட்பாளர்கள், வாக்கெடுப்பு முகவர்கள், கடமையாற்றும் பொலிஸ் அலுவலர்கள், வாக்கெடுப்பு நிலையத்தில் அலுவலக முறையில் வேலைக்கமர்த்தப்பட்ட மற்றைய ஆட்கள் தவிர்ந்த வேறு எல்லா ஆட்களையும் வெளியகற்றுதலும் வேண்டும்.

[பி12, 1988 இன் 15] ஆயின், எவ்வாறாயினும், ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட கட்சியிலிருந்தும் அல்லது சுயேச்சைக் குழுவிலிருந்தும் ஒரு வேட்பாளர் மட்டுமே ஏதேனும் ஒரு நேரத்தில் வாக்கெடுப்பு நிலையத்தினுட் செல்ல அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளெவரும் ஒழுக்கக்கேடாக நடந்தால் அல்லது தலைமைதாங்கும் அலுவலரின் சட்டபூர்வமான கட்டளைகளுக்கு கீழ்ப்படியத் தவறினால், தலைமைதாங்கும் அலுவலர், அவரை எவரேனும் பொலிஸ் அலுவலரைக் கொண்டு அல்லது தலைமைதாங்கும் அலுவலரினால் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளைக் கொண்டு, வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து உடனடியாக வெளியேற்றுவிக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் வாக்கெடுப்பு நிலையமொன்றிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆளெவரும் -

(அ) தலைமைதாங்கும் அலுவலரின் அனுமதியுடனன்றி, வாக்கெடுப்பு நேரங்களின் மீண்டும் வாக்கெடுப்பு நிலையத்துட் செல்லவிடப்படலாகாது ; அத்துடன்

(ஆ) அந்நிலையத்தில் ஏதேனுமொரு தவறைப் புரிந்துள்ளாரென அவர் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பின், நீதிவானொருவரின் முன்கொண்டு வரப்படக்கூடியவரை கட்டுக்காவலில் வைத்திருக்கப்படலாம் :

ஆயின், மற்றப்படிக்கு ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க உரித்துடைய எவரேனும் வாக்காளர், அத்தகைய நிலையத்தில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கொண்டிருப்பதிலிருந்து அவரைத் தடுக்குமுகமாக இவ்வுட்பிரிவினால் வழங்கப்பட்ட தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதலாகாது.

வாக்குச்சீட்டுப் பெட்டிகளில் இலச்சிணையிடுதலும் வாக்கெடுப்பைத் தொடங்குதலும்.

**36.** (1) வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு உடன் முன்னராக, வாக்கெடுப்பு நிலையமொன்றிலுள்ள தலைமை தாங்கும் அலுவலர் -

(அ) அத்தகைய நிலையத்தில் சமுகமாய் இருக்கக் கூடியோரான ஆட்கள் எவரேனுமிருப்பின், அத்தகைய ஆட்களுக்கு, வாக்கெடுப்பின் போது பயன்படுத்தப்படவுள்ள வாக்குச் சீட்டுக்களையும், அலுவலக முறையான இலச்சினையையும், அலுவலக முறையான குறியீட்டையும், தேருநர் இடாப்பின் பாகங்களின் பிரதிகளையும் காட்டுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) வாக்கெடுப்புத் தொடங்கும் போது பயன்படுத்தப்படவுள்ள ஒவ்வொரு வாக்குச்சீட்டுப்பெட்டியும் வெறுமையாயுள்ளதென்பதை மேற்சொல்லப்

பட்ட ஆட்கள் பார்க்கலாம். ஆதலால், வெறுமையாக ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியையும், அவர்களுக்குக் காண்பித்தல் வேண்டும் என்பதோடு, பின்னர் அதனைப் பூட்டி, அத்தகைய இலச்சினையை உடைத்தாலன்றி அதனைத் திறக்க முடியாதவாறு தடுக்கும் அத்தகைய முறையில் அவரது இலட்சினையை அதன் மீதிடுதலும் வேண்டும் ; அத்துடன், வாக்குச்சீட்டுகள் இடப்படுவதற்கென அவர் அதனைப் பார்க்கக்கூடிய விதத்தில் வைத்து அவ்வாறு பூட்டி இலச்சினையிட்ட நிலையில் அதனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினால் தலைமைதாங்கும் அலுவலரின் மீது சுமத்தப்பட்டுள்ள கடமைகள்,இச்சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் அத்தகைய முறையில் அவரால் புரியப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், வாக்கெடுப்புத் தொடங்கிய பின்னர் பயன்படுத்தப்படவுள்ள ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டிக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*வாக்குச்சீட்டுகள் வழங்குதல்.*

**37.** (1) ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒரு வாக்குச்சீட்டு கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு வாக்காளரும் ஒரு வாக்கையே கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) தலைமைதாங்கும் அலுவலரால் அல்லது அவரது அதிகாரத்தின்கீழ் செயலாற்றும் ஆளொருவரால், வாக்குச்சீட்டு வாக்காளரிடம் ஒப்படைக்கப் படுதல் வேண்டும். வாக்குச்சீட்டு வாக்காளருக்கு ஒப்படைக்கப்படுவதற்கு உடன் முன்னராக-

(அ தேருநர் இடாப்பின் பிரதியில் கூறப்பட்டவாறாக வாக்காளரின் இலக்கமும், பெயரும், விவரணமும் கூப்பிடப்படுதல் வேண்டும்;

(அஅ) வாக்காளரின் செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்று பரிசோதனை செய்யப்பட்டு பெயரும்ஆளடையாளமும்நிச்சயிக்கப்படுதல் வேண்டும். [பி14. 2004 இன் 6]

(ஆ) வாக்காளரின் இலக்கமானது அடியிதழ் தாளிற் குறிக்கப்பட்டு அதிலிருந்து வாக்குச்சீட்டு கிழிக்கப்படுதல் வேண்டும்.

(இ) வாக்குச்சீட்டானது, அலுவலக முறையான குறியீட்டினால் ஒன்றில் பொறிக்கப்பட்டோ, பதிக்கப்பட்டோ அல்லது துளையிடப்பட்டோ இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) வாக்காளர் வாக்குச்சீட்டொன்றைப் பெற்றுள்ளாரென்பதைக் குறிப்பதற்காக, அவருக்குக் கிடைத்த குறிப்பான வாக்குச்சீட்டைக் காண்பியாது, வாக்காளரின் பெயருக்கெதிரே இடாப்பில் குறியீடொன்று இடப்படுதல் வேண்டும்.

*வாக்காளரைப் பரிசோதித்தலும் தோதான குறியீட்டை இடுதலும்.*

**38.** (1) தேர்தலொன்றில் வாக்காளரொருவர் -

[பி.7, 2004 இன் 14]

(அ) தலைமைதாங்கும் அலுவலரை அல்லது அவரின் அதிகாரத்தின் கீழ் செயலாற்றும் ஓர் ஆளை, தோதான குறியீட்டின் அல்லது ஆளடையாள ஆவணத்தின் பரிசோதனையைச் செய்வதற்கு விட மறுத்தால் ; அல்லது

(ஆ) அத்தகைய பரிசோதனையை செய்யவிட்டபின்னர், அப்பரிசோதனை ஒன்றில் அத்தகைய வாக்காளருக்கு தோதான குறியீடு ஏற்கனவே இடப்பட்டுள்ளதென்பதை அல்லது வாக்காளரின் அடையாளம் பற்றிய சந்தேகம் எழச் செய்கின்ற நிகழ்வுகளை வெளிக்காட்டினால் ; அல்லது

(இ) அத்தகைய பரிசோதனையைச் செய்துவிட்ட பின்னர், அத்தகைய வாக்காளருக்கு தோதான குறியீடு ஏற்கனவே இடப்படவில்லையென வெளிக்காட்டியிருந்து, ஆனால் அத்தகைய வாக்காளர் அத்தகைய அலுவலரை அல்லது ஆளை, அத்தகைய அலுவலரை அல்லது ஆளை, அத்தகைய வாக்காளருக்குத் தோதான குறியீட்டை இடுவதற்கு விட மறுத்தால்,

அவருக்கு வாக்குச்சீட்டு எதுவும் ஒப்படைக்கப்படுதலாகாதென்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில், முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய வாக்காளர், அத்தகைய தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலும் ஆகாது.

(2) வாக்கெடுப்பு நிலையமொன்றின் தலைமைதாங்கும் அலுவலர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய நிலையத்தில் வாக்குச்சீட்டொன்று எந்த வாக்காளருக்கு ஒப்படைக்கப்பட வில்லையோ அந்த ஒவ்வொரு வாக்காளர் பற்றியதுமான பின்வரும் விவரங்களை, பொருளளவில் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள 'ஈ' என்னும் படிவத்திலான நிரலொன்றில் பதிதல் வேண்டும் :

(அ) தேருநர் இடாப்பில் அத்தகைய வாக்காளரின் இலக்கம் ;

(ஆ) அத்தகைய இடாப்பில் காணப்படுகின்றவாறாக அத்தகைய வாக்காளரின் பெயர் ; அத்துடன்

(இ) அத்தகைய வாக்காளருக்கு வாக்குச்சீட்டொன்று எந்த ஏதுவின் மீது ஒப்படைக்கப்படவில்லையோ அந்த ஏது.

இச்சட்டத்தில் அத்தகைய நிரலானது, "38" ஆம் பிரிவின் கீழ் வாக்குச் சீட்டுக்கள் ஒப்படைக்கப்படாத வாக்காளர் நிரல்" என அழைக்கப்படும்.

(3) இப்பிரிவில்-

(அ) "தோதான குறியீடு" என்ற சொல்லமைப்பு, துடைத்தழிக்கவியலாத மையினால் இடப்பட்ட குறியொன்றெனப் பொருளாகும் ;

(ஆ) வாக்காளரொருவரைப் பரிசோதித்தல் அல்லது வாக்காள ரொருவருக்குக் குறியிடுதல்சம்பந்தமான அல்லது அது தொடர்பிலான

ஏதேனும் சந்தர்ப்பத்தில் குறிப்பிடப் பெறுகையில் "தோதான" என்ற பதம் -

(i) அவரது இடது கையில் சிறு விரல் அல்லது அத்தகைய விரல் இல்லாதுவிடின், அவரது இடதுகையின் வேறேதேனும் விரல்; அல்லது

(ii) அவரது இடது கையில் எல்லா விரல்களுமில்லா விடின், அவரது வலது கையின் சிறுவிரல் அல்லது, அத்தகைய விரல் இல்லாதுவிடின், அவரது வலது கையின் வேறேதேனும் விரல் ; அல்லது

(iii) அவரது இடது கையிலும் வலது கையிலும் எல்லா விரல்களும் இல்லாவிடின், அத்தகைய வாக்காளருக்குரிய அவரது இடது அல்லது வலது கையின் அத்தகைய நுனி,

எனப் பொருளாகும்.

வாக்களிக்கும் முறை.

**39.** (1) வாக்காளர், வாக்குச்சீட்டைப் பெற்றதன்மேல், தலைமைதாங்கும் அலுவலரினாலோ அல்லது அவ்வலுவலரின் அதிகாரத்தின் கீழ்ச் செயலாற்றுகின்ற எவரேனும் ஆளினாலோ எவ்வாக்களிப்பு அறைக்குள் போகும்படி பணிக்கப்படுகின்றாரோ அவ்வாக்களிப்பு அறைக்குள் உடனடியாகச் சென்று, இச் சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையில் வாக்காளர்களுக்கு வழிகாட்டும் முகமாகக் கொடுக்கப்பட்ட பணிப்புகளுக்கு இயன்றளவு இணங்க, அங்கே இரகசியமாக வாக்குச்சீட்டில் குறியீடு செய்து, யாருக்கு அவர் வாக்களித்தார் என்பதை மறைக்கும் வகையில் வாக்குச் சீட்டை மடித்து அதன் பின்னர், அலுவலக முறையான குறியீடுதென்படுமாறு சீட்டின் பின் புறத்தைத் தலைமை தாங்கும் அலுவலருக்குக் காட்டி, அவ்வாறு மடிக்கப்பட்டுள்ள வாக்குச்சீட்டை தலைமைதாங்கும் அலுவலரின் முன்னிலையில் வாக்குச்சீட்டுப் பெட்டிக்குள் போடுதல் வேண்டும்.

(2) வாக்கெடுப்பொன்று நடைபெறும் எந்நேரத்திலேனும் வாக்குச்சீட்டுகளில் குறியீடு செய்வதற்கென ஒதுக்கப்பட்ட ஏதேனும் இடத்தில் வாக்காளர் எவரும் தகாதமுறையில் தாமதம் செய்யாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை தலைமை தாங்கும் அலுவலர் எடுக்கலாம்.

வாக்காளர்கள் வாக்களிப்பதை இயலச் செய்வதற்கு உதவி புரிதல்.

**40.** (1) தலைமைதாங்கும் அலுவலர் அல்லது தலைமைதாங்கும் அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், எவரேனும் வாக்காளரின் விண்ணப்பத்தின் மீது, அவர் தக்கதெனக் கருதினால், வாக்கெடுப்பு முகவர்கள் சமுகமளித்திருப்பின், வாக்கெடுப்பு முகவர்கள் பார்க்கக்கூடியதாகவும், கேட்கக்கூடிய தாகவும் இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையில் வாக்காளருக்கு வழிகாட்டும் முகமாகக் கொடுக்கப்பட்ட பணிப்புகளில் குறித்துரைக்கப்பட்ட வாக்களிக்கும் முறையை வாக்காளருக்கு விளக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யும் பொழுது, ஏதேனும் குறிப்பான அங்கீகரிக்கப்பட்ட

அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிப்பதற்கான ஆலோசனையாக அல்லது பணிப்பொன்றாக வாக்காளரினால் பொருள் கொள்ளப்படக்கூடிய செயல் எதையும் செய்வதைக் கவனமாகத் தவிர்த்தல் வேண்டும்.

[பி5. 2011 இன் 28] (2) (அ) முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணையில் வாக்காளர்களின் வழிகாட்டலுக்கெனத் தரப்பட்டுள்ள பணிப்புகளுக்கிணங்க வாக்களிப்பதற்கு அத்தகைய வலிமையிழப்பு தடை செய்வதாயிருக்கின்றதான வலிமையிழப்பொன்றுக்கு உட்பட்டவரான வாக்காளரெவரும் தலைமை தாங்கும் அலுவலரின் அத்துடன் அவரது வாக்கெடுப்புப் பணியாட்டொகுதியின் இன்னோர் உறுப்பினரின் முன்னிலையில் வாக்காளரினால் பணிக்கப்பட்ட முறையில் அத்தகைய வாக்காளரின் வாக்குச்சீட்டில் குறியீட்டையிடுவதற்கென ஆளொருவர் உடன்செல்லலாமென்பதுடன், அத்தகைய வாக்குச்சீட்டை வாக்குச்சீட்டுப் பெட்டியுள் போடவும் செய்விக்கலாம்.

(ஆ) வாக்களிப்பதற்கு ஆளொருவருடன் உடன்செல்வதற்கு விரும்புகின்ற வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவர், பொருளளவில் இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்ட தகுதிச்சான்றிதழொன்றை தலைமைதாங்கும் அலுவலருக்கு அல்லது அவரது பணியாட்டொகுதியின் இன்னுமோர் உறுப்பினருக்குச் சமர்ப்பிப்பாராயின், அவ்வாறு செய்யலாம்.

(இ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக–

“உடன்செல்லும் ஆள்” என்பது பதினெட்டு வயதுக்குக் குறையாத ஆளொருவராகவிருத்தல் வேண்டு மென்பதுடன்–

(i) இயைபான தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவராக இருத்தலுமாகாது;

(ii) இயைபான தேர்தலில் தலைமை தாங்கும் அலுவலரொருவராகவோ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவராகவோ அல்லது வாக்கெடுப்பு முகவராகவோ இருத்தலுமாகாது;

(iii) வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவராகவிருத்தலுமாகாது;

ஒரு வலிமையிழப்பிற்கு உட்பட்டவரும் இப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி வாக்களிப்பதற்கு தகைமையுடையவருமான பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவர் தொடர்பில் “வலிமையிழப்பு” என்பது;

(i) முற்றாக அல்லது பகுதியளவிலான கட்புலப் பாதிப்பு ; அல்லது

(ii) அவரது வாக்குச்சீட்டை செல்லுபடியாகும் விதத்தில் குறியிடுவதிலிருந்து வாக்காளரை தடைசெய்யும் உடல் வலிமை இழப்பு,

என்று பொருள்படும்.

**41.** தேர்தல் மாவட்டம் எதிலுமான ஏதேனும் தேர்தலில் வாக்காளர் எவரும் பதிலிமூலம் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது. *பதிலி மூலம் வாக்களித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.*

**42.** இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் ஆளெவரும் - *பன்முறை வாக்களித்தல் சட்ட முரணான பழக்கமாதல்.*

(அ) ஒன்றுக்கதிகமான தேர்தல் மாவட்டத்தில் வாக்களித்தால் அல்லது அவ்வாறு வாக்களிக்கும் நோக்கத்துக்காக வாக்குச்சீட்டொன்றைக் கோரினால், அல்லது

(ஆ) அதே தேர்தல் மாவட்டத்தில் ஒன்றுக்கதிகமான முறை வாக்களித்தால் அல்லது அவ்வாறு வாக்களிக்கும் நோக்கத்துக்காக வாக்குச்சீட்டொன்றைக் கோரினால்,

அவர் சட்டமுரணான பழக்கமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

**43.**(1) ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்திலுள்ள தலைமைதாங்கும் அலுவலர், வாக்காளர் எவரையும், அவருக்கு வாக்குச்சீட்டொன்று கொடுக்கப்படுவதற்கு முன்னர், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் உள்ளவாறு "உ", "ஊ", "எ", "ஏ" என்னும் படிவங்களில் வெளிப்படுத்துகைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையேனும் செய்து கீழொப்பமிடுதல் வேண்டுமென தமது தற்றுணிபில் தேவைப்படுத்தலாம் என்பதுடன், வாக்கெடுப்பு முகவரால் அவ்வாறு செய்யும்படி வேண்டப்படின் தேவைப்படுத்துதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு வெளிப்படுத்துகையும் முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். *வெளிப்படுத்துதல்களைச் செய்யுமாறு வாக்காளரைத் தேவைப்படுத்துவதற்கான தத்துவம்.*

(2) ஆளெவரும் அத்தகைய வெளிப்படுத்துகையைச் செய்ய மறுத்தால், தலைமைதாங்கும் அலுவலர் அவருக்கு வாக்குச்சீட்டு ஒன்றைக் கொடுக்க மறுக்கலாம்.

(3) அத்தகைய ஏதேனும் வெளிப்படுத்துகையில் ஆளொருவர் வேண்டுமென்றேபொய்யான கூற்றொன்றைச்செய்தால், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். *இரண்டாம் அட்டவணை 2023 இன் 21*

**44.** வாக்குச்சீட்டொன்றாக ஏற்றமுறையில் பயன்படுத்தவியலாத வகையில் தன்னுடைய வாக்குச் சீட்டை, தற்செயலாகக் கையாண்டு பழுதுபடுத்திய வாக்காளரொருவர், அவ்வாறு தற்செயலாகக் கையாண்டு பழுதுபடுத்தப்பட்ட வாக்குச்சீட்டை தலைமைதாங்கும் அலுவலரிடம் ஒப்படைத்து தலைமை தாங்கும் அலுவலர் திருப்திப்படும் வகையில் அத்தகைய தற்செயல் நிகழ்வை எண்பிப்பதன் மேல், அவ்வாறு ஒப்படைத்தளிக்கப்பட்ட வாக்குச்சீட்டிற்குப் *பழுதுபட்ட வாக்குச் சீட்டுகள்.*

பதிலாக (இச்சட்டத்தில் "பழுதுபட்ட வாக்குச்சீட்டு" என அது அழைக்கப்படும்) இன்னுமொரு வாக்குச்சீட்டைப் பெறலாம் ; அத்துடன் பழுதுபட்ட வாக்குச்சீட்டு தலைமை தாங்கும் அலுவலரால் உடனடியாக இல்லாதாக்கப்பட வேண்டும்.

கேட்டுப் பெறும் வாக்குகள்.

**45**. ஆளொருவர் இடாப்பில் பெயர்குறிப்பிட்ட குறித்தவொரு தேருநர் தாமெனக் காட்டி, அத்தகைய தேருநராக வேறொருவர் வாக்களித்த பின்னர் வாக்குச்சீட்டொன்றுக்கென விண்ணப்பித்தால், அவ்விண்ணப்பக்காரர், முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டியதும், பொருளளவில், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான "ஐ" என்னும் படிவத்தில் , இருக்க வேண்டியதுமான வெளிப்படுத்துகை யொன்றினைச் செய்து கீழொப்பமிடுவதன் மேல், வாக்குச் சீட்டொன்றைப் பெறுவதற்கும், வேறெவரேனும் வாக்காளர் போல அதேமுறையில் வாக்களிப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும் ; ஆனால், இச்சட்டத்தில் "கேட்டுப்பெறும்வாக்குச்சீட்டு" என்று அழைக்கப்படும் அந்தவாக்குச்சீட்டானது, ஏனைய வாக்குச்சீட்டுக்களிலிருந்து வேறுபட்ட ஒரு நிறத்தினையுடையதாய் இருத்தல்வேண்டும்என்பதுடன், வாக்குச்சீட்டுப் பெட்டிக்குள்போடப்படுவதற்கு முன்னர், தலைமைதாங்கும் அலுவலரினால் வாக்காளரின் பெயரும், இடாப்பிலுள்ள அவரின் இலக்கமும் புறக்குறிப்பிடப்படுதலும் வேண்டும். அத்துடன், அந்த இலக்கமானது, இச்சட்டத்தில் "கேட்டுப்பெறும் வாக்குகள் நிரல்" என்று அழைக்கப்படும் பொருளளவில் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டவாறான "ஒ" என்னும் படிவத்திலிருக்க வேண்டிய நிரலொன்றில் பதியப்படுதலும் வேண்டும். கேட்டுப் பெறும் வாக்குச் சீட்டுகள் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் கையாளப்படுதல் வேண்டும்.

வாக்கெடுப்பை முடித்தல்.

**46**. வாக்கெடுப்பை முடித்ததற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் பின்னர், வாக்காளரொருவருக்கு வாக்குச்சீட்டு எதுவும் ஒப்படைக்கப்படுதலாகாது. ஆனால், மேற்சொல்லப்பட்ட நேரத்தில் ஏதேனுமொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டொன்று ஒப்படைக்கப்பட்டுள்ள வாக்காளர் எவரேனுமிருப்பின், அத்தகைய வாக்காளர் அவரது வாக்கை அளிப்பதற்கு விடப்படுதல் வேண்டும்.

வாக்கெடுப்பை முடித்த பின்னரான நடவடிக்கை முறை.

**47**.(1) வாக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னர் இயன்றளவு விரைவாக, ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும் தலைமைதாங்கும் அலுவலர், வாக்கெடுப்பு முகவர்களின் முன்னிலையில் பின்வருவனவற்றைத் தனித்தனியான பொதிகளாகக்கட்டி அவற்றின் மீது தமது சொந்த இலச்சினையையும் எவ்வாக்கெடுப்பு முகவர்கள் தம் இலச்சினைகளைப் பொறிக்க விரும்புகிறார்களோ அவ் வாக்கெடுப்பு முகவர்களினது இலச்சினைகளையும் பொறித்தல் வேண்டும்.
அவையாவன –

(அ) அந்நிலையத்திலுள்ள, ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியும், (அவ்வாக்குச் சீட்டுப்பெட்டி வாக்கெடுப்பு ஆரம்பித்த நேரத்தில் எவ்வாறு பூட்டப்பட்டிருந்ததோ அவ்வாறு பூட்டப்பட்ட நிலையில் இருத்தல் வேண்டும் என்பதோடு, வாக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னர், எவையேனும் வாக்குச்சீட்டுகள் அவற்றுள் புகுத்தப்படாத

வகையில் வாக்கெடுப்பு முடிவடையும் போது இலச்சினை இடப்பட்டிருத்தலும் வேண்டும்) ;

(ஆ) ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியினதும் திறப்பு ;

(இ) பயன்படுத்தப்படாத வாக்குச்சீட்டுகளும், பழுதுபட்ட வாக்குச் சீட்டுக்களும் (இவை ஒன்றாக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்) ;

(ஈ) குறியீடு செய்யப்பட்ட தேருநர் இடாப்பு பிரதிகளும்,வாக்குச் சீட்டுக்களின் அடியிதழ்களும் ;

(உ) 38 ஆம் பிரிவின் கீழ் வாக்குச்சீட்டுகள் ஒப்படைக்கப்படாத வாக்காளர்களின் நிரல் ; அத்துடன்

(ஊ) கேட்டுப்பெறும் வாக்குகளின் நிரல்,

(2) தலைமைதாங்கும் அலுவலரிடம் பொறுப்பிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையை எடுத்துக் காட்டியும், அத்துடன்-

(அ) வாக்காளருக்கு வழங்கப்பட்ட, பழுதடைந்தவைதவிர்ந்தவாக்குச் சீட்டுகள் ;

(ஆ) பழுதடைந்த வாக்குச்சீட்டுகள் ; அத்துடன்

(இ) பயன்படுத்தப்படாத வாக்குச்சீட்டுகள் ;

என்ற தலைப்புகளின் கீழ் அவை கணக்குக்காட்டப்பட்டும், தலைமைதாங்கும் அலுவலரினால் ஆக்கப்பட்ட, இதனகத்துப் பின்னர் “வாக்குச் சீட்டுக் கணக்கு” எனக் குறிப்பீடு செய்யப்படும் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டவாறு பொருளளவில் “ஓ” என்னும் படிவத்திலான கூற்றொன்று இப்பொதிகளுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

தலைமை தாங்கும் அலுவலர் தமக்கு உதவி புரிவதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம் செயலாற்றலாம்.

**48.** எவரேனுமாளைக் கைது செய்யும்படி கட்டளையிடுதல், நிலைத்திலிருந்து எவரேனுமாளை வெளியேற்றுதல் அல்லது அகற்றுதல் தவிர்ந்த, அவ்வாக்கெடுப்பு நிலையத்தில் புரிவதற்கு இச்சட்டத்தினால் தேவைப் படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட செயலெதனையும் வாக்கெடுப்பு நிலையமொன்றின் தலைமை தாங்கும் அலுவலர், தமக்கு உதவி புரிவதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மூலமாகப் புரியலாம்.

வாக்கெடுப்பு நிலையங்களில் குழப்பங்கள். [பி5, 1988 இன் 35]

**48.** அ. (1) பின்வருகின்றவாறான அத்தகைய ஒரு தன்மையினவான சம்பவங்கள் நிகழ்வதன் காரணமாக,

(அ) வாக்கெடுப்புத் தொடங்குவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பைத் தொடங்க இயலாதிருக்கின்றவிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பை ஆரம்பிப்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்புத் தொடங்கப்பட்டு, ஆனால் வாக்கெடுப்பு முடிவடைவதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரம் வரை அதனைத் தொடர முடியாதிருக்கின்ற விடத்து ; அல்லது

(இ) வாக்கெடுப்பு நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்குச்சீட்டுப் பெட்டிகளுள், ஏதேனுமொன்றை வாக்கெண்ணும் அலுவலருக்கு ஒப்படைக்கப்பட முடியாதிருக்கின்றவிடத்து,

அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமை தாங்கும் அலுவலர், அதுபற்றி உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தெரிவித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர் அதுபற்றி ஆணையாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(2) தேர்தல் மாவட்டமொன்றிலுள்ள வாக்கெடுப்பு நிலையமொன்று தொடர்பாக (1) ஆம் உட்பிரிவின் கீழ் தகவலொன்று கிடைக்கப்பெற்றதன் மீது ஆணையாளர், அத்தகைய தகவலின் உண்மை நிலையை நிச்சயிப்பதற்கு அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்த பின்னர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்திலான வாக்கெடுப்பு வறிதானது என வெளிப்படுத்தலாம்.

(3) தேர்தல் மாவட்டமொன்றிலுள்ள வாக்கெடுப்பு நிலையமொன்று தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் கட்டளையொன்றை ஆக்குமிடத்து, IV ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் இப்பிரிவில் தரப்பட்டுள்ள திரிபுகளுக்கமைய, அத்தகைய தேர்தல் மாவட்டத் திற்கான தேர்தலில் பெறப்பட்ட வாக்குகளை எண்ணுதல், அத்துடன் அத்தகைய தேர்தலின் முடிவை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெண்ணும் நிலையத்திற்குப் பொறுப்பான வாக்கெண்ணும் அலுவலர், 52 ஆம் பிரிவில் எது எவ்வாறிருப்பினும், எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வரும் வாக்குச்சீட்டுப் பெட்டிகள் தவிர, அவரது நிலையத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்து எல்லா வாக்குச் சீட்டுப் பெட்டிகளையும் அவர் பெற்றுக்கொண்டதன் பின்னர் வாக்கெண்ணுதலைத் தொடங்குதல் வேண்டும்.

(5) தெரிவத்தாட்சி அலுவலரானவர், 53 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்கீழ் எல்லா வாக்கெண்ணும் அலுவலர்களினாலும் அவருக்குக் கொடுத்துதவப்பட்ட கூற்றுக்களிலிருந்து, அத்தகைய தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தலில் (எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை யொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அவ்வாக்கெடுப்பு நிலையத்தில் அளிக்கப்பட்ட

வாக்குகள் நீங்கலாக) அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வோர் அரசியற் கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளையும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட முந்துரிமைகளையும் கூட்டி, நிச்சயப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அது பற்றிய கூற்று ஒன்றினை ஆணையாளருக்கு உடனடியாக அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(6) ஆணையாளரானவர், (5) ஆம் உட்பிரிவின் கீழான, கூற்று ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன் மேல், எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் பெறப்பட்ட வாக்குகளை அல்லது பெறப்பட்டிருக்கக்கூடிய வாக்குகளை எண்ணத் தவறியமையால் முடிவு பாதிக்கப்பட மாட்டாதென அபிப்பிராயப்படுமிடத்து, அவர் 60 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், அத்தகைய கூற்றுக்கும் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்குமிணங்க வெளிப்படுத்துகையொன்றைச் செய்யும்படி தெரிவத்தாட்சி அலுவலரைப் பணித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர் அதற்கிணங்க வெளிப்படுத்துகையொன்றைச் செய்தலும் வேண்டும்.

(7) (அ) ஆணையாளரானவர், (5) ஆம் உட்பிரிவின் கீழான, கூற்று ஒன்றினைப் பெற்றுக்கொண்டதன் மேல், எந்த வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் பெறப்பட்ட வாக்குகளை அல்லது பெறப்பட்டிருக்கக் கூடிய வாக்குகளை எண்ணத் தவறியமையால் அத்தகைய தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தலின் முடிவு பாதிக்கப்படுமென அபிப்பிராயப்படுமிடத்து, அவர், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் புதிய வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கான தேதியை உடனடியாக நியமித்தல் வேண்டும்.

(ஆ) ஆணையாளரானவர் புதிய வாக்கெடுப்புத் தேதி பற்றி தேசிய மொழி ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது ஒரு புதினத்தாளிலும் அத்துடன் எந்த வாக்கெடுப்பு மாவட்டத்தில் அத்தகைய வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ளதோ அந்த வாக்கெடுப்பு மாவட்டத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கப்படும் அறிவித்தல்கள் மூலமும் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(இ) பிரிவுகள் 28 முதல் 47 வரையிலானவற்றின் (இரண்டும் உட்பட) ஏற்பாடுகள், பந்தி (அ) வின் கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பு ஒன்றில், வாக்களிப்பதற்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். அந்த வாக்கெடுப்பில் பயன்படுத்தப்பட வேண்டிய தேருநர்கள் இடாப்பு, முந்திய வாக்கெடுப்பில் பயன்படுத்தப்பட்ட அதே இடாப்பாதல் வேண்டும்.

(ஈ) பந்தி (அ) வின் கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்றிற்கு, பிரிவுகள் 73, 74 என்பவற்றினதும் 79 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளை ஏற்புடையன வாக்கும் நோக்கங்களுக்காக, அப்பிரிவுகளிலுள்ள "எத்தேதியன்று அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெற்றதோ

அத்தேதியைத் தொடர்ந்து வரும் நாள்" என்பது பற்றிய குறிப்பீடுகள் அத்தகைய வாக்கெடுப்பை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்ட தேதிக்கு அடுத்துவரும் நாளுக்கான குறிப்பீடுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(உ) பந்தி (அ) வின் கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்றில் வாக்களித்தமை காரணமாக, தேர்தல் ஒன்றில் ஒரு தடவைக்குக் கூடுதலாக வாக்களிப்பவரான ஆளொருவர் இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படலாகாது.

(8) ஏழாம் உட்பிரிவின்கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்று தொடர்பில் 55 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதன் மேல், தெரிவத்தாட்சி அலுவலரானவர், அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வோர் அரசியற் கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகளையும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட முந்துரிமைகளையும் கூட்டி, (7) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையிடப்பட்ட வாக்கெடுப்பொன்றில் அத்தகைய ஒவ்வொரு கட்சியாலும் அல்லது குழுவினாலும் பெறப்பட்ட வாக்குகள் பற்றியும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட முந்துரிமை பற்றியும் தரப்படும் கூற்றினை (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க 60 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான வெளிப்படுத்துகை ஒன்றைச் செய்தலும் வேண்டும்.

(9) இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் கீழ் பணிப்பொன்றைக் கொடுக்குமுன்னர் அல்லது (7) ஆம் உட்பிரிவின் கீழ் தேதியொன்றை நியமிக்கு முன்னர் அல்லது 24 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்கு முன்னர், இச்சட்டத்தின் கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் செயலாளரையும் ஒவ்வொரு சுயேச்சைக் குழுவினதும் குழுத் தலைவரையும் அல்லது அத்தகைய செயலாளரினால் அல்லது குழுத் தலைவரினால் அந்நோக்கத்துக்கென அதிகாரமளிக்கப்பட்ட முகவரையும், ஆணையாளர் கலந்தாலோசித்தல் வேண்டும்.

## பாகம் IV

## வாக்குகள் எண்ணுதலும் முடிவு வெளியிடுதலும்

வாக்கெண்ணும் அலுவலர்கள்.

**49.** (1) ஆணையாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கு அமைவாக, தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொருவரும், வாக்கெண்ணும் நிலையம் ஒவ்வொன்றிலும் வாக்குகளை எண்ணுவதற்குப் பொறுப்பாக இருப்பதற்கென வாக்கெண்ணும் அலுவலர் ஒருவரையும், அத்துடன் அவரின் கடமைகளைப் புரிவதில் அத்தகைய வாக்கெண்ணும் அலுவலருக்கு உதவிபுரிவதற்கென அத்தகைய எண்ணிக்கையினரான உதவியாளர்களையும், எழுதுவினைஞர்களையும் வேறு அலுவலர்களையும் நியமித்தல் வேண்டும் ; அத்துடன், அந்நியமனத்தை அவர் இல்லாதொழிக்கலாம்.

(2) தெரிவத்தாட்சி அலுவலரானவர், அவர் பொருத்தமானதெனக்கருதினால், வாக்கெண்ணும் அலுவலரொருவரின் கடமைகளைப் புரியலாமென்பதுடன், வாக்கெண்ணும் அலுவலர் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய தெரிவத்தாட்சி அலுவலருக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

**50**. வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் இயன்றளவு விரைவில், வாக்குகளை எண்ணுவதற்கான ஒழுங்குகளை தெரிவத்தாட்சி அலுவலர் செய்தல் வேண்டும் என்பதுடன், தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளர் ஒவ்வொருவருக்கும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும், அத்துடன் ஏதேனும் சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவருக்கும் ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்தினதும் அமைவிடத்தையும், வாக்கெண்ணுதல் தொடங்கும் தேதியையும் நேரத்தையும் பற்றிய எழுத்திலான அறிவித்தலையும், அத்துடன் வாக்கெண்ணும் நிலையங்களையும் அத்தகைய வாக்கெண்ணும் நிலையம் ஒவ்வொன்றுக்கும் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையம் அல்லது நிலையங்களையும் காட்டுவதான கூற்றொன்றையும் கொடுத்தலும் வேண்டும். *வாக்குகளை எண்ணுதல் பற்றிய அறிவித்தல்.*

**51**. (1) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொவ்வொன்றினதும் செயலாளர் அல்லது அதனது அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது ஒரு குழுத் தலைவர் - *வாக்கெண்ணும் முகவர்களை நியமித்தல்.*

(அ) ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலும், அத்தகைய வாக்கெண்ணும் நிலையத்துக்கு 50 ஆம் பிரிவின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ள விடத்து, வாக்குகள் எண்ணப்படுகையில் சமுகமாயிருப்பதற்கென, ஐந்துக்கு மேற்படாத முகவர்களையும் (இவர்கள் இதனகத்துக்குப் பின்னர் ''வாக்கெண்ணும் முகவர்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) ;

(ஆ) ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலும், அத்தகைய வாக்கெண்ணும் நிலையத்துக்கு 50 ஆம் பிரிவின் கீழ் ஒரு வாக்கெடுப்பு நிலையம் மட்டுமே குறித்தொதுக்கப்பட்டுள்ள விடத்து, வாக்குகள் எண்ணப்படுகையில் சமுகமாயிருப்பதற்கென இரண்டிற்கு மேற்படாத வாக்கெண்ணும் முகவர்களையும்,

நியமிக்கலாம்.

(2) வாக்கெடுப்பு முகவர்களை நியமிக்கும் தத்துவம் 34 ஆம் பிரிவின் கீழ் எந்த வேட்பாளருக்குக் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் வேட்பாளருக்கு, அதே முறையில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் வாக்கெண்ணும் நிலையம் தொடர்பில் வாக்கெண்ணும் முகவர்களை நியமிப்பதற்கான தத்துவம் கையளிக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும், தேசிய அடையாள அட்டையின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கங்களையும், முகவரி [பி13, 1988 இன் 15]

களையும் எடுத்துக்கூறும் எழுத்திலான அறிவித்தலானது, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரால் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் அல்லது குழுத் தலைவரால் அல்லது (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வேட்பாளரால் வாக்குகள் எண்ணப்படத் தொடங்கு முன்னர் வாக்கெண்ணும் அலுவலருக்குக் கொடுக்கப் படுதல் வேண்டும். எவ்வாக்கெண்ணும் முகவரின் பெயரும், தேசிய அடையாள அட்டையின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையில் இலக்கமும், முகவரியும் அவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கவில்லையோ, அத்துடன் அந்த வாக்கெண்ணும் நிலையத்தில் சமுகமாயிருப்பதற்கு அவருக்கு அதிகாரமளித்துத் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட கடிதமொன்றைக் காண்பிக்காத அவ்வாக்கெண்ணும் முகவரை வாக்கெண்ணும் நிலையத்தினுட் செல்வதற்கு அனுமதிக்க வாக்கெண்ணும் அலுவலர் மறுக்கலாம்.

வாக்கெண்ணுதல்.

**52.** (1) ஐம்பதாம் பிரிவின் கீழ் வாக்கெண்ணும் அலுவலரின் வாக்கெண்ணும் நிலையத்துக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலிருந்தும், எல்லா வாக்குச்சீட்டுப் பெட்டிகளையும் அவர் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர் வாக்குகளை எண்ணத் தொடங்குதல் வேண்டும்.

(2) வாக்கெண்ணும் அலுவலர் வாக்குகளை எண்ணத் தொடங்குவதற்கு முன்னர், அவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், சமுகமாயுள்ள அத்தகைய எண்ணிக்கையினரான வாக்கெண்ணும்முகவர்களின் முன்னிலையில் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும். அதாவது :

(அ) அத்தகைய வாக்கெண்ணும் முகவர்களுக்கு வாக்குச்சீட்டுக் கணக்கைக் காட்டுதல் வேண்டுமென்பதுடன், அவற்றின் பிரதிகளை எடுப்பதற்கு அவர்களை அனுமதித்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியினையும் திறந்து, அதிலுள்ள வாக்குச்சீட்டுகளை வெளியே எடுத்த பின்னர், அத்தகைய ஒவ்வொரு பெட்டியிலுமுள்ள அத்தகைய சீட்டுகளை எண்ணி அவ்வெண்ணிக்கையைப் பதிதல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் வாக்குச்சீட்டுப் பெட்டிகளுள் கொண்டிருக்கப்பட்ட சீட்டுகள் முழுவதையும் ஒன்றாகச் சேர்த்துக் கலத்தலும் வேண்டும்.

(3) வாக்கெண்ணும் அலுவலர், வாக்குளை எண்ணும் பொழுது வாக்குச்சீட்டுகளின் முகப்பக்கம் மேல் நோக்கி இருக்கும்படி வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சீட்டுக்களின் பின்பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள இலக்கங்களை ஆளெவரும் காணுதலைத் தடுப்பதற்கான தகுந்த முற்காப்புகள் எல்லாவற்றையும் எடுத்தலும் வேண்டும்.

(4) வாக்கெண்ணும் அலுவலர் இயன்றதாகக் கூடியவரை வாக்குகளைத் தொடர்ந்து எண்ணுதல் வேண்டுமென்பதுடன், செல்லுபடியற்றதென அவர் நிராகரிக்கக்கூடிய ஏதேனும் வாக்குச்சீட்டின்மீது "நிராகரிக்கப்பட்டது" எனப் புறக் குறிப்பிடுதலும் வேண்டும்.

---

* 1998 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தால் நீக்கஞ் செய்யப்பட்டது.

(5) வாக்கெண்ணும் அலுவலர், கேட்டுப்பெறும் வாக்குச் சீட்டுகளை எண்ணுதலாகாது ; ஆனால், அவற்றை, அவை ஆதரிப்பதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு இணங்க வெவ்வேறான பொதிகளில் இடுதல் வேண்டுமென்பதுடன், விடயத்திற்கேற்றாற்போல, ஒவ்வொரு பொதியிலும் அத்தகைய கட்சியின் பெயரை அல்லது "சுயேச்சைக் குழு" என்னும் சொற்களையும், எவையேனு மிருப்பின், அத்தகைய குழுவின் வேறுபடுத்திக் காட்டும் இலக்கத்தையும் இடுதலும் வேண்டும் ; அத்துடன், அத்தகைய பொதிகளை அவர் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

(6) வாக்கெண்ணும் அலுவலரும், அவரது உதவியாளர்களும், எழுதுவினைஞர்களும் அத்துடன் வாக்கெண்ணும் முகவர்களும் வாக்குகள் எண்ணப்படுகையில் சமுகமாயிருக்கலாம் ; ஆனால், வாக்கெண்ணும் அலுவலரின் சம்மதத்துடனல்லாது, வேறெவரும் வாக்கெண்ணும்போது சமுகமாயிருத்தலாகாது.

நிராகரிக்கப்பட வேண்டிய வாக்குச்சீட்டுகள்.

**53.** (1) வாக்கெண்ணும் அலுவலரால் -

(அ) அலுவலக முறையான குறியீட்டைக் கொண்டிராத ஏதேனும் வாக்குச்சீட்டு ; அல்லது

(ஆ) வாக்குச் சீட்டில் -

(i) ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கு; அல்லது

(ii) ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு ; அல்லது

(iii) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டனவோ ஆன அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் சேர்க்கையொன்றுக்கு,

வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளதான ஏதேனும் வாக்குச்சீட்டு ; அல்லது

(இ) பின்பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள இலக்கத்தைத் தவிர, வாக்காளர் அதன்மூலம் அடையாளங் காணப்படக்கூடியவாறு ஏதாவது அதன்மீது எழுதப்பட்டுள்ள அல்லது குறியீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் வாக்குச்சீட்டு ; அல்லது

(ஈ) குறியீடு செய்யப்படாத ஏதேனும் வாக்குச்சீட்டு ; அல்லது

(உ) எவருக்கென அறிய முடியாத வகையில் குறியீடு செய்யப்பட்டதனால் வறிதாகிவிட்ட ஏதேனும் வாக்குச்சீட்டு,

நிராகரிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய எந்த வாக்குச் சீட்டிலும் "நிராகரிக்கப்பட்டது" என்ற சொல்லையிட்டு வாக்கெண்ணும் அலுவலர் பிறக்குறிப்பிடுதல் வேண்டும்.

(2) வாக்குச்சீட்டில் இடப்பட்ட குறியீடு எதுவும், தமது வாக்கை அளிப்பதற்கு வாக்காளருக்குள்ள உளக் கருத்தையும் அங்கீகரிக்கப்பட்ட எந்த அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் வாக்களிக்கின்றாரோ அந்தக் கட்சியையும் அல்லது குழுவையும் தெளிவாகக் காட்டுகின்றது என வாக்கெண்ணும் அலுவலர் திருப்திப்படுமிடத்து, இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையில் வாக்காளர்களுக்கு வழிகாட்டும் முகமாகக் கொடுக்கப்பட்ட பணிப்புகளுக்கு, எல்லா அம்சங்களிலும் இணங்க அது குறியீடு செய்யப்படவில்லை என்ற ஏதுவின்மீது மட்டும் வாக்கெண்ணும் அலுவலர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வாக்குச் சீட்டை நிராகரித்தலாகாது.

(3) வாக்கெண்ணும் அலுவலர், வாக்குச்சீட்டொன்று போலியாகப் புனையப்பட்ட ஒன்றல்ல அல்லது பொய்யாகப் புனையப்பட்ட ஒன்றல்ல எனத் திருப்திப்படுமிடத்து, அதன்மீது அலுவலக முறையான குறியீடு பொறிக்கப்படவில்லை அல்லது துளையிடப்படவில்லை என்ற ஏதுவின்மீது மட்டும் அதனை அவர் நிராகரித்தலாகாது. இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் வாக்குச்சீட்டொன்றினை நிராகரிக்காதுவிட முடிவுசெய்ய முன்னர், வாக்கெண்ணும் அலுவலர், அதனை அவர் வாக்கெண்ணும் முகவர்கள் சமுகமளித்திருந்தால் அவர்கள் ஒவ்வொருவரிடமும் காட்டுதல் வேண்டுமென்பதுடன் அதன்மீதான அவர்களின் கருத்தைக் கேட்டலும் வேண்டும்.

(4) வாக்கெண்ணும் அலுவலர், வாக்குச்சீட்டொன்றினை நிராகரிக்கு முன்னர், சீட்டின் பின்பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள இலக்கத்தை ஆளெவரும் காண்பதைத் தடுப்பதற்கான தகுந்த முற்காப்புகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, அதனை வாக்கெண்ணும் முகவர்கள் சமுகமளித்திருந்தால் அவர்கள் ஒவ்வொருவரிடமும் காட்டுதல் வேண்டுமென்பதுடன் அதன்மீது அவர்களின் கருத்தைக் கேட்டலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழ் தன்னால் நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டெதையும் வாக்கெண்ணும் அலுவலர் எண்ணுதலாகாது.

(6) வாக்கெண்ணும் அலுவலர், (1) ஆம் உட் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்கள் ஒவ்வொன்றின்கீழும் நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகக் காட்டும் கூற்றொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், வேண்டுகோளின்மீது, எவரேனும் வாக்கெண்ணும் முகவர், அக்கூற்றை பார்த்தெழுத அனுமதித்தலும் வேண்டும்.

(7) வாக்கெண்ணும் அலுவலர், அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வோர் அரசியற் கட்சிக்கும் சுயேச்சைக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையைச் சொற்களிலும் எண்களிலும் கொண்ட எழுத்திலான கூற்றொன்றையும் அத்துடன் அத்தகைய கட்சி அல்லது குழு ஒவ்வொன்றிலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளருக்கும் சுட்டிக்காட்டப்பட்ட முன்னுரிமைகளின் எண்ணிக்கையைச் சொற்களிலும் எண்களிலும் கொண்ட புறம்பான கூற்றொன்றையும் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு கூற்றும் வாக்கெண்ணும் அலுவலரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, அவரது உதவியாளர்களுள் அல்லது எழுதுவினைஞர்களுள் ஒருவராலும், அங்கு சமுகமளித்திருந்து கையொப்பமிட விரும்புகின்றவர்களான ஏதேனும்

கட்சியின் அல்லது குழுவின் வாக்கெண்ணும் முகவர்களுள் ஒருவராலும் சாட்சிகளாகக் கையொப்பமிடுதலும் வேண்டும். வாக்கெண்ணும் அலுவலர், வேண்டுகோளின் பேரில் கூற்றைப் பார்த்தெழுதுவதற்கு வாக்கெண்ணும் முகவரொருவரை அனுமதித்தல் வேண்டும்.

(7 அ) வாக்காளர் ஒருவரால், அவரது வாக்குச்சீட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக்குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்ட முந்துரிமைகள், அத்தகைய கட்சியால் அல்லது குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வர்களான மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு அத்தகைய வாக்காளர் முந்துரிமையைச் சுட்டிக்காட்டியிருந்தால், கணக்கிலெடுக்கப்படுதலாகாது. [பி14, 1988 இன் 15]

(7 ஆ) வாக்காளரொருவர், அவரது வாக்குச்சீட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளரொருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முந்துரிமைகளைச் சுட்டிக்காட்டியிருக்குமிடத்து, அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ள எல்லா முந்துரிமைகளும் ஒரு முந்துரிமையாகவே கணக்கிலெடுக்கப்படல் வேண்டும். [பி14, 1988 இன் 15]

(7 இ) வாக்காளரொருவரால், அவரது வாக்குச்சீட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஏதேனும் முந்துரிமை அது எந்த வேட்பாளருக்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதென நிச்சயமில்லாத தன் காரணமாக வறிதாக்கப்பட்டால் அது நிராகரிக்கப்படுதல் வேண்டும். [பி14, 1988 இன் 15]

(8) வாக்கெண்ணும் அலுவலர், (7) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான எழுத்திலான கூற்றொன்றினை ஆக்குமுன்னர், வாக்கெண்ணும் அலுவலர் அவசியமானதெனக் கருதும் அத்தனை தடவை மீள எண்ணலாம் ; அத்துடன், வாக்கெண்ணும் முகவரொருவரின் விண்ணப்பத்தின்மீது மீள எண்ணல் அல்லது மீள எண்ணல்கள் நிகழ்த்தப்படுதல் வேண்டும். எப்படியாயினும், வாக்கெண்ணும் முகவர் எவரினதும் அல்லது வாக்கெண்ணும் முகவர்கள் எல்லோரதும் விண்ணப்பத்தின்மீது அவ்வாறு நிகழ்த்தப்படக்கூடியதான ஆகக்கூடிய மீள எண்ணல்கள் இரண்டு தடவைகளை விஞ்சுதலாகாது.

(9) ஏதேனும் வாக்குச் சீட்டுத் தொடர்பில் எழுகின்ற ஏதேனும் பிரச்சினை தொடர்பிலான வாக்கெண்ணும் அலுவலரின் முடிபு இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

52 ஆம், 53 ஆம் பிரிவின் கீழ் ஆன தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் தொடர்பான சிறப்பேற்பாடுகள்.

**54.** ஐம்பத்திரெண்டாம் பிரிவின் கீழ் அல்லது 53 ஆம் பிரிவின் கீழ் வாக்கெண்ணும் அலுவலர் ஒருவருக்குள்ள ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி அத்தகைய அலுவலரினது மேற்பார்வையின் கீழும் பணிப்பின் கீழும் செயலாற்றுகின்ற அவரது உதவியாளர்கள் அல்லது எழுதுவினைஞர்கள் எவர்களினாலும் அவருக்காகவும், அவர் சார்பிலும், பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

வாக்கெண்ணு தலை முடிவுறுத்தல்

**55**. வாக்கெண்ணும் நிலையம் எதிலும் வாக்கெண்ணுதல் முற்றுப் பெற்றதன்மேல் உடனடியாக, வாக்கெண்ணும் அலுவலரானவர், இலச்சினையிடப்பட்ட பொதிகளில்,-

(அ) எண்ணப்பட்ட வாக்குச் சீட்டுகளையும் ;

(ஆ) நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகளையும் ;

(இ) கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டுகளையும் ;

(ஈ) வாக்குச்சீட்டுக் கணக்கையும் ;

(உ) 47 (1) ஆம் பிரிவின் (இ) முதல் (ஊ) வரையான பந்திகளில் குறியீடு செய்யப்பட்டுள்ள பொதிகளையும் ;

(ஊ) 52 ஆம் பிரிவின் (2)(ஆ) என்னும் உட்பிரிவின் கீழான வாக்கெண்ணுதல் பற்றிய பதிவையும் ;

(எ) 53 (6) ஆம் பிரிவின் கீழான கூற்றையும் ; அத்துடன்

(ஏ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஒவ்வொன்றிற்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றி 53(7) ஆம் பிரிவின் கீழான எழுத்திலான கூற்றையும், அத்தகைய ஒவ்வொரு கட்சியினாலும் அல்லது குழுவினாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளரினாலும் பெறப்பட்ட முன்னுரிமைகளின் எண்ணிக்கையையும்

[பி15, 1988 இன் 15]

தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

அஞ்சல் வாக்குச்சீட்டுகளை எண்ணுதல்.

**56**. ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பான அஞ்சல் வாக்குச்சீட்டுகள், இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அஞ்சல் வாக்காளர்கள் ஒழுங்கு விதிகளுக்கிணங்க, புறம்பான ஒரு வாக்கெண்ணும் நிலையத்தில் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய எண்ணிக்கையினவான வாக்கெண்ணும் நிலையங்களில் எண்ணப்படுதல் வேண்டும்.

முடிவை வெளிப்படுத்துதல் பற்றிய அறிவித்தல்.

**57**. தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தலொன்றில் முடிவை வெளிப்படுத்தச் செல்லுமுன்னர், அத்தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி ஒன்றின் செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு அல்லது சுயேச்சைக் குழு ஒன்றின் குழுத் தலைவருக்கு, முடிபு வெளிப்படுத்தப்படும் நேரத்தைப்பற்றியும் இடத்தைப்பற்றியும் எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

முடிவை வெளிப்படுத்தும் போது சமுகமாயிருப்ப தற்கென முகவர்களை நியமித்தல்.

**58**. ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான தேர்தலொன்றில் வேட்பாளர்களை பெயர்குறித்து நியமித்துள்ள ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியும் அல்லது ஒவ்வொரு சுயேச்சைக் குழுவும், முடிபை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளின் போது சமுகமாயிருப்பதற்கென இரண்டிற்கு மேற்படாத முகவர்களை நியமிக்கலாம். நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும் எடுத்துக்கூறி, அத்தகைய நியமனங்கள் பற்றிய எழுத்திலான அறிவித்தல், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின்

செயலாளரினால் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவரினால் அல்லது குழுத்தலைவரினால் முடிபை வெளிப்படுத்தும் நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்னர், தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும். பெயரும் முகவரியும் அவ்வாறு கொடுபடாத எவரேனும் முகவரை, அத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறும் இடத்திற்கு அனுமதிப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலர் மறுக்கலாம்.

*முடிபு வெளிப்படுத்தப் படும்போது சமுகமாயிருப்ப-தற்கு உரித்துடைய*

**59**. தெரிவத்தாட்சி அலுவலரையும், அவருக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட ஆட்களையும், 58 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட முகவர்களையும் தவிர்ந்த ஆளெவரும் தெரிவத்தாட்சி அலுவலரின் சம்மதத்துடனன்றி, முடிபு வெளிப்படுத்தப்படும்போது சமுகமாயிருத்தலாகாது.

*முடிபு வெளிப்படுத்தப் படுதல் [பி16, 1988 இன் 15]*

**60**. (1) தெரிவத்தாட்சி அலுவலர், பிரிவு 55 இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களைப் பெற்றபின்னர், (அஞ்சல் வாக்குச்சீட்டுக்கள் எண்ணப்பட்ட வாக்கெண்ணும் நிலையத்தின் அல்லது நிலையங்களின் வாக்கெண்ணும் அலுவலர்கள் உட்பட) எல்லா வாக்கெண்ணும் அலுவலர்களாலும் 53 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் கீழான கூற்றுக்களிலிருந்து ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கும் சுயேச்சைக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையையும் அத்துடன் அத்தகைய ஒவ்வொரு கட்சியாலும் அல்லது குழுவாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளருக்கும் சுட்டிக்காட்டப்பட்ட முந்துரிமைகளின் எண்ணிக்கையையும் கூட்டித் தீர்மானித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர், 55 ஆம் பிரிவின் (ஏ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இலச்சினையிடப்பட்ட பொதியைத் திறக்கும் முன்னர், 58 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஒரு முகவரின் வேண்டுகோளின் பேரில், அத்தகைய பொதியிலுள்ள இலச்சினைகளைச் சோதிப்பதற்கு அத்தகைய முகவருக்கு அனுமதியளித்தல் வேண்டும்.

(2) அத்தகைய தீர்மானித்தின் மீது தெரிவத்தாட்சி அலுவலரானவர், அரசியலமைப்பின் 98 ஆம் உறுப்புரையின் (8) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க வெளியிடப்பட்ட கட்டளையில் ஆணையாளரினால் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு, தேர்தல் மாவட்டம் தெரிந்தனுப்புவதற்கு உரித்துக்கொண்ட அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களை, அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனரென உடனடியாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

*60 ஆம் பிரிவின் கீழான தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகள் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள்.*

**61**. அறுபதாம் பிரிவின் கீழ் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவருக்குள்ள ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, அத்தகைய அலுவலரினது மேற்பார்வையின் கீழும், பணிப்பின் கீழும் செயலாற்றுகின்ற அவரது உதவியாளர்கள் அல்லது எழுதுவினைஞர்கள் எவர்களினாலும் அவருக்காகவும், அவர் சார்பிலும் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

*முடிபை கசெற்றில் வெளியிடுதல்.*

**62**. தெரிவத்தாட்சி அலுவலரானவர், அவரால் முடிபு வெளிப்படுத்தப்பட்ட பின்னர் உடனே, பொருளளவில், இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான 'ஔ' என்னும் படிவத்திலுள்ள ஒரு விபரத்திரட்டை ஆணையாளருக்கு அனுப்புதல்

வேண்டுமென்பதுடன், ஆணையாளர், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை கசெற்றில் வெளியிடுமாறு செய்வித்தலும் வேண்டும்.

*வாக்குச் சீட்டுக்கள் முதலியவற்றைக் கையாண்டழித்தல்.*

**63**.(1) தெரிவத்தாட்சி அலுவலர், 55 ஆம் பிரிவின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட பொதிகளையும், எல்லா ஆவணங்களையும், அவற்றைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலத்திற்கு வைத்திருந்து வருதல் வேண்டும் என்பதுடன், அதன் பின்னர், ஆணையாளரால் வேறுவகையாகப் பணிக்கப்பட்டாலொழிய சொல்லப்பட்ட பொதிகளையும் ஆவணங்களையும் அழிக்கச் செய்வித்தலும் வேண்டும்.

(2) ஒரு தேர்தல் நீதிபதி, இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக இலச்சினையிடப்பட்டுள்ள ஒரு தேர்தல் தொடர்பான ஏதேனும் வாக்குச்சீட்டு அல்லது வேறு ஆவணம், அந்நீதிபதியினால் உசிதமானதெனக் கருதப்படக்கூடிய அத்தகைய நேரத்திலும், இடத்திலும் அத்துடன் அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாகவும், பார்வையிடப்படுதல் வேண்டுமென, பிரதிசெய்யப்படுதல் வேண்டுமென அல்லது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென கட்டளையொன்றை ஆக்கலாம் ; ஆனால், அத்தகைய பார்வையிடல், பிரதி செய்தல் அல்லது சமர்ப்பித்தலானது, அத்தேர்தல் தொடர்பான குற்றவழக்கொன்றினைத் தொடரும் அல்லது நடாத்தும் நோக்கத்துக்காக அல்லது ஒரு தேர்தல் மனுவின் நோக்கத்துக்காகத் தேவையாக உள்ளது என அவர் திருப்திப்பட்டாலொழிய, அத்தகைய கட்டளையொன்றினை அவர் ஆக்குதலாகாது. மேற்கூறப்பட்டவாறு நீங்கலாக, தெரிவத்தாட்சி அலுவலரின் கட்டுக்காப்பில் இருக்கும்போது, அத்தகைய ஏதேனும் வாக்குச்சீட்டினை அல்லது ஆவணத்தைப் பார்வையிடுவதற்கு ஆளெவரும் அனுமதிக்கப்படலாகாது.

## பாகம் V

## வெற்றிடங்களை நிரப்புதல்

*வெற்றிடங்களை நிரப்புதல்.*

**64**.(1) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆசனமானது, அரசியலமைப்பின் 66 ஆம் உறுப்புரையில் [அந்த உறுப்புரையின் (எ) என்னும் பந்தி நீங்கலாக] ஏற்பாடு செய்யப்பட்டாற் போன்று அல்லது அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் (13) (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் பயனாக, வறிதாகவருமிடத்து, பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் அதுபற்றி ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும் ; ஆணையாளரானவர், அத்தகைய உறுப்பினரைத் தெரிந்ததனுப்பிய தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரை அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் (13) (ஆ) என்னும் பந்தியின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டாற் போன்று, அவ் வெற்றிடத்தை, அவ்வாறு பணிப்பு வழங்கியதிலிருந்து ஒரு மாதத்திற்குள் நிரப்புமாறு பணித்தல் வேண்டும்.

(2) தெரிவத்தாட்சி அலுவலர், ஆணையாளரின் பணிப்புக்கு இணங்கியொழுகிய பின்னர், பொருளளவில், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டவாறான 'க' என்னும் படிவத்தில் அமைந்த ஒரு விபரத்திரட்டை ஆணையாளருக்கு உடனடியாக அனுப்புதல் வேண்டும் ;

ஆணையாளரானவர், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென வெளிப்படுத்தப்பட்ட உறுப்பினரின் பெயரை கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(3) ஒரு தேர்தல் மாவட்டம் தொடர்பில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரத்தில் பெயர்கள் தோன்றும் வேட்பாளர்கள் எல்லோரும் தேர்தல் மூலம் அல்லது வேறுவகையாகத் தீர்க்கப்பட்டிருக்குமிடத்தும் அல்லது அத்தகைய நியமனப்பத்திரத்தில் பெயர்கள் எஞ்சியுள்ள வேட்பாளர்களுள் எவரும் எவையேனும் முந்துரிமைகளைப் பெறாதிருக்குமிடத்தும், அதன் பின்னர் அத்தகைய கட்சியினால் அல்லது குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினரொருவரால் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடம் ஒன்று உருவாகுமிடத்தும், அத்தகைய தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். [*பி17, 1988 இன் 15*]

(4) அத்தகைய தகவல் கிடைக்கப்பெற்றதன்மேல், ஆணையாளரானவர், ஆசனத்தை வறிதாக்கிய உறுப்பினர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவராகவிருந்தாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரை அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரை, வெற்றிடத்தை நிரப்புவதற்கென, அத்தகைய கட்சியின் அல்லது குழுவின் உறுப்பினர் ஒருவரைப் பெயர்குறித்து நியமிக்குமாறு தேவைப்படுத்துதல் வேண்டும். அத்தகைய நியமனம் கிடைக்கப்பெற்றதன்மேல், ஆணையாளர், வெற்றிடம் எந்தத் தேர்தல் மாவட்டம் தொடர்பாக ஏற்பட்டதோ அந்தத் தேர்தல் மாவட்டத்திற்கான ஓர் உறுப்பினராக அத்தகைய ஆளை வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட உறுப்பினரின் பெயரை கசெற்றில் வெளியிடச் செய்வித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பின் 99அ என்னும் உறுப்புரையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டவாறாக வெளிப்படுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆசனம் வறிதாகுமிடத்து, பாராளுமன்றச் செயலாளர் நாயகம், ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும் ; ஆணையாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு, ஆசனத்தை வறிதாக்கிய உறுப்பினர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவராக இருந்தாரோ அந்தக் கட்சியின் அல்லது குழுவின் உறுப்பினர் ஒருவரைப் பெயர்குறித்து நியமிக்குமாறு அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரை அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும். அத்தகைய பெயர் நியமனம் கிடைக்கப்பெற்றதன்மீது ஆணையாளர், அத்தகைய ஆளைப் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட உறுப்பினரின் பெயரை கசெற்றில் வெளியிடச் செய்வித்தலும் வேண்டும். [*பி6, 1988 இன் 35*]

[பி18, 1988 இன் 15]

**65.** *

### பாகம் VI

### தவறுகள்

*நியமனப் பத்திரங்கள், வாக்குச்சீட்டுகள், உத்தியோக பூர்வமான வாக்காளர் அட்டைகள், இன்னோரன்னவை தொடர்பான தவறுகள்.*

**66.** பின்வருமாறு செய்கின்ற, அதாவது -

(அ) ஏதேனும் நியமனப்பத்திரத்தைப் போலியாகப் புனைகின்ற அல்லது அதை மோசடியாக உருவழிக்கின்ற அல்லது அதை மோசடியாக அழித்துவிடுகின்ற அல்லது அந்நியமனப் பத்திரம் போலியானதெனத் தெரிந்துகொண்டு ஏதேனும் நியமனப் பத்திரத்தைத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைக்கின்ற ; அல்லது

(ஆ) ஏதேனும் வாக்குச்சீட்டை அல்லது ஏதேனும் வாக்குச்சீட்டிலுள்ள அலுவலக முறையான குறியீட்டை போலியாகப் புனைகின்ற அல்லது பொய்யாகப் புனைகின்ற அல்லது மோசடியாக உருவழிக்கின்ற அல்லது மோசடியாக அழித்து விடுகின்ற ; அல்லது

(இ) முறையான அதிகாரமின்றி எவரேனும் ஆளுக்கு ஏதேனும் வாக்குச்சீட்டை வழங்குகின்ற ; அல்லது

[பி19, 1988 இன் 15]

(இஇ) வாக்கெடுப்பு நிலையமொன்றின் குறியிடப்பட்ட வாக்குச்சீட்டை வேண்டுமென்று வெளிக் காட்டுகின்ற ; அல்லது

(ஈ) எவரேனும் ஆளுக்கு ஏதேனும் வாக்குச்சீட்டை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனை செய்ய முன்வருகின்ற அல்லது எவரேனும் ஆளிடமிருந்து ஏதேனும் வாக்குச்சீட்டைக் கொள்வனவு செய்கின்ற அல்லது கொள்வனவு செய்ய வருகின்ற; அல்லது

(உ) இச்சட்டத்திற்கிணங்க அலுவலக முறையான குறியீட்டினால் குறியீடு செய்யப்பட்ட ஏதேனும் வாக்குச்சீட்டை உடைமையில் வைத்திருப்பதற்கு இச்சட்டத்தின் கீழ் உரித்துடைய ஒருவராக இல்லாதபோது அத்தகைய ஏதேனும் வாக்குச்சீட்டை தமது உடைமையில் வைத்திருக்கின்ற ; அல்லது

(ஊ) வாக்குச்சீட்டைப் பெட்டியினுள் அவர் போடுவதற்குசட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட வாக்குச்சீட்டு தவிர்ந்த, வேறு எதனையும் ஏதேனும் வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் போடுகின்ற; அல்லது

(எ) முறையான அதிகாரமின்றி, ஏதேனும் வாக்குச்சீட்டை ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்கின்ற அல்லது வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு வெளியே ஏதேனும்

* 1998 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தால் நீக்கஞ் செய்யப்பட்டது.

வாக்குச் சீட்டை உடைமையில் வைத்திருக்கக் காணப்படுகின்ற ; அல்லது

(ஏ) தேர்தலொன்றின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்துவதற்கு முன்னப்படுகின்ற ஏதேனும் வாக்குச்சீட்டுப் பெட்டியை அல்லது வாக்குச்சீட்டுகளின் பொதியை, முறையான அதிகாரமின்றி அழிக்கின்ற, எடுக்கின்ற, திறக்கின்ற அல்லது வேறு வகையில் அவற்றுடன் தலையிடுகின்ற; அல்லது

(ஐ) முறையான அதிகாரமின்றி, ஏதேனும் வாக்குச் சீட்டினை அல்லது தேர்தலொன்றில் எது வாக்குச்சீட்டொன்றாகக் கொள்ளப்படக்கூடியதோ அல்லது வாக்குச்சீட்டொன்றாகப் பயன்படுத்தப்படக் கூடியதோ அதை அச்சிடுகின்ற ; அல்லது

(ஒ) தேர்தலொன்றில் வாக்கெடுப்பு நடைபெறும் போது, வாக்குச்சீட்டுப்பெட்டியொன்றினுள் வாக்குச் சீட்டொன்று இடப்பட்ட பின்னர் அதைக் குடைந்து எடுக்கக்கூடிய அதைப் பாதிக்கக்கூடிய அல்லது கைத்திறமையால் தாக்கக்கூடிய ஏதேனும் உபகரணத்தை அல்லது கருவியை அல்லது பொறி உபாயத்தை, தேர்தலொன்றின் நோக்கத்துக்காக உற்பத்தி செய்கின்ற, அமைக்கின்ற, குடியரசினுள் இறக்குமதி செய்கின்ற, அவரது உடைமையில் வைத்திருக்கின்ற, வழங்குகின்ற அல்லது பயன்படுத்துகின்ற அல்லது தேர்தலொன்றின் நோக்கத் துக்கென உற்பத்தி செய்விக்கின்ற, அமைப்பிக்கின்ற, குடியரசினுள் இறக்குமதி செய்விக்கின்ற, வழங்குவிக்கின்ற அல்லது பயன்படுத்தச் செய்விக்கின்ற ; அல்லது

(ஓ) இச்சட்டத்தின் கீழ் அஞ்சல் வாக்காளரொருவராக கணிக்கப்படுவதற்கான ஏதேனும் விண்ணப்பத்தில் அல்லது இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்ட வணையில் தரப்பட்டுள்ள அஞ்சல் வாக்காளர் ஒழுங்குவிதிகளின் கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் ஆளடையாளம் பற்றிய வெளிப் படுத்துகையில் வேண்டுமென்றே பொய்யான கூற்றொன்றைச் செய்கின்ற ; அல்லது

(ஔ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அஞ்சல் வாக்காளர் ஒழுங்கு விதிகளின் கருத்தெல்லைக்குள் அஞ்சல் வாக்காளரொரு வராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பம் எதனையும் அல்லது ஆளடையாளம் பற்றிய வெளிப்படுத்துகை எதனையும் அல்லது மேலுறை அல்லது வாக்குச்சீட்டு உறை எதனையும், முறையான அதிகாரமின்றி அழிக்கின்ற, எடுக்கின்ற, திறக்கின்ற அல்லது வேறுவகையில் அவற்றைக் குழப்புகின்ற அல்லது அவற்றுடன் தலையிடுகின்ற ; அல்லது

(க) ஏதேனும் உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையை அல்லது தேர்தலொன்றில் எது உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டையாகக் கொள்ளப்படக்கூடியதோ அல்லது பயன்படுத்தப் படக்கூடியதோ அதை முறையான அதிகாரமின்றி அச்சிடுகின்ற; அல்லது

(ங) ஏதேனும் தேர்தலில் எவரேனும் வாக்காளர் மீது, தோதான குறியீடொன்றினை அல்லது எது குறியீடெனக் கொள்ளப்படக் கூடியதோ அல்லது தவறாக அக்குறியீடென எண்ணப்படக் கூடியதோ அதை முறையான அதிகாரமின்றி இடுகின்ற ; அல்லது

(ச) தேர்தலொன்றில் எவரேனும் வாக்காளர் மீது இடப்பட்ட தோதான குறியீடொன்றினை, முறையான அதிகாரமின்றி மோசடியாக உருவழிக்கின்ற ; அல்லது

(ஞ) சட்டமுறையான அவ்வாறு வாக்களிக்கத்தகுதியற்றவரென அல்லது தகைமையற்றவரெனத் தெரிந்து கொண்டு, தேர்தலொன்றில் வாக்களிக்கின்ற,

ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல்நீதிமன்றத்தின் முன்னராகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல்ஈராண்டுகாலத்துக்குமேற்படாதஒருகாலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும். அத்துடன், அவருக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டுகளுக்கான ஒரு காலப்பகுதிக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டமையால் தேருநரொருவராகப் பதிவு செய்திருப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தல் வாக்களிப்பதற்கு அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவராதல் வேண்டுமென்பதுடன், அத்தேதியில் அவர் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவிருந்தால், அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து அவரது தேர்தல் வறிதாக்கப்படுதலும் வேண்டும்.

*குறித்த சில ஆட்கள் இரந்து கேட்காதிருத்தல் அல்லது முகவர்கள் என்போராக செயலாற்றா திருத்தல்.*

**67.** (1) ஆளெவரும், அத்தகைய ஆள் அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றினால் எந்த ஆளொருவர் மீது குடியியல் தகுதியீனம் விதிக்கப்பட்டும் அத்துடன், அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய குடியியல் தகுதியீனத்தின் காலப்பகுதி முடிவுறாதிருக்கின்றதோ அந்த ஆளொருவராக இருப்பாராயின், வேட்பாளரொருவருக்காக இரந்து கேட்டலோ அல்லது அவரின் முகவராகச் செயலாற்றுதலோ அல்லது அவர் சார்பாகப் பேசுதலோ ஆகாது.

*(இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.)*

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொவ்வொரு வரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், நான்கு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது ஆறு மாத காலத்துக்குமேற்படாத காலமொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம்,மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**68.** (1) வாக்கெடுப்பு நிலையம் ஒன்றில், வாக்கெடுப்பு நிகழ்த்தப்படும் ஏதேனும் தேதியில், பின்வரும் செயல்களுள் எதனையும், எவரேனும் ஆள், அந்த வாக்கெடுப்பு நிலையத்தின் வளவினுள் அல்லது அதன் வாசலிலிருந்து அரைக் கிலோ மீற்றர் தூர எல்லைக்குள் செய்தலாகாது : -

*வாக்கெடுப்பு நாளில் குறித்த சில செயல்கள் தடை செய்யப்பட்டுள்ளமை.*

(அ) வாக்களிக்குமாறு இரந்து கேட்டல் ;

(ஆ) எவரேனும் தேருநரின் வாக்கைப் பரிந்து கேட்டல் ;

(இ) ஏதேனும் குறிப்பான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு வாக்களிக்க வேண்டாமென்று எவரேனும் தேருநரை வசப்படுத்த முயலுதல் ;

(ஈ) தேர்தலில் வாக்களிக்க வேண்டாமென்று எவரேனும் தேருநரை வசப்படுத்த முயலுதல் ;

(உ) அலுவலக முறையிலான துண்டுப்பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி அல்லது அறிவித்தல் எதனையும் தவிர்ந்த, தேர்தல் தொடர்பான துண்டுப்பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, சித்திரம், வேட்பாளரொருவரின் புகைப்படம் அல்லது அறிவித்தல் அல்லது 22 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியெதற்கும் அல்லது சுயேச்சைக் குழுவெதற்கும் குறித்தொதுக்கப்பட்ட சின்னம் எதனையும் விநியோகித்தல் அல்லது காட்சிக்கு வைத்தல்.

இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளை மீறும் ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதாயிரம்ரூபாவைவிஞ்சாதகுற்றப்பணத்திற்குஅல்லதுஒருமாதகாலத்திற்கு மேற்படாத காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*(இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.)*

(2) ஆளெவரும், ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பு நடைபெறும் எத்தேதியிலும், வாக்களிப்பதற்காக வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகைதருகின்ற எவரேனும் ஆளுக்குத் தொந்தரவு ஏற்படுத்தும் வண்ணம் அல்லது வாக்கெடுப்பு நிலையத்தில் கடமையாற்று கின்ற அலுவலர்களினதும் மற்றைய ஆட்களினதும் வேலையில் தலையிடும் வண்ணம் -

(அ) வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அதன் வாசலில் அல்லது அதற்கு அயலில் ஏதேனும் பொது இடத்தில் அல்லது தனியார் இடத்தில் ஏதேனும் ஒலிபரப்பியை அல்லது ஒலிபெருக்கியை அல்லது மனிதக் குரலைப் பெரிதாக்கு வதற்கான அல்லது மீளாக்குவதற்கான வேறு உபகரணத்தைப் பயன்படுத்துதலோ அல்லது இயக்குதலோ ஆகாது ; அல்லது

(ஆ) வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அதன் வாசலில் அல்லது அதற்கு அயலில் ஏதேனும் பொது இடத்தில் அல்லது தனியார் இடத்தில் சத்தம்போடுதலோ அல்லது வேறு வகையில் ஒழுங்கீனமான முறையில் செயற்படுதலோ ஆகாது.

(இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.)

இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளை மீறும் ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதாயிரம்ரூபாவைவிஞ்சாதகுற்றப்பணத்திற்குஅல்லதுஒருமாதகாலத்திற்கு மேற்படாத காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறாது தடுப்பதற்கென, எவரேனும் பொலிசு அலுவலர், நியாயமாக அவசியமாகக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம் அத்தகைய வலோற்காரத்தைப் பயன்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய மீறுகைக்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் உபகரணத்தையும் கைப்பற்றலாம்.

ஊர்வலங்கள் மீது மட்டுப்பாடு.

**69**. ஆளெவரும் -

(அ) தேர்தலொன்று தொடர்பான நியமன காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்குவதும் அத்தகைய தேர்தலில், நடைபெற்ற வாக்கெடுப்பின் முடிவு தெரிவத்தாட்சி அலுவலரால் இச்சட்டத்தின் கீழ்வெளிப்படுத்தப்பட்டு ஒருவாரத்தின் பின்னர் முடிவடைவதுமான காலப்பகுதியின் போது எப்போதாயினும், அவ்வாண்டின் மே மாதம் 1 ஆந் தேதிய ஊர்வலமொன்று அல்லது சமய அல்லது சமூக நோக்கங்களுக்கான ஏதேனும் ஊர்வலம் தவிர்ந்த ஊர்வலமெதனையும் நடாத்திச் செல்லல், ஏற்படுத்துதல் அல்லது அதில் பங்குபற்றுதல் ஆகாது; அல்லது

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின்போது ஏற்படுத்தப்பட்ட அல்லது நடாத்தப்பட்ட ஏதேனும் ஊர்வலத்தில், சொல்லப்பட்ட (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தேர்தலுக்கு ஆதரவுகூட்டக் கருதுவதான ஏதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்தலாகாது.

(இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.)

இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளெதனையும் மீறும் ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாதகாலத்திற்குமேற்படாத காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**70.** வாக்கெடுப்புத் தேதிக்கு நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் முன்னர் தொடங்குவதும், அத்தகைய தேதியில் எத்தேர்தல் மாவட்டங்கள் தொடர்பாக வாக்கெடுப்பு நடைபெற்றதோ அத்தேர்தல் மாவட்டங்கள் எல்லாவற்றுக்கெனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர் என அவ்வவற்றிற்குரிய தெரிவத்தாட்சி அலுவலர்களால் வெளிப்படுத்தப்பட்டு ஒரு வாரத்துக்குப் பின்னர் முடிவடைவதும் ஆன காலப்பகுதியின்போது பொதுக்கூட்டமெதுவும் நடாத்தப்படுதலாகாது.

*பொதுக்கூட்டங்கள் மீதான மட்டுப்பாடு.*

இப்பிரிவின் மேற்போந்த எவையேனும் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஒரு மாதகாலத்திற்கு மேற்படாத காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

**71.**(1) அறுபத்தாறாம்பிரிவில் அல்லது 67 ஆம்பிரிவில் அல்லது 68 ஆம் பிரிவில் அல்லது 69 ஆம்பிரிவில் அல்லது 70 ஆம்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைப்புரிய எத்தனிக்கும் ஆளொவ்வொருவரும், அத்தவறுக்கென விதித்துரைக்கப்பட்ட தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

*66 ஆம், 67 ஆம், 68 ஆம், 69 ஆம், 70 ஆம் பிரிவுகளின் கீழான தவறுகள் தொடர்பான பொது ஏற்பாடுகள்.*

(2) அறுபத்தாறாம் பிரிவின் அல்லது 67 ஆம் பிரிவின் அல்லது 68 ஆம் பிரிவின் அல்லது 69 ஆம் பிரிவின் அல்லது 70 ஆம் பிரிவின் கீழான தவறொவ்வொன்றும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பிடியாணையின்றிக் கைது செய்யப்படக்கூடிய தவறொன்றாதல் வேண்டும்.

(3) நியமனப்பத்திரம், வாக்குச் சீட்டுப்பெட்டி, வாக்குச்சீட்டு அல்லது தேர்தலொன்றில் குறியிடுகின்ற கருவி என்பன தொடர்பான தவறொன்றிற்கான குற்றவழக்கொன்றில், அத்தகைய நியமனப்பத்திரம், வாக்குச்சீட்டுப்பெட்டி, வாக்குச்சீட்டு அல்லது குறியிடுகின்ற கருவி என்பவற்றின் சொத்துவமும் ஏதேனும் வாக்குச்சீட்டின் அடியிதழின் சொத்துவமும், அத்தேர்தலில் தெரிவத்தாட்சி அலுவலரிடம் உள்ளதாக எடுத்துச் சொல்லப்படலாம்.

(4) அறுபத்தாறாம் பிரிவின் அல்லது 67 ஆம் பிரிவின் அல்லது 68 ஆம் பிரிவின் அல்லது 69 ஆம் பிரிவின் அல்லது 70 ஆம் பிரவின் கீழான தவறொன்றிற்கான, குற்றவழக்கொன்று சட்டத்துறைத் தலைமை அதிபதியின் அனுமதியின்றித் தொடரப்படலாகாது.

**72.** தேர்தலைக் குறிப்பீடு செய்வதும், அத்துடன் அதன் முகப்பக்கத்தில் அதனை அச்சடித்தவரினதும் வெளியிட்டவரினதும் பெயர்களையும் முகவரிகளையும் கொண்டிராததுமான ஏதேனும் விளம்பரத்தை, துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை அல்லது சுவரொட்டியை அச்சிடும், வெளியிடும், விநியோகிக்கும் அல்லது ஒட்டிவைக்கும் அல்லது அச்சிடச் செய்விக்கும், வெளியிடச் செய்விக்கும், விநியோகிக்கச் செய்விக்கும் அல்லது

*வேட்பாளர்கள் தவிர்ந்த வேறு ஆட்களால் தேர்தல் வெளியீடுகள் அச்சிடப்படுதலும் பிறவும்.*

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

ஒட்டிவைக்கச் செய்விக்கும் வேட்பாளரொருவராயிராத ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், ஆளொருவர், விடயத்துக்கேற்றாற் போல, மேற்சொல்லப்பட்ட பெயர்களும், முகவரிகளும் அல்லது அத்தகைய ஏதேனும் பெயரும் முகவரியும் விடப்பட்டமை தற்செயலாக அல்லது அதையொத்த வேறு சில நியாயமான ஏதுவால் நிகழ்ந்ததென்றும் நன்நோக்கின்மையால் நிகழ்ந்ததல்லவென்றும், நீதிவானைத் திருப்திப்படுத்துவாரெனில், ஏதேனும் விளம்பரம், துண்டுப் பிரசுரம், ஒட்டுவிளம்பரம் அல்லது சுவரொட்டி தொடர்பில் இப்பிரிவின் மேற்போந்த ஏற்பாடுகளின் கீழான தவறொன்றுக்கு அவர் குற்றவாளியாதல் ஆகாது.

*தேர்தல் அலுவலகங்களின் எண்ணிக்கை மீதான மட்டுப்பாடு.*

**73.** (1) ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் தேர்தலொன்றில், அதிகாரமளிக்கப்பட்ட முகவராக அல்லது குழுத்தலைவராக உள்ள அல்லது அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் அல்லது குழுத்தலைவரின் முகவராக உள்ள ஆளொருவர் -

(அ) அத்தகைய தேர்தலில் நியமனக் காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்குவதும், அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் தேதிக்கு நேர்முன்னரான நாளில் முடிவடைவதுமான காலப்பகுதியின்போது, அத்தேர்தல் மாவட்டத்தில் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு மத்திய தேர்தல் அலுவலகமும் அத்துடன் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்திலும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு கிளைத் தேர்தல் அலுவலகமும் தவிர்ந்த ஏதேனும் தேர்தல் அலுவலகத்தை வைத்திருத்தலாகாது ;

(ஆ) அத்தகைய வாக்கெடுப்புத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று தொடங்குவதும், அத்தகைய தேதியை உடனடுத்துவரும் நாளன்று முடிவடைவதுமான காலப்பகுதியின் போது தேர்தல் மாவட்டத்தில் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு மத்திய தேர்தல் அலுவலகமும், அத்துடன் அத்தேர்தல் மாவட்டத்துக்கென ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பிலும், அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு கிளைத் தேர்தல் அலுவலகமும், தவிர்ந்த ஏதேனும் தேர்தல் அலுவலகத்தை வைத்திருத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் அல்லது குழுத் தலைவரின் அல்லது வேட்பாளரின் சாதாரணமான வதிவிடத்தைத் தேர்தல் அலுவலகமொன்றாகப் பயன்படுத்தல் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுவதாகாதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறும் ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்துக்கு மேற்படாத காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.

(4) இப்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தவறினைப்புரிய எத்தனிக்கின்ற ஆளொவ்வொருவரும், அத்தவறுக்கென விதித்துரைக்கப்பட்ட தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழான தவறொன்றிற்கான குற்றவழக்கொன்று சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியின்றித் தொடரப்படுதலாகாது.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஏதேனும் தேர்தல் அலுவலகம் தொடர்பாக, "அறிவித்தல் கொடுக்கப்பட்ட" என்னும் சொற்றொடர் அவ்விடப்பிரதேசத்துக்கான பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கும், அந்த அலுவலகம் எந்த தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டத்திற்கான தெரிவத்தாட்சி அலுவலருக்கும், அத்தகைய அலுவலகமானது தாபிக்கப்படுவதற்கு முன்னர், அறிவித்தல் கொடுக்கப்பட்டது எனப் பொருளாகும்.

துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை வெளிக்காட்டி வைத்தல் தொடர்பான ஏற்பாடுகள்.

**74.**(1) தேர்தலொன்றில், நியமன காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்குவதும், அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் நாளுக்கு அடுத்து வரும் நாளில் முடிவடைவதுமான காலப்பகுதியின் போது, அத்தகைய தேர்தலுக்கு ஆதரவுகூட்டும் நோக்கத்துக்காக ஆளெவரும் -

(அ) அத்தகைய தேர்தலில் வேட்பாளர் ஒருவரின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனத்தில் அல்லது வாகனத்தின் மீது தவிர, ஏதேனும் பொது வளவுகளிலாயினுஞ்சரி அல்லது தனியாருக்குரிய வளவுகளிலாயினுஞ்சரி, ஏதேனும் கொடியை அல்லது பதாகையை ; அல்லது

(ஆ) தேர்தல் கூட்டம் ஒன்று எந்த வளவிலும் எந்நாளிலும் நடாத்தப்படவுள்ளதோ அந்த ஏதேனும் வளவிலும் அல்லது அத்தகைய வளவின் மீதும் அந்த ஏதேனும் நாளிலும் தவிர, பொதுமக்கள் சென்றடைவதற்கு உரிமையொன்றைக்கொண்டுள்ள அல்லது அவர்கள் சென்றடைவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள இடமெதிலும் ஏதேனும் துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை, சுவரொட்டியை, சித்திரத்தை, அறிவித்தலை, வேட்பாளரொருவரின் புகைப்படத்தை, சின்னத்தை அல்லது அடையாளத்தை ; அல்லது

(இ) பொது வீதி எதன் மீதும் அல்லது அதற்குக் குறுக்காக ஏதேனும் துண்டுப்பிரசுரத்தை, ஒட்டுவிளம்பரத்தை, சுவரொட்டியை,

சித்திரத்தை, அறிவித்தலை, வேட்பாளரொருவரின் புகைப்படத்தை சின்னத்தை, அடையாளத்தை, கொடியை அல்லது பதாகையை ; அல்லது

(ஈ) அத்தகைய தேர்தலில் வேட்பாளர் ஒருவரின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் வாகனத்தில் அல்லது அதன் மீது தவிர, ஏதேனும் வாகனத்தில் அல்லது வாகனத்தின் மீது ஏதேனும் துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை, சுவரொட்டியை, சித்திரத்தை, அறிவித்தலை, வேட்பாளரொருவரின் புகைப்படத்தை, சின்னத்தை அல்லது அடையாளத்தை,

அத்தகைய தேர்தலில் வெளிக்காட்டி வைத்தலாகாது.

இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.

(2) ஓராம் உட்பிரவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப் பட்டதன் மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஒருமாதகாலத்துக்குமேற்படாதகாலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்ற ஆளொவ்வொருவரும், அத்தவறுக்கென விதித்துரைக்கப்பட்ட தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் கீழான தவறொவ்வொன்றும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பிடியாணையின்றிக் கைது செய்யப்படக்கூடிய தவறொன்றாதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறாது தடுப்பதற்கென, எவரேனும் பொலிசு அலுவலர் நியாயமாக அவசியமாகக் கூடிய அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவும் அத்தகைய வலோற்காரத்தைப் பயன்படுத்தவும் பயன்படுத்தலாமென்பதுடன், அத்தகைய மீறுகையில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை, சுவரொட்டியை, அறிவித்தலை, சித்திரத்தை, சின்னத்தை, வேட்பாளரொருவரின் புகைப்படத்தை, அடையாளத்தை, கொடியை அல்லது பதாகையை கைப்பற்றி அகற்றியும் விடலாம்.

வேட்பாளர் வாக்களிக்கும்படி இரந்து கேட்பதற்கென வதிவிடங்களுக்குச் செல்லாதிருத்தல் முதலியன.

**75.** (1) நியமன காலப்பகுதியின் கடைசி நாளன்று தொடங்குவதும், வாக்கெடுப்புத் தேதியை உடனடுத்துவரும் நாளில் முடிவடைவதுமான ஏதேனும் காலப்பகுதியின் போது, எவரேனும் தேருநரின் வதிவிடத்துக்கு -

(அ) அத்தகைய தேருநரின் வாக்கை பரிந்துகேட்கும் அல்லது இரந்து கேட்கும் நோக்கத்துக்கென ; அல்லது

(ஆ) *அத்தகைய தேருநரை குறிப்பானவொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்க வேண்டாமென்று வசப்படுத்த முயலும் நோக்கத்துக்கென ; அல்லது*

(இ) *அத்தகைய தேர்தலின் அத்தகைய தேருநரை வாக்களிக்க வேண்டாமென்று வசப்படுத்த முயலும் நோக்கத்துக்கென ; அல்லது*

(ஈ) *ஏதேனும் துண்டுப்பிரசுரத்தை, ஒட்டுவிளம்பரத்தை, சுவரொட்டியை,சித்திரத்தை,அறிவித்தலை,வேட்பாளரொருவரின் புகைப்படத்தை, சின்னத்தை அல்லது அடையாளத்தை விநியோகிக்கும் அல்லது காட்சிக்கு வைக்கும் நோக்கத்துக்கென,*

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

வருகைதரும் எவரேனும் வேட்பாளர் அல்லது வேட்பாளரொருவரின் குடும்பத்தின் உறுப்பினரொருவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஒரு மாதகாலத்துக்கு மேற்படாத காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "குடும்பத்தின் உறுப்பினர்" என்பது வேட்பாளரொருவரின் வாழ்க்கைத்துணை, மகன், மகள் அல்லது பெற்றோர் அல்லது வேட்பாளரொருவரின் மகளின் அல்லது மகளின் வாழ்க்கைத்துணை எனப் பொருளாகும்.

*தேர்தல்களில் இரகசியம் பேணுதல்.*

**76.** (1) வாக்கெடுப்பு நிலையமொன்றில் அல்லது வாக்குகளை எண்ணுப்படுகையில் சமுகமாயிருப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒவ்வோர் அலுவலரும், எழுதுவினைஞரும், வேட்பாளரும், முகவரும், அவ்வாறு சமுகமளிப்பதற்கு முன்னர், பொருளளவில், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள "ங" என்னும் படிவத்தில் இரகசியம் பேணுவதற்கான நியதிச் சட்டமுறையான வெளிப்படுத்துகை ஒன்றைச் செய்தல் வேண்டும். அத்தகைய வெளிப்படுத்துகையானது தெரிவத்தாட்சி அலுவலரினால் சமாதான நீதிவான் ஒருவரின் முன்னிலையிலும், தலைமைதாங்கும் அலுவலர் ஒருவரினால் அல்லது வாக்கெண்ணும் அலுவலரொருவரினால் சமாதான நீதிவான் அல்லது தெரிவத்தாட்சி அலுவலரின் முன்னிலையிலும், அத்துடன், வேறு எவரேனும் ஆளினால், தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரின் முன்னிலையில் அல்லது சமாதான நீதிவான் ஒருவரின் முன்னிலையில் அல்லது தலைமை தாங்கும் அலுவலர் ஒருவரின் முன்னிலையில் அல்லது வாக்கெண்ணும் அலுவலர் ஒருவர் முன்னிலையிலும் செய்யப்படுதல் வேண்டும்.

(2) வாக்கெடுப்பு நிலையமொன்றில் சமுகமாயிருக்கும், ஒவ்வோர் அலுவலரும், எழுதுவினைஞரும், வேட்பாளரும், முகவரும் அத்தகைய நிலையத்தில் நடைபெறும் வாக்களிப்பு பற்றிய இரகசியத்தைப் பேணுதலும், பேணுவதில் உதவி புரிதலும் வேண்டுமென்பதுடன், சட்டத்தினால் அதிகார மளிக்கப்பட்ட ஏதேனும் நோக்கத்திற்காகவன்றி, வாக்குச் சீட்டொன்றுக்கு விண்ணப்பித்துள்ள அல்லது விண்ணப்பிக்காதுள்ள அல்லது அந்நிலையத்தில் வாக்களித்துள்ள அல்லது வாக்களிக்காதுள்ள தேருநர் இடாப்பில் உள்ள எவரேனும் தேருநரின் பெயர் அல்லது இலக்கம் பற்றிய அல்லது அலுவலக முறையான குறியீடு பற்றிய ஏதேனும் தகவலை, வாக்கெடுப்பு முடிவடைய முன்னர் எவரேனும் ஆளுக்குத் தெரிவித்தலும் ஆகாது.

(3) அத்தகைய அலுவலர், எழுதுவினைஞர், வேட்பாளர் அல்லது முகவர் அல்லது வேறு எத்தகையவரான ஆள் எவரேனும், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் எவரேனும் வாக்காளர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்க உள்ளார் அல்லது வாக்களித்துள்ளார் என்பது பற்றிய தகவலை அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் பெற எத்தனித்தலோ அல்லது அத்தகைய நிலையத்தில் எவரேனும் வாக்காளர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்க உள்ளார் அல்லது வாக்களித்துள்ளார் என்பது பற்றியோ அல்லது அத்தகைய நிலையத்தில் எவரேனும்வாக்காளருக்குக்கொடுக்கப்பட்ட வாக்குச்சீட்டின் பின்பக்கத்திலுள்ள இலக்கம் பற்றியோ வாக்கெடுப்பு நிலைய மொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய ஏதேனும் தகவலை எந்நேரத்திலும், ஆளெவருக்கும் தெரிவித்தலோ ஆகாது.

[பி6, 2011 இன் 28]

(4) வாக்குகள் எண்ணப்படுகையில் சமுகமாயிருக்கும் ஒவ்வோர் அலுவலரும், எழுதுவினைஞரும், வேட்பாளரும், முகவரும், வாக்களிப்புப் பற்றிய இரகசியத்தைப் பேணுதலும், பேணுவதில் உதவி புரிதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எண்ணுகையின் போது ஏதேனும் வாக்குச்சீட்டின் பின்பக்கத்தில் உள்ள இலக்கத்தை அறிவதற்கு எத்தனித்தலும் அல்லது ஏதேனும் குறிப்பான வாக்குச்சீட்டு மூலம் எந்த அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு ஏதேனும் வாக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது பற்றி அத்தகைய வாக்கெண்ணுகையில் பெறப்பட்ட தகவலெதனையும் தெரிவிக்க எத்தனித்தலும் ஆகாது.

(4 அ) வலிமையிழப்பிற்கு உட்பட்ட வாக்காளர் ஒருவருடன் அத்தகைய வாக்காளரின் வாக்குச்சீட்டை வாக்காளரினால் பணிக்கப்பட்டவாறு குறியிடுவதற்கும் வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் இடுவதற்குமென வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு உடன்செல்லும் ஒவ்வோராளும் அத்தகைய வாக்களிப்பு பற்றிய இரகசியத்தைப் பேணுதலும் மற்றும் பேணுவதற்கு உதவுதலும் வேண்டும்.

(4 ஆ) வலிமையிழப்பிற்கு உட்பட்ட வாக்காளர் ஒருவரின் வாக்குச் சீட்டைக் குறியிடுவதற்கென வாக்கெடுப்பு நிலையமொன்றிற்கு உடன்செல்லும்

ஒவ்வோர் ஆளினதும் இயைபான தகவல் பற்றிய பதிவேடொன்றைப் பேணுதல் தலைமைதாங்கும் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கம்ஒன்றிற்காகச் செயற்படும் ஒரு தலைமை தாங்கும் அலுவலர் அல்லது மேற்சொல்லப்பட்ட அத்தகைய நோக்கத்திற்காகச் செயற்படுபவரும் தலைமை தாங்கும் அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்டவருமான ஆளொருவர் தவிர்ந்த, ஆளெவரும், எவரேனும் வாக்காளருடன், அத்தகைய வாக்காளர் வாக்குச்சீட்டொன்றைப் பெற்றுக்கொண்ட பின்னரும் அதனை அவர் வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் போடுவதற்கு முன்னரும் தொடர்பு கொள்ளுதலோ அல்லது தொடர்பு கொள்ள எத்தனித்தலோ ஆகாது.

(6) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறிச் செயற்படும் ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்துக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும். *இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

(7) இப்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும், அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டுகளுக்கான ஒரு காலப் பகுதிக்கு, குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டமையால், தேருநரொருவராகப் பதிவு செய்திருப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் வாக்களிப்பதற்கு தகுதியற்றவராதல் வேண்டும்.

**ஊழல் பழக்கங்கள்**

**77.** (1) ஏதேனும் தேர்தலில் - *ஆள் மாறாட்டம்.*

(அ) நேரடியாக அல்லது அஞ்சல் மூலமாக வேறோர் ஆளாக வாக்களிக்கும் ஆளொவ்வொருவரும், அந்த வேறு ஆள் உயிரோடிருந்தாலும்சரி அல்லது இறந்திருந்தாலும்சரி அல்லது கற்பனை ஆளாக இருப்பினுஞ் சரி ; அல்லது

(ஆ) அத்தகைய தேர்தலில், ஒரு தடவைக்கு மேல், தனது சொந்தப் பெயரில் அல்லது சொந்தப் பெயரின் கீழ் வாக்களிக்கும் ஆளொவ்வொருவரும்,

ஆள்மாறாட்டத் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்; அது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பிடியாணையின்றிக் கைது செய்யப்படக்கூடிய தவறொன்றாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) நேரடியாக வாக்களிக்கும் நோக்கத்திற்காக வாக்குச் சீட்டொன்றுக்காக விண்ணப்பித்துள்ள ; அல்லது

(ஆ) அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்காக விண்ணப்பம் ஒன்றைச் செய்திருக்கும் ; அல்லது

(இ) அஞ்சல் மூலம் வாக்களிக்கும் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட வாக்குச் சீட்டு ஒன்றை செல்லுபடியானவாறோ அல்லாதோ குறியீடு செய்து திருப்பி அனுப்பியிருக்கும்.

ஆளொருவர் வாக்களித்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

உபசாரம் செய்தல்.

**78.** எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக, அந்த ஆள் அல்லது வேறு எவரேனும் ஆள் தேர்தலொன்றில் அவரது வாக்கை அளிக்க அல்லது அளிக்காது விலகியிருக்க என ஊழலாகச் செல்வாக்குப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக அல்லது அத்தகைய எவரேனும் ஆள் அல்லது வேறு எவரேனும் ஆள் அத்தகைய தேர்தலில் வாக்களித்திருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்க இருக்கின்றமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருக்கவிருக்கின்றமை காரணமாக ஏதேனும் தின்பண்டத்தை, பானத்தை, சிற்றுண்டியை அல்லது உணவு வகையை சம்பாதித்தலை இயலச் செய்வதற்காக ஏதேனும் பணத்தை அல்லது சீட்டை அல்லது வேறு வழிவகைகளை அல்லது உபாயத்தை, ஒன்றில் அத்தகைய தேர்தலுக்கு முன்னர் அல்லது அத்தகைய தேர்தலின் போது அல்லது அத்தகைய தேர்தலின் பின்னர் தாமே அல்லது வேறு எவரேனும் ஆள் மூலமாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஊழலாக வழங்கும் அல்லது ஏற்பாடு செய்யும் அல்லது வழங்கச் செய்விக்கும் அல்லது ஏற்பாடு செய்விக்கும் அல்லது வழங்குதலுக்கு அல்லது ஏற்பாடு செய்தலுக்குத் துணையாளியாக இருக்கும் அல்லது வழங்குதலுக்கான அல்லது ஏற்பாடு செய்தலுக்கான செலவை முழுமையாக அல்லது பகுதியளவில் செலுத்தும் அல்லது செலுத்த ஒப்புக்கொள்ளும் ஒவ்வோர் ஆளும், அத்துடன், அத்தகைய ஏதேனும் தின்பண்டத்தை, பானத்தை, சிற்றுண்டியை அல்லது உணவு வகையை அல்லது ஏதேனும் அத்தகைய பணத்தை அல்லது சீட்டை ஊழலாக ஏற்றுக்கொள்ளும் அல்லது எடுத்துக்கொள்ளும் அல்லது அத்தகைய தின்பண்டத்தை, பானத்தை, சிற்றுண்டியை அல்லது உணவு வகையை சம்பாதிக்க இயலச் செய்வதற்கான அத்தகைய வேறு வழிவகைகளை அல்லது உபாயத்தை ஏற்றுக்கடைப் பிடிக்கும் ஒவ்வொரு தேருநரும் உபசாரஞ் செய்தலெனும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

தகாத செல்வாக்கு.

**79.** (1) எவரேனும் ஆள் மீது அல்லது ஆளுக்கெதிராக, தேர்தலொன்றில் அத்தகைய ஆள் வாக்கை அளிக்க அல்லது அளிக்காது விலகியிருக்கத் தூண்டும் பொருட்டு அல்லது வற்புறுத்தும் பொருட்டு

அல்லது அத்தகைய ஆள் வாக்களித்தமை காரணமாக அல்லது வாக்களியாது விலகியிருந்தமை காரணமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, தாமே அல்லது அவர் சார்பில் வேறெவரேனும் ஆள் மூலமாக, ஏதேனும் வலோற்காரத்தை,வன்முறையை அல்லது மட்டுப்பாட்டைப் பயன்படுத்துகின்ற அல்லது பயன்படுத்தப்போவதாகத் தாமே பயமுறுத்துகின்ற அல்லது தாமே அல்லது வேறெவரேனும் ஆள்மூலமாக ஏதேனும் லௌகீக அல்லது ஆத்மீக ஊறை, சேதத்தை அல்லது இடையூறை அல்லது நட்டத்தை விளைவிக்கின்ற அல்லது விளைவிக்கப் போவதாகப் பயமுறுத்துகின்ற அல்லது ஆட்கடத்தல் மூலம், பலவந்தம் மூலம் அல்லது ஏதேனும் மோசடியான உபாயத்தினால் அல்லது சூழ்ச்சியினால், தேருநர் எவரேனும் அவரது வாக்கைச் சுயாதீனமாகப் பிரயோகித்தலைத் தடங்கல் செய்கின்ற அல்லது தடுக்கின்ற அல்லது அதன் மூலம் அத்தகைய ஏதேனும் தேர்தல் ஒன்றில் தேருநர் எவரேனும் அவரது வாக்கை அளிக்கும்படி அல்லது அளிக்காது விலகியிருக்கும்படி அவரை வற்புறுத்துகின்ற, தூண்டுகின்ற அல்லது பற்றி நிற்கின்ற ஆளொவ்வொருவரும், தகாத செல்வாக்கு என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஏதேனும் தேர்தலில், நியமன காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்குவதும், அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்புத் தேதியை அடுத்துவரும் நாளன்று முடிவடைவதுமான காலப்பகுதியின் போது, எப்போதாயினும் -

(அ) அத்தகைய தேர்தல் முடிவில் மாற்றம் உண்டு பண்ணும் நோக்கத்திற்காக அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி எதற்கும் அல்லது சுயேச்சைக் குழு எதற்கும் அத்தகைய தேர்தலில் வாக்களிக்கும்படி அல்லது வாக்களிக்காது விலகியிருக்கும்படி தேருநர் எவரையும் தூண்டும் நோக்கத்திற்காக, சமயக் கூட்டமெதிலும் எவையேனும் சொற்களை உரைக்கும் ; அல்லது

(ஆ) அத்தகைய நோக்கத்திற்காக, சமயக்கூட்டம் எதிலும், துண்டுப்பிரசுரம், ஒட்டுவிளம்பரம், சுவரொட்டி, சித்திரம், அறிவித்தல், வேட்பாளரொருவரின் புகைப்படம், சின்னம், அடையாளம், கொடி அல்லது பதாகை எதனையும் விநியோகிக்கும் அல்லது வெளிக்காட்டும் ; அல்லது

(இ) அத்தகைய தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி எதனதும் அல்லது சுயேச்சைக்குழு எதனதும் தேர்தலுக்கு ஆதரவு திரட்டும் அல்லது அதனது தேர்தல் பிரசாரத்திற்கு ஆதரவு திரட்டும் நோக்கத்திற்காக வழிபாட்டிடமொன்றில் பொதுக்கூட்டமொன்றை நடாத்தும் அல்லது நடாத்தும்படி செய்யும்,

ஆளொவ்வொருவரும், தகாத செல்வாக்கு என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) சமயப்பணித்துறை அமைப்பொன்றின் அல்லது ஒழுங்கமைப் பொன்றின் எவரேனும் உறுப்பினரை அல்லது பற்றாளரை, தேர்தலொன்றில், ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு வாக்களிக்க அல்லது வாக்களிக்காது விலகியிருக்க அல்லது அத்தகைய தேர்தலில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு ஆதரவளிக்க அல்லது ஆதரவளிக்காது விலகியிருக்கத் தூண்டும் பொருட்டு அல்லது வற்புறுத்தும் பொருட்டு அல்லது அத்தகைய உறுப்பினர் அல்லது பற்றாளர், அத்தகைய தேர்தலில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு வாக்களித்திருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமை காரணமாக அல்லது அத்தகைய தேர்தலில் அத்தகைய ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு ஆதரவளித்தமை காரணமாக அல்லது ஆதரவளிக்காது விலகியிருந்தமை காரணமாக -

(அ) அந்தப் பணித்துறை அமைப்பின் அல்லது ஒழுங்கமைப்பின் எவரேனும் உறுப்பினர் அல்லது பற்றாளர் அல்லது அத்தகைய உறுப்பினரின் அல்லது பற்றாளரின் குடும்ப உறுப்பினரெவருக்கும், சாதாரணமாக அத்தகைய உறுப்பினருக்கு அல்லது பற்றாளருக்கு உரித்தாயிருக்கும் ஏதேனும் ஆத்மீகத் தொண்டு, சேவை அல்லது நலவுதவி எதனையும் அளிக்க மறுக்கும் அல்லது அளிக்கமறுப்பதாகப் பயமுறுத்தும் ; அல்லது

(ஆ) அத்தகைய பணித்துறை அமைப்பிலிருந்து அல்லது ஒழுங்கமைப்பிலிருந்த அத்தகைய உறுப்பினரை அல்லது பற்றாளரை விலக்கும் அல்லது விலக்கப் போவதாகப் பயமுறுத்தும்,

அத்தகைய சமயப் பணித்துறை அமைப்பின் அல்லது ஒழுங்கமைப்பின் எவரேனும் உறுப்பினர் அல்லது அலுவலர், தகாத செல்வாக்கு என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) வேறு எவரேனும் ஆளின் தொழில்தருநராகவிருந்து கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியெதற்கும் அல்லது சுயேச்சைக் குழுவெதற்கும் தேர்தலொன்றில் வாக்களிக்க அல்லது வாக்களிக்காது விலகியிருக்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியெதற்கும் அல்லது சுயேச்சைக்குழு எதற்கும் அத்தகைய தேர்தலில் ஆதரவளிக்க அல்லது ஆதரவளிக்காது விலகியிருக்க அத்தகைய வேறு ஆளைத் தூண்டும்பொருட்டு அல்லது வற்புறுத்தும் பொருட்டு, அல்லது அத்தகைய வேறு ஆள் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியெதற்கும் அல்லது சுயேச்சைக் குழு எதற்கும் அத்தகைய தேர்தலில் வாக்களித்திருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமை காரணமாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியெதற்கும் அல்லது சுயேச்சைக்குழு எதற்கும் அத்தகைய தேர்தலில் ஆதரவளித்தமை காரணமாக அல்லது ஆதரவளிக்காது விலகியிருந்தமை காரணமாக -

(அ) அத்தகைய தொழிலை முடிவுறுத்துகின்ற அல்லது முடிவுறுத்தப் போவதாகப் பயமுறுத்துகின்ற ; அல்லது

(ஆ) அத்தகைய தொழிற்போக்கில் சாதாரணமாக அத்தகைய வேறு ஆள் ஏற்கெனவே துய்த்த அல்லது துய்த்திருக்கக்கூடிய ஏதேனும் நலவுதவியை அல்லது சேவையை அத்தகைய வேறு ஆளுக்கு அளிக்க மறுக்கின்ற அல்லது அளிக்க மறுக்கப் போவதாகப் பயமுறுத்தும்,

ஆளெவரும், தகாத செல்வாக்கு என்னும் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

80. பின்வரும் ஆட்கள் இலஞ்சம் எனும் தவறுக்குக் குற்றவாளிகளெனக் கருதப்படுதல் வேண்டும் : - இலஞ்சம்.

(அ) எவரேனும் தேருநருக்கு அல்லது தேருநருக்காக அல்லது எவரேனும் தேருநரின் சார்பாக எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக அல்லது வேறெவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக, எவரேனும் தேருநரை வாக்களிக்க அல்லது வாக்களிக்காது விலகியிருக்கத் தூண்டும் பொருட்டு ஏதேனும் பணத்தை அல்லது பெறுமதி கொண்ட பிரதிப்பயனை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, அவரோ அல்லது அவர் சார்பாகவேறெவரேனும்ஆள்மூலமோ கொடுக்கும்,கடன் கொடுக்கும் அல்லது கடன் கொடுக்க அல்லது கடன் கொடுக்க உடன்படும் அல்லது கொடுக்க முன்வரும், வாக்குறுதி செய்யும் அல்லது சம்பாதித்துக் கொடுக்க வாக்குறுதி செய்யும் அல்லது சம்பாதித்துக் கொடுக்க முயற்சி செய்யும் அல்லது இச்சட்டத்தின் கீழ் தேர்தலொன்றில் அத்தகைய தேருநர் வாக்களித்திருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமை காரணமாக மேற்சொல்லப்பட்டவாறு ஊழலாக அத்தகைய ஏதேனும் செயலைச் செய்யும் ஒவ்வோர் ஆளும் ;

(ஆ) எவரேனும் தேருநருக்கு அல்லது தேருநருக்காக அல்லது எவரேனும் தேருநரின் சார்பாக எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக அல்லது வேறெவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக அத்தகைய தேருநரை வாக்களிக்க அல்லது வாக்களிக்காது விலகியிருக்க தூண்டும் பொருட்டு ஏதேனும் பதவியை, நிலையை அல்லது தொழிலை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, அவரோ அல்லது அவர் சார்பாக வேறெவரேனும் ஆளோ கொடுக்கும், சம்பாதித்துக் கொடுக்கும், கொடுக்க அல்லது சம்பாதித்துக் கொடுக்க உடன்படும் அல்லது கொடுக்க முன்வரும், வாக்குறுதி செய்யும் அல்லது சம்பாதித்துக் கொடுக்க வாக்குறுதி செய்யும் அல்லது சம்பாதித்துக் கொடுக்க முயற்சி செய்யும் அல்லது இச்சட்டத்தின் கீழ், தேர்தலொன்றில் எவரேனும், தேருநர் வாக்களித்திருந்தமை காரணமாக அல்லது வாக்களிக்காது விலகியிருந்தமை காரணமாக மேற்சொல்லப்பட்டவாறு ஊழலாக அத்தகைய ஏதேனும் செயலைச் செய்யும் ஒவ்வோர் ஆளும் ;

(இ) எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக, அத்தகைய ஆளை எவரேனும் ஆள் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தெரிந்தனுப்புதலை கைகூடச் செய்ய அல்லது கைகூடச் செய்ய முயற்சி செய்ய அல்லது இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் எவரேனும்தேருநரின் வாக்கைச் சம்பாதிக்க அல்லது சம்பாதிக்க முயற்சி செய்யத் தூண்டும்பொருட்டு, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவரோ அல்லது அவர் சார்பில் வேறெவரேனும் ஆள்மூலமோ மேற்சொல்லப்பட்டவாறு அத்தகைய ஏதேனும் கொடையை, கடனை, கொடைமுனைவை, வாக்குறுதியை, சம்பாதித்தலை அல்லது உடன் படிக்கையைச் செய்யும் ஒவ்வோர் ஆளும் ;

(ஈ) அத்தகைய ஏதேனும் கொடை, கடன், கொடை முனைவு, வாக்குறுதி, சம்பாதித்தல் அல்லது உடன்படிக்கை மீது அல்லது அதன் விளைவாக, இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் பாராளுமன்ற உறுப்பினரொருவராக எவரேனுமாள் தெரிந்தனுப்பப்படுதலை அல்லது எவரேனும் தேருநரின் வாக்கைச் சம்பாதிக்கும் அல்லது சம்பாதிக்க ஈடுபடுத்தும், வாக்குறுதி செய்யும் அல்லது முயற்சி செய்யும் ஒவ்வோர் ஆளும் ;

(உ) இச்சட்டத்தின்கீழானதேர்தலொன்றில்,அத்தகையபணம்அல்லது அதன் ஏதேனும் பாகம் இலஞ்ச வகையாக செலவழிக்கப்படுதல் வேண்டும் என்னும் முன்னத்துடன் வேறெவரேனும் ஆளுக்கு அல்லது அவரின் பயன்பாட்டுக்கு என ஏதேனும் பணத்தை, முற்பணம் செலுத்தும் அல்லது செலுத்துவிக்கும் அல்லது அத்தகைய தேர்தலில் இலஞ்ச வகையாக முற்றாக அல்லது பகுதியளவில் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தைக் கொடுத்துத் தீர்ப்பதாக அல்லது மீள்கொடுப்பனவாக அறிந்து கொண்டு எவரேனும் ஆளுக்கு ஏதேனும் பணத்தைச் செலுத்துபவரான அல்லது செலுத்துவிப்பவரான ஒவ்வோர் ஆளும் ;

(ஊ) இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றுக்கு முன்னர் அல்லது தேர்தலின் போது, நேரடியாகவேனும் அல்லது மறைமுகமாக வேனும், அவரோ அல்லது அவர் சார்பில் வேறு எவரேனும் ஆள்மூலமோ, அத்தகைய ஏதேனும் தேர்தலில் வாக்களிப் பதற்காக அல்லது வாக்களிக்க உடன்படுவதற்காக அல்லது வாக்களிக்காது விலகியிருப்பதற்காக அல்லது வாக்களிக்காது விலகியிருக்க உடன்படுவதற்காக, அவருக்கென அல்லது வேறு எவரேனும் ஆளுக்கென ஏதேனும் பணத்தை, கொடையை, கடனை அல்லது பெறுமதியான பிரதிப்பயனை, பதவியை, நிலையை அல்லது தொழிலைப் பெறும், அதற்காக உடன்படும் அல்லது ஒப்பந்தம் செய்யும் ஒவ்வொரு தேருநரும் ;

(எ) இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றின் பின்னர், அத்தகைய தேர்தலில் எவரேனும் ஆள் வாக்களித்துள்ள காரணத்தால் அல்லது வாக்களிக்காது விலகியிருந்த காரணத்தால் அல்லது

வேறு எவரேனும் ஆளை வாக்களிக்க அல்லது வாக்களியாது விலகியிருக்கத் தூண்டியுள்ள காரணத்தால், நேரடியாகவேனும் அல்லது மறைமுகமாக வேனும், அவரோ அல்லது அவர் சார்பில் வேறு எவரேனும் ஆள் மூலமோ ஏதேனும் பணத்தை அல்லது பெறுமதியான பிரதிபயனைப் பெறும் ஒவ்வோர் ஆளும் ;

(ஏ) தேர்தல் ஒன்றில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்கும் அல்லது வாக்களித்துள்ள அல்லது வாக்களிக்க உடன்படும் அல்லது வாக்களிக்க உடன்பட்டுள்ள காரணத்துக்காகவும் அதற்கான கொடுப்பனவாகவும் அல்லது தேர்தலொன்றில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் உதவி புரிந்துள்ள அல்லது உதவி புரிய உடன்பட்டுள்ள காரணத்திற்காகவும் அதற்கான கொடுப்பன வாகவும், ஏதேனும் கொடைக்காக அல்லது ஏதேனும் பணக் கடனுக்காக அல்லது பெறுமதியான பிரதிபயனுக்காக அல்லது ஏதேனும் கொடைக்கான அல்லது பணக் கடனுக்கான அல்லது பெறுமதியான பிரதிப்பயனுக்கான வாக்குறுதிக்காக அல்லது ஏதேனும் பதவி, நிலை அல்லது தொழிலுக்காக அல்லது ஏதேனும் பதவிக்கான, நிலைக்கான அல்லது தொழிலுக்கான வாக்குறுதிக்காக, அத்தகைய ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் வேட்பாளருக்கு அல்லது அவரது முகவருக்கு அல்லது முகவர்களுக்கு நேரடியாகவேனும் அல்லது மறைமுகமாகவேனும், அவரோ அல்லது அவர் சார்பாக வேறு எவரேனும் ஆள்மூலமோ விண்ணப்பிக்கும் ஒவ்வோர் ஆளும் ;

(ஐ) வேறெவரேனும் ஆள், வேட்பாளரொருவராகப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது ஒரு வேட்பாளராவதினின்றும் விலகியிருப்பதற்கு அல்லது அவர் வேட்பாளரொருவராகி விட்டாரெனில் அதினின்றும் ஒதுங்கிக்கொள்வதற்கு உடன்பட அவரைத் தூண்டும் பொருட்டு நேரடியாகவோ மறைமுகமாகவோ, அவரோ அல்லது அவர் சார்பில் எவரேனும் ஆள்மூலமோ அத்தகைய வேறு ஆளுக்கு அல்லது ஆளுக்காக ஏதேனும் பதவியை, நிலையை அல்லது தொழிலை வழங்கும் அல்லது சம்பாதித்துக் கொடுக்கும் அல்லது ஏதேனும் பதவியை, நிலையை அல்லது தொழிலை வழங்க அல்லது சம்பாதித்துக் கொடுக்க உடன்படும் அல்லது முன்வரும் அல்லது சம்பாதித்துக் கொடுக்க வாக்குறுதியளிக்கும் அல்லது சம்பாதித்துக் கொடுப்பதற்கு முயற்சி செய்ய வாக்குறுதியளிக்கும் அல்லது ஏதேனும் பணத்தை அல்லது பெறுமதியான பிரதிபயனை, எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக அல்லது அத்தகைய வேறு ஆளுக்கு அல்லது வேறு ஆளுக்காக அல்லது அத்தகைய வேறு ஆள் சார்பாக எவரேனும் ஆளுக்கு அல்லது ஆளுக்காக வழங்கும் அல்லது கடன் கொடுக்கும் அல்லது வழங்க அல்லது கடன் கொடுக்க உடன்படும் அல்லது முன்வரும்

அல்லது சம்பாதித்துக் கொடுக்க வாக்குறுதியளிக்கும் அல்லது சம்பாதித்துக் கொடுப்பதற்கு முயற்சி செய்ய வாக்குறுதியளிக்கும் ஒவ்வோர் ஆளும் ;

*ஊழல் பழக்கத்துக்கான தண்டனையும், தகுதியீனங்களும்.*

**81.** (1) ஊழல் பழக்கமொன்றுக்கு, அதாவது -

(அ) ஆள்மாறாட்டம்என்னும்தவறைப்புரியும்அல்லது ஆள்மாறாட்டம் என்னும் தவறைப் புரிவதற்கு உதவும், உடந்தையாயிருக்கும், அறிவுரை வழங்கும் அல்லது அது புரியப் படுதலை கைகூடச் செய்யும் ; அல்லது

(ஆ) உபசாரம் செய்தல், தகாத செல்வாக்கு அல்லது இலஞ்சம் என்னும் தவறைப் புரியும் ; அல்லது

(இ) தேர்தலொன்றின் முன்னர் அல்லது தேர்தலின் போது எவரேனும் வேட்பாளரின் தனிப்பட்ட குணவியல்பு அல்லது நடத்தை தொடர்பான ஏதேனும் பொய்யான நிகழ்வுக் கூற்றினை, அந்தத் தேர்தலின் முடிபைப் பாதிக்கும் நோக்கத்திற்காகச் செய்யும் அல்லது வெளியிடும் ; அல்லது

(ஈ) தேர்தலொன்றின் முன்னர் அல்லது தேர்தலின் போது, அத்தகைய தேர்தலிலிருந்து எவரேனும் வேட்பாளர் ஒதுங்குவதாக ஏதேனும் பொய்யான கூற்றினை, அந்தத் தேர்தலின் முடிவைப் பாதிக்கும் நோக்கத்திற்காகச் செய்யும் அல்லது வெளியிடும்,

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

ஆளொவ்வொருவரும் ஊழல் பழக்கமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், பன்னிரெண்டு மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான கடூழிய மறியற்றண்டனைக்கும், வேறு ஏதேனும் விடயத்தில், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஊழல் பழக்கமொன்றிற்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும், அவருக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டுகளுக்கானவொரு காலப்பகுதிக்கு, குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டமையால், தேருநரொருவராகப் பதிவு செய்திருப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தலில் வாக்களிப்பதற்கு அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும் என்பதுடன், அந்தத் தேதியில் அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அத்தகைய குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து அவரது தேர்தல் வறிதாக்கப்படுதலும் வேண்டும்.

(3) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியின்றி ஊழல் பழக்கமொன்றுக்கான குற்றவழக்கொன்று தொடரப்படுதலாகாது.

*தேர்தலொன்றின் வெற்றியீட்டாத ஒரு வேட்பாளரின் ஊழல் பழக்க மொன்றிற்கான தண்டனையும் தகுதியீனமும் தொடர்பான சிறப்பான ஏற்பாடுகள்.*

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

**82.** (1) இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்று தொடர்பாக, அத்தேர்தலில் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத எவரேனும் வேட்பாளரினால் அல்லது அவர் அறிந்திருக்க அல்லது அவரது சம்மதத்துடன் அல்லது எவரேனும் அவரது முகவரால் ஊழல் பழக்கமொன்று புரியப்படுகின்றவிடத்து, அத்தகைய வேட்பாளர், மேல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஆள்மாறாட்டத் தவறின் விடயத்தில், பன்னிரெண்டு மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அத்துடன், வேறு ஏதேனும் விடயத்தில், இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாத காலத்துக்கு மேற்படாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும் -

(அ) தேர்தலில், அத்தகைய வேட்பாளரினால் ஊழல் பழக்கமெதுவும் அல்லது சட்டமுரணான பழக்கமெதுவும் புரியப்படவில்லை யெனவும், அத்துடன் அத்தகைய ஏதேனும் தவறானது, அத்தகைய வேட்பாளரின் கட்டளைகளுக்கு முரணாகவும், அவருடைய அனுமதியின்றியும் அல்லது உட்கை இன்றியும் புரியப்பட்டது எனவும் ; அத்துடன்

(ஆ) தேர்தலில், அத்தகைய வேட்பாளர், ஊழல் பழக்கங்களும் சட்டமுரணான பழக்கங்களும் புரியப்படுதலைத் தடுப்பதற்காக நியாயமான எல்லா வழிவகைகளையும் எடுத்தார் எனவும் ; அத்துடன்

(இ) அத்தகைய ஏதேனும் தவறு அற்பமான, முக்கியமற்ற அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை கொண்டது எனவும் ; அத்துடன்

(ஈ) அத்தகைய வேட்பாளரையும், அவரது முகவர்களையும் பொறுத்தவரை மற்றெல்லா விதங்களிலும் தேர்தலானது எவ்வூழல் பழக்கமோ அல்லது சட்டமுரணான பழக்கமோ அற்றதெனவும்,

அத்தகைய வேட்பாளர், மேல் நீதிமன்றத்துக்கு எண்பித்தால் எவரேனும் அவரது முகவரால் புரியப்பட்ட உபசாரம் செய்தல் அல்லது தகாத செல்வாக்கு என்னும் தவறை அடக்கியதான இப்பிரிவின் கீழான அத்தகைய ஊழல் பழக்கத்துக்காக அத்தகைய வேட்பாளருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் கீழ் ஊழல் பழக்கமொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டுகளுக்கானவொரு காலப்பகுதிக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டமையால், தேருநரொருவராகப் பதிவு செய்திருப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் வாக்களிப்பதற்கு அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவராதல் வேண்டுமென்பதுடன், அந்தத் தேதியில் அவர் பாராளுமன்ற

உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அத்தகைய குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து அவரது தேர்தல் வறிதாக்கப்படுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் ஊழல் பழக்கமொன்றிற்கான குற்ற வழக்கொன்று, இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் உறுப்பினரொரு வராகத் தேர்ந்தெடுக்கப்படாத, அத்தகைய தேர்தலின் வேட்பாளர் எவருக்கும் எதிராக -

(அ) அத்தகைய தேர்தலில் அத்தகைய வேட்பாளர் உறுப்பின ரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அவரது தேர்தல் தொடர்பாக அவருக்கெதிராக தேர்தல் மனுவொன்று எக்காலப் பகுதிக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக் கூடுமோ அக்காலப் பகுதிக்குள் தவிர ; அத்துடன்

(ஆ) 95 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய மனுவைச் சமர்ப்பிக்க எந்த ஆள்உரிமையுடையவராயிருந்திருப்பாரோ அந்தஆளொருவரால் தவிர ; அத்துடன்

(இ) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியுடன் தவிர,

தொடரப்படுதலாகாது.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எவையும், இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு வேட்பாளருக்கெதிராக, 81 ஆம் பிரிவின் கீழ், அத்தகைய தேர்தல் தொடர்பான ஊழல் பழக்கமொன்றிற்காகக் குற்ற வழக்குத் தொடரப்படுதலை விலக்குவதாக அல்லது தடைசெய்வதாகக் கருதப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

### சட்டமுரணான பழக்கங்கள்

*குறித்த சில செலவினங்கள் சட்ட முரணான பழக்கமாதல்.*

**83.** (1) தேர்தலொன்றில் -

(அ) எத்தன்மைத்தான எவையேனும் வாகனங்களை அல்லது போக்குவரத்து விலங்குகளை வாடகைக்கமர்த்துவதற்காகவோ அல்லது புகைவண்டிக் கட்டணங்களுக்காகவோ அல்லது வேறு விதமாகவோ தேருநர்களை வாக்கெடுப்புக்கும் வாக்கெடுப்பிலிருந்தும் கொண்டு செல்லும் காரணமாக ; அல்லது

(ஆ) ஏதேனும் முகவரியை, துண்டுப்பிரசுரத்தை அல்லது அறிவித்தலை வெளிக்காட்டி வைத்தலுக்காக ஏதேனும் வீட்டை, காணியை, கட்டடத்தை அல்லது வளவைப் பயன்படுத்தல் காரணமாக அல்லது ஏதேனும் முகவரியை, துண்டுப் பிரசுரத்தை அல்லது அறிவித்தலை வெளிக் காட்டி வைத்தல் காரணமாக தேருநரொருவருக்கு அல்லது

தேருநரொருவருடன்,கொடுப்பனவெதுவும்அல்லது கொடுப்பனவுக்கான ஒப்பந்தமெதுவும் செய்யப்படுதலாகாது.

(2) இச்சட்டத்தைப் பின்பற்றி அனுமதிக்கப்படக்கூடிய அத்தகைய விதிவிலக்குக்கு அமைவாக, தேர்தலொன்றுக்கு முன்னரோ, தேர்தலின் போதோ அல்லது தேர்தலின் பின்னரோ, இப்பிரிவை மீறி அறிந்து கொண்டே ஏதேனும் கொடுப்பனவு அல்லது ஏதேனும் கொடுப்பனவுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டால், அத்தகைய கொடுப்பனவை அல்லது ஒப்பந்தத்தைச் செய்யும் ஆள், சட்டமுரணான பழக்கம் ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் ; அத்துடன், இப்பிரிவை அது மீறுவதாயுள்ளது என அறிந்து கொண்டே அத்தகைய கொடுப்பனவைப் பெறும் அல்லது அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்திற்கு கட்சிக்காரரொருவராயிருக்கும் எவரேனும் ஆளும், சட்டமுரணான பழக்கம் ஒன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்படக்கூடிய எவையேனும் அத்தகைய வெளிப்படையான விதிவிலக்குகளுக்கமைவாக ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் : -

(அ) வாக்கெடுப்புக்கும் வாக்கெடுப்பிலிருந்தும் வாக்காளர்களைக் கொண்டு செல்லும் நோக்கத்திற்காக ; அல்லது

(ஆ) பின்வருவன தவிர்ந்த வேறேதேனும் நோக்கத்திற்காக, அதாவது -

(i) ஏதேனும்சட்டபூர்வமான தொழில் நோக்கத்துக்காக; அல்லது

(ii) ஏதேனும் அலுவலக முறையான தொழில் நோக்கத்துக்காக (அதாவது அவரால், கொண்டிருக்கப்பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் பதவியிலிருந்து, சேவையிலிருந்து அல்லது தொழிலிருந்து வந்துறுவதான அல்லது அதனுடன் தொடர்புபட்டதான அல்லது அதன் இடைநேர் விளைவானதான ஏதேனும் கடமையைப் புரிதல் அல்லது ஏதேனும் பணியை நிறைவேற்றுதல்).

அம்மாவட்டத்தில், தேர்தலொன்றில் வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படும் நேரத்துக்கு ஒரு மணித்தியாலயத்துக்கு முன் தொடங்குவதும் அத்தகைய வாக்கெடுப்பு முடிவடையும் நேரத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்குப் பின்னர் முடிவடைவதுமான காலப்பகுதியின்போது ஆளொருவர் ஏதேனும்வாகனத்தை, கலத்தை அல்லது விலங்கை வாடகைக்கு விடவோ, கடனாகக் கொடுக்கவோ, தொழிலிலீடுபடுத்தவோ, கேள்வில் பெறவோ, இரவலாகப் பெறவோ அல்லது பயன்படுத்தவோ அல்லது வேறு எவரேனும் ஆள் வாடகைக்கு விட, கடனாகக் கொடுக்க, தொழிலிலீடுபடுத்த, கேள்வில் பெற, இரவலாகப் பெற அல்லது பயன்படுத்த உதவி செய்தலோ அல்லது உடந்தையாயிருத்தலோ ஆகாது. இவ்வுட்பிரிவை மீறிச் செயலாற்றும் எவரேனும் ஆள், சட்டமுரணான பழக்கம் ஒன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எவை எவ்விதமிருப்பினும் –

(அ) தேருநரொருவர், விளம்பர முகவர் என்ற முறையில், பணக் கொடுப்பனவுக்காக, துண்டுப்பிரசுரங்களையும், விளம்பரங்களையும் வெளிக்காட்டி வைத்தலைச் சாதாரண வியாபாரப் போக்காகக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய தேருநர் ஒருவருக்குச் செய்யப்படும் கொடுப்பனவொன்று அல்லது அத்தகைய தேருநருடனான ஒப்பந்தம்,அது சாதாரண வியாபாரப் போக்கில் செய்யப்பட்டிருப்பின், இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் ஒரு சட்டமுரணான பழக்கமாகக் கருதப்படுதலாகாது ;

(ஆ) தேர்தலொன்றில், தேருநர்கள், கடலை அல்லது கடலின் ஒரு கிளையை அல்லது அதன் கரத்தை அல்லது ஓர் ஆற்றைக் கடக்காது அவர்களது வதிவிடத்திலிருந்து அவர்களது வாக்கெடுப்பு நிலையங்களை அடைவதற்கு இயலாதுள்ள விடத்து, அத்தகைய தேருநர்களைக் கடல்மூலமாக அவர்களது வாக்கெடுப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்வதற்கு அல்லது அவர்களது வாக்கெடுப்பு நிலையங்களை அடையும் பொருட்டு ஆற்றைக் கடக்க இயலச் செய்வதற்கு வழிவகைகள் ஏற்பாடு செய்யப்படலாம் ;

(இ) இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது ஏதேனும் பிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகைவண்டித் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஆள் ஒருவர், தேர்தலொன்றில் அவரது சொந்தச் செலவில் ஏதேனும் வாக்கெடுப்புக்கு அல்லது வாக்கெடுப்பிலிருந்து கொண்டு செல்லப்படுவது அல்லது தனது சொந்தச் செலவில் வாக்கெடுப்புக்கு அல்லது வாக்கெடுப்பிலிருந்து அவர் செல்லும் நோக்கத்திற்காக அச்சேவையைப் பயன்படுத்தல் இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் சட்ட முரணான ஒரு பழக்கமாகக் கருதப் படுதலாகாது ;

(ஈ) ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான தெரிவத்தாட்சி அலுவலர், அந்த மாவட்டத்தில் தேர்தலொன்றில் வாக்கெடுப்பொன்று நடைபெறும் நாளுக்கு ஏழு நாட்களுக்கு முன்னராக அத்தகைய அலுவலரை அடையும் வண்ணம், எவரேனும் ஆளினால் அல்லது ஆள் சார்பாக, வேட்பாளர் அல்லாத வேறு எவரேனும் ஆளினால் அதற்கெனச் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பத்தின் மீது, அத்தகைய ஆள் ஏதேனும் உடற்குறைபாடு காரணமாக வாக்கெடுப்புக்கும் வாக்கெடுப்பிலிருந்தும் நடந்தோ, அன்றி, இவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவை வாகனத்திலோ செல்வதற்கு இயலாதவராயுள்ளார் என்று

திருப்திப்படுமிடத்து, தெரிவத்தாட்சி அலுவலரானவர், அத்தகைய ஆள் வாக்கெடுப்புக்கும் வாக்கெடுப்பிலிருந்தும் போய்வரும் நோக்கத்திற்காக ஏதேனும் வாகனத்தை, கலத்தை அல்லது விலங்கைப் பயன்படுத்துவதற்கென அவருக்கு எழுத்தில் அதிகாரம் அளிக்கலாம் என்பதுடன், அதற்கிணங்க, அத்தகைய ஆள் அத்தகைய போய்வரும் நோக்கத்திற்காக ஒரு வாகனத்தை, கலத்தை அல்லது விலங்கைப் பயன்படுத்துதல் இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் சட்டமுரணான பழக்கமொன்றாகக் கருதப்படுதலும் ஆகாது.

(5) ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில், நடைபெறும் ஏதேனும் வாக்கெடுப்பில் எவரேனும் பொலிசு அலுவலர், அவரது சொந்த விருப்பிலோ அல்லது எவரேனும் ஆளின் முறைப்பாட்டின் மீது, செய்து முடிக்கும்படி இதன் மூலம் தேவைப்படுத்தப்பட்ட புலனாய்வொன்றின் பின்னரோ ஏதேனும் வாகனம், கலம் அல்லது விலங்கு, (1) ஆம் உட்பிரிவினது அல்லது (3) ஆம் உட்பிரிவினது ஏற்பாடுகளை மீறிப் பயன்படுத்தப்படுவதாகத் திருப்திப்பட்டால், அவ்வலுவலர் அத்தகைய வாகனத்தை, கலத்தை அல்லது விலங்கை நிறுத்திக் கைப்பற்றல் வேண்டும் என்பதுடன், அதைப் பொலிசு நிலையத்துக்கு எடுத்துச் சென்று வாக்கெடுப்பு முடிவடையும் வரை அதனை அங்கு தடுத்து வைத்திருத்தலும் வேண்டும்.

(6) இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் சட்டமுரணான பழக்கமொன்றைப் புரிந்தமைக்காக எவரேனும் ஆளுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், மேல் நீதிமன்றம் அத்தகைய பழக்கம் புரியப்படுவதற்கு அல்லது புரியப்படுவது தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் வாகனம், கலம் அல்லது விலங்கு குடியரசுக்கு இழக்கப்பட்டதாதல் வேண்டும் என வெளிப்படுத்திக் கட்டளையினை ஆக்கலாம்.

*செய்தித்தாள்களிலுள்ள பொய்யான அறிக்கைகள்.*

**84.** (1) ஏதேனும் செய்தித்தாளில்–

(அ) தேர்தலொன்றில் போட்டியிடும் எவரேனும் வேட்பாளர் அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அத்தகைய தேர்தலில் உரைத்தவை அல்லது செய்தவை சம்பந்தமாக அல்லது அவை தொடர்பாக ; அல்லது

(ஆ) அத்தகைய வேட்பாளரால் அல்லது அத்தகைய ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் அத்தகைய தேர்தல் நடாத்தப்பட்ட முறை அல்லது முகாமை செய்யப்பட்ட முறை சம்பந்தமாக அல்லது அவை தொடர்பாக,

பொய்யான கூற்று எதுவும் வெளியிடப்பட்டு, அத்துடன், அத்தகைய கூற்று அத்தகைய தேர்தல் முடிவில் மாற்றத்தை உண்டு பண்ணக்கூடிய இயல்பினதாகவுள்ளவிடத்து, அப்போது, அவ்வாறு வெளியிடப்படும் நேரத்தில், அச்செய்தித்தாளின் உரிமையாளராக, முகாமையாளராக, பதிப்பாசிரியராக, வெளியீட்டாளராக அல்லது அவர்களை ஒத்த அலுவலராக இருந்த அல்லது அத்தகைய பதவிநிலையில் கடமையாற்றியவராகக் கொள்ளப்பட்ட

ஆளொவ்வொருவரும், தமது சம்மதம் அல்லது உட்கை இன்றி அத்தகைய வெளியீடு செய்யப்பட்டதென்றும், அத்துடன், அத்தகைய பதவிநிலையில் அவரது பணிகளின் தன்மையைக் கருத்திற்கொண்டும், எல்லாச் சூழ்நிலைகளிலும் அத்தகைய வெளியீட்டைத் தடுப்பதற்கு அவர் பிரயோகித்திருக்க வேண்டியதான அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென்றும் அத்தகைய ஆள் எண்பித்தாலொழிய, சட்டமுரணான பழக்கமொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் "செய்தித்தாள்" என்னும் பதம், சஞ்சிகை, பருவ வெளியீடு, துண்டு வெளியீடு அல்லது வேறு வெளியீடு எதனையும் உள்ளடக்கும்.

*குறிப்பிட்ட சில தொழிலுக் கமர்த்துகை சட்டமுரணாதல்.*

**85.** (1) ஆளெவரும், பின்வரும் நோக்கம் அல்லது பதவிநிலைகள் தவிர்ந்த எவ்விதமான ஏதேனும் நோக்கத்திற்கென அல்லது பதவி நிலையில் கொடுப்பனவுக்காக அல்லது கொடுப்பனவுக்கான வாக்குறுதிக்காக, தேர்தலொன்றில் ஆதரவு கூட்டும் நோக்கத்துக்காக ஈடுபடுத்தப்படுதலோ அல்லது தொழிலுக்கமர்த்தப்படுதலோ ஆகாது :-

(அ) ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும், வாக்கெடுப்பின் போது அவ்வாக்கெடுப்பு மாவட்டத்துக்கான எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை இல்லாதொழிப்பதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, நியாயமானதொரு எண்ணிக்கையினரான வாக்கெடுப்பு முகவர்கள், அத்துடன், ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திற்கும், 51 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வாக்கெண்ணும் முகவர்களின் எண்ணிக்கைக்கு மேற்படாத வாக்கெண்ணும் முகவர்கள் ;

(ஆ) தேர்தல் மாவட்டத்தின் இடப்பரப்பையும், அத்தகைய மாவட்டத்தின் தேருநர் இடாப்பின் மீது உள்ள தேருநர்களின் எண்ணிக்கையையும் கருத்திற்கொண்டு நியாயமானதொரு எண்ணிக்கையினரான எழுது வினைஞர்களும் தூதுவர்களும்.

(2) இச்சட்டத்தைப் பின்பற்றி அனுமதிக்கப்படக்கூடிய அத்தகைய விதிவிலக்குக்கு அமைவாக, எவரேனும் ஆள், ஒன்றில் தேர்தலொன்றுக்கு முன்னர், தேர்தலின் போது அல்லது தேர்தலொன்றுக்குப் பின்னர் இப்பிரிவை மீறி ஈடுபடுத்தப்பட்டால் அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டால், அவரை ஈடுபடுத்தும் அல்லது தொழிலுக்கமர்த்தும் ஆள் சட்டமுரணான பழக்கம் ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*தேர்தல் வெளியீடுகளை அச்சிடுதல் ஆகியன.*

**86.** தேர்தலொன்றைக் குறிப்பீடு செய்வதும் அத்துடன், அதன் முகப்பக்கத்தில் அதனை அச்சிட்டவரதும் வெளியிட்டவரதும் பெயர்களையும் முகவரிகளையும் கொண்டிராததுமான ஏதேனும் விளம்பரத்தை, துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை அல்லது சுவரொட்டியை அச்சிடும், வெளியிடும், விநியோகிக்கும் அல்லது ஒட்டும் அல்லது அச்சிடச் செய்விக்கும் வெளியிடச் செய்விக்கும் விநியோகிக்கச் செய்விக்கும் அல்லது ஒட்டுவிக்கச் செய்விக்கும், வேட்பாளரொருவர் அல்லது அவரது முகவர் சட்டமுரணான பழக்கம் ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*சட்டமுரணான பழக்கங்களுக்கான குற்றத் தீர்ப்பின் மீதான தண்டனை.*

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

**87.** *(1) சட்டமுரணான பழக்கமொன்றினைப் புரியும் ஆளொவ்வொருவரும் மேல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும் ; அத்துடன், அவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கானவொரு காலப்பகுதிக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டமையால், தேருநரொருவராகப் பதிவு செய்திருப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் வாக்களிப்பதற்கு அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியற்றவராதல் வேண்டுமென்பதுடன், அந்தத் தேதியில் அவர் பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அத்தகைய குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து அவரது தேர்தல் வறிதாக்கப்படுதலும் வேண்டும்.*

*(2) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியின்றி சட்டமுரணான பழக்கமொன்றுக்காகக் குற்ற வழக்கொன்று தொடரப்படுதலாகாது.*

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

*ஏதேனும் தேர்தலில் வெற்றியீட்டாத ஒரு வேட்பாளரின் சட்டமுரணான பழக்கமொன்றிற்கான தண்டனையும் தகுதியீனமும் தொடர்பான சிறப்பான ஏற்பாடுகள்.*

**88.** *(1) இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்று தொடர்பாக, தேர்தலில் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத எவரேனும் வேட்பாளரினால் அல்லது அவர் அறிந்திருக்க அல்லது அவரது சம்மதத்துடன் அல்லது எவரேனும் அவரது முகவரால் சட்டமுரணான பழக்கமொன்று புரியப்பட்டுள்ள விடத்து, அத்தகைய வேட்பாளர், மேல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டும் ;*

*ஆயின், எவ்வாறாயினும்,*

(அ) *தேர்தலில், அத்தகைய வேட்பாளர், ஊழல் பழக்கமெதுவும் அல்லது சட்ட முரணான பழக்கமெதுவும் புரியப்படவில்லையெனவும், குற்ற வழக்கின் விடயப்பொருளாகவுள்ள சட்ட முரணான பழக்கம், அத்தகைய வேட்பாளரின் கட்டளைகளுக்கு முரணாகவும் அவருடைய அனுமதியின்றியும் அல்லது உட்கையின்றியும் புரியப்பட்டது எனவும் ; அத்துடன்*

(ஆ) *தேர்தலில், அத்தகைய வேட்பாளர் ஊழல் பழக்கங்களும் சட்டமுரணான பழக்கங்களும் புரியப்படுதலைத் தடுப்பதற்கான நியாயமான எல்லா வழிவகைகளையும் எடுத்தார் எனவும் ; அத்துடன்*

(இ) *அத்தகைய சட்டமுரணான பழக்கமாக அமையும் தவறு அல்லது தவறுகள் அற்பமானது அல்லது அற்பமானவை எனவும் முக்கியமற்றது அல்லது முக்கியமற்றவை எனவும், மட்டுப்படுத்தப்பட்ட தன்மை கொண்டது அல்லது கொண்டன எனவும் ; அத்துடன்*

(ஈ) *அத்தகைய வேட்பாளரையும் அவரது முகவர்களையும் பொறுத்தவரை மற்றெல்லா வகையிலும், தேர்தலானது எவ்வூழல் பழக்கமோ அல்லது சட்டமுரணான பழக்கமோ அற்றதெனவும்,*

அத்தகைய வேட்பாளர், மேல் நீதிமன்றத்துக்கு எண்பித்தால், அவரது எவரேனும் முகவரால் புரியப்பட்ட, இப்பிரிவின் கீழான அத்தகைய சட்டமுரணான பழக்கத்துக்கு அவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுதலாகாது.

(2) இப்பிரிவின் கீழ், சட்டமுரணான பழக்கமொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும், அவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கானவொரு காலப்பகுதிக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டமையால் தேருநரொருவராகப் பதிவு செய்திருப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் வாக்களிப்பதற்கு அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத்தகுதியற்றவராதல்வேண்டுமென்பதுடன்,அந்தத் தேதியில் அவர் பாராளுமன்ற உறுப்பினராகத்தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து அவரது தேர்தல் வறிதாக்கப்படுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் சட்டமுரணான பழக்கமொன்றிற்கான குற்ற வழக்கொன்று இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத, தேர்தல் வேட்பாளர் எவருக்கும் எதிராக -

(அ) அத்தகைய தேர்தலில், அத்தகைய வேட்பாளர், உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அவரது தேர்தல் தொடர்பாக அவருக்கெதிராக தேர்தல் மனுவொன்று எக்காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக் கூடுமோ அக்காலப் பகுதிக்குள் தவிர ; அத்துடன்

(ஆ) 95 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய மனுவைச் சமர்ப்பிக்க எந்த ஆள் உரித்துடையவராயிருந்திருப்பாரோ அந்த ஆளொருவரால் தவிர ; அத்துடன்

(இ) சட்டத்துறைத் தலைமையதிபதியின் அனுமதியுடன் தவிர,

தொடரப்படுதலாகாது.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எவையும்,இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு வேட்பாளருக்கெதிராக, 87 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய தேர்தல் தொடர்பான சட்டமுரணான பழக்கமொன்றிற்காகக் குற்றவழக்குத் தொடரப்படுதலை விலக்குவதாக அல்லது தடைசெய்வதாக கருதப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

### ஊழல் அல்லது சட்டமுரணான பழக்கத்துக்கான மன்னிப்பு

*குறித்த சில ஊழல் அல்லது சட்டமுரணான பழக்கங்களின் விடயத்தில் வேட்பாளர் தொடர்பில் பழிவிலக்கும் அறிக்கை.*

**89.** இச்சட்டத்தின் கீழான தேர்தல் ஒன்று தொடர்பான தேர்தல் மனுவொன்றின் விளக்கத்தின் மீது, அத்தகைய தேர்தல் தொடர்பாக உபசாரம் செய்தல் அல்லது தகாத செல்வாக்கு அல்லது ஏதேனும் சட்டமுரணான பழக்கம் என்ற தவறுக்கு அவரது முகவர்களினால், அத்தகைய தேர்தலில் வேட்பாளரொருவர் குற்றவாளியாயுள்ளார் என தேர்தல் நீதிபதி அறிக்கை செய்யுமிடத்து, அத்துடன், சட்டத்துறைத் தலைமையதிபதிக்குத் தம் பக்க வழக்கை எடுத்துரைப்பதற்குச் சந்தர்ப்பமொன்றை அளித்த பின்னர், வேட்பாளரானவர் -

(அ) அத்தகைய தேர்தலில் வேட்பாளரினால் ஊழல் பழக்கமெதுவும் அல்லது சட்ட முரணான பழக்கமெதுவும் புரியப்படவில்லை யெனவும், சொல்லப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தவறுகள் அத்தகைய வேட்பாளரின் கட்டளைகளுக்கு முரணாகவும், அனுமதியின்றியும் அல்லது உட்கையின்றியும் புரியப்பட்டன வென்றும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய தேர்தலில், அத்தகைய வேட்பாளர், ஊழல் பழக்கங்களும் சட்டமுரணான பழக்கங்களும் புரியப்படுதலைத் தடுப்பதற்காக நியாயமான எல்லா வழிவகைகளையும் எடுத்தார் எனவும் ; அத்துடன்

(இ) சொல்லப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தவறுகள் அற்பமான, முக்கியமற்ற, மட்டுப்படுத்தப்பட்ட தன்மை கொண்டவை எனவும் ; அத்துடன்

(ஈ) அத்தகைய வேட்பாளரையும் அவரது முகவர்களையும் பொறுத்தவரை மற்றெல்லா விதங்களிலும், தேர்தலானது எவ்வூழல் பழக்கமோ அல்லது சட்டமுரணான பழக்கமோ அற்றதெனவும்,

நீதிமன்றத்துக்கு எண்பித்துள்ளார் என உயர் நீதிமன்றம் மேற்கொண்டும் அறிக்கை செய்துள்ளவிடத்து, அப்போது, அத்தகைய வேட்பாளரின் தேர்தல், அத்தகைய அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தவறுகளின் காரணமாக, வறிதாதலாகா தென்பதுடன், இச்சட்டத்தின் கீழ் வேட்பாளர் எவ்வித தகுதியீனத்துக்கிடப்படுதலும் ஆகாது.

**90**. விண்ணப்பம் செய்யப்படுவதன் மேல், தேர்தல் நீதிபதியொருவருக்கு அல்லது உயர் நீதிமன்ற நீதிபதி யொருவருக்கு, போதுமானதென நீதிபதி காணக்கூடியதான அத்தகைய சான்றுமூலம்– *மாசற்ற செயலுக்கு சட்டமுரணி னின்றும் விதிவிலக்க ளிக்க நீதி மன்றத்துக்குள்ள தத்துவம்.*

(அ) ஏதேனும் தேர்தலில் வேட்பாளர் ஒருவரின் அல்லது அவரது முகவர்களுள் எவரதும் அல்லது வேறு ஆளின் ஏதேனும் செயல் அல்லது செய்யாமையானது, கொடுப்பனவு, ஈடுபடுத்தல் தொழிலுக்கமர்த்துதல் அல்லது ஒப்பந்தமாக அமைகின்றமையின், இச்சட்டத்தை மீறுகின்றமை அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளெதையும் வேறுவகையில் மீறுகின்றமை காரணமாக, இப்பிரிவு இல்லாவிடின், சட்ட முரணான பழக்கமொன்றாகும் என்றும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஏதேனும் செயல் அல்லது செய்யாமை, தற்செயலாக, அல்லது எதிர்பாராத கணிப்புகளால் அல்லது அதையொத்த தன்மையுடைய வேறு சில நியாயமான ஏதுவால் நிகழ்ந்ததென்றும்

அத்துடன் எப்படியிருப்பினும், நன்நோக்கின்மையால் நிகழ்ந்ததல்லவென்றும்,

காட்டப்பட்டு, அத்துடன், வேட்பாளர்களுக்கும், தெரிவத்தாட்சி அலுவலருக்கும், அத்தேர்தல் மாவட்டத்தினுள் இருக்கும் எவரேனும் தேருநருக்கும் தம் பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்ப மொன்றையளித்த பின்னர் சம்பந்தப்பட்ட வேட்பாளரையும், அவரது முகவரையும் அல்லது வேறு ஆளையும் அல்லது அவர்களுள் எவரையேனும் இச்சட்டத்தின் கீழ், சொல்லப்பட்ட செயல் அல்லது செய்யாமைக்கான விளைவுகளுள் எவற்றுக்கேனும் ஆளாக்காது விடுதல் நீதியானதாக அச்சூழ்நிலைகளில் நீதிபதிக்குத் தோன்றுமிடத்து, நீதிபதியானவர், அத்தகைய செயலை அல்லது செய்யாமையை ஒரு சட்ட முரணான பழக்கமாக, கொடுப்பனவாக, தொழிலுக்கமர்த்துகையாக அல்லது வாடகைக் கமர்த்துகையாக ஆக்குகின்றதான இச்சட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து விதி விலக்கொன்றாக அதையே அனுமதித்துக் கட்டளையொன்றை ஆக்கலாமென்பதுடன், அதன்மேல் அத்தகைய வேட்பாளர், முகவர் அல்லது ஆள் சொல்லப்பட்ட செயல் அல்லது செய்யாமையால் இச்சட்டத்தின் கீழான விளைவுகளெவற்றுக்கும் ஆளாக்கப்படுதலும் ஆகாது.

## பாகம் VII

### தேர்தல் மனுக்கள்

வேட்பாளரின் குற்றத்தீர்ப்பளிப்பினால் வறிதாக்கப்படுதல்.

**91**. சனாதிபதிப் பதவிக்கான வேட்பாளரொருவரின் தேர்தல், ஏதேனும் ஊழல் பழக்கத்திற்காக அல்லது சட்டமுரணான பழக்கத்திற்காக அவருக்கெதிராக குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதனால் வறிதானதாக்கப்படும்.

தேர்தல் மனுமீது தேர்தல் வறிதாக்கப்படுதல்.

**92**. (1) ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பான தேர்தல், தேர்தல் மனுவொன்றின் மீது, தேர்தல் நீதிபதி திருப்திப்படும் வகையில் எண்பிக்கப்படக்கூடிய பின்வரும் ஏதேனும் ஏதுக்களுள் எவற்றின் மீதும் வறிதானதென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் ; அதாவது–

(அ) முன்னர் எண்வரிசைப்படுத்திக் கூறப்பட்டவற்றை ஒத்திருப்பினும் சரி அல்லாவிடினும்சரி, பொதுவான இலஞ்சத்தின், பொதுவான உபசாரம் செய்தலின் அல்லது பொதுவான அச்சுறுத்தலின் அல்லது வேறு பிறழ்நடத்தை அல்லது வேறு சந்தர்ப்பங்கள் காரணமாக, தேருநர்களுள் ஒரு பிரிவினர் அவர்கள் விரும்பிய அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு வாக்களிப்பதிலிருந்து தடுக்கப்பட்டனர் என்பதுடன் அதனால் தேர்தலின் முடிபு கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது ;

(ஆ) தேர்தல் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாமை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் காணப்படும் கோட்பாடுகளுக்கு இணங்க, தேர்தல் நடாத்தப்படவில்லை எனவும் அத்தகைய இணங்கியொழுகாமை தேர்தல் முடிபை

கணிசமாகப் பாதித்ததென்றும் தோன்றுமாயின், அந்த இணங்கியொழுகாமை.

(2) உறுப்பினரொருவரான வேட்பாளரொருவரின் தேர்தல், தேர்தல் மனுவொன்றின் மீது, தேர்தல் நீதிபதி திருப்திப்படும்வகையில் எண்பிக்கக்கூடிய பின்வரும் எவையேனும் ஏதுக்கள்மீது வறிதானதென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது -

(அ) வேட்பாளரினால் அல்லது அவர் அறிந்திருக்கத்தக்கதாக அல்லது அவரின் சம்மதத்துடன் அல்லது வேட்பாளரின் எவரேனும் முகவரினால், தேர்தல் தொடர்பாக ஊழல் பழக்கமொன்று அல்லது சட்டமுரணான பழக்கமொன்று புரியப்பட்டது என்பது ;

(ஆ) ஆள் ஒருவரை, அத்தகைய ஆள் ஆதரவு தேடுபவராக அல்லது முகவராக அல்லது அவர் சார்பாகப் பேசுவதற்காக ஈடுபடுத்தப்படுவதற்கு முன்பான ஏழு ஆண்டுகளுக்குள் ஊழல் பழக்கமொன்றுக்கு, சனாதிபதித் தேர்தல் தொடர்பிலான சட்டத்தின் கீழ் அல்லது மக்கள் தீர்ப்புக்கள் தொடர்பிலான சட்டத்தின் கீழ் அல்லது 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் கீழ் அல்லது இச்சட்டத்தின் கீழ், தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றினால் அல்லது தேர்தல் நீதிபதியொருவரது அறிக்கையினால் குற்றவாளியாகக் காணப்பட்டவர் என அறிந்திருக்கத்தக்கதாக, ஆதரவு தேடுபவராக அல்லது முகவராக அல்லது அவர் சார்பாகப் பேசுவதற்காக வேட்பாளர் தாமே ஈடுபடுத்தினார் என்பது ;

(இ) ஆள் ஒருவரை, அத்தகைய ஆள், அரசியலமைப்பின் 81 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றினால் எந்த ஆளொருவர் மீது குடியியல் தகுதியீனம் விதிக்கப்பட்டும் அத்துடன், அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய குடியியல் தகுதியீனத்தின் காலப்பகுதி முடிவுறாதிருந்ததோ, அந்த ஆளொருவரென அறிந்திருக்கத்தக்கதாக, ஆதரவு தேடுபவராக அல்லது முகவராக அல்லது அவர் சார்பாகப் பேசுவதற்காக வேட்பாளர் தாமே ஈடுபடுத்தினார் என்பது ;

(ஈ) வேட்பாளரானவர், அவரது தேர்தலின் போது உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையற்றிருந்தார் என்பது.

*தேர்தல் மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றம் விளங்குதல்.*

**93**. ஒவ்வொரு தேர்தல் மனுவும், அரசியலமைப்பின் 144 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விளங்கப்படுதல் வேண்டும்.

*தேர்தல் மனுவொன்று விளங்கப்படும் இடம்.*

**94**. தேர்தல் மனுவொன்று விளங்கப்படும் இடமானது, அம்மனு தொடர்புடைய தேர்தல் மாவட்டத்தில் அல்லது நடைமுறையில் சாத்தியமாகக்கூடிய அளவு சமீபமாக ஆதல் வேண்டும்.

*எவர் மனுவினைச் சமர்ப்பிக்கலாம் என்பது.*

**95**. தேர்தல் மனுவொன்றானது, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குப் பின்வரும் ஆட்களுள் ஒருவரால் அல்லது பலரால் சமர்ப்பிக்கப்படலாம் ; அதாவது -

(அ) அத்தகைய தேர்தலில் தெரிந்தனுப்பப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரிமையொன்றைக் கொண்டிருந் திருந்ததாகக் கோரும் ஆள் எவரும் ;

(ஆ) அத்தகைய தேர்தலில் தாம் வேட்பாளராகவிருந்ததாக சார்த்துகின்ற ஆள் எவரும்.

*கோரப்படக்கூடிய நிவாரணம்.*

**96**. மனுதாரர் உரித்துக்கொண்டிருக்கக்கூடியதான பின்வரும் நிவாரணங்கள் எல்லாமும் அல்லது அவற்றுள் எவையும் தேர்தல் மனுவொன்றில் கோரப்படலாம். அதாவது-

(அ) ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பான தேர்தல் வறிதானதெனும் வெளிப்படுத்துகையொன்று ;

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட எவரேனும் ஆளின் தெரிந்தனுப்புகை தகாததெனும் வெளிப்படுத்துகையொன்று ;

(இ) வேட்பாளரொருவர் தகுந்தவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளா ரென்றும், தெரிந்தனுப்பப்பட்டிருக்க வேண்டுமென்றும் கூறும் வெளிப்படுத்துகையொன்று ;

*மனுவொன்றிற்கான கட்சிக்காரர்கள்.*

**97**. (1) மனுதாரர், தமது தேர்தல் மனுவுக்கு :-

(அ) மனுவானது, தெரிந்தனுப்பப்பட்ட வேட்பாளர்கள் எல்லோரதும் அல்லது எவரதும் தேர்தல் வறிதாகியுள்ளது அல்லது தகாதது எனக் கோருவதுடன், தாம் அல்லது வேறு வேட்பாளர் தக்கவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்ற வெளிப்படுத்துகை யொன்றுக்காக மேலும் கோருமிடத்து, மனுதாரர் தவிர்ந்த போட்டியிடும் எல்லா வேட்பாளர்களையும், அத்துடன் அவ்வாறான வெளிப்படுத்துகையெதுவும் கோரப்படாதுள்ள விடத்துத் தெரிந்தனுப்பப்பட்ட எல்லா வேட்பாளர்களையும் ; அத்துடன்

(ஆ) எந்த வேட்பாளர் அல்லது ஆளுக்கு எதிராக ஊழல் பழக்கங்கள் அல்லது சட்ட முரணான பழக்கங்கள் பற்றிய சார்த்துகைகள் மனுவில் செய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறெவரேனும் வேட்பா ளரையும் அல்லது ஆளையும்,

எதிர்வாதிகளாகச் சேர்த்தல் வேண்டும்.

(2) தேர்தல்மனுவொன்றுக்குஏலவேஎதிர்வாதியொருவராயிராதஎவரேனும் வேட்பாளர், அவரால், அதன் சார்பில் உயர் நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் விண்ணபத்தின் மீது, அத்தகைய மனுவுக்கு எதிர்வாதியொருவராகச் சேர்த்துக்கொள்ளப்பட உரித்துடையவராதல் வேண்டும் ;

ஆயின், வேட்பாளரெவரும் தேர்தல் நீதிபதி தீர்மானிக் கக்கூடியவாறான அத்தகைய செலவுத்தொகைக்கான பிணைப் பொறுப்பைக் கொடுத்திருந்தா லொழிய, இப்பிரிவின் மேற்போந்த ஏற்பாடுகளின் கீழ், அத்தகைய மனுவுக்கு எதிர்வாதியொருவராகத் தமது சொந்தப் பிரேரணையில் அவர் சேர்த்துக்கொள்ளப்பட உரித்துடையவராதல் ஆகாது.

**98**. தேர்தல் மனுவொன்று - மனுவின் பொருளடக்கம்.

(அ) இச்சட்டத்தின் 95 ஆம் பிரிவின் கீழ், மனுச் செய்வதற்கு மனுதாரருக்குரிய உரிமையை எடுத்துக் கூறுதல் வேண்டும் ;

(ஆ) தேர்தல் நடாத்தப்பட்டமையையும் அதன் முடிபையும் எடுத்துக் கூறுதல் வேண்டும் ;

(இ) மனுதாரர் ஆதாரமாக நம்பியிருக்கும் முக்கிய நிகழ்வுகளின் சுருக்கக்கூற்றொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) மனுதாரர் சார்த்தும் ஏதேனும் ஊழல் அல்லது சட்டமுரணான பழக்கத்தின் முழு விபரங்களையும், அத்தகைய ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் அவர்களால் புரியப்பட்டதாகச் சார்த்தப்படும் கட்சிக்காரர்களின் பெயர்களையும், அத்தகைய பழக்கம் புரியப்பட்ட தேதியையும் இடத்தையும் இயன்றளவு முழுமையாகக் கொண்ட ஒரு கூற்று உட்பட, எடுத்துக் கூறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கத்தையும் அத்தகைய பழக்கம் புரியப்பட்ட தேதியையும் இடத்தையும் ஆதாரப்படுத்துவதான சத்தியக் கடதாசியொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும் ;

(உ) உதாரணமாக, ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பான தேர்தல் வறிதானதென வெளிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதும், அத்துடன் எல்லா மனுதாரர்களாலும் ஒப்பமிடப்பட்டிருக்க வேண்டியதுமான இறைஞ்சுதல் ஒன்றைக்கொண்டு முடிவடைதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளெவையும் மனுவில் சான்று எடுத்துக்கூறப்படுதலைத் தேவைப்படுத்துவதாகக் கருதப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

*தேர்தல் நீதிபதியொருவர் முன்னரான நடவடிக்கை முறை பற்றிய சிறப்பான ஏற்பாடுகள்.*

**99.** (1) தேர்தல் நீதிபதியானவர், செலவுத்தொகைகள் பற்றிய அல்லது வேறு வகையில் பொருத்தமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளின் மீது, தேர்தல் மனுவொன்றில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் பற்றிய விபரங்கள், மனுவின் நேரிய அல்லது செவ்வையான விளக்கத்தை உறுதிப்படுத்துவதன் பொருட்டு, அவரின் அபிப்பிராயப்படி அவசியமாகக்கூடியதான அத்தகைய விதத்தில் திருத்தப்படுவதற்கு அல்லது விரிவாக்கப்படுவதற்கு அனுமதிக்கலாம் ; ஆனால், எவ்வாறாயினும், அத்தகைய திருத்தம் அல்லது விரிவாக்கம், முன்னர் மனுவில் சார்த்தப்படாத ஏதேனும் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் பற்றிய விபரங்களை அறிமுகம் செய்விப்பதாய மையுமெனில், அதை அனுமதித்தலாகாது.

(2) ஒவ்வொரு தேர்தல் மனுவும், இயன்றளவு விரைவாக விளங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மனு சமர்ப்பிக்கப்பட்ட தேதியின் பின்னர் ஆறு மாத காலப்பகுதிக்குள் அத்தகைய மனுவின் விளக்கத்தை முடிப்பதற்கு எல்லாப் பிரயத்தனங்களும் எடுக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய மனுவின் விளக்கத்தின் முடிவுத் தேதியின் பின்னர் முறையற்ற தாமதமின்றி அத்தகைய மனுவை முடிவு செய்து, தேர்தல் நீதிபதி தமது கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

*தேர்தல் நீதிபதியின் தீர்மானம்.*

**100.** தேர்தல் மனுவொன்றின் விளக்க முடிவில், தேர்தல் நீதிபதி, எந்த உறுப்பினரது தெரிந்தனுப்புகை அல்லது தேர்தல் பற்றி முறைப்பாடு செய்யப்பட்டதோ அந்த உறுப்பினர் அல்லது வேறெவரேனும் ஆள், தகுந்த முறையில் தெரிந்தனுப்பப்பட்டாரா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டாரா என்பதையும் அத்துடன் எந்த ஆள் தகுந்த முறையில் தெரிந்தனுப்பப்பட்டார் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதையும், அல்லது தேர்தல் வறிதானதா என்றும் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், எழுத்திலான அத்தகைய தீர்மானத்தை அத்தாட்சிப்படுத்துதலும் வேண்டும்.

அத்தகைய அத்தாட்சிப் பத்திரமானது, இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கையாளப்படுவதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதிவாளரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

*ஊழல் அல்லது சட்ட முரணான பழக்கம் பற்றி நீதிபதியின் அறிக்கை.*

101. தேர்தல் மனுவொன்றின் விளக்க முடிவில்-

(அ) தேர்தலில் எவரேனும் வேட்பாளரால் அல்லது அவர் அறிந்திருக்கவும் சம்மதத்துடனும் அல்லது அவரது முகவரால் ஏதேனும் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் புரியப்பட்டது என எண்பிக்கப்பட்டது அல்லது எண்பிக்கப்படவில்லை என்பதையும், அப்படி ஏதுமிருப்பின் அத்தகைய ஊழல் பழக்கத்தின் அல்லது சட்டமுரணான பழக்கத்தின் தன்மையையும் ; அத்துடன்

(ஆ) விளக்கத்தில், ஏதேனும் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கத்துக்குக் குற்றவாளியென எண்பிக்கப்பட்ட ஆட்கள்

சான்றிதழின் பயன்பாடு.

எவரேனுமிருப்பின், அவர்களெல் லோரதும் பெயர்களையும் விவரணங்களையும்,

தருவதான ஓர் அறிக்கையையும் தேர்தல் நீதிபதி ஆக்குதல் வேண்டும் ;

ஆயின், எவ்வாறாயினும், தேர்தல் மனுவொன்றுக்குக் கட்சிக்கார ரொருவராகவில்லாத அல்லது வேட்பாளரொருவராயில்லாத ஆளெவரும் இப்பிரிவின் கீழ் ஒரு தேர்தல் நீதிபதியினால் அறிக்கை செய்யப்படுமுன்னர், தேர்தல் நீதிபதியானவர், அத்தகைய ஆளுக்கு, தம் பக்க வழக்கை எடுத்துரைப்பதற்கானதும் தமக்கெதிராக ஏன் அப்படி அறிக்கை செய்யப்படக் கூடாதென சான்றளிப்பதற்கானதும், சான்றை அழைப்பதற்கானதும் ஆன சந்தர்ப்பமொன்றை அளித்தல் வேண்டும்.

அத்தகைய அறிக்கையானது,இதனகத்துப்பின்னர்ஏற்பாடுசெய்யப்பட்டவாறு கையாளப்படுவதற்கான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதிவாளரின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

100 ஆம் பிரிவின் கீழான தீர்மானத்துக்கும் தேர்தல் நீதிபதியின் வேறேதேனும் முடிபுக்கும் அல்லது கட்டளைக்கும் எதிரான சட்டப் பிரச்சினை மீதான மேன் முறையீடு.

102. (1) உயர் நீதிமன்றத்துக்கு –

(அ) 100 ஆம் பிரிவின்கீழ் தேர்தல் நீதிபதியொருவரின் தீர்மானத்துக் கெதிராக ; அல்லது

(ஆ) தேர்தல் நீதிபதியொருவரின் வேறேதேனும் முடிவுக்கு அல்லது கட்டளைக்கு எதிராக

மேன்முறையீடொன்று அமைவதாதல் வேண்டும்.

(2) அத்தகைய மேன்முறையீடானது எத்தீர்மானம் அல்லது முடிபுக்கு எதிராகத் தொடுக்கப்படுகின்றதோ அத்தீர்மானத்துக்கு அல்லது முடிபுக்கு அடுத்துப் பின்வரும் ஒரு மாத காலப்பகுதி முடிவடையுமுன்னராக தேர்தல் மனுவில் ஒன்றில் மனுதாரராய் இருப்பவரால் அல்லது எதிர்வாதியாய் இருப்பவரால் அம்மேன்முறையீடு தொடுக்கப்படலாம்.

(3) மனுவொன்றின் பிரதியுடன் கூடிய மேன்முறையீட்டு மனுவொன்றைக் கோப்பிட்டமைக்கான அறிவித்தலானது, அது கோப்பிடப்பட்டதிலிருந்து பத்து நாட்களுக்குள், மேன்முறையீட்டாளரால், தேர்தல் மனுவுக்கான மறுகட்சிக்கு அல்லது மறுகட்சிகள் ஒவ்வொன்றுக்கும், அத்துடன் சட்டத்துறைத் தலைமை யதிபதிக்கும் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கட்சியொன்றின் மீது அவ்வாறு சேர்ப்பித்தலானது, அறிவித்தலும், தேர்தல் மனுவின் பிரதியும் சேர்ப்பிக்கப்படுவதற்கென இச்சட்டத்துக்கான நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள பாராளுமன்றத் தேர்தல் மனு விதிகளில் விதித்துரைக்கப் பட்டுள்ள ஏதேனும் விதத்தில் நிறைவேற்றப்படலாம்.

(4) இப்பிரிவின் கீழ் தொடுக்கப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீடும், முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்புடைமை நோக்கங்களுக்காக, பத்தாயிரம் ரூபா பெறுமதி கொண்ட குடியியல் வழக்கொன்றிலான ஒரு மேன்முறையீடு என்னுமாப்போல் கருதப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழான மேன்முறையீடொவ்வொன்றும், அரசியலமைப்பின் 130 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி உயர் நீதிமன்றத்தால் கேட்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நீதிமன்றத்தின் வேறு கருமங்களுக்கு மேலாக சாத்தியமாகக் கூடிய அளவுக்கு அதற்கு முந்துரிமையளிக்கப்படுதலும் வேண்டும். நீதிமன்றமானது, ஒவ்வொரு மேன்முறையீட்டையும் கேட்பதும் விளங்கித் தீர்ப்பதும் தொடர்பாக அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய எல்லாப் பணிப்புகளையும் வழங்கலாம்.

(6) சட்டத்துறைதலைமையதிபதியானவர்,இப்பிரிவின்கீழான ஏதேனும் மேன்முறையீட்டில் தோன்றுவதற்கு அல்லது பிரதிநிதிப்படுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

மேன்முறையீட்டின் செலவுத் தொகைக்கும் பிறவற்றிற்குமாக மேன்முறை யீட்டாளர் பிணைப்பொறுப்பு கொடுத்தல்.

103. (1) மேன்முறையீட்டு மனுவொன்று கோப்பிடப்படும் நேரத்தில் அல்லது அதன்பின்னர் மூன்று நாட்களுக்குள்ளாக, மேன்முறையீட்டாளரால் செலுத்தப்படக்கூடியதாக வரக்கூடிய எல்லாச் செலவுத் தொகைகளுக்கும், விதிப்பனவுகளுக்கும், செலவுகளுக்கும் ஆன பிணைப்பொறுப்பு மேன்முறையீட்டாளரின் சார்பாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) பிணைப்பொறுப்பானது பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத ஒரு தொகையாக இருத்தல் வேண்டும். இப்பிரிவில் தேவைப்படுத்தப்படும் பிணைப்பொறுப்பானது, பண வைப்பீடொன்றினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பிணைப் பொறுப்பானது மேன்முறையீட்டாளரால் கொடுக்கப்படாவிடின், மேன்முறையீட்டில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகா தென்பதுடன், எதிர்வாதியானவர், மேன் முறையீட்டைத் தள்ளுபடி செய்யப் பணிக்கும் கட்டளையொன்றுக்கும் எதிர்வாதியின் செலவுத்தொகையைச் செலுத்துவதற்கும் என உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பத்தைக் கேட்பதற்கும் முடிபு செய்வதற்குமான செலவுத்தொகை உயர் நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்ட வாறு செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கட்டளை இல்லாதவிடத்து, அது மேன்முறையீட்டின் பொதுச் செலவுத் தொகையின் பாகமாக அமைதலும் வேண்டும்.

(4) மேன்முறையீட்டாளரால் செலுத்தப்படற்பாலனவான செலவுத் தொகைகளின், இறுப்பனவுகளின், செலவுகளின், செலுத்துகைக்கான பிணைப்பொறுப்பெனும் வகையாகச் செய்யப்பட்ட பண வைப்பீடு, உயர் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுப்பனவு மூலம் செலுத்தப்படுதல் வேண்டும்; அது பிரதம நீதியரசரிடம் உரித்தாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவரால் எந்நோக்கங்களுக்காக இப்பிரிவினால் பிணைப் பொறுப்பு தேவைப்படுத்தப்பட்டதோ அந்நோக்கங்களுக்காக காலத்துக்குக் காலம் மீளப்பெறப்படுதலும் வேண்டும்.

(5) உயர்நீதிமன்றப் பதிவாளர், காலத்துக்குக்காலம் பணத்தொகையும், அப்பணத்தொகை தொடர்புடையதான மேன்முறையீடும் பதிந்து வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகமொன்றை சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிகளும் பார்வையிடுவதற்கென வைத்திருத்தல் வேண்டும்.

(6) அவ்வாறு வைப்பிலிடப்பட்ட பணம், மேன் முறையீட்டாளரால் செலுத்தப்படற்பாலனவான செலவுத் தொகைகள், இறுப்பனவுகள், செலவுகளின் கொடுப்பனவை நிச்சயப்படுவதற்கு மேற்கொண்டு தேவைப்படாதுவிடினும், தேவைப்படாத போதும் பிரதம நீதியரசரின் கட்டளைப்படி திருப்பிக்கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது நீதி எவ்வகையில் தேவைப்படுத்துமோ அவ்வாறு கையுதிர்க்கப்படுதல் வேண்டும்.

(7) அத்தகைய கட்டளையானது, விண்ணப்பிப்பதற்கான முன்னம் பற்றிய அத்தகைய அறிவித்தலின் பின்னரும், அத்துடன் எல்லா நீதியான கோரிக்கைகளும் திருப்திப்படுத்தப்பட்டுள்ளன அல்லது பிரதம நீதியரசரால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேறு வகையாக போதுமானவாறு அவைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனும் எண்பிப்பின் பின்னரும் ஆக்கப்படலாம்.

(8) அத்தகைய கட்டளையானது, அது எந்தக் கட்சிக்காரரின் பெயரில் வைப்பிலிடப்பட்டுள்ளதோ அந்தக் கட்சிக்காரருக்கு அல்லது அதைப் பெறுவதற்கு உரித்துடைய எவரேனும் ஆளுக்குக் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டுமெனப் பணிக்கலாம்.

*மேன்முறையீட்டில் உயர் நீதிமன்றத்தின் தத்துவம்.*

104. (1) உயர் நீதிமன்றமானது, 102 ஆம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டின் மேல், மேன்முறையீடு தொடர்புடையதான தேர்தல் நீதிபதியின் தீர்மானத்தை அல்லது முடிபை உறுதிப்படுத்தலாம், வேறுபடுத்தலாம் அல்லது எதிர்மாறாக்கலாம்.

(2) தேர்தல் நீதிபதியின் 100 ஆம் பிரிவின் கீழான தீர்மானத்தை உயர் நீதிமன்றம் மேன்முறையீட்டில் எதிர்மாறாக்குமிடத்து, அந்நீதிமன்றமானது, தேர்தல் மனுவில் எவ்வுறுப்பினரின் தெரிந்தனுப்புகை அல்லது தேர்தல் பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அவ்வுறுப்பினர் முறையாகத் தெரிந்தனுப்பப்பட்டாரா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டாரா அல்லது தேர்தல் வறிதானதா என்பதை முடிவு செய்தல் வேண்டுமென்பதுடன் அந்நீதிமன்றத்தினால் அத்தகைய முடிவுபற்றி ஒரு சான்றிதழ் வழங்கப்படுதலும் வேண்டும்.

(3) நூற்றியிரண்டாம் பிரிவின் கீழான ஏதேனும் மேன்முறையீட்டின் விடயத்தில், உயர் நீதிமன்றமானது, மேன்முறையீடு தொடர்புடையதான தேர்தல் மனு புதிதாக முழுமையாக அல்லது அந்நீதிமன்றம் குறித்துரைக்கும் ஏதேனும் விடயம் தொடர்பில் விளங்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாம்; அத்துடன், அந்நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுவதான அது தொடர்பான அத்தகைய பணிப்புகளை வழங்கலாம்.

(4) உயர்நீதிமன்றமானது, மேன்முறையீட்டின் செலவுத்தொகைக்காகவும் தேர்தல் மனுவைச் சமர்ப்பித்தலுக்காகவும் அதன்மீது அதையடுத்து வழக்கு

நடவடிக்கைகளுக்காகவும் ஆன செலவுத் தொகைக்காகவும் அதன் இடைநேர் விளைவானதான செலவுத்தொகைக்காகவும் அது நீதியெனக் கருதும் ஏதேனும் கட்டளையை ஆக்கலாமென்பதுடன், அத்தகைய கட்டளையால், செலவுத்தொகைக்காக தேர்தல் நீதிபதியால் ஆக்கப்பட்ட கட்டளையெதனையும் எதிர்மாறாக்கலாம் அல்லது வேறுபடுத்தலாம் ; அத்துடன் செலவுத் தொகை அளிப்பு, வரிவிதிப்பு, அறவீடு பற்றி இச்சட்டத்துக்கான நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள பாராளுமன்றத் தேர்தல் மனு விதிகளின் ஏற்பாடுகள் உயர்நீதி மன்றத்தினால் அளிப்புச் செய்யப்படும் அத்தகைய செலவுத் தொகைகள் தொடர்பாகவும் அவற்றின் அறவீடு தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

சான்றுப்பத்திரமும் அறிக்கையும் சனாதிபதிக்கு அனுப்பப்படுதல்.

**105**. (1) நூறாம் பிரிவின் கீழான தேர்தல் நீதிபதியின் தீர்மானத்துக்கெதிராக அதற்கென இதனகத்து முன்னர் குறித்துரைக்கப்பட்ட காலத்துள் மேன்முறையீடெதுவும் தொடுக்கப்படாதுள்ளவிடத்து, தேர்தல் நீதிபதியானவர், அப்பிரிவின் கீழ் அத்தகைய நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழை, 101 ஆம் பிரிவின் கீழ் அவரால் செய்யப்பட்ட அறிக்கையுடன் சேர்த்து சனாதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(2) நூற்றிரண்டாம் பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, தேர்தல் நீதிபதி, தேர்தல் நீதிபதியால் 100 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழை 101 ஆம் பிரிவின் கீழ் அவரால் செய்யப்பட்ட அறிக்கையுடன் சேர்த்து உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) தேர்தல் நீதிபதியின் தீர்மானமானது மேன்முறையீட்டில் உயர் நீதிமன்றத்தால் எதிர்மாறாக்கப்பட்டுள்ளவிடத்து, உயர் நீதிமன்றமானது, 104 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அந்நீதிமன்ற முடிபின் சான்றிதழை –

(அ) 101 ஆம் பிரிவின்கீழ் தேர்தல் நீதிபதியால் செய்யப்பட்ட அறிக்கையுடன் சேர்த்து (அது மேன்முறையீட்டில் எடுக்கப்பட்ட முடிவால் பாதிக்கப்படவில்லையென உயர்நீதிமன்றம் அபிப்பிராயப்படின்) ; அல்லது

(ஆ) உயர்நீதிமன்றம் அவசியமானதெனக் கருதினால், 101 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உயர் நீதிமன்றத்தால் செய்யப்பட்ட, அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்கள் தொடர்பான ஓர் அறிக்கை யுடன் சேர்த்து,

சனாதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

சான்றிதழின் பயன்பாடு.

**106**. நூற்றைந்தாம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு, தேர்தல் நீதிபதியொருவரது தீர்மானம் பற்றிய சான்றிதழ் அல்லது உயர் நீதிமன்றத்தின் முடிவு பற்றிய சான்றிதழ் சனாதிபதிக்கு அனுப்பப்பட்டதன் மீது, விடயத்துக்கேற்றாற் போல, அத்தீர்மானம் அல்லது முடிபு பயனுறுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க-

(அ) தெரிந்தனுப்புகை அல்லது தேர்தல் உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும் ; அல்லது

(ஆ) தெரிந்தனுப்புகை அல்லது தேர்தல், விடயத்துக் கேற்றாற் போல, அத்தகைய தீர்மானத்துக்கு அல்லது முடிபுக்கு இணங்க மாற்றப்படுதலும் வேண்டும் ; அல்லது

(இ) தீர்மானம் அல்லது முடிபு, ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பான தேர்தல் வறிதானதென வெளிப்படுத்தப்பட வேண்டிய பயனைக் கொண்டதாயுள்ளவிடத்து, சனாதிபதி, அத்தகைய சான்றிதழைப் பெற்றுக்கொண்ட ஒரு மாதத்துக் குள்ளாக, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அந்தத் தேர்தல் மாவட்டம் தொடர்பாக தேர்தலொன்றை நடாத்தத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

**107**. (1) (அ) சனாதிபதியானவர், 105 ஆம் பிரிவின் கீழ் தேர்தல் நீதிபதியின் அல்லது உயர் நீதிமன்றத்தின் அறிக்கை அவருக்கு அனுப்பப்பட்டு பெற்றுக்கொண்டதன் மேல், அவ்வறிக்கையின் பிரதியொன்றை கசெற்றில் உடனடியாக வெளியிடச் செய்வித்தல் வேண்டும். *அறிக்கையின் பயன்பாடு.*

(ஆ) (i) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை, எவரேனும் ஆளால் ஓர் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் புரியப்பட்டுள்ளதென்னும் பயனைக் கொண்டதாயுள்ளவிடத்து, அந்த ஆள், சொல்லப்பட்ட அறிக்கையின் தேதியன்று அப்பழக்கத்துக்கும் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டாற் போன்று அதே தகைமையீனங்களுக்குள்ளாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், தேர்தல் மனுவின் விடயப்பொருளான தேர்தல் தொடர்பான ஏதேனும் நியமனப்பத்திரத்திலிருந்து அத்தகைய ஆளின் பெயரை தெரிவத்தாட்சி அலுவலர் அகற்றிவிடுதலும் வேண்டும்.

(ii) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை, அத்தகைய ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் தேர்தலொன்றில் வேட்பாளராயிருக்கும் ஆளொருவர் அறிந்திருக்கவும் அவரது சம்மதத்துடனும் அல்லது அவரது முகவரால் புரியப்பட்டது என்னும் பயனைக் கொண்டதா யுள்ளவிடத்து, அந்த ஆள் மேற்சொல்லப்பட்டவாறு அதே தகைமையீனங் களுக்குள்ளாதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் கசெற்றில் வெளியிடப்படுகின்ற அத்தகைய ஒவ்வோர் அறிக்கையையும் உடனடியாகப் பரிசீலனை செய்தலும் உடனடியாக தேருநர் இடாப்பிலிருந்து, தேர்தலொன்றில் வாக்களிக்கத் தகைமையற்ற வரானவரென அவ்வறிக்கையில் காணப்படும் ஆட்களொவ்வொருவரது பெயரையும் நீக்கி விடுதலும் ஒவ்வொரு பதிவு அலுவலரதும் கடமையாதல் வேண்டும்.

**108**. (1) ஒவ்வொரு தேர்தல் மனுவும், அத்தேர்தல் முடிபு கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நாற்பத்திரெண்டு நாட்களுக்குள்ளாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் : *சமர்ப்பித்தற்கான காலம்.* [*பி.5, 2023 இன் 21*]

ஆயின், எவ்வுறுப்பினரின் தேர்தல் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளதோ அவ்வுறுப்பினரால் அல்லது அவ்வுறுப்பினரின் முகவரால் அல்லது அவ்வுறுப்பினரின் சட்ட உறவினரால் அத்தகைய ஊழல் பழக்கத்தை அல்லது சட்டமுரணான பழக்கத்தைப் பின்பற்றி அல்லது அதனை மேற்கொண்டு, மேற்சொல்லப்பட்ட தேதியிலிருந்து பணக்கொடுப்பனவொன்று செய்யப்பட்டது அல்லது வேறு செயல் ஆற்றப்பட்டது எனக் குறிப்பாகச் சார்த்துவதும் ஓர் ஊழல் பழக்கம் அல்லது சட்ட முரணான பழக்கம் புரியப்பட்டுள்ளது என்னும் ஏதுவின் மீது தெரிந்தனுப்புகையை அல்லது தேர்தலைக் கேள்விக்குட் படுத்துவதும் ஆன தேர்தல் மனுவொன்று அத்தகைய ஊழல் பழக்கத்துடன் அல்லது சட்டமுரணான பழக்கத்துடன் தொடர்புபடும் அந்த அளவுக்கு, அத்தகைய கொடுப்பனவு அல்லது செயல் நிகழ்ந்த தேதிக்கு இருபத்தெட்டு நாட்களுக்குள் எந்நேரத்திலும் சமர்ப்பிக்கப்படலாம்.

(2) ஓர் ஊழல் பழக்கம் அல்லது சட்டமுரணான பழக்கம் என்னும் சார்த்துகையொன்றின் மீது தெரிந்தனுப்புகையை அல்லது தேர்தலை கேள்விக்குட்படுத்தும் நோக்கத்துக்கென உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் மனுவானது, தேர்தல் நீதிபதியின் அனுமதியுடன், எக்காலத்துள் அந்த ஏதுவின் மீது தெரிந்தனுப்புகையை அல்லது தேர்தலைக் கேள்விக்குட்படுத்தும் தேர்தல் மனுவொன்று சமர்ப்பிக்கப்படுதல் கூடுமோ அக்காலத்தினுள் திருத்தப்படலாம்.

*வாக்கு வெளிப் படுத்துகை தடை செய்யப்படுதல்.*

**109.** ஏதேனும் தேர்தலில் வாக்களித்துள்ள தேருநர் எவரும், தேர்தலைக் கேள்விக்குட்படுத்தும் ஏதேனும் நடவடிக்கையில் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் வாக்களித்துள்ளார் என்று கூறுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

*பரிசீலணை யொன்றின் போது வாக்குகளை அடித்து நீக்குதல்.*

**110.** (1) தேர்தல் மனுவொன்றின் விளக்கத்திலான பரிசீலனை யொன்றின் மீது பின்வரும் வாக்குகள் மட்டும் அடித்து நீக்கப்படுதல் வேண்டும். அவையாவன :-

(அ) வாக்கு எந்த வாக்கெடுப்பு நிலையத்தில் பதியப்பட்டுள்ளதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்துக்கென ஒதுக்கப்பட்ட தேருநர் இடாப்பிலிருக்காத பெயரைக் கொண்ட எவரேனும் ஆளின் வாக்கு;

(ஆ) இலஞ்சம், உபசாரஞ் செய்தல் அல்லது தகாத செல்வாக்கு என்பவற்றால் சம்பாதித்துப் பெறப்பட்ட எவரேனும் ஆளின் வாக்கு;

(இ) தேர்தலில் ஆள்மாறாட்டத்தைப் புரிந்த அல்லது புரியப் பெறுவித்த எவரேனும் ஆளின் வாக்கு ;

(ஈ) தேர்தல் பொதுத் தேர்தலொன்றானவிடத்து, ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டத்தில் அத்தகைய பொதுத் தேர்தலில் வாக்களித்துள்ளாரென எண்பிக்கப்பட்ட எவரேனும் ஆளின் வாக்கு ;

(உ) அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்புரையின் (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ) என்னும் பந்திகளின் செயற்பாடு காரணமாக தேர்தலொன்றில் வாக்களிக்க இயலாதிருந்த எவரேனும் ஆளின் வாக்கு ;

(ஊ) இருபத்தாறாம்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் காரணமாக தேர்தலில் நேரடியாக வாக்களிக்க உரித்தற்றவராயிருந்தவரான எவரேனும் ஆள் அத்தேர்தலில் நேரடியாக வாக்களித்திருப்பின், அவ்வாக்கு.

(2) ஓராம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட விடயத்தில் தவிர, பதிவு செய்யப்பட்ட தேருநரொருவரின் வாக்கு, அவ்வாக்காளர், தேருநர் இடாப்பில் தமது பெயரைப் பதிந்து வைத்திருக்க அல்லது பதிந்துகொள்ளத் தகைமையற்றவர் என்னும் காரணத்துக்காக மட்டும் பரிசீலனையொன்றின் போது அடித்து நீக்கப்படுதலாகாது.

(3) பரிசீலனையொன்றின்போது, செல்லுபடியான வாக்கொன்று என எண்பிக்கப்பட்ட ஏதேனும் கேட்டுப்பெறும் வாக்கு, மனுவுக்கான ஏதேனும் கட்சிக்காரரின் விண்ணப்பத்தின் மேல் வாக்காகச் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

*தேர்தல் மனுக்கள் மீதான நடவடிக்கை முறையும் நடை முறையும்.*

**111.** தேர்தல் மனுக்கள் மீதான நடவடிக்கை முறையும் நடைமுறையும், இச்சட்டத்துக்கான நான்காம் அட்டவணையில் தரப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் மனு விதிகளுக்கிணங்க விருத்தல் வேண்டும்.

*வாக்குச்சீட்டு வாக்கெண்ணும் அலுவலரால் நிராகரிக்கப்படுதல் இறுதியானதாதல்.*

**112.** தேர்தல் மனுவொன்றின் மீது, 53 ஆம் பிரிவின்கீழ் வாக்குச் சீட்டொன்று நிராகரிக்கப்படுதல் வேண்டுமா, அல்லவா என்பது பற்றிய வாக்கெண்ணும் அலுவலரொருவரின் முடிபானது கேள்விக்குட்படுத்தப் படுதல் ஆகாது.

## பாகம் VIII

### பொது

*தேர்தல்கள் நடாத்தப் படுவதற்காக கட்டளை இடுவதற்கான தத்துவம்.*

**113.** தேர்தலொன்று நடாத்தப்படுவதற்காக சனாதிபதி கட்டளையிட்ட பின்னர் அல்லது தேதியை நிருணயித்த பின்னர் எந்நேரத்திலும், ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில், எத்தன்மைத்தான காரணத்துக்காகவேனும் அத்தகைய கட்டளையைப் பின்பற்றி தேர்தலெதுவும் நடைபெறவில்லை என சனாதிபதி திருப்திப்படும் வகையில் காட்டப்பட்டால், அவர் கசெற்றிலான அறிவித்தல் மூலம் அந்த மாவட்டத்தில் தேர்தலொன்று நடாத்தப்படுதல் வேண்டும் என்று இன்னும் ஒரு கட்டளையை எந்நேரத்திலும் வழங்கலாம்.

*சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல்.*

**114.** தேர்தல்கள் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் காணப்படும் கோட்பாடுகளுக்கிணங்க தேர்தல் நடாத்தப்பட்டது என்றும், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியமை தேர்தல்களின் முடிபைப் பாதிக்கவில்லை என்றும் தோன்றுமாயின், அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியமையெதுவும் காரணமாக தேர்தலெதுவும் செல்லுபடியற்றதாதலாகாது.

*வேட்பாளரின் இறப்பு, ஒதுங்குகை அல்லது தகைமையீனம், கட்சியின் அல்லது குழுவின் நியமனப்பத்திரத்தை செல்லுபடியற்றதாக்காது.*

**115.** தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கென ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியால் அல்லது சுயேச்சைக்குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் உறுப்பினர்களுக்கான அத்தேர்தலுக்கு முன்போ பின்போ இறந்து போதல் அல்லது ஒதுங்கியிருத்தல் அல்லது தேர்தலுக்கான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாதவாறு அல்லது உறுப்பினராக அமரவும், அமர்ந்து வாக்களிக்கவும் முடியாதவாறு தகைமையீனமடைதல், அக்கட்சியின் அல்லது குழுவின் நியமனப்பத்திரத்தைச் செல்லுபடியற்றதாக்குதலாகாது அல்லது எந்த விதத்திலும் பாதிப்பதாதலாகாது ; அதற்கிணங்க, அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் இறப்பு, ஒதுங்குகை அல்லது தகைமையீனம் என்னும் நிகழ்வு காரணமாக மட்டும் அந்தக் கட்சியால் அல்லது குழுவால் அந்த நியமனப் பத்திரத்தில் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளின் வேட்பாண்மை அல்லது தேர்தல் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

*வாக்கெடுப்பு நிலையங்களாக பாடசாலைகளைப் பயன்படுத்தல்.*

**116.** (1) பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பணத்திலிருந்து மானியமொன்றைப் பெறுகின்ற அல்லது அப்பாடசாலை தொடர்பாக மானியமொன்று அளிக்கப்பட்டுள்ள ஏதேனும் பாடசாலையை அல்லது பாடசாலையொன்றின் ஏதேனும் பாகத்தை ஒரு வாக்கெடுப்பு நிலையமாக கட்டணமின்றி, தெரிவத்தாட்சி அலுவலரொருவர் பயன்படுத்தலாம்.

(2) வாக்கெடுப்பு நிலையமொன்றாக பாடசாலையை அல்லது அதன் பாகமொன்றைப் பயன்படுத்தியதன் காரணத்தால், மேற்சொல்லப்பட்ட அத்தகைய பாடசாலைக்கு அல்லது அதன் பாகத்திற்குஏற்பட்ட சேதமெதனையும் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் ஈடு செய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பாடசாலை மீது அல்லது அதன் பாகத்தின் மீது கட்டுப்பாடுடைய ஆட்களினால் உறப்பட்ட செலவுகளெதனையும் கொடுத்துத் தீர்த்தலும் வேண்டும்.

*அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளர் அல்லது குழுத் தலைவர் அவரே தமது முகவராகச் செயற்படலாம் அல்லது தமது முகவருக்கு உதவலாம்.*

**117.** இச்சட்டத்தின் கீழான தேர்தலெதிலும் தெர்ந்தெடுக்கப்படுவதற்காக வேட்பாளர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒன்றின் செயலாளர் அல்லது அதனது அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத்தலைவர் ஒருவர், அத்தகைய அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வாக்கெடுப்பு முகவர் அல்லது வாக்கெண்ணும் முகவர் அல்லது வேறு முகவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தால், அவர் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டிருக்கக் கூடியதான அல்லது செய்ய அதிகாரமளிக்கப்பட்டிருக்கக் கூடியதான செயலெதனையும், காரியம் எதனையும் தாமே செய்யலாம் அல்லது அத்தகைய முகவர் அத்தகைய செயல் அல்லது காரியம் எதனையும் செய்வதற்கு உதவலாம் ; ஆயின், இப்பிரிவின் கீழ் செயற்படுவதற்கு முன்னர், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது ஒரு குழுத் தலைவர், அத்தகைய முகவரினால் செய்யப்படுவதற்கென 76 ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப் பட்டுள்ளதான வெளிப்படுத்துகையொன்றைச் செய்தல் வேண்டும்.

*அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் முகவர்கள் சமுகந்தராமை.*

***118.*** இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில், அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் முகவரின் அல்லது முகவர்களின் முன்னிலையில் ஏதேனும் செயல் அல்லது காரியம் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளவிடத்து அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளவிடத்து, அச்செயல் அல்லது காரியம் மற்றப்படிக்கு தகுந்த முறையில் செய்யப்பட்டால், அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட நேரத்திலும், இடத்திலும் அத்தகைய கட்சியின் அல்லது குழுவின், எவரேனும் முகவர் அல்லது முகவர்கள் சமுகந்தராமையானது செய்யப்பட்ட செயலை அல்லது காரியத்தைச் செல்லுபடியற்றதாக்குதல் ஆகாது.

*யாருக்கு வாக்களித்தார் என்பதை வெளிவிடுவதைத் தடை செய்தல்.*

***119.*** இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தலில் வாக்களித்த ஆளெவரும், சட்ட நடவடிக்கை எதிலும், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் வாக்களித்தாரென்று கூறுமாறு தேவைப்படுத்தப்படுதல் ஆகாது.

*இடங்களும், ஆட்களும் பற்றிய செவ்வையற்ற விவரணம்.*

***120.*** இச்சட்டத்தின் கீழ் அல்லது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட எத்தன்மைத்தானதுமான ஏதேனும் இடாப்பில், அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட எவரேனும் ஆளினது பிழைப்பெயரீடெதுவும் அல்லது ஏதேனும் இடத்தின் செவ்வையற்ற விவரணமெதுவும், அத்தகைய இடாப்பில், அறிவித்தலில் அல்லது ஆவணத்தில் அடையாளம் காணப்படற்பாலதான அத்தகைய விதத்தில் அந்த ஆள் அல்லது இடம் குறிப்பிடப்பட்டிருப்பின் அந்த ஆளை அல்லது அந்த இடத்தைப் பொறுத்தவரை, இச்சட்டத்தின் செயற்பாட்டை எவ்விதத்திலும் பாதித்தலாகாது.

*அறிவித்தல்கள் ஆகியவற்றை வெளியிடுதல்.*

***121.*** *(1)* ஏதேனும் அறிவித்தல் வெளியிடப்படுதல் வேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டு, அத்துடன், அத்தகைய அறிவித்தலை வெளியிட எவ்வதிகாரி தேவைப்படுத்தப்பட்டுள்ளாரோ அவ்வதிகாரி, விதித்துரைக்கப்பட்ட மாதிரியான வெளியிடுகை அறிவித்தலுக்குப் போதிய பிரசித்தத்தைக் கொடுக்கவில்லையென அபிப்பிராயப்படுமிடத்து, அவர் இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அறிவித்தலை வெளியிடுவதுடன் மேலதிகமாக, அவ்வறிவித்தல் எத்தேர்தல் மாவட்டத்துடன் தொடர்புபட்டதாயுள்ளதோ அத்தேர்தல் மாவட்டத்தினுள், அவ்வறிவித்தலின் பிரதிகளை துலாம்பரமான இடங்களில் வெளிக்காட்டி வைக்கலாம் அல்லது அதைப் பிரசித்தப்படுவதற்கு அவசியமானவையென அவர் கருதக் கூடிய அத்தகைய வேறு நடவடிக்கைகளை எடுக்கலாம்.

*(2)* ஓராம் உட்பிரிவின் கீழ் எவரேனும் அதிகாரியினால் வெளிக்காட்டி வைக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலை அல்லது இச்சட்டத்திற்கிணங்கப் பார்வையிடுவதற்கென வைத்திருக்கப்படுகின்ற ஏதேனும் ஆவணத்தைச் சட்டமுறையான அதிகாரமின்றி அழிக்கும், சிதைக்கும், உருவழிக்கும் அல்லது அகற்றும் ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னராகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21.*

*வாக்களிப்பதற்கென ஊழியர்களுக்கு லீவு வழங்குதல் தொழில் தருநரின் கடமை.*

**122.** (1) தேர்தலொன்றில் நேரடியாக வாக்களிப்பதற்கு உரித்துடைய வேறெவரேனும் ஆளின் தொழில் தருநராகயிருப்பவரான எவரேனும் ஆள் அத்தகைய வேறு ஆளினால் அதற்கென எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் அத்தகைய வேறு ஆள் நேரடியாக வாக்களிப்பதை இயலச்செய்வதற்குப் போதியதென தொழில் தருநராகிய அவ்வாள் கருதக்கூடிய தொடர்ச்சியான அத்தகைய காலத்திற்கு (அக்காலம் நான்கு மணித்தியாலங்களுக்குக் குறையாததாயிருத்தல் வேண்டும்) எழுத்திலான சம்பளக் குறைப்பற்ற லீவை, அத்தகைய வேறு ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

*[பி 20, 1988 இன் 15]*

(1அ) தொழில்தருநர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைத் தருகின்ற கூற்றொன்றைத் தயாரித்தல் வேண்டும் :-

(அ) ஓராம் உட்பிரிவின் கீழ் லீவுக்கு விண்ணப்பிக்கின்ற ஆட்களின் பெயர்கள் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் கீழ் லீவு வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்களும் அத்தகைய ஆட்களுக்கு அத்தகைய லீவு எக்காலப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டதோ அக்காலப் பகுதிகளும் ;

அத்துடன் அத்தகைய கூற்றைத் தொழிலிடத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்கச்செய்வித்தல் வேண்டும்.

*[பி 20, 1988 இன் 15]*

*இரண்டாம் அட்டவணை 2023 இன் 21*

(2) ஓராம் உட்பிரிவின் அல்லது (1அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ்வேற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், இரண்டு இலட்சம் ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாதவொரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மரியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்து தற்கென வளவுகளைத் தேவைக்கெடுத்தல்.*

**123.** (1) நூற்றிப்பதினாறாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பாடசாலை அல்லாத வளவுகளெவையும் வாக்கெடுப்பு நிலையமொன்றாகப் பயன்படுத்தப்படும் நோக்கத்திற்கெனத் தேவைப்படுகின்றனவென ஆணையாளர் கருதுகின்றவிடத்து, அவ்வளவுகளின் உண்மையான உடைமையை வைத்திருக்கும் ஆளுக்கோ அல்லது அவ்வளவுகளில் அவ்வாறான உண்மையான உடைமை ஆளெவருக்கும் இல்லாதவிடத்து, அத்தகைய வளவுகளின் சொந்தக்காரருக்கோ முகவரியிடப்பட்டுச் சேர்ப்பிக்கப்பட்ட எழுத்திலான கட்டளை மூலம் அந்நோக்கத்துக்கென அவ்வளவுகளை, அவர் தேவைக் கெடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வளவுகளெவையும் தேவைக்கெடுக்கப் படுகின்றவிடத்து, அத்தகைய தேவைக்கெடுத்தற் காலம் நான்கு கிழமைகளுக்கு மேற்படுதலாகாது.

(3) இப்பிரிவில் ''வளவுகள்'' என்பது, ஏதேனும் காணி, கட்டிடம் அல்லது கட்டிடத்தின் பாகம் எனப் பொருளாவதோடு, ஒரு குடிசையையும், கொட்டிலையும் அல்லது கட்டமைப்பையும் அல்லது அதன் ஏதேனுமொரு பாகத்தையும் உள்ளடக்கும்.

**124.** (1) நூற்றிருபத்தி மூன்றாம் பிரிவின் கீழ் வளவுகள் எவையும் தேவைக்கெடுக்கப்படுகின்றவிடத்து, தேவைக்கெடுப்பதற்கு நேர் முன்னராக அவ்வளவுகளின் உண்மையான உடைமையை வைத்திருந்த ஆளுக்கு அல்லது அவ்வாறு உண்மையான உடைமையை ஆளெவரும் வைத்திருந்திராதவிடத்து, அவ்வளவுகளின் சொந்தக்காரருக்கு அந்நோக்கத்திற்கெனப் பாராளு மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பணங்களிலிருந்து, அவ்வாறு தேவைக்கெடுப்பினாலான நட்டஈட்டை ஆணையாளர் கொடுத்தல் வேண்டும் ; அத்துடன், தேவைக்கெடுத்தற் காலத்தின்போது அவ்வளவுகளுக்கேற்பட்ட சேதமெதனையும் ஈடுசெய்தல் வேண்டும். வளவுகளைத் தேவைக்கெடுப் பதற்கான நட்டஈடு.

(2) எவையேனும் வளவுகள் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின் கீழ்க் கொடுபடற்பாலதான நட்டஈட்டுத் தொகையானது –

(அ) அவ்வளவுகள் தொடர்பில் கொடுபடற்பாலதான வாடகையையும் அல்லது வாடகையெதுவும் அவ்வாறு கொடுபடற்பாலதல்ல வெனின், அச்சுற்றாடலில் அதையொத்த வளவுகளுக்குக் கொடுபடற்பாலதான வாடகையையும் ; அத்துடன்

(ஆ) அவ்வளவுகள் தேவைக்கெடுக்கப்பட்டதன் விளைவாக தேவைக் கெடுப்பதற்கு நேர்முன்னதாக அவ்வளவுகளின் உண்மையான உடைமையை வைத்திருந்த ஆள், அவரது வதிவிடத்தையோ, தொழில் இடத்தையோ மாற்றுவதற்குக் கட்டாயப்படுத்தப் பட்டிருப்பின், அம்மாற்றத்தின் இடைநேர் விளைவான நியாயமான செலவுகள் எவையேனு மிருப்பின் அவற்றையும்,

கவனத்திற்கொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் நட்டஈட்டிற்கு உரித்துடைய ஆள் எவரும், நட்டஈட்டுத் தொகை பற்றிய ஆணையாளரின் முடிவினால் இன்னலுறுமிடத்து, அந்த ஆள், அம்முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

**125.** (1) எவ்வங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஒரு தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் ஒன்றில் போட்டியிடுகின்றதோ அவ்வங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் தலைவர், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நியமன காலப்பகுதியின் கடைசி நாளுக்கும் அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும்நாளுக்குமுன்னையபத்தாம்நாளுக்குமிடையிலான ஏதேனும்நேரத்தில், அத்தகைய தேர்தல் மாவட்டத்துக்கான தேருநர் இடாப்பில் பெயர் தோன்றும் ஒவ்வொரு தேருநருக்கும் எவ்வித அஞ்சல் கட்டணமுமின்றி, அத்தகைய தேர்தல் தொடர்பான விடயத்தை மட்டும் கொண்டுள்ள ஒரேயொரு அஞ்சல் தொடர்பை சாதாரண அஞ்சலில் மேற்கொள்ள உரித்துடையவராதல் வேண்டும். தேர்தல் சம்பந்தமான விடயங்களை அஞ்சல் கட்டணமின்றி அஞ்சலில் அனுப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது குழுத் தலைவருக்கு உள்ள உரிமை. [பி21, 1988 இன் 15]

(1 அ) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்ற வாறான அத்தகைய அஞ்சல் தொடர்பெதுவும் அஞ்சல் தலைமையதிபதியினால் அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் செயலாற்றுகின்ற எவரேனுமாளினால் வாக்கெடுப்பு நாளுக்கு முன்னரான பத்தாவது நாளுக்குப் பின்னர் [பி21, 1988 இன் 15]

[பி21, 1988 இன் 15]

ஒப்படைப்பதற்கென ஏற்றுக்கொள்ளப்படுதலோ அல்லது வாக்கெடுப்புத் தேதிக்கு முன்னரான ஐந்தாவது நாளுக்குப் பின்னர் தேருநரொருவருக்கு அவரினால் ஒப்படைக்கப்படுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவினால் அஞ்சல் தொடர்பொன்றை மேற்கொள்ள ஆளொருவருக்கு அளிக்கப்பட்ட உரிமையானது, பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவானதாதல் வேண்டும் ; அத்துடன், அத்தகைய ஏதேனும் நிபந்தனை இணங்கியொழுகப்படாவிடின், அத்தகைய அஞ்சல் தலைமையதிபதியினால் அல்லது அவரின் அதிகாரத்தின் கீழ் செயலாற்றும் எவரேனும் ஆளினால் நிராகரிக்கப்படலாம் :-

(அ) அத்தகைய அஞ்சல் தொடர்பு சோதனையிடப்படற்குரியதாயிருத்தல் வேண்டும் என்பதுடன், நிறையில் முப்பது கிராம்களை விஞ்சுதலும் ஆகாது ; அத்துடன்

(ஆ) அத்தகைய அஞ்சல் தொடர்பின் நீளமும் அகலமும், அத்துடன் பொறிக்கும் விதமும், ஒழுங்குபடுத்தும் விதமும், கையாளும் விதமும் அஞ்சல் தலைமையதி பதியினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் அத்தகையதாதல் வேண்டும்.

அரசியல் ஒலிபரப்புகள்.

**126.** (1) ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பாக நியமனப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்துள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஒவ்வொன்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினாலும் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினாலும் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக நியமன காலப்பகுதியின் கடைசி நாளிலிருந்து ஒரு வாரத்துள் அதன் சார்பில் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுவதற்கென நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளின் பின்னரான நாளில் தொடங்குவதும், வாக்கெடுப்பு தொடங்குவதற்கு எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் முடிவதுமான காலப்பகுதியில், ஒலிபரப்பு வசதிகளைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

[பி22, 1988 இன் 15]

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின் போது ஒலிபரப்பு வசதிகளைப் பயன்படுத்துவதற்காக அவ்வுட்பிரிவின் கீழ் விண்ணப்பஞ் செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக்குழு ஒன்றுக்குப் பின்வருவன அனுமதிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) வானொலி ஒலிபரப்பின் விடயத்தில் பின்வருவதனைப் பயன்படுத்துவதற்கு :-

(i) அத்தகைய கட்சி அல்லது குழு ஆகக் குறைந்தது ஒரு தேர்தல் மாவட்டம் தொடர்பில் மட்டுமே நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தால், முப்பது நிமிடங்களைக் கொண்ட மொத்தக் காலப்பகுதி ;

(ii) அத்தகைய கட்சி அல்லது குழு ஒன்றுக்கு மேற்பட்ட ஆனால் பதினான்குக்குக் குறைந்த தேர்தல் மாவட்டங்கள் தொடர்பில் நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தால் அல்லது எந்தத் தேர்தல் மாவட்டங்கள் தொடர்பில் அது நியமனப் பத்திரங் களைச் சமர்ப்பித்துள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கு நூற்றி முப்பத்திரண்டு வேட்பாளர்களுக்குக் குறையாதோரை

*அது பெயர் குறித்து நியமித்திருந்தால், அறுபது நிமிடங்களைக் கொண்ட மொத்த காலப்பகுதி ;*

(iii) *பதினான்கு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டங்கள் தொடர்பில் அத்தகைய கட்சி அல்லது குழு நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தால் அல்லது எந்தத் தேர்தல் மாவட்டங்கள் தொடர்பில் அது நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கு நூற்றி முப்பத்திரண்டு வேட்பாளர்களுக்கு அதிகமானோரை அது பெயர் குறித்து நியமித்திருந்தால், தொண்ணூறு நிமிடங்களைக் கொண்ட மொத்தக் காலப்பகுதி;*

(ஆ) *தொலைக்காட்சி அகல்பரப்பலின் விடயத்தில் பின்வருவதனைப் பயன்படுத்துவதற்கு :-*

(i) *அத்தகைய கட்சி அல்லது குழு ஒரு தேர்தல் மாவட்டத்துக்கு மட்டுமே நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தால், முப்பது நிமிடங்களைக் கொண்ட மொத்தக் காலப்பகுதி ;*

(ii) *அத்தகைய கட்சி அல்லது குழு ஒன்றுக்கு மேற்பட்ட ஆனால் பதினான்குக்குக் குறைந்த தேர்தல் மாவட்டங்கள் தொடர்பில் நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தால் அல்லது எந்தத் தேர்தல் மாவட்டங்கள் தொடர்பில் அது நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கு நூற்றி முப்பத்திரண்டு வேட்பாளர்களுக்குக் குறையா தோரை அது பெயர் குறித்து நியமித்திருந்தால், அறுபது நிமிடங்களைக் கொண்ட மொத்த காலப்பகுதி ;*

(iii) *பதினான்கு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டங்கள் தொடர்பில் அத்தகைய கட்சி அல்லது குழு நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்திருந்தால் அல்லது எந்தத் தேர்தல் மாவட்டங்கள் தொடர்பில் அது நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ளதோ அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கு நூற்றி முப்பத்திரண்டு வேட்பாளர்களுக்கு அதிகமானோரை அது பெயர் குறித்து நியமித்திருந்தால், தொண்ணூறு நிமிடங்களைக் கொண்ட மொத்தக் காலப்பகுதி;*

*இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் பிரித்தொதுக்கப்பட்ட நேரம், அத்தகைய கட்சியினால் அல்லது குழுவினால் ஒரு தடவையில் அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் பயன்படுத்தப்படலாம் ; எவ்வாறாயினும், அத்தகைய ஒவ்வொரு தடவையிலுமான பயன்பாடு பதினைந்து நிமிடங்களுக்குக் குறையாததும், முப்பது நிமிடங்களுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதிக்கானதாக இருத்தல் வேண்டும்.*

*(3)* *இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஏதேனும் கருமத்தை விவாதிக்க உடன்பட்டுள்ளவிடத்து, அத்தகைய கட்சிகளுக்கு அல்லது குழுக்களுக்கு ஒலிபரப்பு வசதிகளை அளித்தல், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினதும் இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினதும் கடமையாதல் வேண்டும் ; ஆனால் எவ்வாறாயினும், அத்தகைய விவாதத்துக்கென அனுமதிக்கப்பட்ட நேரமானது*

அத்தகைய ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவுக்கும் (2) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்தொதுக்கப்பட்ட நேர அளவை விஞ்சுதலாகாது.

(4) ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியும் அல்லது சுயேச்சைக் குழுவும் ஒலிபரப்பு வசதிகளைப் பயன்படுத்தும் வரிசையொழுங்கானது -

(அ) முதற்கண் அத்தகைய கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் இடையேயான உடன்படிக்கையால் ; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கை இல்லாதபோது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரும், இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரும் தமது பூரண தற்றுணிபில் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் நடாத்தப்பட்ட அல்லது இழுக்கப்பட்ட திருவுளச் சீட்டிழுப்பின் மூலம்,

தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழான ஒலிபரப்பு வசதிகள், இச்சட்டத்தின் கீழான தேர்தலொன்றில் போட்டியிடுவதற்கென ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒரு வேட்பாளரால் அல்லது வேட்பாளர்களால் மட்டும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, வேட்பாளரெவரும், ஒலிபரப்பு வசதிகளைத் தமது சொந்தத் தேர்தலுக்கு ஆதரவு கூட்டும் நோக்கத்துக்கென நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தலாகாது.

[பி22, 1988 இன் 15] (7) ஆணையாளர், (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் குறித்தொதுக்கப்பட்ட காலப்பகுதியுடன் சேர்த்து மேலதிகமாக, (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நெறிகளைக் கவனத்திற்கொண்டு ஆணையாளரினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய சமகாலப் பகுதிகளுக்கு, வானொலி, தொலைக்காட்சி என்பனவாயிலான ஒலிபரப்பு வசதிகளை அத்தகைய கட்சி அல்லது குழு பயன்படுத்துவதனை அனுமதிக்கலாம்.

[பி22, 1988 இன் 15] (8) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரும் இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, குறிப்பிட்டவோர் அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அல்லது குறிப்பிட்டவொரு வேட்பாளரின் வேட்பாண்மையை மேம்படுத்துகின்ற பயனையுடையதாக விருக்கும் விடயமெதுவும் வானொலி அல்லது தொலைக்காட்சி வாயிலாக ஒலிபரப்பப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரும் இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரும் ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் செயலாற்றுதல் வேண்டும்.

[பி22, 1988 இன் 15] (9) இப்பிரிவின் நோக்கத்திற்காக, அரசியலமைப்பின் 99அ என்னும் உறுப்புரையின் கீழ், பொதுத் தேர்தலொன்றில் போட்டியிடுவதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்கள் பற்றிய நிரலில் எந்த ஆளின் பெயர் காணப்படுகின்றதோ அந்த ஆள், அத்தகைய தேர்தலில் போட்டியிடுவதற்கு, விடயத்துக்கேற்றாற்போன்று, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

*அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கு அரசு உதவியளித்தல்.*

**127.** (1) இப்பிரிவின் அடுத்துவரும் ஏற்பாடுகளின் கீழ் தகைமைபெறும், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொவ்வொன்றும். பொதுத் தேர்தலொன்று தொடர்பாக, மானியக் கொடையொன்று என்னும் வகையாக அரசிடமிருந்து நிதி உதவி பெறுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் நடத்தப்படும் முதலாவது பொதுத் தேர்தல் தொடர்பாக, 1977, யூலை மாதம் நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, அந்தப் பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்தத் தொகையின் ஒரு சதவீதத்துக்குக் குறையாத வாக்குகளைப் பெற்ற ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு இப்பிரிவின் கீழ் முதலாவது கொடுப்பனவானது செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட மானியக் கொடையானது, தேர்தல் மாவட்டமொன்று தொடர்பில், ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு, அக்கட்சி -

(அ) முற்போந்த கடைசிப் பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்தத் தொகையில் ஒரு சதவீதத்துக்குக் குறையாத வாக்குகளைப் பெற்றிருந்து ; அத்துடன்

(ஆ) எப்பொதுத் தேர்தல் தொடர்பாக அத்தகைய மானியக்கொடை செலுத்தப்படற்பாலதோ அப் பொதுத் தேர்தல் தொடர்பாக அந்த மாவட்டம் சார்பாக ஒரு நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பித் திருந்தால்,

செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழ் தகைமைபெறும் ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியும், அத்தகைய கட்சியின் செயலாளரால் அதற்கென ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்யப்படு வதன்மேல் முற்போந்த கடைசிப் பொதுத் தேர்தலில் அம்மாவட்டத்தில், அத்தகைய கட்சியினால் பெறப்பட்ட வாக்கொன்றுக்கு ஐம்பது சதம் என்னும் வீதத்தில் கணக்கிடப்பட்ட பணத்தொகையொன்றைப் பெறுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழான கொடுப்பனவு ஒவ்வொன்றும், நியமனகாலப் பகுதியின் கடைசி நாளிலிருந்து பத்து நாட்களுள் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அலுவலக முறையான வங்கிக் கணக்குக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான மானியக்கொடைக் கொடுப்பனவு தொடர்பாக ஏதேனும் பிணக்கு எழுமிடத்து, அத்தகைய பிணக்கானது ஆணையாளருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன்மீதான அவரது முடிபு இறுதியானதாதலும் வேண்டும்.

*பொலிசார் ஆணையாளருக்கு உதவுதல்.* [*பி23, 1988 இன் 15*]

127 அ. பொலிசு அலுவலர் ஒவ்வொருவரும், இச் சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் தேர்தலொன்றின் ஒழுங்கான நடாத்துகையை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அது தொடர்பில் ஆணையாளரினால் அவருக்கு விடுக்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

ஒதுக்கப்பட்ட ஒரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாதிருக்கும் என்ற நியாயமான பயம் இருக்குமிடத்து வாக்களிப்பதற்கான நடவடிக்கை முறை.
[பி23, 1988 இன் 15]

*127ஆ.* (1) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடு எப்படியிருப்பினும், எவரேனும் பதிவு செய்யப்பட்ட தேருநரின் வாக்கெடுப்பு நிலையம் எந்த இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பில் நிலவுகின்ற நிலைமைகள் காரணமாக அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் தமது வாக்கை அளிப்பதற்குத் தாம் இயலாதுள்ளரென நியாயமாகப் பயப்படுகின்ற அந்தப் பதிவு செய்யப்பட்ட தேருநர், ஆணையாளரினால் அவரது தனித்தற்றுணிபில் தீர்மானிக்கப்படும் இன்னொரு வாக்கெடுப்பு நிலையத்தில் தமது வாக்கை அளிப்பதற்குத் தமக்கு அனுமதியளிக்கும்படி வேண்டுகோள் விடுத்து பெயர் நியமன அறிவித்தற் தேதியிலிருந்து ஒரு வாரத்தினுள் தேர்தல்கள் ஆணையாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஆணையாளர் ஒரு விண்ணப்பத்தைப் பெற்றதிலிருந்து ஒரு வாரத்தினுள் அத்தகைய விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதாவென அத்தகைய தேருநருக்கு அறிவித்தல் வேண்டும். ஆணையாளரின் முடிவு முற்றானதும் இறுதியானதுமாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் கேள்விக்குட் படுத்தப்படுதலுமாகாது.

(3) அத்தகைய வாக்கு அளிக்கப்படுமிடத்து, அத்தகைய வாக்கானது, அத்தகைய தேருநர் எந்தத் தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளாரோ அந்தத் தேர்தல் மாவட்டத்தின் வாக்குகளுடன் சேர்த்து எண்ணப்படுதல் வேண்டும்.

[பி8, 1988 இன் 35]

(4) ஆணையாளர், இப்பிரிவின் கீழ் எப்பதிவு செய்யப்பட்ட தேருநர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றனவோ அப்பதிவு செய்யப்பட்ட தேருநர்களின் பெயர்களைக் கொண்ட நிரலொன்றை அவற்றின் பிரதிகளை ஆணையாளரின் அலுவலகத்திலும் இயைபான மாவட்ட அலுவலகங்களிலும் பார்வையிடலுக்குக் கிடைக்கத்தக் கனவாகச் செய்வதன் மூலம், வெளியிடுவித்தல் வேண்டும்.

ஆணையாளரின் தத்துவங்கள்.

**128.** ஆணையாளரானவர் -

(அ) இச்சட்டத்தின்கீழ் தேர்தல்களின் நிர்வாக நடாத்து முறைமீது பொதுவான பணிப்பையும் மேற்பார்வையையும் பிரயோகித்தல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுற நிறைவேற்றப்படுதலை உறுதிப்படுத்துவதற்கு, அவசியமானவையென அவர் கருதக்கூடிய அத்தகைய பணிப்புகளை தேர்தற் பிரதி ஆணையாளர்களுக்கும், தேர்தல் உதவி ஆணையாளர்களுக்கும், தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும் அத்துடன் வேறு தேர்தல் அலுவலர்களுக்கும் வழங்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(இ) இச்சட்டதினால் அல்லது சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்டதும் அவர்மீது சுமத்தப்பட்டதும் ஆன வேறெல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

இடர்ப்பாடுகளை அகற்றுதல்.

**129.** இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை முதலில் பயன்பாட்டுக்கிடுதலில், ஏதேனும் இடர்ப்பாடு ஏற்படுமாயின், ஆணையாளர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் எவையேனும் சிறப்பான அல்லது

எதிர்பாரா சந்தர்ப்பங்களுக்கென ஏற்பாடு செய்வதை நோக்காகக் கொண்டு அல்லது எந்தப் பிரச்சினையை அல்லது கருமத்தைத் தீர்மானிப்பதற்கு அல்லது சரிசெய்வதற்கு இந்தச் சட்டத்தினால் ஏற்பாடெதுவும் அல்லது பயனுறு ஏற்பாடு எதுவும் ஆக்கப்படவில்லையோ அந்தப் பிரச்சினையை அல்லது கருமத்தைத் தீர்மானிப்பதை அல்லது சரிசெய்தலை நோக்காகக் கொண்டு அவர் அவசியமானவையெனக் கருதக்கூடிய அத்தகைய எல்லாப் பணிப்புக்களையும் வழங்கலாம்.

**129**. அ *

நீக்கம்.

**130**. ஆயிரத்துத்தொளாயிரத்து நாற்பத்தாறாம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்) அரசுப் பேரவைக்கட்டளையின் I ஆம் பாகமும். IV முதல் VI ஆம் பாகம் வரையான (இவையிரண்டும் உட்பட) பாகங்களும் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றன.

பொருள் கோடல்.

**131**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத் தினாலன்றி –

"ஏற்றங்கீகரிக்கப்பட்ட சின்னம்" என்பது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தலினால் ஆணையாளரால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு சின்னம் எனப் பொருளாகும்;

"வேட்பாளர்" என்பது, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றால் அல்லது சுயேச்கைக்குழுவொன்றால் தேர்தலொன்றில் வேட்பாள ரொருவராகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர் எனப் பொருளாகும் ;

"தேர்தல்கள் ஆணையாளர்" என்பது, அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட தேர்தல்கள் ஆணையாளர் எனப் பொருளாகும் ;

"தேர்தல்" என்பது, பாராளுமன்ற உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்கான தேர்தலொன்றாகும் ;

"தேர்தல் நீதிபதி" என்பது, மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் அல்லது அத்தகைய தலைவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அந்நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதி அல்லது அத்தகைய தலைவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒன்றோ அல்லது பலரோ ஆன அத்தகைய நீதிபதிகள் அவர்களுள் அத்தகைய தலைவர் ஒருவராக இருக்கலாம் எனப் பொருளாகும் ;

"தேருநர்", "தேர்தல் மாவட்டம்", "தேருநர் இடாப்பு", "பதிவு செய்யும் அலுவலர் " என்பன, 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்.

"வாக்காளர்" என்பது, தேருநர் இடாப்பொன்றில் அவரது பெயர் காணப்பட்டாலும் அல்லது காணப்படாவிடினும் தேர்தலொன்றில் வாக்களிக்க விண்ணப்பிக்கும் அல்லது வாக்களிக்கும் ஆளொருவர் எனப் பொருளாகும்.

* *1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு உட்சேர்க்கப்பட்டு, 1988 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டது.*

**முதலாம் அட்டவணை**

**படிவம் அ**

***பிரிவு 15 (1)***

**நியமனப்பத்திரப் படிவம்**

*........................................ தேர்தல் மாவட்டத்திற்கான நியமனப்பத்திரம். அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றான/*வேட்பாளர்களின் சுயேச்சைக் குழுவொன்றான ........................... .... பின்வரும் ஆட்களை, அவர்களின் பெயர்கள் மேற்குறிப்பிடப்பட்ட தேர்தல் மாவட்டத்திற்கான உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கென வேட்பாளர்களாக இத்தால் பெயர்குறித்து நியமிக்கின்றது.*

| (1)<br>வேட்பாளரின் பெயர் | (2)<br>முகவரி | (3)<br>தொழில் | (4)<br>சம்மதத்தைக் குறிப்பதும், தேர்தலுக்கான தகைமையீன மெதற்கும் அவர் ஆளாகவில்லை என அத்தாட்சிப் படுத்துவதும் ஆன வேட்பாளர்களின் ஒப்பம் |
|---|---|---|---|
| | | | |

...................................................................
அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினது
செயலாளரின்/* குழுத் தலைவரின் ஒப்பம்.

பெயர் : ...............................................
முகவரி : .............................................
..........................................

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட
.........................................

அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினது
செயலாளரினால் /*குழுத் தலைவரால் எனது
முன்னிலையில்

........................ என்னுமிடத்தில் 20 ....................... ஆம்
ஆண்டு ...................... மாதம் ............................... ஆம்
நாளாகிய இன்று ஒப்பமிடப்பட்டது.

...................................................................
சமாதான நீதிவான் அல்லது
பிரசித்த நொத்தாரிசு.

*பொருந்தமற்றவற்றை வெட்டிவிடுக.

**படிவம் ஆ**

*பிரிவு 20*

**உறுப்பினர்கள் போட்டியில்லாது**
**தேர்ந்தெடுக்கப்படுமிடத்து விபரத்திரட்டு**

*அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒன்றான/* வேட்பாளர்களின் சுயேச்சைக் குழுவொன்றான ................................ கட்சியின் பின்வரும் உறுப்பினர்கள் ........................ ....................... தேர்தல் மாவட்டத்திற்கென போட்டியில்லாது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.*

| தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பெயர் | முகவரி |
|---|---|
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |

தேதி : .................

................................

*தெரிவத்தாட்சி அலுவலர்.*

.................... *தேர்தல் மாவட்டம்.*

[*பி25, 1988 இன் 15*]

**படிவம் இ**

*பிரிவு 32*

**வாக்குச்சீட்டின் முன்பக்கம்**

| | |
|---|---|
| | **"அ" கட்சி** * |
| அடியிதழ்த்தாள் இல. | **"ஆ" கட்சி** * |
| குறிப்பு : வாக்குச்சீட்டின் பின்புறத்தில் உள்ள இலக்கத்துடன் ஒத்ததாகவுள்ள இலக்கமொன்று அடியிதழ்த்தாளில் இருத்தல் வேண்டும். | **"இ" கட்சி** * |
| | **"சுயேச்சைக்குழு" 1** * |
| | **"சுயேச்சைக்குழு" 2** * |
| அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒவ்வொன்றினதும் பெயர்களும், "சுயேச்சைக்குழு" என்னும் சொற்களும் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்படுதல் வேண்டும். | **"சுயேச்சைக்குழு" 3** * |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |

* *இங்கே ஒவ்வொரு கட்சியினதும் அல்லது குழுவினதும் சின்னத்தை அச்சிடுக.*

(பி28, 1988 இன் 14)

**படிவம் ஈ**

பிரிவு 38

**38 ஆம் பிரிவின்கீழ் வாக்குச்சீட்டுகள் ஒப்படைக்கப்படாத வாக்காளர் நிரல்**

தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும் :................................
வாக்கெடுப்புப் பிரிவு :.................................................................
வாக்கெடுப்பு மாவட்டம் :.............................................................
வாக்கெடுப்பு நிலையம் :..............................................................
வாக்கெடுப்புத் தேதி :...................................................................

| | | வாக்குச்சீட்டை ஒப்படைக்காததற்கான ஏது | | | |
|---|---|---|---|---|---|
| தேருநர் இடாப்பில் வாக்காளரின் இல. | வாக்காளரின் பெயர் | தோதான பரிசோதனைக்கு மறுத்தல் | தோதான குறியீடு ஏற்கெனவே இடப்பட்டுள்ளமை | தோதான குறியீடு இடப்படுவதை மறுத்தல் | செல்லுபடியான ஆளடையாள ஆவணமில்லை அல்லது ஆளடையாளம் எண்பிக்கப்படவில்லை |

.......................................................................
தலைமைதாங்கும் அலுவலரின் ஒப்பம்.

**படிவம் உ**

பிரிவு 43

**வெளிப்படுத்துகை**

இந்தத் தேர்தல் மாவட்டதிற்கென இப்போது வலுவிலுள்ள தேருநர் இடாப்பில் அ.ஆ. எனப் பெயர் காணப்படும் அதே ஆள் நானே என .............................. (முகவரி) சேர்ந்த ............................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.......................................................................
(வாக்காளரின் ஒப்பம் அல்லது பெருவிரலடையாளம்.)

20 ................. ஆம் ஆண்டு ............. மாதம் .................. ஆம்
நாளாகிய இன்று எனது முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

.......................................................................
தலைமைதாங்கும் அலுவலரின் ஒப்பம்.

தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும் :............................
வாக்கெடுப்புப் பிரிவு :......................................................
வாக்கெடுப்பு மாவட்டம் :..................................................
வாக்கெடுப்பு நிலையம் :....................................................

**படிவம் ஊ** [பி25, 1988 இன் 15]

*பிரிவு 43*

**வெளிப்படுத்துகை**

இந்தத் தேர்தல் மாவட்டத்திற்கென உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான இத்தேர்தலில் இங்கேயோ அல்லது வேறிடத்திலோ ஏற்கெனவே நான் வாக்களித்திருக்கவில்லை என ...................................... (முகவரி) சேர்ந்த .................................................................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.......................................................................
வாக்காளரின் ஒப்பம் அல்லது பெருவிரலடையாளம்.

20 ................. ஆம் ஆண்டு ............. மாதம் .................. ஆம்
நாளாகிய இன்று எனது முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

................................................................
(தலைமைதாங்கும் அலுவலரின் ஒப்பம்.)

தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும் :............................
வாக்கெடுப்புப் பிரிவு :......................................................
வாக்கெடுப்பு மாவட்டம் :...................................................
வாக்கெடுப்பு நிலையம் :....................................................

**படிவம் எ**

*பிரிவு 43*

**வெளிப்படுத்துகை**

இந்தத் தேர்தல் மாவட்டத்திற்கென உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான இத்தேர்தலில் வாக்களிப்பதிலிருந்து நான் சட்டமுறையாக தகுதியற்றவரோ அன்றி தகைமையற்றவராக்கப்பட்டவரோ அல்ல என ............................ (முகவரி) சேர்ந்த ......................................................... (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

................................................................................
(வாக்காளரின் ஒப்பம் அல்லது பெருவிரலடையாளம்.)

20................. ஆம் ஆண்டு ............. மாதம் .................. ஆம்
நாளாகிய இன்று எனது முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

.......................................................................
தலைமைதாங்கும் அலுவலரின் ஒப்பம்.

தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும் : ................
வாக்கெடுப்புப் பிரிவு : .....................................................
வாக்கெடுப்பு மாவட்டம் : ..................................
வாக்கெடுப்பு நிலையம் : ..............................................

[பி8, 2004 இன் 14]

**படிவம் ஏ**

பிரிவு 43

**(தேர்தல் பொதுத் தேர்தலொன்றாக இருக்கும்போது)**
**வெளிப்படுத்துகை**

இந்தப் பொதுத் தேர்தலில், வேறெந்தத் தேர்தல் மாவட்டத்திலும் நான் ஏற்கெனவே வாக்களித்திருக்கவில்லை என ............................ (முகவரி) சேர்ந்த ........................... ........................(முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.......................................................................
வாக்காளரின் ஒப்பம் அல்லது பெருவிரலடையாளம்.

20 ................. ஆம் ஆண்டு ............. மாதம் .................. ஆம்
நாளாகிய இன்று எனது முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

.......................................................................
(தலைமைதாங்கும் அலுவலரின் ஒப்பம்.)

தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும் :........................
வாக்கெடுப்புப் பிரிவு :.........................................................
வாக்கெடுப்பு மாவட்டம் :......................................................
வாக்கெடுப்பு நிலையம் :....................................................

**படிவம் ஐ**

பிரிவு 45

**வெளிப்படுத்துகை**

........................ தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்பில் .......................... (தொடர் இலக்கம்) ஆம் இலக்கத்தில்.............. (பெயர்) என எவ்வாளின் பெயர் காணப்படுகின்றதோ அதே ஆள் நானே என இத்தால் பயபக்தியுடனும் நேர்மையுடனும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

.......................................................
வாக்காளரின் ஒப்பம் அல்லது பெரு
விரலடையாளம்.

20 ............. ஆம் ஆண்டு ........... மாதம் .............. ஆம் நாளாகிய இன்று எனது முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

.............................................................
தலைமைதாங்கும் அலுவலரின் ஒப்பம்.

தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும் :.........................
வாக்கெடுப்புப் பிரிவு :.......................................................
வாக்கெடுப்பு மாவட்டம் :......................................................
வாக்கெடுப்பு நிலையம் :......................................................

**படிவம் ஒ**

*பிரிவு 45*

**கேட்டுப்பெறும் வாக்குகள் நிரல்**

| வாக்காளரின் இல. | வாக்காளரின் பெயர் |
|---|---|
| | |

..............................................................
*தலைமைதாங்கும் அலுவலரின் ஒப்பம்.*

தேதி : ....................................

தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும் :.........................
வாக்கெடுப்புப் பிரிவு :.....................................................
வாக்கெடுப்பு மாவட்டம் :....................................................
வாக்கெடுப்பு நிலையம் :......................................................

**படிவம் ஓ**

*பிரிவு 47*

**வாக்குச்சீட்டுக் கணக்கு**

தேர்தல் மாவட்டத்தின் பெயரும் இலக்கமும் :..........................
வாக்கெடுப்புப் பிரிவு :......................................................
வாக்கெடுப்பு மாவட்டம் :.......................................................
வாக்கெடுப்பு நிலையம் :........................................................

பெறப்பட்ட வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை :.....................................
பழுதடைந்த வாக்குச்சீட்டுகள் தவிர வழங்கப்பட்ட வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை : .......................................................................................
பழுதடைந்த வாக்குச்சீட்டுகள் : ..............................................................
பயன்படுத்தப்படாத வாக்குச்சீட்டுகள் : ..................................................
பெறப்பட்ட கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை : .............
வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை: ...................................................................................
பயன்படுத்தப்படாத கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை : ............................................................

.............................................................
*தலைமைதாங்கும் அலுவலரின் ஒப்பம்.*

தேதி : ................................................................

**படிவம் ஔ**

*பிரிவு 62*

**வாக்கெடுப்பொன்று நடைபெற்ற பின்னரான விபரத்திரட்டு**

அத்தகைய ஒவ்வோர் உறுப்பினரதும் பெயருக்கெதிரே காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினால் அல்லது சுயேச்சைக்குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்கள், ..................... ஆம் தேதியன்று நடாத்தப்பட்ட தேர்தலில் .............................. தேர்தல் மாவட்டத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

| தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பெயர் | உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு |
|---|---|

20 ................. ஆம் ஆண்டு ............. மாதம் .................. ஆம் நாளாகிய இன்று ..................என்னுமிடத்தில் தேதியிடப்பட்டது.

..............................
தெரிவத்தாட்சி அலுவலர்.
................... தேர்தல் மாவட்டம்.

**படிவம் க**

*பிரிவு 64*

**வெற்றிடமொன்றை நிரப்பிய பின்னரான விபரத்திரட்டு**

அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி ஒன்றான */ வேட்பாளர்களின் சுயேச்சைக் குழு ஒன்றான* .................................... சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரத்தில் பெயர் காணப்படும் ................................................ என்பவர், அரசியலமைப்பின் 99 ஆம் உறுப்புரையின் (13) (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி ....................................... .. தேர்தல் மாவட்டத்திற்கென உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டார் என இத்தால் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

20 ................. ஆம் ஆண்டு ............. மாதம் .................. ஆம் நாளாகிய இன்று .................. எனது முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

..............................
தெரிவத்தாட்சி அலுவலர்.
................... தேர்தல் மாவட்டம்.

*பொருத்தமற்றவற்றை நீக்குக.

**படிவம் ங**

*பிரிவு 76*

**இரகசியம் பேணலுக்கான வெளிப்படுத்துகைப் படிவம்**

*எனக்கு வாசித்துக் காட்டப்பட்ட 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 76 ஆம் பிரிவினால் தடைசெய்யப்பட்டுள்ள எதனையும் ................................ தேர்தல் மாவட்டத்திற்கான இத்தேர்தலில் செய்யமாட்டேன் என நான் பயபக்தியுடன் வாக்குறுதி செய்து வெளிப்படுத்துகிறேன்.*

........................................................
வெளிப்படுத்துபவரின் ஒப்பம்.

*20 ................. ஆம் ஆண்டு ............. மாதம் .................. ஆம் நாளாகிய இன்று எனது முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.*

.................................................................
வெளிப்படுத்துகையை எடுப்பவரின் ஒப்பம்.

**குறிப்பு** : *பிரிவானது, வெளிப்படுத்துகையை எடுப்பவரினால் வெளிப்படுத்துபவருக்கு வாசித்துக் காட்டப்படுதல் வேண்டும்.*

**இரண்டாம் அட்டவணை**

*அஞ்சல் வாக்காளர் ஒழுங்குவிதிகள், 1981*

***1***. இவ் ஒழுங்குவிதிகள் 1981 ஆம் ஆண்டின் அஞ்சல் வாக்காளர் (பாராளுமன்றத் தேர்தல்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

***2***. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக, சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி – *பொருள் கோடல்.*

"வழங்குகை" என்பது ஆரம்பத்தில் வழங்கப்பட்டதும் அதை அடுத்துப் பின்னராக வழங்கப்பட்டது எதனையும் உள்ளடக்கும் ;

"அஞ்சல் வாக்குச்சீட்டு" என்பது, ஓர் அஞ்சல் வாக்காளருக்கு வழங்கப்பட்ட ஒரு வாக்குச்சீட்டு எனப் பொருளாகும் ;

"அஞ்சல் வாக்காளர்" என்பது தேர்தலொன்று தொடர்பில் அத்தேர்தலின் நோக்கத்துக்காக ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துடையவரான ஆளொருவர் எனப் பொருளாகும் ;

"அட்டவணை" என்பது இவ் ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை எனப் பொருளாகும் ;

"சட்டம்" என்பது 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் எனப் பொருளாகும்.

***3***. ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பமொன்று பொருளளவில், அட்டவணையிலுள்ள "அ" என்னும் படிவத்திலானதாய் இருத்தல் வேண்டும். *ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பத்தின் படிவம்.*

அஞ்சல் வாக்காளர்களின் பதிவேடும் நிரலும்.

**4.** (1) இவ் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சட்டத்தின்கீழ் தெரிவத்தாட்சி அலுவலரினால் வைத்திருக்கப்படும் அஞ்சல் வாக்காளர்களின் பதிவேடும், நிரலும், வசதியானதென அவருக்குத் தோன்றக்கூடிய அத்தகைய படிவத்திலானதாய் இருத்தல் வேண்டும்.

(2) ஓர் அஞ்சல் வாக்காளரின் வாக்குச்சீட்டானது எம் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமோ அம்முகவரி அஞ்சல் வாக்காளர் நிரலில் அவரது பெயருக்கெதிரே குறித்துரைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) அஞ்சல் வாக்காளர் நிரலிலுள்ள பெயர்கள் தொடர்ச்சியாக இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) அஞ்சல் வாக்காளர் நிரல் தயாரிக்கப்பட்டவுடன் தெரிவத்தாட்சி அலுவலர், அவரது அலுவலகத்தில் பார்வையிடுவதற்குக் கிடைக்கச் செய்வதற்காகப் பிரதி ஒன்றை ஆக்குவதன்மூலம் அதை வெளியிடுதல் வேண்டும்.

அஞ்சல் வாக்குச் சீட்டின் படிவம்.

**5.** ஓர் அஞ்சல் வாக்குச்சீட்டானது, அஞ்சல் வாக்காளர்களல்லாத வாக்காளர்களுக்கு ஒப்படைக்கப்படும் வாக்குச்சீட்டுகளிலிருந்து வேறுபிரித்தறிய முடியாததாயும், அதே படிவத்திலானதுமாய் இருத்தல் வேண்டும்.

ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவம்.

**6.** ஓர் அஞ்சல் வாக்காளருக்கு அவரின் அஞ்சல் வாக்குச்சீட்டுடன் அனுப்பப்படும் ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவமானது பொருளளவில், அட்டவணையிலுள்ள "ஆ" என்னும் படிவத்திலானதாய் இருத்தல் வேண்டும்.

எழுதுவினைஞர்களை நியமித்தல்.

**7.** அஞ்சல் வாக்குச்சீட்டுகள் வழங்குகை நடவடிக்கைகளில் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உதவுவதற்காக எழுதுவினைஞர்களாக ஆட்கள் நியமிக்கப்படலாம்;

ஆயின், தேர்தலில் அல்லது தேர்தல் சம்பந்தமாய் வேட்பாள ரொருவரால் அல்லது அவர் சார்பில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஆளெவரும் அவ்வாறு நியமிக்கப் படுதலாகாது.

அஞ்சல் வாக்குச்சீட்டுகள் வழங்குகையிலும் பெறுகையிலும் சமுகமாயிருப்பதற்குஉரித்துடையவரான ஆட்கள்.

**8.** (1) அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகை நடவடிக்கைகளில் –

(அ) தெரிவத்தாட்சி அலுவலரும் அவரது எழுதுவினைஞர்களும் ;

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவர் அல்லது குழுத் தலைவரொருவர் ;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவரால் அல்லது குழுத் தலைவரொருவரால் அவரது இடத்தில் செயலாற்றவென நியமிக்கப்பட்ட ஆளொருவர் ; அத்துடன்

(ஈ) இவ் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் முகவர்கள்,

தவிர்ந்த ஆளெவரும் சமுகமாயிருத்தல் கூடாது.

(2) அஞ்சல் வாக்குச்சீட்டுகள் உடன் நிகழ்வாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளாக வழங்குகை செய்யப்படவுள்ளவிடத்து, ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் விடயத்திலும், எவ்வகையிலேனும், அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கை ஒரேயளவினதாக இருக்கும்படியாக, அத்தகைய தொகுதிகளின் எண்ணிக்கையை விஞ்சாது, நியமிப்பதற்குத் தெரிவத்தாட்சி அலுவலரால் அவர் அதிகாரமளிக்கப்படக் கூடியவாறான எண்ணிக்கை வரை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முகவர்களை ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவரும் குழுத் தலைவரும் நியமிக்கலாம்.

(3) அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் வழங்குகைக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு முன்னர், தெரிவத்தாட்சி அலுவலருக்கு இவ் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும் எடுத்துக்கூறி நியமனம்பற்றிய அறிவித்தல் அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) முகவரொருவர் இறந்தால் அல்லது செயலாற்றுவதற்கு தகுதியற்றவராகவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத் தலைவர் அவரின் இடத்துக்கு இன்னொரு முகவரை நியமிக்கலாம் என்பதுடன், நியமிக்கப்பட்ட முகவரின் பெயரும் முகவரியும் பற்றிய எழுத்திலான அறிவித்தலைத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உடனடியாகக் கொடுத்தலும் வேண்டும்.

(5) அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத்தலைவரால் செய்யப்படு வதற்குப் பதிலாக நியமனப்பத்திரத்தில் இரண்டாவதாகப் பெயர் காணப்படுகின்ற வேட்பாளரால் முகவர்கள் நியமிக்கப்படலாமென்பதுடன் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அவர்களின் நியமனம் பற்றிய அறிவித்தல்கள் கொடுக்கவும்படலாம்.

(6) இவ்வொழுங்குவிதிகளில் முகவர்கள் பற்றிய குறிப்பீடானது, எம்முகவர்களின் நியமனங்கள் முறைப்படி செய்யப்பட்டும் அறிவிக்கப்பட்டுமுள்ளனவோ அம்முகவர் களுக்கான குறிப்பீடுகளெனவும், இவ் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட முகவர்களின் விடயத்தில், தெரிவத்தாட்சி அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு உட்பட்டவரான அம்முகவர்கள் பற்றிய குறிப்பீடுகளெனவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

(7) அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவர் அல்லது குழுத் தலைவரொருவர், அவரின் முகவர், எவரேனும் நியமிக்கப்பட்டிருப்பின், அவர் செய்வதற்கு அதிகாரமளிக்கப் பட்டிருக்கக்கூடியதான ஏதேனும் செயல் அல்லது காரியத்தைதானே செய்யலாம் அல்லது அத்தகைய ஏதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்வதில் அவரது முகவருக்கு உதவலாம்.

(8) இவ்வொழுங்குவிதிகளில் ஏதேனும் செயல் அல்லது காரியம் அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் அல்லது குழுத் தலைவரின் அல்லது அவர்களது முகவர்களின் முன்னிலையில் செய்யப்படுவதற்கு தேவைப் படுத்தப்பட்டுள்ளவிடத்து அல்லது அதிகாரமளிக்கப் பட்டுள்ளவிடத்து, மற்றும்படி செயல் அல்லது காரியம் செல்லுபடியான முறையில் செய்யப் பட்டிருப்பின், அந்நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அத்தகைய எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் சமுகமளிக்காமையானது செய்யப்பட்ட செயலை அல்லது காரியத்தை செல்லுபடியற்றதாக்காது.

*இரகசியம் பேணல் பற்றிய வெளிப்படுத்துகை.*

**9**. (1) அஞ்சல் வாக்குச்சீட்டுகள் வழங்குகை நடவடிக்கைகளில் சமுகமாயிருக்கும் ஒவ்வோர் ஆளும், அத்தகைய வாக்குச்சீட்டுகள் வழங்குகையின் முன்னர், பொருளளவில், அட்டவணையிலுள்ள "இ" என்னும் படிவத்தில் இரகசியம் பேணல் பற்றி வெளிப் படுத்துகையொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழான வெளிப்படுத்துகையொன்று, தெரிவத்தாட்சி அலுவலரால் சமாதான நீதிவானொருவரின் முன்னிலையில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், வேறெவரேனும் ஆளால் அது செய்யப்படும்போது, தெரிவத்தாட்சி அலுவலரின் அல்லது சமாதான நீதிவானொருவரின் முன்னிலையில் செய்யப்படுதலும் வேண்டும்.

(3) அஞ்சல் வாக்குச்சீட்டுகள் வழங்குகையுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் சமுகமாயிருக்கும் ஆள் ஒவ்வொருவரும், வாக்களிப்பில் இரகசியம் பேணுதலும், அது பேணப்படுவதில் உதவுதலும் வேண்டுமென்பதுடன்–

(அ) சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட சில நோக்கங்களுக்காகவன்றி, அஞ்சல் வாக்குச்சீட்டுகளில் பொறிக்கப்பட்ட அலுவலக முறையான குறியீடு பற்றி அந்நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற ஏதேனும் தகவலை எவரேனும் ஆளுக்கு வாக்கெடுப்பு முடிவடைவதற்கு முன்னர் தெரியப்படுத்தலாகாது ; அல்லது

(ஆ) சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட சில நோக்கங்களுக்காகவன்றி, அஞ்சல் வாக்குச்சீட்டொன்றின் பின்பக்கத்திலுள்ள இலக்கம் பற்றி அந்நடவடிக்கைகளில் கிடைக்கப்பெற்ற ஏதேனும் தகவலை எவரேனுமாளுக்கு எந்நேரத்திலேனும் தெரியப்படுத்தலாகாது.

(4) இவ்வொழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறிச் செயலாற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குச் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாத காலத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

அஞ்சல் வாக்குச்சீட்டுகள் வழங்குகைக்கான அறிவித்தல்.

**10.** (1) தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தலொன்றின் நியமனக்காலப் பகுதியினது கடைசி நாளின் பின்னர் பத்து நாட்களுக்குப் பிந்தாமல், அஞ்சல் வாக்குச் சீட்டுகளை அவர் வழங்கவுள்ள நேரத்தையும் இடத்தையும் அத்துடன் சொல்லப்பட்ட வழங்குகையில் சமுகமளிப்பதற்காக 8 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின்கீழ் அவர் நியமிக்கக் கூடியவாறான முகவர்களின் எண்ணிக்கையையும் ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் அறிவித்தல் வேண்டும்.

(2) அடுத்துப்பின்னராக ஏதேனும் வாக்குச்சீட்டுகள் வழங்குகை செய்யப்பட்டுள்ள விடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் எந்நேரத்தில் அத்துடன், எவ்விடத்தில் அத்தகையவாறான அடுத்துப் பின்னரான வழங்குகையைச் செய்யவுள்ளாரோ அந்நேரத்தையும் அவ்விடத்தையும் அத்துடன், வழங்குகையில் சமுகமளிப்பதற்கென 8 ஆம் ஒழுங்கு விதியின் (2) ஆம் பந்தியின்கீழ் அவர் நியமிக்கக்கூடியவாறான முகவர்களின் எண்ணிக்கையையும் இயன்றளவு விரைவாக ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் குழுத்தலைவருக்கும் அறிவித்தல் வேண்டும்.

அஞ்சல் வாக்குச் சீட்டுகளில் அலுவலக முறையான குறியீடு பொறிக்கப்படுதல்.

**11.** (1) ஒவ்வோர் அஞ்சல் வாக்காளருக்கும் வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டு அதன் பின்பக்கத்தில் அலுவலக முறையான குறியீட்டினால் பொறிக்கப்படுதல் அல்லது துளைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய வாக்காளரின் இலக்கமும் பெயரும் அழைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு வாக்குச்சீட்டின் அடியிதழிலும் அத்தகைய வாக்காளரின் இலக்கம் குறிக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய வாக்குச் சீட்டொன்று அவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதைக் குறிப்பதற்காக அவருக்கு வழங்கப்பட்ட குறிப்பான வாக்குச்சீட்டைக் காண்பியாது அஞ்சல் வாக்காளர் நிரலில் அத்தகைய வாக்காளரின் இலக்கத்திற் கெதிராகக் குறியீடொன்று இடப்படுதல் வேண்டும்.

(2) அஞ்சல் வாக்காளருக்கு வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டின் அடியிதழில் குறிப்பிடப்படவுள்ள அஞ்சல் வாக்காளரின் இலக்கமானது அஞ்சல் வாக்காளர் நிரலில் உள்ள அத்தகைய வாக்காளரின் இலக்கமாதல் வேண்டும்.

(3) அஞ்சல் வாக்காளரொருவருக்கு வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டில் அச்சிடப்பட்டுள்ள இலக்கமானது, அத்தகைய வாக்காளருக்கு அனுப்பப்பட்ட ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும், அவ்வாறு குறிப்பிடப்பட்ட இலக்கமானது, இதனகத்துப்பின்னர் "ஆளடையாள வெளிப்படுத்து கையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

***12***. அஞ்சல் வாக்காளர் நிரலில் உள்ள இரண்டு பதிவீடுகள் ஒரே அஞ்சல் வாக்காளரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன எனத் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் திருப்திப்படுமிடத்து, ஒன்றுக்கு மேற்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டை அவ்வாக்காளர் தொடர்பில் அவர் வழங்குதலாகாது. *அஞ்சல் வாக்குச்சீட்டை வழங்க மறுத்தல்.*

***13***. *(1)* வாக்குச்சீட்டுறையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது, இவ்வொழுங்கு விதிகளில் "வாக்குச்சீட்டு உறையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும். *"வாக்குச்சீட்டு உறையின்மீது குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம்" என்ற சொல்லமைப்பினதும் "மேலுறை" என்ற சொல்லமைப்பினதும் பொருள் கோடல்.*

*(2)* முறைப்படி குறியீடு செய்யப்பட்டதும் வாக்குச்சீட்டு உறையினுள் வைக்கப் பட்டதுமான அஞ்சல் வாக்குச்சீட்டினதும், முறைப்படி நிரப்பப்பட்ட ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தினதும் திருப்பி அனுப்புகைக்கான உறையானது இவ்வொழுங்குவிதிகளில் "மேலுறை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்.

***14***. அஞ்சல் வாக்காளர்களுக்கு முகவரியிடப்பட்ட எல்லா உறைகளும் எண்ணப்படுதல் வேண்டுமென்பதுடன், அருகேயுள்ள அஞ்சல் அலுவலகத்திற்குத் தெரிவத்தாட்சி அலுவலரினால் உடனடியாக ஒப்படைக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட உறைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதான தெரிவத்தாட்சி அலுவலரினால் அளிக்கப்படும் பற்றுச்சீட்டுப் படிவமொன்றை அஞ்சலதிபர், அஞ்சல் அலுவலகத்தின் தேதி முத்திரை கொண்டு பொறித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உறைகள் எவ்வாட்களுக்கு முகவரியிடப்பட்டுள்ளனவோ அவ்வாட்களுக்கு ஒப்படைக்கப்படுவதற்காக அவற்றை உடனடியாக அனுப்புதல் வேண்டும். *அஞ்சல் வாக்காளருக்கு முகவரியிடப்பட்ட உறைகளை அஞ்சல் அலுவலகத்தில் ஒப்படைத்தல்.*

***15***. *(1)* தெரிவத்தாட்சி அலுவலரானவர், அஞ்சல் வாக்குச்சீட்டுகள் வழங்குகை முடிவடைந்ததன்பின்னர் இயலுமானவரை விரைவிலும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் முன்னிலையிலும்- *அஞ்சல் வாக்காளர் நிரலையும் அடியிதழ்களையும் இலச்சினையிடுதல்.*

(அ) அஞ்சல் வாக்காளர் நிரலில் குறியீடு செய்யப்பட்ட பிரதிகளையும் ; அத்துடன்

(ஆ) வழங்கப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் அடியிதழ்களையும்,

தனித்தனியான பொதிகளாகக் கட்டுவதுடன் அத்தகைய பொதிகளை இலச்சினையிடுதலும் வேண்டும்.

*(2)* அஞ்சல் வாக்காளர் நிரலின் குறியீடு செய்யப்பட்ட பிரதிகளைக் கொண்ட இலச்சினையிடப்பட்ட பொதியானது அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் அடுத்துப்பின்னரானதோர் வழங்குகையின் நோக்கத்துக்காகத் தெரிவத் தாட்சி அலுவலரினால் திறக்கப்படலாம் என்பதுடன் வழங்குகை முடிவடைந்ததன் மீது இவ்வொழுங்கு விதியின் (1) ஆம் பந்திக்கு இணங்கப்பொதிகள் மீண்டும் கட்டப்படுவதுடன் இலச்சினையிடப்படுதலும் வேண்டும்.

***16***. *(1)* தெரிவத்தாட்சி அலுவலர், அஞ்சல் வாக்காளருக்கு அஞ்சல் வாக்குச்சீட்டுகளை ஆரம்பத்தில் வழங்குகையின் நடவடிக்கைகளில் அஞ்சல் வாக்காளர்களிடமிருந்து பெறப்படக் கூடியதான மேலுறைகளை இடுவதற்காக வாக்குச்சீட்டுப் பெட்டியை அல்லது வாக்குச்சீட்டுப் பெட்டிகளை ஏற்பாடு *அஞ்சல் வாக்காளரின் வாக்குச் சீட்டுப் பெட்டிக்கான ஏற்பாடு.*

செய்தல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியும் இச்சட்டத்தின் 54 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக ஒரு வாக்குச்சீட்டுப் பெட்டியாகக் கணிக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியும், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களினதும் குழுத்தலைவர்களினதும் சமுகமாயிருப்பவர்களான அத்தகைய முகவர்களுக்கு திறந்தும் வெறுமையாகவும் காட்டப்படுதல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலரின் இலச்சினையாலும், தமது இலச்சினையைப் பொறிக்க விரும்புகின்றவர்களான அத்தகைய முகவர்களினது இலச்சினைகளாலும் இலச்சினையிடப்படுதலும் வேண்டும்; அத்துடன், "அஞ்சல் வாக்காளர் வாக்குச்சீட்டுப் பெட்டி " என்றும் எத்தேர்தல் மாவட்டத்திற்காகத் தேர்தல் நடாத்தப்படுகின்றதோ அத்தேர்தல் மாவட்டத்தின் இலக்கமும், பெயரும் குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வாக்குச் சீட்டுப் பெட்டியின் பாதுகாப்பான கட்டுக்காப்புக்கு தெரிவத்தாட்சி அலுவலர் ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

*வாக்கெடுப்பு முகவர்கள். (பி9, 1988 இன் 35)*

**16.** அ (1) அத்தாட்சிப்படுத்தும் அலுவலர், அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வோர் அரசியற் கட்சியினதும் செயலாளருக்கும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் அத்துடன் ஒவ்வொரு சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவருக்கும் இச்சட்டத்தின்கீழ் அஞ்சல் வாக்காளர்களாகக் கொள்ளப்படுகின்றவர்களும், தான் அத்தாட்சிப்படுத்தும் அலுவலராகவிருக்கும் அலுவலகத்தின் கூறின் அல்லது தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் கொண்டு தான் வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்னுகின்ற தேதியையும் இடத்தையும் அறிவிக்க வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ், அறிவிக்கப்பெற்றவரான ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதன் முகவர் அல்லது எவரேனும் குழுத் தலைவர், வாக்கெடுப்பின்போது எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை ஒழிப்பதற்கான தேவையைக் கவனத்திற்கொண்டு, வாக்கெடுப்பில் சமுகமளிப்பதற்கென இருவரை விஞ்சாத அத்தகைய எண்ணிக்கையினரான வாக்கெடுப்பு முகவர்களை நியமிக்கலாம், நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்கள், அவர்களது தேசிய அடையாள அட்டைகளின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டைகளின் இலக்கங்கள் அத்துடன் அவர்களது முகவரிகள் என்பனவற்றை எடுத்துக் கூறுவதான அத்தகைய செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் அல்லது குழுத்தலைவரால் அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்குமுன் அல்லது வாக்கெடுப்பின் போது கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர், அல்லது குழுத் தலைவர், அத்தகைய வாக்கெடுப்பில் சமுகமளிப்பதற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் வாக்கெடுப்பு முகவரின் பெயரை அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்குத் தெரிவித்தபின்னர், அந்த வாக்கெடுப்பு முகவரின் நியமனத்தை ஒழித்து அத்தகைய வாக்கெடுப்பில் சமுகமளிப்பதற்கென மற்றொரு வாக்கெடுப்பு முகவரை நியமிக்குமிடத்து, விடயத்திற்கேற்ப, அத்தகைய செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது குழுத்தலைவர் , அத்தகைய நியமனம் ஒழிக்கப்பட்டதையும் அத்துடன் அத்தகைய வாக்கெடுப்பில் சமுகமளிக்கவுள்ள புதிய வாக்கெடுப்பு முகவரின் பெயர், அவரது தேசிய அடையாள அட்டையின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தால் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட வேறு அடையாள

அட்டையின் இலக்கம் அத்துடன் அவரது முகவரி என்பவற்றையும், அத்தகைய அலுவலருக்கு எழுத்தில் தெரிவித்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவினால் அல்லது (3) ஆம் உட்பிரிவினால் தேவைப் படுத்தப்பட்டவாறு அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்குப் பெயர் அறிவிக்கப்படாத வாக்கெடுப்பு முகவர் எவரும், அத்தகைய அலுவல கத்தில், கூறில் அல்லது தாபனத்தில் நடாத்தப்படும் வாக்கெடுப்பு எதிலும் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப் படுதல் ஆகாது.

*அஞ்சல் வாக்காளரிட மிருந்து மேலுறைகள் கிடைக்கப் பெறுதல்.*

**17**. தெரிவத்தாட்சி அலுவலர், வாக்கெடுப்பு முடிவடைவதற்கு முன்னர் மேலுறை ஒன்று கிடைக்கப்பெற்றதன்மேல் அதனைத் திறக்காது உடனடியாக அஞ்சல் வாக்காளர்கள் வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

*வாக்கெண்ணும் அலுவலர்கள்.*

**18**. ஆணையாளரின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக் கமைவாக தெரிவத்தாட்சி அலுவலர் வாக்கெண்ணும் நிலையத்தில் அல்லது அஞ்சல் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படவுள்ள ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலும் வாக்குகளை எண்ணுவதற்குப் பொறுப்பாக இருப்பதற்காக வாக்கெண்ணும் அலுவலரொருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அவரின் நியமனத்தை இல்லா தொழிக்கவும் செய்யலாம் ; அத்துடன் அத்தகைய வாக்கெண்ணும் அலுவலருக்கு, அவரது கடமைகளைப் புரிவதில் உதவுவதற்கென அத்தகைய எண்ணிக்கையினரான உதவியாளர்களையும் எழுது வினைஞர்களையும் வேறு அலுவலர்களையும் தெரிவத்தாட்சி அலுவலர் நியமித்தல் வேண்டுமென்பதுடன், அவர்களின் நியமனத்தை இல்லாதொழிக்கவும் செய்யலாம்.

*வாக்கெண்ணுதல் பற்றிய அறிவித்தல்.*

**19**. வாக்கெடுப்பு முடிவடைந்ததன்பின்னர், இயன்றளவு விரைவாக அஞ்சல் வாக்குச்சீட்டுகளின்மீதான வாக்குகளை எண்ணுவதற்கான ஒழுங்குகளைத் தெரிவத்தாட்சி அலுவலர் செய்தல் வேண்டு மென்பதுடன், அஞ்சல் வாக்குச்சீட்டுகள் எண்ணப்படவுள்ள வாக்கெண்ணும் நிலையத்தினது அல்லது ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்தினதும் அமைவிடம் பற்றியும் அத்தகைய வாக்கெண்ணுதல் தொடங்கும் தேதியும், நேரமும் பற்றியும் தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒன்றின் ஒவ்வொரு செயலாளருக்கும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கும் அத்துடன், ஏதேனும் சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவருக்கும் எழுத்துமூலம் அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும்.

*வாக்கெண்ணும் முகவர்களை நியமித்தல்.*

**20**. ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தலொன்றில் வேட்பாளர்களை பெயர்குறித்து நியமித்துள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஒவ்வொன்றும், அஞ்சல் வாக்குச்சீட்டுகள் எண்ணப்படவுள்ள ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையத்திலும் அத்தகைய வாக்கெண்ணுதல் தொடங்குவதற்கு முன்னர் வாக்குகள் எண்ணப்படுகையிற் சமுகமளிப்பதற்கென இருவருக்கு மேற்படாத (இதனகத்துப்பின்னர் "வாக்கெண்ணும் முகவர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவர்களான) முகவர்களை நியமிக்கலாம். நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும் எடுத்துக்கூறும் அத்தகைய நியமனங்கள் பற்றிய எழுத்திலான அறிவித்தலானது, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரால் அல்லது அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் குழுத்தலைவரால், வாக்கெண்ணுதல் தொடங்குவதற்கு முன்னர்

வாக்கெண்ணும் அலுவலருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும். பெயரும் முகவரியும் அவ்வாறு கொடுக்கப்படாத எவரேனும் வாக்கெண்ணும் முகவரை வாக்குகள் எண்ணும் நிலையத்துக்குள் அனுமதிக்க வாக்கெண்ணும் அலுவலர் மறுக்கலாம்.

வாக்கெண்ணுகையில் சமுகமாயிருப்பதற்கு உரித்துடைய ஆட்கள்.

**21.** வாக்கெண்ணும் அலுவலர், அவருக்கு உதவுவதற்கென நியமிக்கப்பட்ட ஆட்கள், வாக்கெண்ணும் முகவர்கள் தவிர்ந்த ஆளெவரும் வாக்கெண்ணும் அலுவலரின் சம்மதத்துடனன்றி வாக்குகள் எண்ணப்படுகையில் சமுகமாயிருத்தலாகாது.

வாக்கெண்ணுகையில் இரகசியத்தைப் பேணல்.

**22.** அஞ்சல் வாக்குச்சீட்டுகளை எண்ணும் நடவடிக்கைகளின்போது இச்சட்டத்தின் 76 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அஞ்சல் வாக்காளர் வாக்குச்சீட்டுப் பெட்டிகளைத் திறத்தல்.

**23.** அஞ்சல் வாக்காளர் வாக்குச்சீட்டுப் பெட்டியொவ்வொன்றும் வாக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னரும் வாக்கெண்ணும் அலுவலர் வாக்குகளை எண்ணுவதற்கு ஆரம்பிக்க முன்னரும் வாக்கெண்ணும் முகவர்களின் முன்னிலையில் அத்தகைய அலுவலரால் திறக்கப்படுதல் வேண்டும்.

மேலுறைகளைத் திறத்தல்.

**24.** (1) அஞ்சல் வாக்காளர் வாக்குச்சீட்டுப் பெட்டியொன்று திறக்கப்படுமிடத்து வாக்கெண்ணும் அலுவலர் மேலுறைகளின் எண்ணிக்கையை எண்ணிக் குறிப்பெடுக்க வேண்டுமென்பதுடன், அதன் பின்னர் ஒவ்வொரு மேலுறையையும் தனித்தனியாகத் திறத்தலும் வேண்டும்.

(2) வாக்கெண்ணும் அலுவலர் மேலுறையொன்றைத் திறக்குமிடத்து, அத்துடன்-

(அ) அதற்குள்-

(i) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையையும் வாக்குச்சீட்டு உறையொன்றையும் காணுமிடத்து ; அல்லது

(ii) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையையும் வாக்குச்சீட்டு உறைக்குள் வைக்கப்படாத ஒரு வாக்குச்சீட்டையும் காணுமிடத்து ; அல்லது

(iii) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையை மாத்திரம் காணுமிடத்து ; அல்லது

(iv) ஒரு வாக்குச்சீட்டு உறைக்குள் வைக்கப்படாத ஒரு வாக்குச் சீட்டை மாத்திரம் காணுமிடத்து ; அல்லது

(v) வாக்குச்சீட்டு உறையொன்றை மாத்திரம் காணுமிடத்து ; அல்லது

(ஆ) அதற்குள் எதனையும் காணாதவிடத்து, இவ் ஒழுங்குவிதியின் அடுத்துறும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (i) என்னும் உட்பந்தியிலும் (அ) (ii) என்னும் உட்பந்தியிலும் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்களில், ஆளடையாள வெளிப்படுத்துகையானது முறைப்படி ஒப்பமிடப்பட்டுச் சாட்சிப்படுத்தப்பட்டுள்ளதெனவும் முற்கூறப்பட்ட (அ) (i) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயத்தில், ஆளடையாள வெளிப்படுத்துகையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது வாக்குச்சீட்டு உறையில் அதேபோன்று குறிப்பிடப்பட்ட அதேபோன்ற இலக்கமொன்றுடன் நேரொத்ததாக இருக்கின்றதெனவும் அத்துடன் முற்கூறப்பட்ட (அ) (ii) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், ஆளடையாள வெளிப்படுத்துகையின்மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது அதேபோன்று வாக்குச்சீட்டு உறையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கமொன்றுடன் நேரொத்ததாக இருக்கின்றதெனவும் வாக்கெண்ணும்

அலுவலர் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அவர் அவ்வாறு திருப்திப்படுவாரெனின், அவர் அத்தகைய வெளிப்படுத்துகையை (இதனகத்துப் பின்னர் "ஆளடையாள வெளிப்படுத்துகைகளுக்கான கொள்கலம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் பிறிதானதோர் கொள்கலத்திலும் அத்துடன் முற்கூறப்பட்ட (அ) (i) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் வாக்குச் சீட்டையும் (இதனகத்துப் பின்னர் "அஞ்சல் வாக்காளர் வாக்குச் சீட்டுகளுக்கான கொள்கலம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இன்னொரு கொள்கலத்திலும் இடுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (i) என்னும் உட்பந்தியிலும் (அ) (ii) என்னும் உட்பந்தியிலும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விடயங்களில், இவ்வொழுங்குவிதியின் (3) ஆம் பந்தியால் தேவைப்படுத்தப்பட்டவாறு வாக்கெண்ணும் அலுவலர் திருப்திப்படாதவிடத்து, அவர்-

(அ) ஆளடையாள வெளிப்படுத்துகையின் மீது "ஆளடையாள வெளிப் படுத்துகை நிராகரிக்கப்பட்டது" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும் ;

(ஆ) சமுகமளித்திருப்பவர்களான அத்தகைய வாக்கெண்ணும் முகவர்களுக்கு அத்தகைய வெளிப்படுத்துகையைக் காட்டல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகை பற்றிய வாக்கெண்ணும் அலுவலரின் முடிவுக்கு எவரேனும் முகவரால் ஏதேனும் மறுப்புத் தெரிவிக்கப்படின், முற்போந்த (அ) என்னும் உட்பந்தியின்கீழான அத்தகைய வெளிப்படுத்து கையின்மீது குறிக்கப்பட்ட சொற்களுடன் மேலதிகமாக "நிராகரிப்புக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது" என்ற சொற்களையும் சேர்த்தல் வேண்டும்.;

(இ) முற்கூறப்பட்ட (அ) (i) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் வாக்குச்சீட்டு உறையை அல்லது முற்கூறப்பட்ட (அ) (ii) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் வாக்குச்சீட்டை, அத்தகைய வெளிப்படுத்துகையுடன் இணைத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) அத்தகைய வெளிப்படுத்துகையையும் முற்போந்த (இ) என்னும் உட்பந்தியின் கீழ் அத்தகைய வெளிப்படுத்துகையுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் (இதனகத்துப்பின்னர் "அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்கு களுக்கான கொள்கலம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொள்கலமொன்றில் இடுதல் வேண்டும்.

(5) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (iii) என்னும் உட்பந்தியின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், வாக்கெண்ணும் அலுவலர், ஆளடையாள வெளிப்படுத்துகையின்மீது "ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது, வாக்குச்சீட்டு எதுவும், வாக்குச்சீட்டு உறை எதுவும் கிடைக்கப்பெறவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் வாக்காளரின் நிராகரிக்கப் பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் அத்தகைய வெளிப்படுத்துகையை இடுதலும் வேண்டும்.

(6) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (iv) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், வாக்கெண்ணும் அலுவலர், வாக்குச்சீட்டின் மீது "நிராகரிக்கப்பட்டது, ஆளடையாள வெளிப்படுத்துகை எதுவும் கிடைக்கப் பெறவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் வாக்காளரின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் வாக்குச்சீட்டை இடுதலும் வேண்டும்.

(7) இவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) (v) என்னும் உட்பந்தியின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், வாக்கெண்ணும் அலுவலர், வாக்குச்சீட்டு உறைக்குள் ஆளடையாள வெளிப்படுத்துகையொன்று வைக்கப்பட்டுள்ளதா என்பதை நிச்சயிப்பதற்காக வாக்குச்சீட்டு உறையைத் திறத்தல் வேண்டும்.

(8) இவ்வொழுங்குவிதியின் (7) ஆம் பந்தியின் கீழ் வாக்குச்சீட்டு உறையைத் திறப்பதன்மேல், அத்தகைய உறையுள் ஆளடையாள வெளிப்படுத்துகையொன்றும் வாக்குச்சீட்டொன்றும் காணப்படின், அத்தகைய வெளிப்படுத்துகையானது முறைப்படி ஒப்பமிடப்பட்டுச் சாட்சிப்படுத்தப்பட்டுள்ளதெனவும், ஆளடையாள வெளிப்படுத்துகையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது, அத்தகைய வாக்குச் சீட்டில் அதேபோன்று குறிப்பிடப்பட்ட இலக்கமொன்றுடன் நேரொத்திருக்கின்ற தெனவும் வாக்கெண்ணும் அலுவலர் தம்மைத் திருப்திப்படுத்துதல் வேண்டும் ; அத்துடன் -

(அ) அவ்வாறு திருப்திப்படின், அத்தகைய வெளிப்படுத்துகையை ஆளடையாள வெளிப்படுத்துகைகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வாக்குச்சீட்டை அஞ்சல் வாக்காளரின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வாறு திருப்திப்படாவிடின் -

(i) அத்தகைய வெளிப்படுத்துகையின்மீது “ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது” என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்;

(ii) சமுகமளித்திருப்பவர்களான அத்தகைய வாக்கெண்ணும் முகவர்களுக்கு அத்தகைய வெளிப்படுத்துகையைக் காட்டுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளிப்படுத்துகை பற்றிய வாக்கெண்ணும் அலுவலரின் முடிவுக்கு எவரேனும் முகவரால் ஏதேனும் மறுப்புத் தெரிவிக்கப்படின், முற்போந்த (i) ஆம் உட்பந்தியின் கீழான அத்தகைய வெளிப்படுத்துகையின்மீது குறிக்கப்பட்ட சொற்களுடன் மேலதிகமாக “நிராகரிப்புக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது” என்ற சொற்களையும் சேர்த்தல் வேண்டும்;

(iii) வாக்குச்சீட்டு உறையையும் அத்தகைய வாக்குச்சீட்டையும் அத்தகைய வெளிப்படுத்துகையுடன் இணைத்தல் வேண்டும் ; அத்துடன்

(iv) அத்தகைய வெளிப்படுத்துகையையும் முற்போந்த (iii) ஆம் உட்பந்தியின் கீழ் அத்தகைய வெளிப்படுத்துகையுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் இடுதலும் வேண்டும்.

(9) இவ்வொழுங்குவிதியின் (7) ஆம் பந்தியின் கீழ் வாக்குச்சீட்டு உறையைத் திறப்பதன்மேல் வாக்கெண்ணும் அலுவலர்-

(அ) ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையை மாத்திரம் காணின்; அல்லது
(ஆ) ஒரு வாக்குச்சீட்டை மாத்திரம் காணின் ; அல்லது
(இ) எதையுமே காணாதுவிடின்,

அவர்-

(i) முற்போந்த (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், அத்தகைய வெளிப்படுத்து கையின் மீது, “ஆளடையாள வெளிப்படுத்துகை நிராகரிக்கப்பட்டது ; வாக்குச்சீட்டெதுவும் கிடைக்கப் பெறவில்லை” என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும்;

(ii) முற்போந்த (ஆ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், அத்தகைய வாக்குச்சீட்டின்மீது “நிராகரிக்கப்பட்டது ; ஆளடையாள வெளிப்படுத்துகை எதுவும் கிடைக்கப்பெறவில்லை” என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும் ;

(iii) முற்போந்த (இ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில், வாக்குச்சீட்டு உறையின்மீது “நிராகரிக்கப்பட்டது” உள்ளடக்கங்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை” என்ற சொற்களைக் குறித்தல் வேண்டும் ; அத்துடன்

(iv) வாக்குச்சீட்டு உறையில் ஆளடையாள வெளிப் படுத்துகையொன்று அல்லது வாக்குச்சீட்டொன்று காணப்படின் அத்தகைய வெளிப் படுத்துகையை அல்லது வாக்குச்சீட்டை அத்தகைய உறையுடன் இணைத்தல் வேண்டும்; அத்துடன்

அவர் வாக்குச்சீட்டு உறையையும், முற்போந்த (iv) ஆம் உட்பந்தியின் கீழ் அத்தகைய உறையுடன் சேர்த்து இணைக்கப்பட்ட ஆவணம் அல்லது ஆவணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றையும் அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டும்.

(10) இரண்டாம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் "நிராகரிக்கப்பட்டது, உள்ளடக்கங்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை" என்ற சொற்களை மேலுறையின்மீது வாக்கெண்ணும் அலுவலர் குறித்தல் வேண்டும் என்பதுடன் அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் அத்தகைய உறையை இடுதலும் வேண்டும்.

(11) ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தின் பின்பக்கத்தில் அடங்கியுள்ள அறிவுறுத்துரைகளுடன் இணங்கி ஒழுகுவதாக ஒப்பமிடப்பட்டும் சாட்சிப்படுத் தப்பட்டும் இருந்தாலன்றி, ஓர் ஆளடையாள வெளிப்படுத்துகையானது முறைப்படி ஒப்பமிடப்பட்டும் சாட்சிப்படுத்தப்பட்டும் உள்ளதெனக் கருதப்படுதலாகாது.

*வாக்குச்சீட்டு உறை களைத் திறத்தல்*

25. (1) இருபத்திநான்காம் ஒழுங்குவிதியின் கீழான நடவடிக்கைகள் முடிவடைவதன்மேல், வாக்கெண்ணும் அலுவலர், அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடப்பட்ட ஒவ்வொரு வாக்குச்சீட்டு உறையையும் தனித்தனியாகத் திறத்தல் வேண்டும்.

(2) வாக்குச்சீட்டு உறையொன்று வாக்குச்சீட்டு எதனையும் உள்ளடக்கி யிராதவிடத்து, வாக்கெண்ணும் அலுவலர் அவ்வுறையின்மீது "வாக்குச் சீட்டெதுவும் உள்வைக்கப் படவில்லை" என்ற சொற்களைக் குறித்தல் வேண்டுமென்பதுடன், அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் அதனை இடுதலும் வேண்டும்.

(3) வாக்குச்சீட்டு உறையொன்று வாக்குச்சீட்டொன்றைக் கொண்டிருக்கின்ற விடத்து, வாக்கெண்ணும் அலுவலர்–

(அ) அத்தகைய உறையின்மீது குறிப்பிடப்பட்டுள்ள இலக்கமானது அத்தகைய வாக்குச்சீட்டில் குறிப்பிடப்பட்ட அதேபோன்ற இலக்கத்துடன் நேரொத்திருப்பின், அத்தகைய வாக்குச்சீட்டை அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய உறை வாக்குச்சீட்டொன்றைக் கொண்டிருப்பதுடன் அத்தகைய வாக்குச்சீட்டின்மீது குறிப்பிடப்பட்ட இலக்கமானது அத்தகைய உறையின் மீது குறிப்பிடப்பட்ட இலக்கத்துடன் நேரொத்ததாகவிருக்காவிடின் அத்தகைய உறையில் "நிராகரிக்கப்பட்டது" என்ற சொல்லைக் குறித்து, அத்தகைய வாக்குச்சீட்டை அத்தகைய உறையுடன் இணைத்து அவற்றை அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தில் இடுதல் வேண்டும்.

*நிராகரிக்கப்பட்ட வாக்குகளையும், ஆளடையாள வெளிப்படுத்து கைகளையும் இலச்சினையிடுதல்.*

**26**. இருபத்தைந்தாம் ஒழுங்குவிதியின் கீழான நடவடிக்கைகள் முடிவடைவதன் மேல், அஞ்சல் வாக்காளர்களின் நிராகரிக்கப்பட்ட வாக்குகளுக்கான கொள்கலத்தின் உள்ளடக்கங்களையும் ஆளடையாள வெளிப்படுத்துகைக்கான கொள்கலத்தின் உள்ளடக்கங்களையும் வாக்கெண்ணும் அலுவலர், இரு தனித்தனியான பொதிகளில் வைத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பொதிகளை இலச்சினையிடுதலும் வேண்டும்.

*வாக்கெண்ணுதல்.*

**27**. (1) வாக்கெண்ணும் அலுவலர் வாக்குகளை எண்ணத் தொடங்கு முன்னர், அவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், எத்தகைய வாக்கெண்ணும் முகவர்கள் சமுகமாயுள்ளார்களோ அத்தகைய வாக்கெண்ணும் முகவர்களின் முன்னிலையில் அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடப்பட்ட வாக்குச்சீட்டுகளை வெளியே எடுத்து, அத்தகைய கொள்கலத்திலுள்ள அத்தகைய சீட்டுகளை எண்ணி, எண்ணிக்கையைப் பதிதல் வேண்டும்.

(2) அஞ்சல் வாக்காளர்களின் வாக்குச்சீட்டுகளுக்கான கொள்கலத்தில் இடப்பட்ட வாக்குச்சீட்டுகளிலுள்ள வாக்குகளை எண்ணுதலில் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவினதும், 53 ஆம் 54 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

வாக்கெண்ணுதலை முடிவுறுத்தல்.

**28.** வாக்கெண்ணுதல் முற்றுப்பெற்றதன்மேல், உடனடியாக, வாக்கெண்ணும் அலுவலரானவர் இலச்சினையிடப்பட்ட பொதிகளில் -

(அ) எண்ணப்பட்ட வாக்குச்சீட்டுகளையும் ;
(ஆ) நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகளையும் ;
(இ) ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றி இச்சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தயாரிக்கப்பட்ட எழுத்திலான கூற்றையும் ;
(ஈ) 27(1)ஆம் ஒழுங்குவிதியின் கீழான வாக்கெண்ணுதல் பற்றிய பதிவையும் ;
(உ) சட்டத்தின் 53 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி எழுதி ஆக்கப்பட்ட கூற்றையும் ; அத்துடன்
(ஊ) இருபத்தாறாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள இலச்சினையிடப்பட்ட இரு பொதிகளையும்

தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

[பி26, 1988 இன் 15]

**இவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணை**

**படிவம் அ**

***3 ஆம் ஒழுங்கு விதி***

***ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கான விண்ணப்பம்***

............ஆம் இலக்கத் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு, (தேர்தல் மாவட்டத்தின் இலக்கத்தையும் பெயரையும் தருக.)

..................................................... ஆகிய யான், மேற்சொல்லப்பட்ட தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பில் .................................. என, எனது பெயர் காணப்படுகின்றதென இத்தால் வெளிப்படுத்துகின்றேன். எனது பெயர் பின்வரும் தொடர் இலக்கத்திலும், தெருவின் அல்லது கிராமத்தின் பெயரிலும் வாக்கெடுப்புப் பிரிவிலும் அத்துடன் வாக்கெடுப்பு மாவட்டத்திலும் காணப்படுகின்றது:-

வாக்கெடுப்புப் பிரிவு எழுத்து :..............................

வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் :...............................

எனது பெயரின் தொடர் இலக்கம் :............................

*(1) எனது தொழிலின், அதாவது-

[பி26, 1988 இன் 15]

*(அ) இலங்கைத் தரைப்படையின் / இலங்கைக் கடற்படையின் / இலங்கை வான்படையின் உறுப்பினரொருவராக ;

*(ஆ) பொலிசுத் திணைக்களத்தில் / மறியற்சாலைகள் திணைக்களத்தில்/ இலங்கை அரசாங்க புகையிரதச் சேவையில் / அஞ்சல் திணைக்களத்தில் / தொலைத் தொடர்புகள் திணைக்களத்தில்/இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையில் /........................ ................ பிராந்தியப் போக்குவரத்துச் சபையில் ஓர் அலுவலராக அல்லது சேவையாளராக;

*(இ) தேர்தலுடன் தொடர்புபட்ட கடமைகளைப் புரிவதற்கு நியமிக்கப்பட்டுள்ள* /நியமிக்கப்படும் சாத்தியமுள்ள பகிரங்க சேவையின் ஓர் அலுவலராக அல்லது சேவையாளராக ;

*(ஈ) அத்தகைய தேர்தலுடன் தொடர்புபட்ட கடமைகளைப் புரிவதற்கு நியமிக்கப்பட்டுள்ள*/ நியமிக்கப்படும் சாத்தியமுள்ள இலங்கை மத்திய வங்கியின் ஓர் அலுவலராக அல்லது சேவையாளராக ;

எனது தொழிலின் குறிப்பான சந்தர்ப்பங்களின் காரணமாக,

*(2) .............. தேர்தல் மாவட்டத்தில் எனது வேட்பாண்மை காரணமாக, (தேர்தல் மாவட்ட இலக்கத்தையும் பெயரையும் தருக)

எனக்குக் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் நேரடியாக வாக்களிக்க இயலாதுள்ளது*/இயலாது போகும் சாத்தியமுள்ளது என்பதால் மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல் மாவட்டத்துக்கான உறுப்பினர்களின் தேர்தலில் ஓர் அஞ்சல் வாக்காளராகக் கணிக்கப்படுவதற்கு இத்தால் நான் விண்ணப்பிக்கின்றேன்.

எனது வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் அனுப்பப்பட வேண்டிய முகவரி பின்வருமாறு :-

| | |
|---|---|
| கீழே காணப்படும் குறிப்புக்கிணங்க | ..................................... |
| ஓர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலராகப் | .................................... |
| பணிபுரிவதற்கு விண்ணப்பகாரர் | ..................................... |
| உரித்துடையவராக இல்லாவிடின், | ..................................... |
| விண்ணப்பகாரரின் அத்தாட்சிப் | ..................................... |
| படுத்தும் அலுவலரின் அலுவலக | ..................................... |
| முறையான பதவிப் பெயரையும் | |
| முகவரியையும் குறிப்பிடுக. | |

| | |
|---|---|
| விண்ணப்பகாரர் ஓர் அத்தாட்சிப் | ..................................... |
| படுத்தும் அலுவலராகப் பணி | .................................... |
| புரிவதற்கு உரித்துடையவரெனின், | ..................................... |
| விண்ணப்பகாரரின் அலுவலக | ..................................... |
| முறையான பதவிப்பெயரையும் | ..................................... |
| முகவரியையும் குறிப்பிடுக. | |

......................................................
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

தேதி : ................................

இவ்விண்ணப்பத்தில் என்னால்/அவரால் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்துக்காக எனக்கு*/விண்ணப்பக்காரருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் நேரடியாக வாக்களிக்க நான் இயலாதவனாக இருக்கின்றேன்*/எனக்கு இயலாதுபோகும் சாத்தியமுள்ளது*/விண்ணப்பக் காரர் இயலாதவராக இருக்கின்றார்* /விண்ணப்பக்காரருக்கு இயலாது போகும் சாத்தியமுள்ளது என நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எனது அலுவலக முறையான பதவிப்பெயரும் முகவரியும் சரியானவை.

தேதியும் அலுவலக முறையான இலச்சினையும் :................................

......................................................
அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின்*/
விண்ணப்பக்காரரின் ஒப்பமும்
பதவிப் பெயரும்.

*பொருத்தமற்ற சொற்களை நீக்கிவிடுக.

**குறிப்பு**

***1***. விண்ணப்பம் ஒவ்வொன்றும், விண்ணப்பக்காரர் தேருநரொருவராகப் பதிவுசெய்யப்பட்டிருக்கும் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தேர்தலொன்றை நடத்தும்படி தேவைப்படுத்தும் பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட தேதியின் பின்னர் ஏழாம் நாளுக்கு முற்படாதும் பதினான்காம் நாளுக்கு பிற்படாதும் செய்யப்படுதல் வேண்டும்.

***2***. விண்ணப்பம் ஒவ்வொன்றும் முறைப்படி நிரப்பப்படுதல் வேண்டும் ; அல்லாவிடில் தெரிவத்தாட்சி அலுவலரால் நிராகரிக்கப்படுவதற்கிலக்காக இருக்கும்.

***3***. *ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் தெரிவத்தாட்சி அலுவலரின் முடிபு பற்றி அறிவிக்கப்படுவர்.*

***4***. *எவ்விண்ணப்பக்காரரின் விண்ணப்பமானது அனுமதிக்கப்பட்டுள்ளதோ அவ்விண்ணப்பக்காரர் எவருக்கும் அவர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரொருவராகப் பணிபுரிய உரித்துடையவராக இருந்தால் அவரின் விண்ணப்பத்தில் குறிக்கப் பட்டிருப்பதான அவரின் பெயருக்கும், முகவரிக்கும் அல்லது அவர் அவ்வாறு உரித்துடையவராக இல்லாவிடின் எந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலக முறையான பதவிப் பெயரும் முகவரியும் அவரின் விண்ணப்பத்திற் குறிப்பிடப் பட்டுள்ளனவோ அந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் அனுப்பப்படும்.*

***5***. *“அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்” என்ற சொல்லமைப்பு–*

(அ) *இலங்கைத் தரைப்படையின் அல்லது இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் உறுப்பினரொருவராக இருப்பவரான எவரேனும் விண்ணப்பக்காரர் தொடர்பில்–*

(i) *அத்தரைப்படையின் ஏவுநராக அல்லது அக்கடற்படையின் தலைவனாக அல்லது அவ்வான்படையின் ஏவுநராக அல்லது விண்ணப்பக்காரர் கடமை புரியும் பிரிவின் அல்லது அணியின் உடன்மேலாகப் பொறுப்பைக் கொண்டிருக்கும் அலுவலராக இருப்பின், விண்ணப்பக்காரர் எனப் பொருளாகும் ; அல்லது*

(ii) *அவர், இவ் உட்பந்தியின்* (i) *ஆம் வாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவராக இல்லாதிருப்பின் விண்ணப்பக்காரர் கடமை புரியும் பிரிவின் அல்லது அணியின் உடன்மேலாகப் பொறுப்பைக் கொண்டிருக்கும் அலுவலரெனப் பொருளாகும் ;*

(ஆ) *பகிரங்க சேவையில் அல்லது இலங்கை மத்திய வங்கியில் அலுவலரொருவராக அல்லது சேவையாளரொருவராக இருப்பவரான எவரேனும் விண்ணப்பக்காரர் தொடர்பில்.–*

(i) *ஏதேனும் அலுவலகத்தின் உடன்மேலாகப் பொறுப்பைக் கொண்டிருக்கும் அலுவலராகவிருப்பின் விண்ணப்பக்காரர் எனப் பொருளாகும் ; அல்லது*

(ii) *அவர் இவ்வுட்பந்தியின் (1) ஆம் வாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவராக இல்லாதிருப்பின் விண்ணப்பக்காரர் கடமைபுரியும் அலுவலகத்தின் உடன் மேலாகப் பொறுப்பைக் கொண்டிருக்கும் அலுவலரெனப் பொருளாகும் ;*

(இ) *பொதுத் தேர்தலொன்றில் வேட்பாளரொருவராக இருப்பவரான எவரேனும் விண்ணப்பக்காரர் தொடர்பில், விண்ணப்பக்காரர் தேருநர் ஒருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்துக்கான தெரிவத்தாட்சி அலுவலர் எனப் பொருளாகும்.*

**படிவம் ஆ**

**ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவம்**

**படிவத்தின் முன்பக்கம்**

***6* ஆம் ஒழுங்கு விதி**

*வாக்குச்சீட்டின் தொடர் இலக்கம்* ..............................
*(தெரிவத்தாட்சி அலுவலரினால் உட்புகுத்தப்படுதல் வேண்டும்.).*

**எனது ஒப்பத்துக்குச் சாட்சிக்காரரொருவராக உள்ளவரான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் மேற்பார்த்து, மேலுள்ள தொடர் இலக்கத்தைக் கொண்ட வாக்குச் சீட்டும் அத்தகைய*

*வாக்குச்சீட்டைக் கொண்ட உறையும் (இவை இப்பொழுது எனக்குத் தரப்பட்டுள்ளன) எவ்வாளுக்கு அனுப்பப்பட்டதோ அவ்வாள் நானே என இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.*

***மேலே உள்ளவாறு இலக்கமிடப்பட்ட வாக்குச்சீட்டும் அத்தகைய வாக்குச் சீட்டைக் கொண்ட உறையும் (இவை இரண்டையும் நான் இப்பொழுது முன்வைக்கின்றேன்) நேரடியாக எவ்வாளுக்கு அனுப்பப்பட்டனவோ அவ்வாள் நானே என இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.*

............................................

*வாக்காளரின் ஒப்பம்.*

*தேதி : ...........................*

*மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆளுக்கு அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் என்ற எனது தன்மையில் எனது மேற்பார்வையின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டும் உறையும் அனுப்பப்பட்டன. வேட்பாளரொருவராய் இருப்பவரான*/எனது பொறுப்பிலுள்ள பிரிவில்*/அணியில்*/அலுவலகத்தில் தொழிலாற்றுகின்ற மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆளைத் தனிப்பட்ட முறையில் நான் அறிவேன்.*

*வாக்காளருக்குக் கையளிக்கப்பட்ட வாக்குச்சீட்டானது எனது அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வாக்களிப்பு அறையில் அவரால் உடனடியாகக் குறியீடு செய்யப்பட்டது. குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டானது வாக்காளரால் வாக்குச்சீட்டு உறைக்குள் இடப்பட்டு எனது முன்னிலையிலும் வாக்காளரின் முன்னிலையிலும் உறையானது இலச்சினையிடப்பட்டது.*

*மேலேயுள்ள ஆளடையாள வெளிப்படுத்துகையானது வாக்களிப்பதற்கு முன்னர் வாக்காளரால் எனது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது.*

***எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான மேலே பெயர் குறிப்பிடப் பட்ட ஆளானவர், மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சீட்டையும் உறையையும் எனக்குக் காட்டியுள்ளார் என்பதுடன், மேலே உள்ள வெளிப்படுத்துகையை எனது முன்னிலையில் ஒப்பமிட்டும் உள்ளார்.*

............................................

*சாட்சியின் ஒப்பமும், பதவிப்பெயரும்*

*தேதியும் அலுவலக முறையான இலச்சினையும் : ........................... (இப்படிவத்தின் பின்பக்கத்திலுள்ள அறிவுறுத்துரைகளைப் பார்க்க)*

**பொருத்தமில்லாவிடின் நீக்கிவிடுக.*

***வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் நேரடியாக எவ்வாக்காளர் களுக்கு அவர்களின் அலுவலக முறையான பதவிப்பெயரினதும் முகவரியினதும் கீழ் அனுப்பப்பட்டனவோ அந்த வாக்காளர்கள் தொடர்பாக மட்டுமே ஏற்புடையதாகும்; அத்துடன் ஏற்புடையதல்லாவிடத்து நீக்கிவிடப்படுதலும் வேண்டும். அத்தகைய வாக்காளர்கள் தொடர்பிலான வெளிப்படுத்துகைக்கான சாட்சி மறுபக்கத்திலுள்ள அறிவுறுத்துரைகளில் குறித்துரைக்கப்பட்டவராக இருப்பார்.*

**படிவத்தின் பின்பக்கம்**

***அ.*** *வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் எவ்வாக்காளர் தொடர்பில் அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து அனுப்பப்பட்டுள்ளனவோ அவ்வாக்காளருக்கான அறிவுறுத்துரைகள்.*

***1.*** *எவ்வாக்காளர் தொடர்பில் வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் அவரின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மேற்பார்த்து அனுப்பப் பட்டுள்ளனவோ அவ்வாக்காளர் வெளிப்படுத்துகையின் மீது ஒப்பமிடுவதற்கு முன்னர்-*

(i) *அத்தகைய அலுவலரின் மேற்பார்ப்பின் கீழ் வாக்காளருக்கு ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவமும் வாக்குச்சீட்டும் அனுப்பிவைக்கப்பட்ட உறையைப் பார்த்தல் வேண்டும்;*

(ii) *ஆளடையாள வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வாக்குச்சீட்டின் தொடர் இலக்கமானது, அவருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குச்சீட்டில் காணப்படுகின்ற அதே இலக்கத்துடன் ஒத்ததாக உள்ளதா எனப் பார்த்தல் வேண்டும்.*

*வாக்காளரானவர், அதன்பின்னர் அவரின் சாட்சியாகப் பணி புரிய வேண்டிய அத்தகைய அலுவலரின் முன்னிலையில் வெளிப்படுத்துகையை ஒப்பமிடுதல் வேண்டும்.*

***2***. *வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு.*

[*பி26, 1988 இன் 15*]

***3***. *வாக்காளர் , வாக்குச் சீட்டொன்றின் வலதுகைப்பக்கத்தில் அந்நோக்கத்துக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெற்றிடத்தில், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் வாக்களிக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் பெயருக்கும் சின்னத்துக்கும் எதிரே அத்தகைய வாக்குச்சீட்டைப் புள்ளடியால் ''X'' என இவ்வாறு குறியீடு செய்து வாக்களித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்சியால் அல்லது குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று வேட்பாளர்களுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்குத் தமது முந்துரிமைகளை அத்தகைய ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கத்தை நேரொத்த தொடரிலக்கத்தை உள்ளடக்கிய கூட்டில் புள்ளடியொன்றை இடுவதன் மூலம் சுட்டிக்காட்டலாம்.*

***4***. *வாக்காளர், அவர் எவ்வாறு வாக்களித்துள்ளார் என்பதைப் பார்க்க எவரேனும் ஆளை அனுமதித்தலாகாது.*

***5***. *வாக்காளர் வாக்களித்ததன் பின்னர் உடனடியாக உள்ளே வைக்க வாக்குச்சீட்டை மடித்து எவ்வுறையின் மீது ''வாக்குச்சீட்டு உறை'' என்ற சொற்கள் அச்சிடப்பட்டுள்ளனவோ, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறிய அவ்வுறையை அவரின் சாட்சியிடமிருந்து பெற்று வாக்குச்சீட்டின் முன்பக்கத்தைக் காட்டாது குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டை அதில் இட்டு அவ்வுறையை ஒட்டுதலும் வேண்டும். அதனை அடுத்து வாக்காளரினதும் அவரது சாட்சியினதும் முன்னிலையில் உறையானது இலச்சினையிடப்படுதல் வேண்டும்.*

*வாக்காளர், அதன்பின்னர் இலச்சினையிடப்பட்ட வாக்குச்சீட்டு உறையை அவரது பூர்த்தி செய்யப்பட்ட ஆளடையாள வெளிப்படுத்துகையுடன் சேர்த்து தெரிவத்தாட்சி அலுவலருக்கு முகவரியிடப்பட்ட மற்றைய பெரிய உறையிலிட்டு, உறையை ஒட்டித் தாமதமின்றி அனுப்பப்படுவதற்காக அவரின் சாட்சியிடம் கொடுத்தல் வேண்டும்.*

***6***. *அ. ஓர் அஞ்சல் வாக்குச்சீட்டானது, நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு நாளில் வாக்கெடுப்பு முடிவடையுமுன்னர் தெரிவத்தாட்சி அலுவலரை அடையுமாறு திருப்பியனுப்பப்பட்டாலன்றியும், முறையாக ஒப்பமிடப்பட்டதும் சாட்சிப்படுத்தப்பட்டதுமான ஆளடையாள வெளிப்படுத்துகையுடன் சேர்த்து அனுப்பிவைக்கப்பட்டாலன்றியும் முறையாகத் திருப்பியனுப்பி வைக்கப்பட்டதாகக் கருதப்படுதலாகாது.*

ஆ. *வாக்குச்சீட்டும் மற்றைய ஆவணங்களும் எவ்வாக்காளர் தொடர்பில் அவரின் அலுவலக முறையான பதவிப் பெயரினதும் முகவரியினதும் கீழ் நேரடியாக அனுப்பப்பட்டனவோ அவ்வாக்காளருக்கான அறிவுறுத்துரைகள்.*

*1*. *வாக்காளர் ஆளடையாள வெளிப்படுத்துகையை ஒப்பமிட முன்னர், அத்தகைய வெளிப்படுத்துகையை அவர் எவ்வாளுக்கு முன்னால் ஒப்பமிடவேண்டுமோ அவ்வாளுக்கு-*

(அ) *அத்தகைய வெளிப்படுத்துகையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதான அதே இலக்கத்தைக் கொண்டிருக்கின்ற வாக்குச்சீட்டைக் காட்டுதல் வேண்டும்; அத்துடன்*

(ஆ) *வாக்காளர் ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவமும் வாக்குச்சீட்டும் கிடைக்கப்பெற்ற உறையைக் காட்டுதல் வேண்டும்.*

2. பின்வருபவராக இருக்கவேண்டிய ஒரு சாட்சியின் முன்னிலையில் அதாவது-

(அ) வாக்காளரானவர் இலங்கைத் தரைப்படையின், இலங்கைக் கடற்படையின் அல்லது இலங்கை வான்படையின் உறுப்பினரொருவராக இருப்பின், அத்தகைய தரைப்படையின், கடற்படையின் அல்லது வான்படையின் ஆணைபெற்ற அலுவலரொருவரின் ;

(ஆ) வாக்காளரானவர் பகிரங்க சேவையில் அல்லது இலங்கை மத்திய வங்கியில் அலுவலரொருவராக அல்லது சேவையாளரொருவராக இருப்பின், அத்தகைய சேவையின் உயர் அலுவலரொருவரின் அல்லது வாக்காளருக்கு உயர் அலுவலர் எவரும் இல்லாவிடின் அத்தகைய சேவையின் வேறெவரேனும் அலுவலரொருவரின்,

முன்னிலையில் வாக்காளர் ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தை ஒப்பமிடல் வேண்டும்.

3. வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு.

4. வாக்காளர் , வாக்குச் சீட்டொன்றின் வலதுகைப் பக்கத்தில் அந்நோக்கத்துக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெற்றிடத்தில், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அவர் வாக்களிக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் பெயருக்கும் சின்னத்துக்கும் எதிரே, அத்தகைய வாக்குச்சீட்டைப் புள்ளடியால் "X"என இவ்வாறு குறியீடு செய்து வாக்களித்தல் வேண்டும்.

5. வாக்காளர், அவர் எவ்வாறு வாக்களித்துள்ளார் என்பதைப் பார்க்க எவரேனும் ஆளை அனுமதித்தலாகாது.

6. வாக்காளர், வாக்களித்ததன் பின்னர் உடனடியாக உள்ளே வைக்கப்பட்டிருந்த எவ்வுறையின்மீது "வாக்குச்சீட்டு உறை" என்ற சொற்கள் அச்சிடப்பட்டுள்ளனவோ அச்சிறிய உறையில் குறியிடப்பட்ட வாக்குச்சீட்டை இட்டு அதனை ஒட்டுதலும் வேண்டும். அதன்பின்னர், உறையானது வாக்காளரதும் சாட்சியினதும் முன்னிலையில் இலச்சினையிடப்படுதல் வேண்டும். அதன்பின் வாக்காளர் இலச்சினையிடப்பட்ட வாக்குச்சீட்டு உறையை ஆளடையாள வெளிப்படுத்துகையுடன் சேர்த்து தெரிவத்தாட்சி அலுவலருக்கு முகவரியிடப்பட்டதும் உள்ளே வைக்கப்பட்டிருப்பதுமான மற்றைய பெரிய உறையிலிட்டுத் தாமதமின்றி அஞ்சல் மூலம் அவற்றை அனுப்புதல் வேண்டும். வாக்காளர் வாக்குச்சீட்டை உடனேயே திருப்பி அனுப்பிவைக்காவிடில் எண்ணப்படுவதற்கெனச் சேர்ப்பதற்கான காலம் தவறிவிடும்.

7. ஓர் அஞ்சல் வாக்குச்சீட்டானது, நியமிக்கப்பட்ட வாக்கெடுப்பு நாளில் வாக்கெடுப்பு முடிவடையும் முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரை அடையுமாறு திருப்பியனுப்பி வைக்கப்பட்டாலன்றியும், முறையாக ஒப்பமிடப்பட்டதும் சாட்சியப்படுத்தப்பட்டதுமான ஆளடையாள வெளிப்படுத்துகையுடன் சேர்த்து அனுப்பிவைக்கப்பட்டாலன்றியும் முறையாகத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டதாகக் கருதப்படுதலாகாது.

**படிவம் இ**

*9 (1) ஆம் ஒழுங்குவிதி*

**இரகசியம் பேணுதற்கான வெளிப்படுத்துகைப் படிவம்**

*எனக்கு வாசித்துக் காட்டப்பட்டவையான 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையிலுள்ள ஒழுங்குவிதிகளின் 9 ஆம் ஒழுங்கு விதியின் (3) ஆம் பந்தியால் தடைசெய்யப்பட்டுள்ள எதையும் இந் நடவடிக்கைகளில் நான் செய்யமாட்டேன் என நான் பயபக்தியாக வாக்குறுதி செய்து வெளிப்படுத்துகின்றேன்.*

..............................................

*வெளிப்படுத்துகை செய்பவரின் ஒப்பம்.*

.........................................

*எவ்வாளின் முன்னிலையில்*
*வெளிப்படுத்துகை செய்யப்படுகின்றதோ*
*அவ்வாளின் ஒப்பம்.*

*தேதி : ...........................*

**குறிப்பு**.- *எவ்வாளின் முன்னிலையில் வெளிப்படுத்துகையானது செய்யப்படுகின்றதோ அவ்வாளினால், வெளிப்படுத்துகை செய்பவருக்கு குறிப்பீடு செய்யப்பட்ட பந்தி வாசித்துக்காட்டப்படுதல் வேண்டும்.*

**முன்றாம் அட்டவணை**

[*30 ஆம் பிரிவு* ]

[*பி27, 1988 இன் 15*] **ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்துக்கு வெளியேயும் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும் ஒவ்வொரு வாக்களிக்கும் அறையிலும் வெளிக்காட்டிவைக்கப்பட வேண்டியதான வாக்காளர் ஒருவர் வாக்களிப்பதில் வழிகாட்டுவதற்கான பணிப்புகளைக் கொண்ட படிவம்**

*ஒவ்வொரு வாக்காளரும், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றுக்கு அல்லது சுயேச்சைக் குழுவொன்றுக்குக் கொடுக்கப்படக்கூடியதான ஒரு வாக்கைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*வாக்காளர் ஒவ்வொருவரும் மறைவுக்கூடு ஒன்றினுள் சென்று, வாக்குச்சீட்டொன்றின் வலது கைப்பக்கத்தில் அந்நோக்கத்துக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெற்றிடத்தில், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் பெயருக்கும் சின்னத்துக்கும் அல்லது சுயேச்சைக் குழுவின் இலக்கத்துக்கும் சின்னத்துக்கும் அவர் வாக்களிக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் பெயருக்கும் சின்னத்துக்கும் அல்லது சுயேச்சைக் குழுவின் இலக்கத்துக்கும் சின்னத்துக்கும் எதிரே அத்தகைய சீட்டைப் புள்ளடியால் ''X'', என இவ்வாறு குறியிட்டு வாக்களித்தல் வேண்டும். அத்துடன், அத்தகைய கட்சியால் அல்லது குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று வேட்பாளர்களுக்கு மேற்படாத வேட்பாளர்களுக்குத் தமது முந்துரிமைகளை அத்தகைய ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரித்தொதுக்கப்பட்ட தொடரிலக் கத்துக்கு நேரொத்த தொடரிலக்கத்தை உள்ளடக்கிய கூட்டின்மீது வாக்குச்சீட்டின் அடியில் ''X'', எனக் குறியீடொன்றை இடுவதன் மூலம் சுட்டிக்காட்டலாம்.*

*தலைமைதாங்கும் அலுவலருக்கு, சீட்டின் முகப்புறத்தை எவருக்கும் காட்டாது பின்பக்கத்திலுள்ள அலுவலகமுறையான குறியீட்டைக்காட்டி, அலுவலக முறையான குறியீட்டைக் காட்டும் வண்ணமாக வாக்காளரானவர் அதன்பின்னர் வாக்குச்சீட்டை மடித்து வாக்குச்சீட்டுப் பெட்டியினுள் சீட்டைப் போடுதல் வேண்டுமென்பதுடன் உடனடியாக வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து சென்றகலுதலும் வேண்டும்.*

வாக்காளர் தற்செயலாக வாக்குச்சீட்டொன்றைப் பழுதாக்கினால் அதை அவர் தலைமை தாங்கும் அலுவலருக்கு மீளக்கொடுக்கலாம் ; தலைமை தாங்கும் அலுவலர் அத்தகைய தற்செயல் பற்றித் திருப்திப்படின், அவருக்கு இன்னொரு வாக்குச்சீட்டை வழங்குவார்.

வாக்காளரானவர் -

(i) ஒன்றுக்கும் அதிகமான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு வாக்களிப் பாராயின் ; அல்லது

(ii) ஒன்றுக்கும் அதிகமான சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிப்பாராயின் ; அல்லது

(iii) ஒன்றோ அல்லது அதற்கதிகமானதோ ஆன அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளதும் சுயேச்சைக் குழுக்களதும் சேர்க்கையொன்றுக்கு வாக்களிப்பாராயின் ; அல்லது

(iv) அவரைப் பின்னராக அடையாளம் காணக்கூடிய ஏதேனும் குறியீட்டை வாக்குச்சீட்டின்மீது இடுவாராயின்,

அவரது வாக்குச்சீட்டு வறிதாகும் என்பதுடன், எண்ணப்படவும் மாட்டாது.

## நாலாம் அட்டவணை

### பாராளுமன்றத் தேர்தல் மனு விதிகள் 1981

*1*. இவ்விதிகள், *1981* ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல் மனு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

*2*.இவ்விதிகளில் சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலொழிய- பொருள் கோடல்

''ஆணையாளர்'' என்பது, அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட தேர்தல்கள் ஆணையாளர் என்று பொருளாகும்;

''நீதிமன்றம்'' என்பது, தேர்தல் நீதிமன்றம் என்று பொருளாகும்;

''பதிவாளர்'' என்பது, மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பதிவாளர் என்று பொருளாகும்; அத்துடன்

''சட்டம்'' என்பது, 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் என்று பொருளாகும்.

*3*. (1) தேர்தல் மனுவொன்றைச் சமர்ப்பித்தலானது, அதனைப் பதிவாளரின் அலுவலகத்தில் ஒப்படைத்தல் மூலம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், பதிவாளர் அல்லது அவரது திணைக்களத்தின் எந்த அலுவலரிடம் மனு ஒப்படைக்கப்பட்டதோ அந்த அலுவலர், அவ்வாறு தேவைப்படுத்தப்பட்டால் பின்வரும் படிவத்திலான பற்றுச்சீட்டொன்றைக் கொடுத்தலும் வேண்டும்:- மனுவைச் சமர்ப்பிக்கும் முறை.

...................................... தேர்தல் மாவட்டத்தின் உறுப்பினர்களான அ, ஆ, இ, ஈ ஆகியோரின் தேர்தலைத் தீண்டுவதான, (மனுதாரர்களின் பெயர்களை உட்புகுத்துக)........................................... என்பவர்களால் ஒப்பமிடப்பட்டதென்று கருதப்படும் மனுவொன்றை, மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகத்தில், 20 .....................ஆம் ஆண்டு ..................... மாதம் ..................... ஆம் நாளன்று பெற்றுக்கொண்டேன்.

........................................................
பதிவாளர்.

(2) மனுவுடன் அதனது இரண்டு பிரதிகளும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

தேர்தல் மனுவின் படிவம்.

*4*. பின்வரும் படிவம் அல்லது பின்வருவது போன்ற பயனுள்ள ஒரு படிவம் போது மானதாதல் வேண்டும்.-

**இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றம்**

*1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்*

*20 ......... ஆம் ஆண்டின் ......... மாதம் .........ஆம் நாளன்று நடாத்தப்பட்ட (தேர்தல் மாவட்டத்தைக் கூறுக)* ...................ஆன தேர்தல்.

பெயர்கள் ஒப்பமிடப்பட்டுள்ள .................. இடத்தைச் சேர்ந்த "க"வின் (அல்லது விடயத்திற்கேற்றாற்போல .................. இடத்தைச் சேர்ந்த "க" வினதும் .................. இடத்தைச் சேர்ந்த "ங" வினதும்) மனு :

*(1)* உமது மனுதாரர் "க" மேலே சொல்லப்பட்ட தேர்தலில் தெரிந்தனுப்பப்பட அல்லது தேர்ந்தெடுக்கப்பட உரிமையொன்றைக் கொண்டிருந்தவரெனக் கோருகின்ற ஆளொருவராவார். அல்லது மேலே சொல்லப்பட்ட தேர்தலில் வேட்பாளர் ஒருவராகவிருந்தவராவர். அத்துடன், உமது மனுதாரர் ங (இங்கே அதே முறையில் ஒவ்வொரு மனுதாரரினதும் உரித்தைக் கூறுக).

*(2)* தேர்தலானது, 20 .......... ஆம் ஆண்டின் .................. மாதம் ..........ஆம் நாளன்று நடாத்தப்பட்டதென்றும், அப்போது **அ, ஆ, இ, ஈ** என்பவர்களும் **உ, ஊ** என்பவர்களும் வேட்பாளர்களாகவிருந்தனர் என்றும், தெரிவத்தாட்சி அலுவலர் **அ, ஆ, இ, ஈ** என்பவர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தெரிந்தனுப்பியுள்ளார் என்றும் உமது மனுதாரர்கள் கூறுகின்றனர்.

*(3)* அத்துடன், உமது மனுதாரர்கள் (இங்கே மனுதாரர்கள் தங்கியுள்ள நிகழ்வுகளையும் ஏதுக்களையும் கூறுக) பின்வருமாறு கூறுகிறார்கள்.

இக்காரணங்களுக்காக, சொல்லப்பட்ட **அ, ஆ, இ, ஈ** ஆகியோர் முறையாகத் தேர்ந்தெடுக்கப்படவோ தெரிந்தனுப்பப்படவோ இல்லை என்றும், தேர்தல் வறிதானது என்றும் (அல்லது விடயத்திற்கேற்றாற்போல் **உ, ஊ** என்போர் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிந்தனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்றும்) தீர்மானிக்கப்பட வேண்டும் என மனுதாரர்கள் இறைஞ்சிக் கேட்கின்றனர்.

(ஒப்பமிடப்பட்டது) க ................................
ங ....................................

ஒரே தேர்தல் தொடர்பாக ஒன்றிற்கு மேற் பட்ட மனு சமர்ப் பிக்கப்படுமிடத்து.

**5**. ஒரே தேர்தல் தொடர்பாகவோ அல்லது ஒரே தெரிந்தனுப்புகை தொடர்பாகவோ ஒன்றிற்கு மேற்பட்ட மனுக்கள் சமர்ப்பிக்கப்படுமிடத்து, அத்தகைய எல்லா மனுக்களும் அவை சம்பந்தமான விசாரணையைப் பொறுத்தவரை, ஒரு மனுவாகவே கையாளப்படுதல் வேண்டும்.

வெற்றிபெறாத வேட்பாளரினால் ஆசனம் கோரப் படுமிடத்து ஆட்சேபிக்கப்பட்ட வாக்குகளின் நிரல்.

**6**. மனுதாரரொருவர் வெற்றிபெறாத வேட்பாளர் ஒருவருக்காக ஆசனத்தைக் கோரும்போது, தேர்தல் அல்லது தெரிந்தனுப்புகை பற்றி முறைப்பாடு செய்யும் அல்லது எதிர்வாதம் செய்யும் கட்சிக்காரர், விளக்கத்துக்கென நியமிக்கப்பட்ட நாளுக்கு ஆறு நாட்கள் முன்னதாக, ஆட்சேபிப்பதற்கு முன்னப்பட்டுள்ள வாக்குகளினதும் அத்தகைய வாக்கொவ்வொன்றும் எத்தலைப்புக்களின் கீழ் ஆட்சேபிக்கப்படுகின்றதோ அத்தலைப்பு களினதும் நிரலொன்றைப் பதிவாளரிடமும், விடயத்திற்கேற்றாற்போன்று மனுதாரர் களினாலும் எதிர்வாதிகளினாலும் ஏதேனும் முகவரிகள் கொடுக்கப்பட்டிருப்பின் அம்முகவரிகளிலும் ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன், பதிவாளர், அத்தகைய நிரல்களின் அலுவலகப் பிரதிகளை சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிக்காரர்களும் பார்வையிடுவதற்கு அனுமதித்தலும் வேண்டும் ; அத்துடன், நிரலினைத் திருத்துவதற்காகவும் விசாரணையை ஒத்திவைப்பதற்காகவும் வழக்குச் செலவைக் கொடுப்பதற்காகவும் கட்டளையிடப்படக் கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீதும் நீதிமன்றத்தின் அனுமதியுடனன்றியும் ஏதேனும் வாக்கின் செல்லுபடியாந் தன்மைக்கு எதிராகவோ அன்றி நிரலில் குறித்துரைக்கப்படாத ஏதேனும் ஆட்சேபனையின் தலைப்பின் மீதோ சான்றெதுவும் கொடுக்கப்படுதல் ஆகாது.

7. தகாத தெரிந்தனுப்புகையொன்று பற்றி முறையீடு செய்து எவரேனும் ஆளுக்கென அந்த ஆசனத்தை உரியதெனக் கோருபவரான மனுவொன்றின் எதிர்வாதி, அத்தகைய ஆளின் தேர்தல் தகாததென எண்பிப்பதற்கு சான்றை நெறிப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய விடயத்தில் அத்தகைய எதிர்வாதியானவர், விளக்கத்திற்கென நியமிக்கப்பட்ட நாளுக்கு ஆறுநாட்கள் முன்னதாக அவர் தாம் தங்கியிருக்க முன்னியுள்ள தேர்தல் பற்றிய ஆட்சேபனைகளைக் கொண்ட நிரலொன்றை பதிவாளரிடமும், மனுதாரரால் முகவரி ஏதேனும் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த முகவரியிலும் ஒப்படைத்தலும் வேண்டும்; அத்துடன், பதிவாளர் அத்தகைய நிரல்களின் அலுவலகப் பிரதிகளை சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிக்காரர்களும் பார்வையிடுவதற்கு அனுமதித்தல் வேண்டும்; அத்துடன், நிரலினைத் திருத்துவதற்காகவும் விசாரணையை ஒத்திவைப்பதற்காகவும் வழக்குச் செலவைக் கொடுப்பதற்காகவும் கட்டளையிடப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீதும் நீதிமன்றத்தின் அனுமதியுடனன்றியும் நிரலில் குறித்துரைக்கப்படாத, தேர்தல் பற்றிய ஆட்சேபனை எதனையும் பற்றிச் சான்றெதுவும் எதிர்வாதியினால் கொடுக்கப்படுதலாகாது.

எதிர்குற்றச்சாட்டு வழக்கில் ஆட்சேபனைகளின் நிரல்.

8. மனுதாரர் அல்லது மனுதாரர்கள் அவரது அல்லது அவர்களது முகவராகச் செயற்பட அதிகாரமளித்துள்ள சட்டத்தரணியொருவராகத் தொழில்புரிய உரித்துடைய எவரேனும் ஆளின் பெயரைத் தருவதான அல்லது அவரே அல்லது அவர்களே தமக்காக அல்லது தங்களுக்காகச் செயற்படப்போவதாக (விடயத்திற்கேற்றாற் போன்று) கூறுவதான, (இரண்டு விடயங்களிலும் அறிவித்தல்கள் விடப்படக்கூடியதான கொழும்பு நகர எல்லைக்குள் உள்ளதான முகவரியொன்றைக் கொடுத்து) அவரால் அல்லது அவர்களால் ஒப்பமிடப்பட்ட எழுத்துருவொன்றை மனுவுடன் சேர்த்து பதிவாளரின் அலுவலகத்தில் மனுதாரர் அல்லது மனுதாரர்கள் விட்டுவைத்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய எழுத்துருவிலான எதுவும் விட்டுவைக்கப்படாவிடின் அல்லது முகவரி கொடுக்கப்படாவிடின் பதிவாளரின் அலுவலகத்தில் அவற்றை வைத்திருப்பதன் மூலம் எல்லா அறிவித்தல்களும் கொடுக்கப்படலாம். அத்தகைய ஒவ்வோர் எழுத்துருவுக்கும், அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின் கீழ் அதன் மீது செலுத்தப்படற்பாலதான தீர்வை, முத்திரையாக ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

மனுதாரரினால் முகவர் நியமிக்கப் படுதல்.

9. உறுப்பினர் ஒருவராகத் தெரிந்தனுப்பப்பட்ட எவரேனும் ஆள், அவர் தெரிந்தனுப்பப்பட்ட பின்னர் எந்நேரத்திலேனும் அவருக்கெதிராக மனுவொன்றுள்ள விடயத்தில் அவரது முகவராகச் செயற்படுவதற்கென, சட்டத்தரணியொருவராகத் தொழில்புரிவதற்கு உரித்துடைய ஆளொருவரைத் தம்சார்பில் நியமித்து அல்லது அவரே தமக்காகச் செயற்பட முன்னுவதாகக் கூறி அவரால் ஒப்பமிடப்பட்ட எழுத்துருவொன்றை (ஒவ்வொரு விடயத்திலும் அவருக்கு முகவரியிடப்பட்ட எழுத்துரு அறிவித்தல்கள் விடப்படக்கூடியதான கொழும்பு நகர எல்லைக்குள் உள்ளதான முகவரியொன்றைக் கொடுத்தல் வேண்டும்) பதிவாளரின் அலுவலகத்திற்கு அனுப்பலாம் அல்லது அங்கு விட்டுவைக்கலாம் என்பதுடன், அத்தகைய எழுத்துரு எதுவும் விட்டுவைக்கப்படாது விடின் அல்லது முகவரி கொடுக்கப்படாவிடின் எல்லா அறிவித்தல்களும் நடவடிக்கைகளும் அதனைப் பதிவாளரின் அலுவலகத்தில் விட்டுவைத்தல் மூலம் கொடுக்கப்படலாம் அல்லது சேர்ப்பிக்கப்படலாம். அத்தகைய ஒவ்வோர் எழுத்துருவுக்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தின் கீழ் அதன் மீது செலுத்தப்படற்பாலதான தீர்வை, முத்திரையாக ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

எதிர்வாதியினால் முகவர் நியமிக்கப் படுதல்.

10. முற்போந்த கடைசி இரு விதிகளுள் எந்த ஒன்றின் கீழும், கொடுக்கப் பட்ட எல்லா முகவர்களின் பெயர்களும் முகவரிகளும் பதியப்பட வேண்டிய புத்தகமொன்றைப் பதிவாளர் அவரது அலுவலகத்தில் வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். அப்புத்தகம் அவரது அலுவலக நேரங்களின் போது எவரேனும் ஆளினால் பார்வையிடுவதற்கு வைக்கப்படுதல் வேண்டும்.

முகவர்களின் பெயர்களையும் முகவரிகளையும் கொண்ட புத்தகத்தைப் பதிவாளர் வைத்திருத்தல்.

11. (1) மனு சமர்ப்பிக்கப்படும் நேரத்தில் அல்லது அதன்பின்னர் மூன்று நாட்களுக்குள், மனுதாரரினால் கொடுக்கப்பட வேண்டியதாகவும் எல்லாச் செலவுத் தொகைகளினதும், கட்டணங்களினதும், செலவுகளினதும் கொடுப்பனவுக்காக இருபதினாயிரம் ரூபா கொண்ட தொகையான ஆரம்பப் பிணைப்பொறுப்பு மனுதாரரின் சார்பில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

தேர்தல் மனுவின் செலவுத் தொகை ஆகியவற்றுக்கான மனுதாரரின் பிணைப் பொறுப்பு

(2) தேர்தல் மனுவொன்றின் கேட்பின்போது எந்நேரத்திலேனும் நீதிமன்றமானது, மனுதாரர் தங்கியிருக்கும் ஒவ்வொரு தனிவேறான ஏதுவையும் உருவாக்கும் குற்றச்சாட்டுக்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்து, மனுதாரரால் கொடுக்கப்பட வேண்டியதாகவரும் எல்லாச் செலவுத் தொகைகளினதும், கட்டணங்களினதும், செலவுகளினதும் கொடுப்பனவுக்காக, அத்தகைய ஒவ்வொரு குற்றச்சாட்டுக்குமென ஐயாயிரம் ரூபா என்னும் விகிதத்தில் கணக்கிடப்பட்ட மேலதிகமான பிணைப்பொறுப்பைக் கொடுக்கும்படி மனுதாரருக்குக் கட்டளையிடலாம். இப்பந்தியின் கீழ் தீர்மானிக்கப்பட்ட பிணைப்பொறுப்பானது. அத்தகைய தீர்மானத்திலிருந்து ஏழு நாட்களுக்குள் மனுதாரர் சார்பில் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியில் அல்லது (2) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பிணைப்பொறுப்பு, பணம் வைப்பிலிடப்படுவதன் மூலம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) இவ்விதியில் ஏற்பாடுசெய்யப்பட்டாற் போன்று பிணைப்பொறுப்பு மனுதாரரினால் கொடுக்கப்படாவிடின், மனு மீது மேற்கொண்டு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதல் ஆகாது என்பதுடன், எதிர்வாதியானவர் மனுவைத் தள்ளுபடி சொய்யுமாறும் எதிர்வாதியின் மனுவைத் தள்ளுபடி செய்யுமாறும் எதிர்வாதியின் செலவுத்தொகைகளைக் கொடுக்குமாறும் பணிக்கும் கட்டளையொன்றிற்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய விண்ணப்பத்தைக் கேட்பதற்கும் முடிவு செய்வதற்குமான செலவுத் தொகைகள், நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்டவாறு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளையிடத் தவறுமிடத்து அவை மனுவின் பொதுச் செலவுத் தொகைகளின் பாகமாக அமைதலும் வேண்டும்.

(5) மனுவின் மீதான நடவடிக்கைகளின் முடிவில், நீதிமன்றமானது, (1) ஆம் பந்தியின் கீழ் அல்லது (1) ஆம், (2) ஆம் பந்திகளின் கீழ் வைப்பிலிடப்பட்ட அத்தகைய பிணைப் பணத்திலிருந்து, நீதிமன்றம் தீர்மானித்தவாறு, மனுதாரர் தங்கியிருக்கும் ஒவ்வோர் தனிவேறான ஏதுவையும் உருவாக்கும் அத்தகைய ஒவ்வொரு குற்றச்சாட்டுக்குமென ஐயாயிரம் ரூபா என்னும் விகிதத்தில் கணக்கிடப்பட்ட அத்தகைய ஒரு தொகையினதான பிணைப் பொறுப்பைக் கழித்த பின்னர் மிகுதியாகவிருக்கும் தொகையை மனுதாரருக்கு மீளக் கொடுத்தல் வேண்டும்.

பணத்தை வைப்பிலிடுவதன் மூலமான பிணைப்பொறுப்பு.

**12**.(1) மனுதாரரினால் கொடுபடற்பாலதாகும் செலவுத் தொகைகளினதும், கட்டணங்களினதும் செலவுகளினதும் கொடுப்பனவுக்கான பிணைப்பொறுப்பெனும் வகையாகப் பணத்தை வைப்பிலிடுதல் பதிவாளருக்குக் கொடுப்பனவு மூலம் செய்யப்படுதல் வேண்டும்; அது இவ்விதிகளினால் எந்நோக்கங்களுக்கெனப் பிணைப்பொறுப்பு தேவைப்படுத்தப்படுகின்றதோ, அந்நோக்கங்களுக்கென மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரால் காலத்துக்குக் காலம் பெறப்படுதலும் வேண்டும். இதற்காகப் பதிவாளரினால் ஒரு பற்றுச்சீட்டு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) பதிவாளரானவர் சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிக்காரர்களும் பார்வையிடுவதற்காக புத்தகமொன்றை வைத்திருத்தல் வேண்டும்; அப்புத்தகத்தில், தொகையையும் அது எந்த மனுவுக்குப் பிரயோகிக்கப்படக் கூடியது என்பதையும் காலத்துக்குக் காலம் பதிதல் வேண்டும்.

அவ்வாறு வைப்பிலிடப்பட்ட பணத்தை மீள அளித்தல்.

**13**. (1) அவ்வாறு வைப்பிலிடப்பட்ட பணம், அத்தகைய செலவுத் தொகைகளினதும் கட்டணங்களினதும் செலவுகளினதும் கொடுப்பனவுகளை நிச்சயப்படுத்துவதற்கு இனிமேலும் தேவையில்லாதுவிடின் அத்துடன், தேவையில்லாதபோது அது மீள அளிக்கப்படுதல் வேண்டும் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைவரின் கட்டளைப்படி நீதி தேவைப்படுத்தக் கூடியவாறாக வேறு வழியில் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்.

(2) விண்ணப்பிப்பதற்கான முன்னம் பற்றிய அத்தகைய அறிவித்தலுக்குப் பின்னரும் நியாயமான எல்லாக் கோரிக்கைகளும் திருப்திப்படுத்தப்பட்டு விட்டன அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் தேவைப்படுத்தக் கூடியவாறு வேறுவகையில் போதிய அளவு ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன என்ற எண்பிப்பின் மீதும் அத்தகைய கட்டளையானது ஆக்கப்படலாம்.

*(3) அத்தகைய கட்டளையானது, அது எக்கட்சிக்காரரின் பெயரில் வைப்பிலிடப் பட்டுள்ளதோ ஒன்றில் அக்கட்சிக்காரருக்கு அல்லது கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடைய எவரேனும் ஆளுக்குச் செய்யப்படல் வேண்டுமெனப் பணிக்கலாம்.*

*மனுபற்றிய அறிவித்தலும் மனுவின் பிரதியும் எதிர்வாதியிடம் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.*

***14.*** *(1) மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டது பற்றிய அறிவித்தலானது அதனது பிரதி ஒன்றுடன் இணைக்கப்பட்டு, மனு சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பத்து நாட்களுக்குள்-*

*(அ) எதிர்வாதியிடம் மனுதாரரினால் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்; அல்லது*

*(ஆ) எதிர்வாதியிடம் சேர்ப்பிக்கப்படுவதற்கெனப் பதிவாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பதிவாளர் அல்லது அவரது திணைக்களத்தின் எவ்வலுவலரிடம் அத்தகைய அறிவித்தலும் பிரதியும் ஒப்படைக்கப்பட்டதோ அந்த அலுவலர், தேவைப்படுத்தப்பட்டால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலான பற்றுச்சீட் டொன்றைக் கொடுத்தலும் வேண்டும்.*

*(2) மனுதாரரினால் எதிர்வாதியிடம் மனுவொன்றும் அதனது பிரதியும் சமர்ப்பிக்கப்பட்டமை பற்றிய அறிவித்தலை (1) ஆம் பந்தியின் கீழ் சேர்ப்பித்தலானது 9 ஆம் விதியின் கீழ் எதிர்வாதியினால் நியமிக்கப்பட்ட முகவரிடம் அத்தகைய அறிவித்தலையும் பிரதியையும் ஒப்படைத்தல் மூலமாகவோ அல்லது வழமையான அஞ்சற்போக்கில் மேலே குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அத்தபால் ஒப்படைக்கப்படக் கூடியவாறு அத்தகைய காலத்திற்குள் 9 ஆம் விதியின் கீழ் கொடுக்கப்பட்ட முகவரிக்கு பதிவு அஞ்சலொன்றில் அனுப்புதல் மூலமாகவோ அல்லது அத்தகைய மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும், அதனது பிரதி ஒன்று எதிர்வாதியினால் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது பதிவாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படலாம் எனவும் எடுத்துக்கூறி வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தலொன்றின் மூலமாகவோ பயனுறச் செய்யலாம்.*

*(3) மனுவொன்று அதனது பிரதியொன்றுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டது பற்றிய அறிவித்தலானது (1) ஆம் பந்தியின் கீழ் எதிர்வாதியிடம் சேர்ப்பிக்கப்படுவதற்கென பதிவாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படுமிடத்து, அத்தகைய சேர்ப்பித்தலானது, நீதிமன்றமொன்றினால் வழங்கப்படும் அறிவித்தலொன்று குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் கீழ் எம்முறையில் பயனுறுத்தப்படுமோ அதே முறையில் பயனுறுத்தப்படலாம்.*

*எப்போது மனு விளக் கத்துக்குரியதென கருதப்படலாம் என்பது பற்றி.*

***15.*** *மனுக்கள் செய்யப்படுவதற்கென வரையறுக்கப்பட்ட காலம் முடிவடைந்ததன்மேல் மனுவானது விளக்கத்துக்குரியதாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*மனுக்களின் நிரல்.*

***16.*** *பதிவாளர் தேர்தல் மனு நிரலைத் தயாரித்தல் வேண்டும். அதில் அவர் முறையே 8 ஆம் விதியின் கீழ் அத்துடன் 9 ஆம் விதியின் கீழ் நியமிக்கப்பட்ட மனுதாரர்களினதும் எதிர்வாதிகளினதும் முகவர்களின் பெயர்களையும் அறிவித்தல்கள் அனுப்பப்படக்கூடிய முகவரிகள் எவையேனும் இருப்பின் அவற்றையும் உட்புகுத்தல் வேண்டும். நிரலானது பதிவாளரின் அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் எந்நேரத்திலும் பார்வையிடப்படலாம் என்பதுடன் அந்நோக்கத்திற்காக சட்டத்தின் கீழான நடவடிக்கைகளுக்கு ஏற்றதான அறிவிப்புப் பலகை ஒன்றின் மீது “1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்” என்ற தலைப்பின் கீழ் ஒட்டிவைக்கப்படுதலும் வேண்டும்.*

*தேர்தல் மனுவின் விளக்கத்திற்கான நேரமும் தேதியும்.*

***17.*** *ஒவ்வொரு தேர்தல் மனுவினதும் விளக்கத்திற்கான நேரமும் இடமும் சட்டத்தின் 94 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், மனுதாரருக்கும் எதிர்வாதிக்கும், அத்தகைய மனுதாரரினால் அல்லது எதிர்வாதியினால் பதிவாளரிடம் விட்டுவைக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட்ட கடித மூலமாக, அதுபற்றிய பதினான்கு நாட்களுக்குக் குறையாத அறிவித்தல் கொடுக்கப்படுதலும் வேண்டும்;*

அல்லது அத்தகைய முகவரி எதுவும் விட்டுவைக்கப்படாது இருந்தால் கசெற்றிலான அறிவித்தல் மூலம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

விளக்கத்தைப் பின்போடுதல்.

**18.** நீதிமன்றமானது, மனுவின் கட்சிக்காரர் ஒருவரது விண்ணபத்தின் மீது காலத்துக்குக் காலம் ஆக்கப்பட்ட கட்டளையினால் நீதிமன்றம் குறிப்பிடக் கூடியவாறான அத்தகைய நாளுக்கு விளக்கம் ஆரம்பிக்கப்படுவதை பின்போடலாம்; அத்துடன் அத்தகைய கட்டளையானது அது ஆரம்பிக்கப்பட்ட போது உடனேயே பதிவாளரால் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விளக்கத்தை ஒத்திவைத்தலும் தொடர்ந்து நடாத்துதலும்.

**19.**தேர்தல் மனுவொன்றின் விளக்கத்திற்கு நீதிமன்றத்தின் விதிமுறையான ஒத்திவைப்பு ஏதும் அவசியம் ஆதல் ஆகாது; ஆனால் விசாரணை முடிவு செய்யப்படும்வரை விளக்கமானது நாளுக்கு நாள் ஒத்திவைக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், தொடர்ந்து நடாத்தவும்படலாம்; அத்துடன் விளக்கத்தை ஆரம்பிக்கும் எவரேனும் நீதிபதி சுகவீனத்தினால் அல்லது வேறு வழியில் இயலாதவராக்கப்பட்டால், அது வேறொரு நீதிபதியினால் மீளவாரம்பிக்கப்பட்டு முடிபு செய்யலாம்.

தேர்தல் மனுவை மீளப்பெறுதல்.

**20.** (1) தேர்தல் மனுவொன்று நீதிமன்றத்தின் அனுமதியின்றி மீளப் பெறப்படுதல் ஆகாது; அத்துடன், அத்தகைய அனுமதியானது நீதிமன்றம் ஏற்றதெனக் கருதக்கூடியவாறான செலவுத் தொகைக் கொடுப்பனவு பற்றியதும் மறுவாறானதும் ஆன அத்தகைய நியதிகளின் மீது கொடுக்கப்படலாம்.

(2) தேர்தல் மனுவொன்றை மீளப்பெறுவதற்கான அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர், இவ்விதியினால் தேவைப்படுத்தப்பட்டாற் போன்று மனுவினது எல்லாக் கட்சிக்காரர்களாலும் அவர்களது சட்டத் தரணிகளாலும் தேர்தலில் வேட்பாளர்களாயிருந்த சொல்லப்பட்ட எல்லாக் கட்சிக்காரர்களாலும் சத்தியக் கடதாசிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்; ஆனால் சிறப்பான ஏதுக்கள் மீது அவ்வாறு செய்வது நியாயமானதென நீதிமன்றம் கண்டால், நீதிமன்றமானது காரணம் காட்டப்பட்டதன் மேல், எவரேனும் குறிப்பிட்ட ஆளின் சத்தியக் கடதாசியைத் தேவையற்றதாக்கலாம்.

(3) சான்றாளரின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை, எத்தகைய விதமான உடன்படிக்கை அல்லது நியதிகள் எவையும் செய்யப்படவில்லை என்றும் மனு மீளப்பெறுதல் தொடர்பாக பொறுப்பேற்றல் எதுவும் செய்து கொள்ளப்படவில்லை என்றும் ஒவ்வொரு சத்தியக் கடதாசியும் எடுத்துக்கூறுதல் வேண்டும்; ஆனால் மனுவை மீளப்பெறுதல் தொடர்பாகச் சட்டமுறையான உடன்படிக்கை எதுவும் செய்யப்பட்டிருந்தால், சத்தியக்கடதாசியானது அவ்வுடன்படிக்கை பற்றி விதித்துரைப்பதுடன் முன்னேயுள்ள கூற்றை சத்தியக் கடதாசியில் தோன்றுவதற்கு அமைந்ததாக ஆக்குதலும் வேண்டும்.

(4) மனு எந்த ஏதுவின் மீது மீளப்பெறப்படக் கருதப்பட்டு உள்ளதோ அந்த ஏதுவையும் விண்ணப்பக்காரரினதும் அவரது சட்டத்தரணியினதும் சத்தியக்கடதாசிகள் மேலும் எடுத்துக் கூறுதல் வேண்டும்.

மனுவை மீளப் பெறுவதற்கான விண்ணப்பத்தின் படிவம்.

**21.** (1) மனுவொன்றினை மீளப்பெறுவதற்கான அனுமதிக்கான விண்ணப்பமொன்று மனுதாரரினால் அல்லது மனுதாரர்களினால் அல்லது அவரது அல்லது அவர்களது முகவரினால் அல்லது முகவர்களினால் ஒப்பமிடப்பட்டு எழுத்தில் இருத்தல் வேண்டும். விண்ணப்பம் எந்த ஏதுவின்மீது ஆதரிக்கப்படுகிறது என்பதையும் அது கூறுதல் வேண்டும்.

(2) பின்வரும் படிவம் போதுமானது :-

“1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் ..................... தேர்தல் மாவட்டம் ................................................ (மனுதாரரின் பெயரைக் கூறுக) என்பவரின் மனு 20 ......... ஆம் ஆண்டின் ............ மாதம் .........ஆம் நாளன்று சமர்ப்பிக்கப்பட்டது.

மனுதாரர் பின்வரும் ஏதுவின்மீது அவரது மனுவை மீளப்பெற விண்ணப்பிக்கிறார் (இங்கே ஏதுவைக் கூறுக) என்பதுடன் அவரது விண்ணப் பத்தைக் கேட்பதற்கு ஒருநாள் நியமிக்கப்படலாம் எனவும் இறைஞ்சுகின்றார்.

20 ......... ஆம் ஆண்டின் .................. மாதம் ............ஆம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

(ஒப்பமிடப்பட்டது)...................................”

(3) மீளப்பெறுவதற்கான அனுமதிக்கான விண்ணப்பமானது பதிவாளரின் அலுவலகத்தில் விட்டுவைக்கப்படுதல் வேண்டும்.

**22.** அத்தகைய விண்ணப்பத்தின் பிரதியொன்று மனுதாரரினால் எதிர்வாதிக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மனுதாரரால் ஒப்பமிடப்பட்ட பின்வரும் வாசகத்திலமைந்த அறிவித்தலொன்று உடனடியாக மனுதாரரினால் அவரது சொந்தச் செலவில் கசெற்றில் வெளியிடப்படுதலும் வேண்டும்:- விண்ணப்பத்தின் பிரதி எதிர்வாதிக்குக் கொடுக்கப்படுதல் பற்றி.

**"1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

.......................... மனுதாரராகவும் ................. எதிர்வாதியாகவும் உள்ள .............................. க்கான தேர்தல் மனுவில்,

...............ஆம் நாளன்று மேலேயுள்ள மனுதாரர் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளரின் அலுவலகத்தில், மனுவொன்றினை மீளப்பெறுவ தற்கான அனுமதிக்கான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்தார் என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. அவ்விண்ணப்பத்தின் பிரதியொன்று பின்வருமாறாகும்:-

" 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல் மனு விதிகளின்" கீழ், சொல்லப்பட்ட தேர்தல் தொடர்பாக மனுதாரர் ஒருவராக இருந்திருக்கக் கூடிய எவரேனும் ஆள், இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட பின் ஐந்து நாட்களுக்குள், விண்ணப்பம் கேட்கப்படும்போது மனுதாரர் ஒருவராக பதிலீடு செய்யப்படு வதற்கான தனது முன்னம் பற்றிய அறிவித்தலை மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் பதிவாளருக்கு எழுத்தில் கொடுக்கலாம் என்பதையும் அறிவீராக.

(ஒப்பமிடப்பட்டது) ........................................"

**23.** மனுவானது எந்தத் தேர்தல் தொடர்பானதாக உள்ளதோ அந்தத் தேர்தல் தொடர்பான ஒரு மனுதாரராக இருந்திருக்கக்கூடிய எவரேனும் ஆள், மனுதாரரினால் அத்தகைய அறிவித்தல் வெளியிடப்பட்டு ஐந்து நாட்களுக்குள் கேட்பின்போது மனுதாரருக்காகப் பதிலீடு செய்யப்படுவதற்கு விண்ணப்பிப்பதற்கான அவரது முன்னம் பற்றி அவரால் ஒப்பமிடப்பட்ட அல்லது அவர் சார்பில் ஒப்பமிடப்பட்ட எழுத்திலான அறிவித்தலை பதிவாளருக்குக் கொடுக்கலாம். ஆனால், அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடு அத்தகைய விண்ணப்பம் உண்மையிலேயே கேட்பின் போது செய்யப்பட்டிருந்தால் பயனுறுப்பதாகாது. மீளப்பெறுகையின் மீது மனுதாரராகப் பதிலீடு செய்வதற் கான விண்ணப்பம்.

**24.** விண்ணப்பத்தைக் கேட்பதற்கான நேரமும் இடமும் நீதிமன்றத்தினால் நிருணயிக்கப்படுதல் வேண்டும். ஆனால், அவை, மீளப்பெறுவதற்கான அனுமதிக்கான விண்ணப்பம் இதனகத்து முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டாற் போன்று பதிவாளரின் அலுவலகத்தில் விட்டுவைக்கப்பட்ட பின்னர் ஒரு கிழமைக்கு உட்படாதிருக்க நிருணயிக்கப்படுதல் வேண்டும். அத்துடன், கேட்புக்கென நியமிக்கப்பட்ட நேரமும் இடமும் பற்றிய அறிவித்தலானது, மனுதாரர்களாகப் பதிலீடு செய்யப்படுவதற்கென விண்ணப்பிப்பதற்கான முன்னம் பற்றி பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்திருந்திருக்கக் கூடியவரான ஆள் அல்லது ஆட்கள் எவரேனுமிருப்பின் அவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்; அத்துடன், வேறு வகையில் நீதிமன்றம் பணிக்குமாப்போன்று அத்தகைய முறையிலும் அத்தகைய நேரத்திலும் கொடுக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தைக் கேட்பதற்கான நேரமும் இடமும்.

**25.** (1) மீளப்பெறுகைக்கான விண்ணப்பத்தின் கேட்பின்போது, மனு எத்தேர்தல் தொடர்பானதாகவுள்ளதோ அத்தேர்தல் தொடர்பான ஒரு மனுதாரராக இருந்திருக்கக் கூடிய ஆள் எவரும், மனுவை மீளப்பெறுவதில் அவ்வாறு ஆவலுடையவராயுள்ள மனுதாரருக்காக மனுதாரர் ஒருவராகப் பதிலீடு செய்யப்படுவதற்கென நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். இன்னுமொரு மனுதாரரைப் பதிலீடு செய்தல்.

(2) நீதிமன்றமானது, அது தகுந்ததெனக் கருதினால் மேலே சொல்லப் பட்டவாறு அத்தகைய எவரேனும் விண்ணப்பக்காரரை மனுதாரரொரு வராகப் பதிலீடு செய்யலாம் என்பதுடன், நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி, உத்தேசிக்கப்பட்ட மீளப்பெறுகையானது ஏதேனும் ஊழற்பேரத்தினால் அல்லது பிரதிபயனால் தூண்டப்பட்டது எனில் ஆரம்ப மனுதாரரின்

சார்பில் கொடுக்கப்பட்ட பிணைப்பொறுப்பானது பதிலீடு செய்யப்பட்ட மனுதாரரினால் கூறப்படக்கூடிய ஏதேனும் செலவுத் தொகைகளுக்கான பிணைப்பொறுப்பாக அப்படியே விடப்படுதல் வேண்டுமென மேலும் கட்டளையினால் பணிக்கலாம்; அத்துடன் அத்தகைய பிணைப் பொறுப்பில் குறிப்பிடப்பட்ட தொகையின் அளவுக்குப் பதிலீடு செய்யப்பட்ட மனுதாரரின் செலவுத் தொகைகளைச் செலுத்துவதற்கு ஆரம்ப மனுதாரர் ஆளாதல் வேண்டும்.

(3) ஆரம்ப மனுதாரரின் சார்பில் கொடுக்கப்பட்ட பிணைப்பொறுப்புத் தொடர்பாக அத்தகைய கட்டளை எதுவும் ஆக்கப்படவில்லையெனின் புதியவொரு மனுவின் விடயத்தில் தேவைப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய அதே தொகை கொண்ட பிணைப்பொறுப்பு அதே போன்ற நிபந்தனைகளுக்கமைய, பதிலீடு செய்யப்பட்ட மனுதாரர் அவரது மனு தொடர்பாகத் தொடர்ந்து செயற்படு முன்னர் அப்பதிலீடு செய்யப்பட்ட மனுதாரர் சார்பில், பதிலீட்டுக் கட்டளையின் பின்னர் மூன்று நாட்களுக்குள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) மேலே சொல்லப்பட்டதற்கமைய, பதிலீடு செய்யப்பட்ட ஒரு மனுதாரரானவர் ஆரம்ப மனுதாரரின் நிலைக்கு எத்துணை நெருங்கியதாகக் கூடுமோ அத்தகைய நிலையிலும் ஆரம்ப மனுதாரரின் பொறுப்புகள் போன்ற அதே பொறுப்புகளுக்காளாவதாகவும் இருத்தல் வேண்டும்.

(5) மனுவொன்று மீளப்பெறப்பட்டால் மனுதாரரானவர் எதிர்வாதியின் செலவுத் தொகைகளைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(6) ஒன்றுக்கு மேற்பட்ட மனுதாரர்கள் இருக்குமிடத்து, எல்லா மனுதாரர்களினதும் சம்மதமின்றியல்லாது மனுவொன்றினை மீளப்பெறுவதற்கான விண்ணப்பம் எதுவும் செய்யப்படுதல் ஆகாது.

*பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் காரணமாக மட்டும் தேர்தல் மனு அற்றுப் போகாதிருத்தல்.*

**26**. பாராளுமன்றம் கலைக்கப்படுவதன் காரணமாக மட்டும் தேர்தல் மனுவொன்று அற்றுப்போதலாகாது ; அத்துடன் அதற்கிணங்க அத்தகைய கலைப்பு நிகழின், அத்தகைய மனு கேட்கப்படுதல் வேண்டும் அல்லது தொடர்ந்து கேட்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பாராளுமன்றம் கலைக்கப்படவில்லை, ஆனால் கூட்டத் தொடரிலுள்ளது என்றாற்போன்று தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

*இறப்பினால் மனு அற்றுப் போதல்.*

**27**. (1) தனியாளான மனுதாரர் ஒருவரின் இறப்பினால் அல்லது பல மனுதாரர்களில் உயிரோடு எஞ்சியிருக்கும் மனுதாரரின் இறப்பினால் தேர்தல் மனுவொன்று அற்றுப்போதல் வேண்டும்.

(2) மனுவொன்று அற்றுப்போதல், முன்னரே உறப்பட்ட செலவுத் தொகைகளைச் செலுத்துவதற்கு மனுதாரருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு உள்ள பொறுப்பைப் பாதித்தலாகாது.

*அற்றுப்போவதன் மீது மனுதாரராகப் பதிலீடு செய்யப்படுவதற்கான விண்ணப்பம்.*

**28**. (1) மனுதாரரின் இறப்பினால் அல்லது உயிரோடு எஞ்சியிருக்கும் மனுதாரரின் இறப்பினால் மனுவொன்று அற்றுப்போதல் பற்றிய அறிவித்தலானது, அக்கறையுள்ள கட்சிக்காரரினால் அல்லது ஆளினால், மனுவொன்றினை மீளப்பெறுவதற்கான ஒரு விண்ணப்பத்தின் அறிவித்தல் போன்ற அதே முறையில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், மனுதாரர் ஒருவராகப் பதிலீடு செய்யப்படுவதற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் எக்காலத்தினுள் செய்யப்படலாமோ அக்காலமானது ஒரு பஞ்சாங்க மாதமாக அல்லது ஏதேனும் சிறப்பான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டதன் மேல் நீதிமன்றம் அனுமதிக்கக் கூடிய அத்தகைய மேலதிக காலமாக இருத்தல் வேண்டும்.

(2) மனு எத்தேர்தல் தொடர்பானதோ அத்தேர்தல் தொடர்பான மனுதாரர் ஒருவராக இருந்திருக்கக்கூடிய ஆள் எவரும் மனுதாரர் ஒருவராகப் பதிலீடு செய்யப்படுவதற்கென நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(3) நீதிமன்றமானது, அது தகுந்ததெனக் கருதினால், பதிலீடு செய்யப்படுவதற்கு, ஆவலுடையவராயிருப்பவரும், புதிய மனுவொன்றின் விடயத்தில் தேவைப்படுத்தப்பட்டாற்போன்று அதே தொகைக்கான பிணைப் பொறுப்பு எவர் சார்பில் கொடுக்கப்படுகின்றதோ அவரும் ஆன அத்தகைய விண்ணப்பக்காரர் எவரையும் மனுதாரர் ஒருவராகப் பதிலீடு செய்யலாம்.

**29**.(1) தேர்தல் மனுவொன்றின் விளக்கத்தின் முன்னர், எதிர்வாதி யொருவர் இறந்தால் அல்லது பதவி துறந்தால் அல்லது தான் மனுவை எதிர்ப்பதற்கு முன்னவில்லை என எழுத்திலான அறிவித்தலை நீதிமன்றத்துக்கு கொடுத்தால் மனுவானது அற்றுப்போதல் ஆகாது ; ஆனால் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டாற் போன்று எதிர்வாதியாக அனுமதிக்குமாறு எவரேனும் ஆள் விண்ணப்பித்தாலும் சரி விண்ணப்பிக்காவிடினும் சரி தொடர்ந்திருக்கும்.

*எதிர்வாதியின் இறப்பின் மீது பதவி துறப்பின் மீது அல்லது எதிர்க்காமை பற்றிய அறிவித்தலின் மீது மனு தொடர்ந்திருத்தல்.*

(2) எதிர்வாதியொருவர் இறந்துவிட்டார், பதவி துறந்துவிட்டார் அல்லது தான் மனுவை எதிர்ப்பதற்கு முன்னவில்லை என எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்துவிட்டார் என்ற நிகழ்வு பற்றிய அறிவித்தலானது பதிவாளரினால் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) மனு எத்தேர்தல் தொடர்பானதோ அத்தேர்தல் தொடர்பான மனுதாரர் ஒருவராக இருந்திருக்கக்கூடிய ஆள் எவரும், அத்தகைய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் பத்து நாட்களுக்குள் அல்லது நீதிமன்றம் அனுமதிக்கக்கூடிய அத்தகைய மேலதிக காலத்தினுள், மனுவை எதிர்ப்பதற்கான எதிர்வாதி ஒருவராக அனுமதிக்கப்பட வேண்டுமென நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(4) மனுவை எதிர்க்கத் தான் முன்னவில்லை என எதிர்வாதி நீதிமன்றத்துக்குக் கொடுக்கும் அறிவித்தலின் முறையும் நேரமும், விளக்கத்திற்கென நியமிக்கப்பட்ட நாளுக்கு (அத்தகைய அறிவித்தலை விட்டுவைக்கும் நாளைத் தவிர்த்து) ஆறு நாட்களுக்குக் குறையாமல் எதிர்வாதியினால் ஒப்பமிடப்பட்ட எழுத்திலான அது பற்றிய அறிவித்தலை பதிவாளரின் அலுவலகத்தில் விட்டுவைத்தல் மூலமாக இருத்தல் வேண்டும்.

**30**. மனுவொன்றினை எதிர்க்காதுவிடும் தனது முன்னம் பற்றிய அறிவித்தலைக் கொடுத்துள்ள எதிர்வாதி ஒருவர், அதன்மேல் எவையேனும் நடவடிக்கைகளில் அத்தகைய மனுவுக்கெதிரான கட்சிக்காரரொருவராகத் தோன்றுவதற்கோ அல்லது செயற்படுவதற்கோ அனுமதிக்கப்படுதலாகாது.

*மனுவை எதிர்க்காத எதிர்வாதி கட்சிக்காரராகத் தோன்றுதலாகாது.*

**31**. மீளப்பெறுவதற்கான அனுமதிக்கான மனுதாரரின் விண்ணப்பத்தை அல்லது எதிர்க்காதிருக்கும் முன்னம் பற்றிய எதிர்வாதியின் அறிவித்தலை அல்லது இறப்பினால் மனு அற்றுப்போதல் பற்றிய அறிவித்தலை, அல்லது 29 ஆம் விதியில் குறிக்கப்பட்ட ஏதேனும் விளைவுகள் நிகழ்தல் பற்றிய அறிவித்தலை பெற்ற பின்னர், அத்தகைய அறிவித்தலானது விளக்கத்திற்கான அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்க வேண்டியதன் பின்னரும் விளக்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரும் பெறப்பட்டிருப்பின் பதிவாளரானவர் விளக்கத்திற்கான அறிவித்தலுக்கு உடனடியாக எதிர்மாற்றுக் கட்டளை இடுதல் வேண்டும். எதிர்மாற்றுக் கட்டளையானது, விளக்கத்திற்கான அறிவித்தல் கொடுக்கப்படும் அத்துணை நெருங்கிய அதையொத்த முறையில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

*மனுஅற்றுப் போனவிடத்து, இன்னோரன்ன நிலையில் விள-க்கத்துக்கான அறிவித்தலுக்கு எதிர்மாற்றுக் கட்டளையிடுதல்.*

**32**. மனுவொன்றைச் சமர்ப்பித்தலினதும், அதன் விளைவான நடவடிக்கைகளினதும், எல்லாச் செலவுத் தொகைகளும் அவற்றின் இடைநேர் விளைவானவையும் நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி மனுதாரரின் பக்கத்தில் அல்லது எதிர்வாதியின் பக்கத்தில் ஆத்திரமூட்டும் நடத்தையினால், ஆதாரமற்ற சார்த்துகைகளினால் அல்லது ஆதாரமற்ற ஆட்சேபனைகளினால் ஏற்படுத்தப்பட்டிருக்கக் கூடியதான ஏதேனும் செலவுத் தொகைகள் மறுக்கப்பட வேண்டியதைக் கருத்திற்கொண்டும் அத்துடன் ஏதேனும் அவசியமற்ற செலவுகளைக் கொடுத்துத் தீர்க்கும் பொறுப்பை அதை ஏற்படுத்திய கட்சிக்காரர்கள் மீதே சுமத்துவதன் மூலம் (அத்தகைய கட்சிக்காரர்கள் முழுமையாக வெற்றி பெற்றிருந்தாலுஞ்சரி வெற்றி பெறாதிருப்பினுஞ்சரி) ஏதேனும் அவசியமற்ற செலவுகளை ஊக்குவிக்காமையைக் கருத்திற் கொண்டும் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய விகிதாசாரங்களிலும் மனுவின் கட்சிக்காரர்களினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்.

*செலவுத் தொகைகள்.*

**33**. (1) எக்கட்டளையால், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய முறையில் செலவுத் தொகைகள் செலுத்தப்படற்பாலனவோ அக்கட்டளை மீது, செலவுத்தொகைகள் பதிவாளரினால் விதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

*செலவுத் தொகை களை விதித்தலும் அறவிடுதலும்.*

செலவுத் தொகைகள் விதிக்கப்பட்ட போது, சட்டத்தில் வழக்கொன்றின் செலவுத் தொகைகள் அறவிடப்படக்கூடிய அத்தகைய முறையில் அவை அறவிடப்படலாம்.

(2) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், 11 ஆம் 12 ஆம் விதிகளின் ஏற்பாடுகளின் கீழ் பிணைப்பொறுப்பு என்ற வகையில் வைப்பிலிடப்பட்ட ஏதேனும் பணங்கள் முழுமையையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை விதிக்கப்பட்ட செலவுத் தொகைகளின் கொடுப்பனவுகளுக்காகப் பிரயோகிக்கப் படலாம் எனப் பணிக்கலாம்.

(3) இவ்விதிகளின் கீழ் பார்வையிடுவதற்கும், அலுவலகப் பிரதிகளுக்கும் மற்ற நடவடிக்கைகளுக்கும் செலுத்தப்படற்பாலனவான அலுவலகக் கட்டணங்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகையதாக இருத்தல் வேண்டும்.

*இவ்விதிகளின் கீழ் சட்டத்தரணி முகவராகச் செயலாற்றலாம்.*

**34**. சட்டத்தரணிகளின் பட்டியலில் உள்ள ஆள் எவரும், தேர்தல் மனுவொன்றுக்கான எவரேனும் கட்சிக்காரருக்காக முகவராகச் செயற்படலாம்.

*முகவரின் நியமனம் பற்றிய அறிவித்தல்.*

**35**. முகவரொருவர், அவ்வாறான அவரது நியமனத்தின் மீது உடனடியாக பதிவாளரின் அலுவலகத்தில் எழுத்திலான அறிவித்தல் ஒன்றை விட்டுவைத்தல் வேண்டும்.

*முகவர்களிடம் அறிவித்தல்களைச் சேர்ப்பித்தல்.*

**36**. அத்தகைய முகவரிடம் அறிவித்தல்களையும், நடவடிக்கைகளையும் சேர்ப்பித்தலானது எல்லா நோக்கங்களுக்கும் போதுமானதாதல் வேண்டும்.

## ஐந்தாம் அட்டவணை

வலிமையிழப்பிற்கு உட்பட்ட, ஆளொருவராக வாக்களிப்பதற்கென 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் நியதிகளின்படி [பிரிவு 40 (2) (இ)] வழங்கப்படும் தகுதிச்சான்றிதழ்.

**பாகம் I** [பி7. 2011 இன் 28]

### விண்ணப்பதாரரின் /வாக்காளரின் வெளிப்படுத்துகை

முழுப் பெயர் : ...........................................................

முகவரி : .................................................................

..............................................................................

தொழில் : ................................................................

பிறந்த திகதி : .............................................................

தே. அ.அ./சாரதி உரிமம்/கடவுச் சீட்டு இல. : ..............................

............................................................... என்னும் முகவரியைச் சேர்ந்த ................ஆகிய நான் ................................. மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஒருவராகவிருந்து வலிமையிழப்பிற்கு உட்பட்டவராக இருக்கின்றமையால் மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் செவ்வையானவையு மாகும் என வெளிப்படுத்துவதுடன் எதிர்வரும் .......................................... (தேர்தலின் பெயர்) சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வலிமையிழப்பிற்குட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கு என்னை உரித்துடையவராக்கும் தகுதிச் சான்றிதழொன்றின் வழங்கீட்டிற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

திகதி : ........................ வாக்காளரின் பெயர் : .......................

வாக்காளரின் கையொப்பம் : ..............

***கிராம அலுவலரின் சான்றிதழ்***

மேலே தரப்பட்டுள்ள விவரம் சரியானதெனவும் ............................. (விண்ணப்பதாரரின் / வாக்காளரின் பெயர்) என்பவரின் விண்ணப்பம் தொடர்பில் பின்வரும் தகவல் என்னால், பேணப்படும் பதிவேடுகளுக்கிணங்க சரியானதெனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பெயர் : ..........................................................................

வாக்காளர் நிரலிலுள்ள இல. : ......................................................

மாகாணம் : ......................................................................

மாவட்டம் : ......................................................................

தேர்தற்பிரிவு : ...................................................................

இயைபான வேறு தகவல் : ......................................................

திகதி : ........................

கிராம அலுவலரின் கையொப்பம் : ...................................

கிராம அலுவலரின் பெயர் : ...........................................

பிரிவு : ..........................................................

இலச்சினை : .......................................................

**பாகம் II**

***அரசாங்க மருத்துவ அலுவலரின் சான்றிதழ்***

எதிர்வரும் ............................................... (தேர்தலின் பெயர்) வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கு உரித்துடையவராவதற்கென விண்ணப்பித்துள்ள ........................... என்ற முகவரியைச் சேர்ந்த .......................................... என்பவரை நான் நேரடியாகப் பரிசோதனை செய்துள்ளேன் என்பதுடன் .............................. (வாக்காளரின் / விண்ணப்பதாரரின் பெயர்) சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆள் ஒருவராக வாக்களிப்பதற்கு உரித்துடையவராவர்/உரித்துடையவராக மாட்டார் எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

தேதி : ........................

அரசாங்க மருத்துவ அலுவலரின் பெயர் : ..............................

அரசாங்க மருத்துவ அலுவலரின் கையொப்பம் : ........................

இலச்சினை : ....................................